D
V211, 31 P08.
P08.52.1
228285

**5-5-2008**

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | | |
|---|---|---|
| | ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| | Governor and Council of Ministers | ix-xiii |
| | பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| | பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1.** | **வினாக்கள்—விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-44 |
| **2.** | **தகவல் கோரல்—** | |
| | (அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில் பயண இருக்கை ஒதுக்கீட்டில் முன்னுரிமை | 45-46 |
| | * திரு. டி. சுதர்சனம் | 45-46 |
| | (ஆ) பள்ளிப்பட்டு தொகுதி விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் | 46-55 |
| | திரு. கோ. அரி | 46-49 |
| | * டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 48-52 |
| | மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் | 53-55 |
| | (இ) அமராவதி பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுதல் | 55-56 |
| | மாண்புமிகு திரு. துரைமுருகன் | 55-56 |
| **3.** | **அறிவிப்பு—** | |
| | (அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை மறு நாள் எடுத்துக்கொள்ளுதல் | 55 |

பக்கங்கள்

3. **அறிவிப்பு**—தொடர்ச்சி

(ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு அருகே விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்பாடு 199-200

4. **விதி 111-ன்கீழ் திருத்த அறிக்கை**—

தென் மாநிலங்களிடையே பேருந்துகள் இயக்குவதுபற்றி 22-10-2007 அன்று அளித்த விடையில் திருத்தம் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை 57

5. **அறிக்கைகள் அளித்தல்**—

மதிப்பீட்டுக் குழு 58

6. **மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 27—தொழில் துறை
(ஆ) கோரிக்கை எண் 31—தகவல் தொழில்நுட்பவியல் துறை } 58-199

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 58,79,96-97, 158-195

*திரு. செ.ம. வேலுசாமி 72,90,97-106

திரு. எஸ்.எஸ். சிவசங்கர் 108-117

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 117-135

*திரு. கி. ஆறுமுகம் 62,83,135-142

செல்வி கே. பாலபாரதி 75,93,122, 142-147

திரு. தி. இராமசாமி 73-74,91, 147-150

*திரு. ஆர். ஞானதாஸ் 151-153

*திரு. எல். ரவிச்சந்திரன் 75-76,92, 153-158

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 200-202




## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில்நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228385
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

D
V211,31'008
Y08 . S2 . 1

14. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

15. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

20. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

24. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26.சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27.கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28.ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29.மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30.பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

**2. Minister for Finance** - **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

**3. Minister for Electricity** - **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

**4. Minister for Rural Development and Local Administration** - **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

**5. Minister for Co-operation** - **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation, Statistics and welfare of Ex-Servicemen

**6. Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

**7. Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

**8. Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

**9. Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

**10. Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

**11. Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



**12. Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

**13. Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

**14. Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

**15. Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

**16. Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

**17. Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

**18. Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

**19. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

**20. Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

**21. Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

**22. Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

**23. Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

**24. Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



**25. Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

**26. Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

**27. Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

**28. Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

**29. Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

**30. Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

**31. Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி

திரு. குத்தாலம் க. அன்பழகன்

திருமதி டி. யசோதா

திரு. கி. ஆறுமுகம்

திரு. என். நன்மாறன்

திருமதி பி. பத்மாவதி

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல்., பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம்.எஸ்.டபிள்யூ., பிஎட்., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. எஸ். இராமன், பி.காம்., | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி–I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. | திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா. - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்

64. குருசாமி, திரு. எஸ்.எஸ். - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் சு. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி—2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | சேலம்—I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. - மதுரை மேற்கு
204. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
205. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
206. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
207. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
208. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
209. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
210. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
211. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
212. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
213. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
214. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
215. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்–2
217. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
218. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
219. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
222. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி



223. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
226. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
227. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
230. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
231. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
232. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
233. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
234. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. ஜி. மாசிலாமணி - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 23

## 2008 மே 5, திங்கட்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> **"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்**
> **நீள்வினையான் நீளும் குடி."**

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவன் அயராது பாடுபட்டால் அவனைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**191—**

### தென்னை நாற்றுப் பண்ணை

***22455—திரு. எம். அன்பழகன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பழனி தொகுதியில் வீரிய தென்னை நாற்றுப் பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழனி தொகுதியில் வீரிய தென்னை நாற்றுப் பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கடந்த மாதம் யானைகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், கடந்த இரண்டு தினங்களாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் வெள்ள நிவாரணம் வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் எங்கள் அண்ணன் தளபதி அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 42,000 ஏக்கர் தென்னை சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 11,600 ஏக்கர் பண்ணை பழனி வட்டத்தில் உள்ளது. சமீபகாலமாக தென்னை விவசாயம் 4 சதவிகிதம் அதிகரித்து வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பதவி ஏற்றபோது, திண்டுக்கல் மாவட்டத்தில், ஆத்தூர் தொகுதியில், சித்தையன்கோட்டையில் தென்னை ஒட்டு மையம் தொடங்கினார்கள். அதன் பின்பு, 2002–ல் அது எடுக்கப்பட்டுவிட்டது. அருகில் உள்ள மாவட்டங்களில் தென்னை நாற்றுகளை விவசாயிகள் சென்று கேட்டால், அந்தந்த மாவட்டத்திற்கு முன்னுரிமை வழங்குகிறார்கள். எனவே, எங்கள் மாவட்டத்தில், அதுவும் எனது தொகுதியில் குறிப்பாக, தென்னை நாற்றுப் பண்ணையோ அல்லது ஒட்டு மையமோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துவக்க முன்வருவார்களா எனப் பணிவுடன் கேட்டு, பரிசீலனை செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டம், ஆதிலட்சுமிபுரத்தில் செயல்பட்டு வந்த அரசு நாற்றுப் பண்ணை தனியாருக்குச் சொந்தமான நிலத்தில் குத்தகை முறையில் செயல்பட்டு





வந்ததால், 30–9–2000 முதல் அரசின் கொள்கை முடிவின்படி மூடப்பட்டது. மேலும், இதே அடிப்படையில்தான் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாரம், சித்தையன்கோட்டையில் செயல்பட்டு வந்த அரசு தென்னை ஒட்டுச் சேர்ப்பு மையம் 15–9–2002–ல் மூடப்பட்டது. திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஓர் ஆண்டிற்குத் தேவையான 10,000 நெட்டை தென்னங்கன்றுகள் அருகிலுள்ள தேனி, மதுரை மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள அரசு தென்னை நாற்றுப் பண்ணையிலிருந்து பெறப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. பழனி தொகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தேவையான தென்னங்கன்றுகள், தேனி மாவட்டத்திலுள்ள வைகை அணை அரசு தென்னை நாற்றுப் பண்ணையிலிருந்து பெறப்பட்டு வேளாண் விரிவாக்க மையங்கள்மூலம் விவசாயிகளுக்குத் தட்டுப்பாடின்றி விநியோகம் செய்யப்படுகின்றன. அதனால், பழனி தொகுதியில் வீரிய தென்னை நாற்றுப் பண்ணை அமைக்கும் அவசியம் ஏற்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

**திரு. எம். அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற காலங்களிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து எங்கள் தொகுதியில் நாற்றுப் பண்ணை அமைத்துத்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்வதோடு, திருச்சி முதல் கன்னியாகுமரி வரை உள்ள பகுதிகளில், கிட்டத்தட்ட 2 இலட்சம் ஏக்கர்களில் தென்னை பயிரிடப்பட்டு வருகிறது. ஆகவே, திண்டுக்கல் பகுதியிலே ஓர் ஆராய்ச்சி மையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விவசாயிகளை அச்சுறுத்தி வருகிற வீரியமிக்க மரபணு விதைகள்—பி.டி. விதைகளைத் தடை செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா? வீரியமிக்க பி.டி. இரக மரபணு விதைகளை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9–35*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வி என்பது உண்மையாக இருந்தாலும், பி.டி. மரபணு விதைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நல்ல உற்பத்தி விளைச்சலைத் தரக்கூடிய, புதிய இரகங்களைத்தான், புதியதாக மரபணு முறையிலே கண்டுபிடித்து விநியோகிக்கிறார்கள். அதிலே ஒன்றும் தவறு இருப்பதாகத் தெரியவில்லை. விவசாயிகள் விரும்பி அதை வாங்கிப் பயிரிடுகின்றார்கள். ஆகவே, ஒரு தவறான பிரச்சாரத்தை மேற்கொள்வது, நம்முடைய விவசாயிகளுடைய நன்மையைப் பாதிக்கும். விவசாயிகளுடைய உற்பத்தியைப் பாதிக்கும் என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வீரிய தென்னை நாற்றுப் பண்ணைகள், சில இடங்களில் மட்டுமே இருக்கின்ற காரணத்தினாலே, விவசாயிகளுக்குத் தேவைப்படக்கூடிய அளவிற்கு, தென்னங்கன்றுகள் கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. பொதுவாக குட்டை–நெட்டை என்கிற வகை உருவாக்கத்தை, இப்போது இராணிப்பேட்டை, நவல்பூரில் சிறப்பாகச் செயல்படுத்துகிறார்கள். ஆனால், போதிய அளவிற்கு அவர்களாலே விவசாயிகளுக்குக் கொடுக்கமுடியவில்லை. அவற்றை அதிகரித்துக் கொடுப்பதற்கும், அது வளர்ந்த பிறகு பார்த்தால் Eriophyid என்கிற அந்த நோய் கண்டு தென்னங்காய்கள் அனைத்தும், மாங்காய் அளவிற்கு சிறிய அளவாகி எல்லா இடங்களிலும் காய்த்துக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்த Eriophyid–ஐ முழுமையாகக் கட்டுப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்? உயரமான மரமாக இருப்பதால், இப்போது மரம் ஏறுவதற்கு ஆட்களே வரமாட்டேன் என்கிறார்கள். ஆகவே, மனிதர்களே எட்டிப் பறிப்பதற்கு குட்டை–நெட்டை தென்னை





மரங்களை மட்டுமே நிறைய தமிழகத்தில் வளர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 22 தென்னை நாற்றுப் பண்ணைகள் தற்போது செயல்படுகின்றன. இவற்றின்மூலம், தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. 2007–2008 ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட தென்னை நாற்றுகள் நெட்டைக் கன்றுகள் 5,82,000, நெட்டை–குட்டைக் கன்றுகள் 3,73,000, குட்டை–நெட்டைக் கன்றுகள் 9,500, மொத்தம் 9,64,500 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, 2008–2009 ஆம் ஆண்டில், விநியோகம் செய்யப்படவுள்ள தென்னங்கன்றுகள், நெட்டை, நெட்டை–குட்டை, குட்டை–நெட்டை மொத்தம் 9,72,240 கன்றுகள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்கப்பட இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், Eriophyid நோயைப் பற்றி சொன்னார்கள். 5, 6 ஆண்டுகாலத்திற்கு முன்பு அந்த நோய் தாக்கம் ஏற்பட்டு, அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக, வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சி செய்து சில மருந்துகளைக் கண்டுபிடித்து மரத்தின் மேலே சென்று தெளிப்பது, அல்லது Root–bit வேரிலே கட்டி அதைக் கட்டுப்படுத்துவது என்ற முறையிலே நடவடிக்கை எடுத்து வருகின்றோம். கேரளாவிலே இருக்கின்ற தென்னை வாரியம், இந்த ஆண்டுகூட 22 கோடி ரூபாய்க்கு அந்த மருந்தைக்கொண்டு, Eriophyid–ஐ கட்டுப்படுத்துவதற்காக அனுமதித்திருக்கிறார்கள். வேளாண்மைத் துறை அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு, பொள்ளாச்சி போன்ற மாவட்டங்களில், ஒரு தென்னை மரம் 500 காய்கள் காய்க்கின்ற அளவிற்கு தென்னை வீரிய விதைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சில இடங்களில் தென்னங்கன்றுகள்

11-99—3a

நட்டு, விவசாயிகள் 4 ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், அதிலே தென்னங்காய்கள் காய்க்காத நிலைமையிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட போலியான தென்னை மரக் கன்றுகளை உற்பத்தி செய்யக்கூடியவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பண்ணைகளிலே உற்பத்தி செய்து வழங்கப்படுகின்ற தென்னங்கன்றுகளைப் பற்றித்தான் இங்கே கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. தனியார் வழங்கக்கூடிய, உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய தென்னங்கன்றுகள், அப்படி ஏதாவது உற்பத்தி பாதிக்கக்கூடிய கன்றுகளைத் தயாரித்துத் தருவது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்தால், அது எந்தப் பண்ணையிலிருந்து வழங்கப்பட்டது என்ற புகாரை அவர் எழுதிக்கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 192, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**192—**

## தூர் வாருதல்

***9277—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் பரதராமி, தட்டப்பாறை, கல்லப்பாடி மற்றும் கூடநகரம் ஏரிகளைத் தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

முற்பகல் 9–40

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி ஏற்கெனவே வறட்சியின் பிடியில் இருக்கின்ற தொகுதி. குடிநீரே அத்துப்போன தொகுதி. இன்னும் சொல்லப்போனால், ஆயிரம் அடி Bore போட்டால்கூட சொம்பு அளவு, டம்ளர் அளவுக்குக்கூட தண்ணீரே இல்லாத பகுதி, வேலூர் மாவட்டத்தில் கருப்புப் பகுதியாக அறிவிக்கப்பட்ட பகுதி. இந்தப் பகுதிகளைக் கணக்கில்கொண்டு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு ஏரிகளைத் தூர் வாரும் திட்டத்தின் அடிப்படையிலே எனக்கு ஏற்கெனவே அந்தப் பகுதியிலே கூடநகரம் ஏரியைத் தூர் வாருவதற்காக 10 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள். உண்மையிலேயே எங்கள் தொகுதி மக்களின் சார்பில் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், அந்தப் பகுதிக்கு அருகில் இருக்கின்ற தட்டப்பாறை ஏரி—மோர்தானா அணைத் தண்ணீர் அந்த ஏரியின் மையப் பகுதியில் கால்வாய் வெட்டப்பட்டு ஏரிக்குள்தான் வருகிறது. அந்த ஏரியைத் தூர் வாரவேண்டுமென்று கேட்கிறோம். அந்த ஏரிப் பகுதியில் ஏரியைக் கடந்து தண்ணீர் போவதால், மோர்தானாவில் இருந்து தண்ணீர் அந்த ஏரிக்கு வரவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். அந்தப் பகுதியில் தண்ணீர் போகின்றபடியால் மக்கள் சட்டத்தை மீறி அந்த ஏரியின் கால்வாயை உடைத்து ஏரிக்குத் தண்ணீரை எடுக்கின்றார்கள். எனவே, அந்த ஏரியைத் தூர் வார வேண்டும். அந்தக் கால்வாயை உடைத்ததால் பிரச்சினைக்குரிய அந்த விவசாயிகள்மீது போடப்பட்ட வழக்குகளையும் வாபஸ் வாங்கி அந்த ஏரிக்குத் தண்ணீர் அளிக்க வேண்டும்.

அதேமாதிரி, பரதராமி பகுதியில் இருக்கின்ற ஏரி மிகப் பெரிய ஏரி. பரதராமி பகுதியில் இருக்கின்ற காட்டுப் பகுதியில் வருகின்ற தண்ணீர் ஆந்திரப் பகுதிக்குச் சென்றுவிடுகிறது. அந்தத் தண்ணீரை இந்தப் பகுதிக்கு செக்–டேம் கட்டி கொண்டுவந்தால் (மணியடிக்கப்பெற்றது) தலைவர் அவர்களே, இது நான்கு ஏரிகள் சம்பந்தப்பட்ட கேள்வி. இந்தக் கேள்விக்கு உட்பட்டுதான் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

[2008 மே 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திருமதி ஜி. லதா:** நான்கு ஏரிகள் இருக்கின்றன. அந்த 4 ஏரிகளில்— பரதராமி ஏரியில் செக்–டேம் கட்டி தண்ணீரைத் தடுத்தால் ஆந்திரப் பகுதிக்குப் போகாமல் பரதராமி ஏரிக்குத் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த ஏரியைத் தூர் வார வேண்டும். அதேமாதிரி கல்லப்பாடி பகுதியில் இருக்கின்ற ஏரியைத் தூர் வாரினால் இராமாலை, மூங்கப்பட்டு, கல்லப்பாடி போன்ற 4 ஊராட்சிகளில் உள்ள பல விவசாயிகளுக்கு உதவிகரமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். எவ்வளவு நேரமாக ஒரு கேள்வியைக் கேட்கிறீர்கள்? மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைப் போடும்போது இருந்த நிலைமை வேறு, இப்போது இருக்கின்ற நிலைமை வேறு. அவரே சொன்னார் கூடநகரம் ஏரி தூர் வாரப்பட்டிருக்கிறது என்று. தட்டப்பாறை ஏரிக்கு மோர்தானா அணை தண்ணீர் வரவேண்டுமென்று கேட்டார். சென்ற முறையே அந்தப் பிரச்சினை வந்தது. ஆகையினால் இந்த முறை கால்வாய்ப் பணிக்கு 3–1/2 கோடி ரூபாய் செலவிடுகிறபோது தட்டப்பாறை ஏரிக்குத் தனியாக ஒரு மதகு வைத்து தண்ணீர் போகவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறேன். பரதராமி ஏரியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே 10 இலட்சம் ரூபாய் செலவிலே தூர் வாரப்பட்டிருக்கிறது. ஆகவே, இவை நடந்து முடிந்துவிட்ட வேலைகள். நடப்பதற்கு முன்னாலேயே போடப்பட்ட கேள்வி என்பதால் அவர் கேட்டிருக்கிறார். ஆனால், தொகுதியிலே பல்வேறு பிரச்சினைகளை திருமதி லதா அவர்கள் பேசுவதற்கு இந்தக் கேள்வி துணையாக இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா. Supplementary question short ஆக இருக்கவேண்டும்.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடநகரம் ஏரியைப் பொறுத்தவரையிலே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து தூர் வாரப்பட்டதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த கூடநகரம் ஏரிக்கு ஆற்றிலிருந்து போகக்கூடிய கால்வாயில் ஆற்று மணல் எடுக்கப்பட்டு 20 அடி பள்ளத்தில் இருப்பதால் அந்த ஏரிக்குத் தண்ணீர் போவதற்கு வாய்ப்புகளே இல்லை. 4 கிலோ மீட்டர்



2008 மே 5]

தூரத்திற்கு அந்தக் கால்வாயும் தூர் வாரப்படவேண்டும். ஏரிகளும் தூர் வாரப்பட வேண்டும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு ஏரிகள் பணிப் பரிந்துரை என்று கொடுத்த நம்முடைய முதல்வர் அவர்களும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் கூடுதலாக இன்னும் பல ஏரிகளைத் தூர் வாருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளைத் தூர் வாருவதற்கான திட்டம் குறித்து இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, நபார்டு வங்கி, உலக வங்கித் திட்டத்தின்மூலமாக இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய நிதிகள் பெறப்பட்டு, அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவா? ஒரு சில கேள்விகள் வரும்போது இங்கே இடையிடையே நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால், ஒட்டுமொத்தமாக பல இடங்களிலே அதற்கான முன்மொழிவுகள் வந்திருக்கின்றன. நான் 1996 ஆம் ஆண்டு முதல் கேட்டுக்கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கிற மிகப் பெரிய ஏரியான திருமக்கோட்டை திரிமேனி ஏரியைத் தூர் வாருவதற்கான திட்ட மதிப்பீடுகள் 3 முறை வந்து இன்னும் அது அனுமதிக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 1–1/4 கோடி ரூபாய் அளவிலே அது சீரமைக்கப்பட வேண்டுமென்று கேட்டு இப்போதுகூட கருத்துருக்கள் வந்திருக்கின்றன. இந்த ஆண்டாவது நிதி ஒதுக்கீடு செய்து அதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலே திருமக்கோட்டை திருமேனி ஏரி தூர் வாரப்படுமா என்பதுதான் கேள்வியினுடைய மையக் கருத்து.

[2008 மே 5

அதற்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டு நபார்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களிலே வந்துவிடும், போதுமா?

முற்பகல் 9–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 193, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**193—**

**பேருந்து வசதி**

***20410—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து இரயில் நிலையம், கருமலைக்கூடல், கோம்பரான்காடு, புதுரெட்டியூர், சின்னக்காவூர் வழியாகத் தாளையூர் வரை பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூரிலிருந்து இரயில் நிலையம், கருமலைக்கூடல், கோம்பரான்காடு, புதுரெட்டியூர், சின்னக்காவூர் வழியாகத் தாளையூருக்கு சேலம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தடம் எண் 25 மற்றும் தடம் எண் 35 ஆகியவற்றின்மூலமாக காலை, பிற்பகல் மற்றும் மாலையில் பள்ளி நேரத்தில் 6 நடைகள் இயக்கப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி இருக்கையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பேருந்து நிலையத்திலிருந்து மேட்டூர் இரயில் நிலையம் சுமார் 10 கி.மீ. இடைவெளியிலே இருக்கிறது. மேட்டூர் பேருந்து



2008 மே 5]

நிலையத்திலிருந்து இரயில் புறப்படும் நேரங்களிலே இரயில் நிலையத்திற்கு வருவதற்கு பயணிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மேட்டூர் பேருந்து நிலையத்திலிருந்து இரயில் நிலையம் வழியாகவும், கருமலைக்கூடல், கோம்பரான்காடு, புதுரெட்டியூர், சின்னக்காவூர் வழியாகத் தாளையூர் வரை நகரப் பேருந்து இயக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடம் எண் 25 மேட்டூரிலிருந்து காலை 8 மணி 5 நிமிடத்திற்குக் கிளம்பி 8–55–க்கு தாளையூர் சென்றடைகிறது. தாளையூரிலிருந்து 9–05 மணிக்குக் கிளம்பி காலை 9–55–க்கு மேட்டூர் வந்து சேருகிறது. மேட்டூரிலிருந்து மாலை 4–55 மணிக்குக் கிளம்பி தாளையூருக்கு மாலை 5–55 மணிக்கு வந்து சேருகிறது.

அதேபோல தடம் எண் 35 மேட்டூரிலிருந்து பகல் 1–10 மணிக்குக் கிளம்பி தாளையூருக்கு 2–00 மணிக்குச் சென்றடைகிறது. தாளையூரிலிருந்து பகல் 2–05 மணிக்குக் கிளம்பி 2–55–க்கு மேட்டூர் வந்தடைகிறது. 6 நடைகள் அந்தப் பகுதியிலே தினசரி இயக்கப்படுகின்றன. மேலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூடுதலாக நடை வேண்டுமென்று விரும்பினால் அதற்கான பேருந்துகள் விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலாக நடைகள் இயக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் சொன்னதற்கு நன்றி. இருந்தாலும், இப்பொழுது மேட்டூர் இரயிலானது சேலம் வழியாக விருத்தாசலம் வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது. சேலம், விருத்தாசலம் செல்லவேண்டிய பயணிகள் அதிகமாக மேட்டூர் பேருந்து நிலையிலே இருக்கிற காரணத்தினாலே மேட்டூர் பேருந்து நிலையத்திலேயிருந்து அந்த இரயில் நிலையம் வரை குறிப்பாக இரயில் புறப்படும் நேரங்களிலே, வரும் நேரங்களிலே நகரப் பேருந்து தனியாக இயக்கப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இயக்கப்படுகின்ற 6 நடைகளிலேயே பயணிகளினுடைய அடர்வு குறைவாக இருப்பதாக அதிகாரிகள் எல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, பயணிகள் அதிகமாக வருவார்களேயானால் கூடுதலாகப் பேருந்துகள் நிச்சயமாக இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 40 கி.மீ. மாநகரப் பேருந்துகள் செல்லவேண்டும் என்பதை மாற்றி 50 கி.மீ. தூரம் என்று வரையறுத்த காரணத்தினால் என்னுடைய தொகுதி முழுமையும் இன்றைக்கு மாநகரப் பேருந்துகள் சென்று கொண்டிருப்பதற்காக நான் உண்மையிலேயே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, சென்னையிலிருந்து புறப்படுகின்ற வேலூர் பஸ், பெங்களூர் பஸ்கள் எல்லாம் ஸ்ரீபெரும்புதூருக்கு உள்ளே வராமல் வெளிவழியாகவே, அவுட்டரிலேயே சென்று விடுகின்ற காரணத்தினால் அந்தப் பேருந்துகள் எல்லாம் ஸ்ரீபெரும்புதூர் பஸ் நிலையத்திற்கு வந்து செல்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர், வேலூர் போன்ற இடங்களுக்கு நேரடியாகச் செல்கின்ற பேருந்துகள் எப்பொழுதுமே ஸ்ரீபெரும்புதூர் உள்ளே சென்று வருவதில்லை. கடந்த காலத்திலேகூட அது அங்கு செல்வதில்லை. காரணம், நேரடியாகச் செல்கின்ற பயணிகள் விரைவாக, சீக்கிரம் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு இருப்பதால், இடையிலே நிறுத்திச் சென்றால் தாமதம் ஆகிறது என்று அதில் ஏறுவதற்கு அவர்கள் விரும்புவதில்லை. அதைக் காரணமாக வைத்துத்தான் நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன், அவர்கள் எங்கள் பகுதிக்கெல்லாம் நீங்கள் 50 கி.மீ. வரை நீட்டித்துதான் பேருந்துகள்



விடவேண்டும் என்று முதன்முதலிலே தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி பெற்று இப்போது பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. தேவைப்பட்டால் இன்னும் கூடுதலாக ஸ்ரீபெரும்புதூரிலிருந்து இயக்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்போதே 12, 15 பேருந்துகளில் ஆரம்பித்து அங்கு இருக்கின்ற செக் போஸ்ட் வரை கிட்டத்தட்ட 50 பேருந்துகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மீண்டும் தேவையென்று சொன்னால் சென்னைக்கும் ஸ்ரீபெரும்புதூர் செக் போஸ்ட்டுக்கும் இடையே புதிய பேருந்துகள் நிச்சயமாக விடுவோம். ஆனால், நீண்ட தூரப் பேருந்துகள் உள்ளே சென்று வருவதற்கு மக்கள் விரும்புவதில்லை; அனுமதியும் இல்லை.

முற்பகல் 9–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியிலே இருந்து, போளூர், ஆதமங்கலப்புதூர், வீரளூர் வழியாக செங்கத்திற்கு அரசின் சார்பிலே பேருந்து இயக்குவதற்கு ஆவன செய்யப்படுமா? தற்போது ஆரணியில் இருந்து செங்கத்திற்கு நேரடியாக அரசுப் பேருந்துகள் எதுவும் இயக்கப்படுவதில்லை என்பதையும் தெரிவித்து அவசியம் இந்தப் பேருந்தை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் நடைபெற்ற கூட்டத்திலே நம்முடைய ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே அதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தன்னுடைய வெட்டுத் தீர்மானத்திலே அதைத் தெரிவித்திருக்கிறார் என்று கருதுகிறேன். எனவே, அதை நன்கு பரிசீலித்து உடனடியாகப் பேருந்துகள் விடுவதற்கு ஆவன செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. .அரி

[2008 மே 5

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூரிலே இருந்து மணவாள நகர் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்குப் போதுமான பேருந்து வசதிகள் இல்லை. ஸ்ரீபெரும்புதூர் தொழில் பகுதியாக விளங்குவதால், திருவள்ளூரில் இருந்து மணவாள நகர் வழியாக தினந்தோறும் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள், தொழிலாளர்கள் ஸ்ரீபெரும்புதூருக்குச் செல்கிறார்கள். சில நேரங்களிலே காலை, மாலை நேரங்களிலே அந்தப் பகுதியிலே பார்க்கும்போது பேருந்தினுடைய கூரைகளிலே ஏறிப் பயணம் செய்கின்ற ஆபத்தான சூழ்நிலையும் அந்தப் பகுதியிலே நிலவுகிறது. இதனால் விபத்துகளும் ஏற்படுகின்றன. அதை இந்த அரசு கவனத்திலே கொண்டு, திருவள்ளூரிலே இருந்து மணவாள நகர் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்குப் போதுமான அரசுப் பேருந்துகள் இயக்கிட வேண்டும், அதேபோல் திருவள்ளூரிலிருந்து திருவாலங்காடு வழியாக அரக்கோணத்திற்குப் பேருந்து வேண்டும். திருவாலங்காட்டிலே புகழ்பெற்ற அருள்மிகு விடாரனீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. சர்க்கரை ஆலை உள்ளது. அரசு அலுவலகங்கள் உள்ளன. ஆனால் போதுமான பேருந்துகள் இல்லை. அந்தப் பகுதியிலும் போதுமான பேருந்துகளை இயக்கிட இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநகரப் போக்குரத்துக் கழகப் பேருந்துகளை 50 கி.மீ. வரை நீட்டித்த காரணத்தால், திருவள்ளூர் நகரில் இருந்து நேரடியாகச் சென்னைக்கு நிறையப் பேருந்துகள் இப்போது இயக்கப்பட்டு வருகின்றன. அதைத் தாண்டி கும்மிடிப்பூண்டி வரை பேருந்துகள் எல்லாம் இயக்கப்பட்டு வருகின்றன. இதிலே மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்கும், விழுப்புரம் போக்குவரத்துக் கழகத்திற்கும் இடையே. சிறிய சிறிய பிரச்சினைகள் இருக்கின்றன. அதையெல்லாம் இப்போது பேசிப் பேசித்தான் இவர்கள் பாதி, அவர்கள் பாதி என்ற வகையிலே பேருந்துகள் விட்டுக்கொண்டு இருக்கிறோம். திருவள்ளூரில் இருந்து மணவாள நகர் வழியாக நிச்சயமாக ஸ்ரீபெரும்புதூருக்குத் தேவையான அளவுக்கு இன்றைக்கோ, நாளையோ அல்லது நாளைய மறுநாளோ அதிகாரிகளை சென்று பார்க்கச் சொல்லி, எவ்வளவு பயணிகள் அங்கே இருக்கிறார்கள்



2008 மே 5]

என்பதைக் கருத்தில்கொண்டு கூடுதலான பேருந்துகள் விடவும், அதேபோல திருவள்ளூரில் இருந்து சர்க்கரை ஆலைப் பகுதிக்கு விடுவது குறித்தும் பார்த்து விரைவிலே உங்களுடைய கோரிக்கையை நிச்சயமாக நிறைவேற்றித் தருவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையிலே, பல்வேறுவிதமான புதிய முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டு வருகிறார்கள் நம்முடைய அமைச்சர் அவர்கள். புது டில்லியில் இருப்பதைப்போல Pollution–free — மாசுபடுத்தாத போக்குவரத்தினை சென்னை மாநகரிலே உருவாக்குவதற்கு செயற்குறிப்பு எதுவும் வைத்திருக்கிறாரா, அதைச் செயல்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வியில் உள்ளவாறு கடந்த ஆண்டே இந்த அரசு அமல்படுத்தத் தொடங்கிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு ஆயிரம் புதிய பேருந்துகள் வழங்கியபோதே B.S.–III, pollution–free bus வாங்கப்பட்டது. இப்போது அதுதான் வாங்கப்படுகிறது. சாதாரணப் பேருந்துகள் அத்தனையும் B.S.–III என்ற வகையிலேதான் வாங்கப்படுகின்றன. மேலும், சென்னை மாநகரம் pollute ஆகாமல் இருப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்தத் துறை செய்துகொண்டு இருக்கிறது. குறிப்பாக ஆட்டோக்களை எல்லாம் gas ஆட்டோக்களாக மாற்ற வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே ரூ.2,000 மானியம் அவர்களுக்குத் தந்து, இருக்கின்ற பெட்ரோல், டீசல் ஆட்டோக்களை L.P.G. ஆட்டோக்களாக மாற்றுவதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டது. ஆட்டோ ஓட்டுநர்கள் எல்லாம் எங்களுக்கு அந்தத் தொகை போதாது; ரூ.11,000 ஆகிறது, கூடுதலாகத் தர வேண்டும் என்று கேட்டார்கள். நம்முடைய மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களை அணுகி, மேற்கொண்டு ரூபாய் ஆயிரம் தருவதாக, இப்போது ரூ.3,000 தருவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்குத் தேவையான

மீதம் இருக்கின்ற தொகையை வங்கியின்மூலம் கடனாக ஏற்பாடு செய்து ஆட்டோக்களை L.P.G. ஆட்டோக்களாகக் கொண்டுவதற்கான முயற்சியும் எடுத்திருக்கிறோம். பேருந்துகளைப் பொறுத்தவரை B.S.–III என்ற pollution–free பேருந்துகளை விட்டுக்கொண்டிருக்கிறோம். எனவே, அரசு சென்னை மாநகரை மாசற்ற நகரமாக உருவாக்குவதற்கு எடுக்கின்ற முயற்சியில் எங்கள் துறையும் ஒத்துழைத்துக்கொண்டிருக்கிறது.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையில் ஈடுபடக்கூடிய மாணவர்கள், இளைஞர்களுக்கு இரயிலிலே இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுகிறது, சலுகை வழங்கப்படுகிறது. அதேபோன்று, நம்முடைய தமிழ்நாடு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்—எப்போதும் அல்ல—ஏதாவது விளையாட்டுப் போட்டிகள் நடக்கக்கூடிய காலங்களில், மாவட்டத்திற்கு மாவட்டம் செல்கின்றபோது மாணவர்களுக்கும் விளையாட்டுத் துறை இளைஞர்களுக்கும் இலவசமாக பாஸ் வழங்கப்படுமா? அதுகுறித்து அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பேருந்துகள் எவ்வளவு சிரமமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை உறுப்பினர்கள் எல்லாம் நன்றாக அறிவீர்கள். இந்தியாவிலேயே மிகக் குறைவான கட்டணத்தில் பேருந்துகளைத் தமிழ்நாட்டிலேதான் நாம் ஓட்டிக் கொண்டிருக்கிறோம். பேருந்துக் கட்டணமாக கிலோ மீட்டருக்கு 28 காசு மட்டுமே வாங்கிக் கொண்டிருக்கிறோம். எனவே, போக்குவரத்துக் கழகங்கள் சார்பாக எதையும் இலவசமாக நாங்கள் எப்போதும் தருவதில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு பஸ் பாஸ் வழங்குவதற்குகூட, அரசாங்கம் எங்களுக்கு மானியமாகத் தருகிறார்கள். அதேபோல சமூக நலத் துறையிலிருந்து தருகின்ற இலவச பாஸ் என்பது சமூக நலத் துறையின் நிதியொதுக்கீட்டிலிருந்து



எங்களுக்கு வந்து கொண்டிருக்கிறது. எனவே, மொத்தச் செலவில் 55 சதவிகிதத்தை அரசாங்கம் தருகிறது, 45 சதவிகிதத்தை போக்குவரத்துக் கழகங்கள் ஏற்றுக்கொள்கின்றன என்ற வகையிலேதான் மாணவர்களுக்கு அந்த பஸ் பாஸை நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். சென்னையிலே இருக்கின்ற பேருந்துகளில் மட்டும் 100 சதவிகிதத்தை அரசாங்கம் நமக்குப் பணமாகத் தந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இலவசமாக விளையாட்டுத் துறை வீரர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ எங்கள் துறையிலிருந்து கொடுப்பதற்குரிய வசதி வாய்ப்புகள் துறைக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**194—**

## கட்டடம்

***996—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை தொகுதி, வேட்டவலம் சித்த மருத்துவ பிரிவுக்குக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை தொகுதி வேட்டவலம் சித்த மருத்துவ பிரிவு, தற்சமயம் அரசு ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடத்திலே, ஒரு பகுதியிலே இயங்கி வருகிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, நிதியுதவி பெற்று புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் விரைவில் சித்த மருத்துவப் பிரிவு துவக்கப்பட உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் ஆண்டில் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஓமியோபதி, யோகா

[2008 மே 5

மற்றும் இயற்கை வைத்தியத்தில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் விவரம் என்ன? எல்லா மாவட்ட மருத்துவமனையிலும் 20 படுக்கை வசதிகள் கொண்ட சித்த மருத்துவக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனையிலும் 20 படுக்கை வசதி கொண்ட சித்த மருத்துவமனை அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் 18 நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அரசு தாலுகா மருத்துவமனை செய்யாறு, ஆரணி, வந்தவாசி, செங்கம், கடலாடி, கீழ்ப்பெண்ணாத்தூர், கோவிநந்தல், மங்கலம், தச்சூர் கலசப்பாக்கம், பெரணமல்லூர், ஆதமங்கலப்புதூர், ஜமனாமருதூர் உள்ளிட்ட மருத்துவமனைகளில் சித்தா பிரிவு இயங்கிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவத்தில் எய்ட்ஸ் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சித்த மருத்துவமனைகளில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்துகளை வழங்க அரசு முன்வருமா? திருவண்ணாமலை மாவட்ட மருத்துவமனையில் 20 படுக்கைகள் வசதி கொண்ட சித்த மருத்துவக் கட்டடம் இந்த ஆண்டு துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எய்ட்ஸ் நோய்க்காக சித்த மருத்துவத்தில் மருந்து கண்டுபிடிப்பதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு செயல்பட்டவுடன் அந்தக் குழுவின் மூலமாக சித்த மருத்துவத் துறையில் யார் யார் மருந்து கண்டுபிடித்து இருக்கின்றார்களோ, அந்தக் குழுவின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு அது வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக நாகர்கோவிலில், ஒரு சித்த மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று ஏற்கெனவே நம்முடைய அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஏற்கெனவே, நாகர்கோவிலில் பல கோடி ரூபாய் செலவு செய்து, ஆயுர்வேதக் கல்லூரிக் கட்டட வேலை முடிந்து, தளவாடச் சாமான்கள் எல்லாம் தயார் செய்து, திறப்பு விழாவிற்கு அது தயாராக இருக்கிறது. சித்த மருத்துவக் கல்லூரி திறப்பதற்கான கால அவகாசம் நீட்டித்துக்கொண்டு போவதால் ஆயுர்வேதக் கல்லூரியைத் திறக்க வேண்டாம் என்றிருப்பது நியாயம் இல்லை.

எனவே, அமைச்சர் அவர்கள் பணிகள் முடிந்து திறப்பு விழாவுக்குத் தயாராக இருக்கின்ற ஆயுர்வேதக் கல்லூரியை உடனடியாகத் திறக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் அது விரைவில் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் இரண்டு சித்த மருத்துவக் கல்லூரிகளும், பாளையங்கோட்டையிலும் சரி, சென்னையிலும் சரி, clinical pathology துறைக்குப் போதிய இட வசதியில்லாமலும், போதிய ஆய்வகக் கருவிகள் இல்லாமலும், போதிய பயிற்சியாளர்கள் இல்லாமலும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதைச் சரி செய்ய இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை புதிய கருவிகள் வழங்கப்படுமா என்பதுபற்றியது. அதற்கு, அகில இந்திய மருத்துவமுறையிலான சிகிச்சைப் பிரிவுகள் நடப்பாண்டில் துவங்கப்படவுள்ளன. முதல்கட்டமாக 134 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 13,40,00,000/– ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு, புதிய கருவிகள் வழங்கி சிகிச்சைகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் டி. பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு சித்த மருத்துவக் கட்டடமும், அதேபோல ஸ்ரீபுரந்தான் துணை சுகாதார நிலையம் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தில் இயங்குவதால், அதற்கு ஒரு சுகாதார நிலையக் கட்டடமும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 134 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றேன். முடிந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும். முடிந்தால், அது தேவை என்றால், மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தாலும் அது கட்டித்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் அரசு பொது மருத்துவமனையில் நீண்ட நாட்களாக பெண் டாக்டர்கள் பிரச்சினை, மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது.





எனவே, உடனடியாக பெண் டாக்டரை நியமித்து அப்பகுதி மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் நன்னிலம் மருத்துவமனையில் பெண் மருத்துவர் வேறு இடத்திலிருந்து deputation–ல் அங்கே நியமிக்கப்பட்டுள்ளார். கூடிய விரைவில் நிரந்தரமாக மருத்துவரை நியமிக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், மருத்துவர்களை நாங்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைத்தால் போதிய டாக்டர்கள் சரியாக வருவதில்லை. இப்போது தற்காலிகமாக அவர்களுடைய நன்னிலம் மருத்துவமனைக்கு பெண் டாக்டர் ஒருவர் deputation–லே நியமிக்கப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்றத்தூர் யூனியனுக்குட்பட்ட படப்பையில் இடம் இருக்கின்றது, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு. அதைக் கட்டித் தருவதற்குக்கூட ஒருவர் முன் வந்திருக்கிறார். மொத்தத் தொகையையும் நானே செலவு செய்கிறேன் என்றும் சொல்லியிருக்கின்றார். ஆனால், தங்களுடைய அனுமதியைத்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். தங்களுடைய அனுமதி கிடைத்தால் உடனே பணி தொடங்கப்படும். அந்த அனுமதியை அளிப்பீர்களா என்று அவைத் தலைவர் அவர்கள் மூலமாக உங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 116 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. மாண்புமிகு

உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உங்கள் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** கேள்விதான்; கேள்விதான் கேட்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் டாம்காலினுடைய லேகியம், தைலம் போன்றவற்றையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். வழுக்கைத் தலையில் முடி வருவதற்கும், அதேபோல நரைமுடி கருப்பு ஆவதற்கும் அவையெல்லாம் உதவுமா? லேகியம் என்னென்ன குணநலன்களைப் பெற்றிருக்கிறது? அது எப்படி மக்களுக்கு உதவும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த லேகியத்தை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் சாப்பிட்டால், செம்மேகம், கருமேகம், கட்டை, குருதி, வெள்ளைச்சூடு, வாதம், கண் எரிச்சல், கண் மங்கல், நீர்நீர் வியாதிகள், பாதம் வெடித்துப்போதல், மூட்டுக்கு மூட்டு வலித்தல், தலைச்சுற்றல், மண்டைச் சுற்றல், கர்ப்பத்தில் ஏற்பட்டிருக்கின்ற சூடுகள் எல்லாவற்றையும் போக்கி 40 நாட்களுக்கு சாப்பிட்டு மறுபத்தியம் இருபது நாட்களுக்கு இருந்து, புகையிலை, போகம் இல்லாமல் இருந்தால் வியாதி ஸ்வஸ்தம் ஆகிவிடும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 195, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.



**195—**

## குடமுழுக்கு

***34497—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி வட்டம், பனப்பாக்கம் ஊராட்சி, அருள்மிகு பிச்சாலீஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பனப்பாக்கம் ஊராட்சி, அருள்மிகு பிச்சாலீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் 3 நிலை இராஜகோபுரம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனைப் புதுப்பிக்க சுமார் ரூ.10.00 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பணியைச் செய்திட தற்போது திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. இருந்தாலும், இத்திருக்கோயில் திருப்பணியில் ஆர்வம் மிக்கவர்களைப் பயன்படுத்தி, நிதி திரட்டியும், துறையின் சார்பில் நிதியளித்தும் திருப்பணிகளைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி வட்டம், பனப்பாக்கம் ஊராட்சி, அருள்மிகு சௌந்தரவல்லி—பிச்சாலீஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த கோயில் ஆகும். இக்கோயில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. புலவர்கள், நாயன்மார்களால் பாடப்பெற்ற புண்ணியத்தலம். கோபுரங்கள், த்வஜஸ்தம்பம், சுவாமிப்பட்டறை, கோயிலின் இருபக்கமும் உள்ள குளம், சுற்றுச் சுவர் என்று அழகாக அமைந்திருந்த இந்தக் திருக்கோயில் பக்தர்களுக்கு அருள் வழங்கி

[2008 மே 5

வந்துள்ளது. இவ்வளவு பழமைவாய்ந்த இத்திருக்கோயில் மிகவும் சிதிலமடைந்து சிதைந்துகொண்டிருக்கிறது. இக்கோயில் முறையாக பராமரிக்கப்படாமல், யாரும் கவனிப்பாரற்று உள்ளது. இக்கோயில் கோபுரத்திலுள்ள சிற்பங்கள் அனைத்தும் கட்டையினால் செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆகவே, இத்திருக்கோயில் பணிகள் முடித்து கும்பாபிஷேகம் நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ.10 இலட்சம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். அந்த கிராமத்து மக்கள் சுமார் 50 இலட்சம் ரூபாய்க்கு மேல் நிச்சயமாக கூடுதலாக ஆகும் என்று கேட்டிருக்கிறார்கள். தொல்பொருள் ஆய்வாளர்கள்கூட இந்தத் திருக்கோயில் 11 ஆம் நூற்றாண்டு கட்டப்பட்டது என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த மதிப்பீட்டினை உயர்த்த வேண்டும். பக்தர்களும், கிராம மக்களும் நிதிதர முன்வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

அதேபோல், கடந்த வாரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தபோது, 50 சதவிகிதத்திற்குக் கூடுதலாக பக்தர்கள் தங்களுடைய பங்குத் தொகையை அளித்தால் திருக்கோயில் திருப்பணிகள் நடைபெறுவதற்கு அறநிலையத் துறை தயாராக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, இப்போது அந்தக் கிராம மக்கள் ரூ.50 இலட்சத்திற்குக் கூடுதலாக தேவை என்று அறிவித்திருக்கிறார்கள். இத்திருக்கோயில் 11 ஆம் நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்ட மிகவும் பழமைவாய்ந்த கோயிலாக உள்ளது. கொள்கை முடிவு என்று பாராமல், அரசு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்தால் மக்களும் பங்கேற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அது பழமையான திருக்கோயில். 100 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கோயிலில் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. குடமுழுக்கும் நடைபெறவில்லை. முதல்கட்டமாக, அங்கே இராஜகோபுரம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது என்று துறையின் சார்பிலே தெரிவிக்கப்பட்டிருப்பதன் காரணத்தினாலே, இராஜகோபுரத்தினைக் கட்டுவதற்கான திட்ட



2008 மே 5]

மதிப்பீடுகள் கேட்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அவர் விரும்புவதுபோல செய்வதானால் ரூ.50 இலட்சத்திற்கு மேல் என்றாலும்கூட, மூன்றில் இரண்டு பங்கு நிதியை அவர்கள் திரட்டித் தந்தால் ஒரு பங்கு நிதியினை துறையின் சார்பிலே தருவதற்குத் தயாராக இருக்கிறோம். மேலும், சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்தவுடன் நான் அங்கே நேரடியாக வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கே வந்து என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னால் அவற்றை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனப்பாக்கம் ஊராட்சி 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதியில் அமைந்திருந்தது. அந்தக் கிராம மக்கள்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வருகை தருவதற்காக மூன்று முறை programme fix செய்து கடைசி நேரத்தில் அவர் வர இயலாத காரணத்தினால் இரத்து செய்யப்பட்டது. இப்போது சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்தவுடன் அங்கே வருவதற்கு சம்மதித்திருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் அங்கே செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் பங்கு என்று தெரிவித்திருக்கிறார்கள். அரசு உதவியை 50 சதவிகிதமாக உயர்த்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**196—**

## தரம் உயர்த்துதல்

***57303—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 5

(அ) போளூர் தொகுதி, கீழ்அரசம்பட்டு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, கீழ்அரசம்பட்டு, அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தத் தேவையான விதிமுறைகள் பூர்த்தி செய்யப்படும்பட்சத்தில் வரும் ஆண்டுகளில் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை. மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் தொகுதி, கீழ்அரசம்பட்டு உயர்நிலைப் பள்ளியில் சுமார் 600 மாணவ, மாணவிகள் பயில்கிறார்கள். அதிலே மாணவியர்கள் மட்டும் 200 பேர் பயில்கிறார்கள். இதில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, அவர்கள் மேல்நிலைப் படிப்புக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், வேலூர், கணியம்பாடி போன்ற சுமார் 10 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள ஊர்களுக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது. வேறு வழியேயில்லை. அதற்கான 2 இலட்சம் ரூபாயும் கட்டப்பட்டு, முறையான விண்ணப்பமும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, இந்த ஆண்டே அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதை பேரவைத் தலைவர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கீழ்அரசம்பட்டு கிராமத்திலே இருக்கக்கூடிய பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் ஏறத்தாழ 600 பேர் என்று சொன்னார்கள், 886 பேர் படிக்கிறார்கள். அதிலே இந்த ஆண்டு 10 ஆம் வகுப்பிலே



2008 மே 5]

படிக்கக்கூடியவர்கள் 168 பேர் இருக்கிறார்கள். தவிர, அங்கு நிறைய இடம் இருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நான் விசாரித்து அறிந்த வகையில் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு முழு தகுதியுடைய பள்ளி என்று தெரிகிறது. அதற்கான முன்மொழிவுகளை அங்கிருந்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இந்த ஆண்டு நிச்சயமாக அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இதேபோல. நிறைய பள்ளிகள் தமிழ்நாடு முழுவதும் தரம் உயர்த்தவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு இன்றைக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் எவ்வளவு நிதி வேண்டுமானாலும் வழங்குவதற்குத் தயாராக இருக்கிறது. எனவே, நீங்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாக்குவது, இதுபோன்ற தரம் உயர்த்துகிற பணி தாமதப்படுகிறபொழுது, கிட்டத்தட்ட இலட்சக்கணக்கான மாணவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றம் இரண்டு ஆண்டுகள், மூன்றாண்டுகள் தள்ளிப் போகிறது. பிறகு அவர்கள் அந்தப் படிப்பைப் படிக்க வரமுடியாது. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையைத் தவிர்க்கிறபொருட்டு உடனடியாக போர்க்கால நடவடிக்கையாக நமமுடைய தலைவர் கலைஞருடைய அரசு கல்விக்கு அதிக முக்கியத்தும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இன்னும் இரண்டு ஆண்டுகளிலே தரம் உயர்த்தவேண்டிய தகுதியான அனைத்துப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்படுமா, அதற்கான நடவடிக்கையை நமது அரசு எடுக்குமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல அனைவருக்கும் கல்வி இயக்கத்தைப் பொறுத்தமட்டிலே அதிலே 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலே இருக்கக்கூடிய பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய நிலையை மத்திய அரசின் மூலமாக, மாநில

அரசினுடைய நிதிப் பங்களிப்போடு இப்போது செய்துகொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு சட்டமன்றத்திலே என்னுடைய துறையின் மானியக் கோரிக்கையிலே கூறியவாறு ஏறத்தாழ 1,005 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. தவிர, ஒவ்வொரு ஆண்டும் 100 பள்ளிகள், 120 பள்ளிகள் என்று உயர்நிலைப் பள்ளிகளாக, மேல்நிலைப் பள்ளிகளாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே பள்ளிகளைத் தரம் உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்த அவையிலே பல முறை சொல்லியிருப்பதைப்போல இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்து அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்கின்ற அடுத்தக் கட்டத்திற்கு வந்திருக்கிறோம். அனைவருக்கும் கல்வியிலே இப்போது தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலே இந்தப் பணியை முடித்துவிட்டு, அனைவருக்கும் இடைநிலைக் கல்வியிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு வருகிறபொழுது, வரக்கூடிய ஆண்டுகளிலே அதிகபட்சமாக உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தக்கூடிய நிலை வரும். 5 கிலோ மீட்டருக்கு ஒரு உயர்நிலைப் பள்ளி கண்டிப்பாக வரக்கூடிய அளவிற்கு, இப்போது 100 பள்ளிகளைத் தரம் உயர்த்த வேண்டும் என்று சொன்னால், வரக்கூடிய ஆண்டுகளிலே 200 பள்ளிகள், 300 பள்ளிகள் என்ற அளவிற்குக்கூட நிச்சயமாக அனைவருக்கும் இடைநிலைக் கல்வி SUCCESS திட்டத்தின் மூலமாகப் பண்ணமுடியும். அதைத் தொடர்ந்து மேல்நிலைப் பள்ளிகளையும் அரசு படிப்படியாக எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஒன்றியம், பாலவிடுதி ஊராட்சிப் பகுதியைச் சுற்றியுள்ள 50-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களைச் சேர்ந்த மிகவும் ஏழ்மையான மாணவர்கள், பாலவிடுதியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகின்றனர். இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்குத் தேவையான அனைத்து முன்மொழிவுகளும் அரசுக்கு அனுப்பப்பெற்றுள்ளன. எனவே, பாலவிடுதி அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு அரசிடம் செயற்குறிப்புகள் உள்ளனவா, மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலவிடுதி குறித்து அரசுக்கு முன்மொழிவுகள் வரப்பட்டிருக்கின்றனவா என்று எனக்குத் தகவல் இல்லை. இருந்தாலும்கூட அத்தகைய முன்மொழிவுகள் அரசுக்குக் கிடைக்கப்பெறும் என்று சொன்னால், மூலக் கேள்விக்கு என்ன பதில் சொன்னேனோ அது இந்தக் கேள்விக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

முற்பகல் 10–15

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையில் பல்வேறு சீரமைப்புகளைக் கொண்டு வந்து சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்கள். தமிழகத்திலிருந்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்மூலமாக உயர்நிலைப் பள்ளிகளாக்குவதற்கும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக்குவதற்கும் முறையாக வரப்பெற்றிருக்கின்ற முன்மொழிவுகள் அனைத்திற்கும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் சிறப்பு அனுமதியைப் பெற்று தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு தொகுதிக்கு இரண்டு பள்ளிகளுக்கான முன்மொழிவுகள் வருகிறபோது, ஒரு பள்ளியைத் தரம் உயர்த்திவிட்டு, ஒரு பள்ளியை விடுகின்றபோது, அந்தக் கிராமத்து மக்களுடைய பகைமையை சட்டப் பேரவை உறுப்பினர்களாகிய நாங்கள் தேடிக்கொள்ளவேண்டிய ஒரு நெருக்கடி நிலைமைக்கு ஆளாக்கப்படுகிறோம். ஆகவே, முறையாக முன்மொழிவு வரப்பெறுகின்ற அனைத்துப் பள்ளிகளையும் உயர்நிலைப் பள்ளிகளாக்குவதற்கு, மேல்நிலைப் பள்ளிகளாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 5

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பள்ளிகளையும் தரம் உயர்த்த வேண்டும் என்கின்ற மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம் பாராட்டுக்குரியது. ஆனால், அதேசமயத்தில் அரசினுடைய நிதி நிலையையும் நாம் கருத்திலேகொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துகிறபோது அங்கே 5 ஆசிரியர் பணியிடங்களை இப்போதே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதையும் அதிகமாகக் கூட்டி, Humanities என்று வகைப்படுத்திச் சொல்லக்கூடிய வணிகவியலாக இருந்தாலும், Economics போன்ற படிப்புகளுக்கும் தரவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய பள்ளிகளிலும் புதிய பாடப் பிரிவுகளை உருவாக்குங்கள் என்று அரசுக்குக் கோரிக்கை இருக்கிறது. நான் தொடர்ச்சியாகச் சொல்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே இந்த SUCCESS திட்டம் வருகிறபோது, நிச்சயமாக மத்திய அரசினுடைய உதவியையும் பெருமளவிலே நாம் பெற முடியும். நிச்சயமாக நிறைய பள்ளிகளை, இப்போது இருப்பதைவிட நாம் செய்து கொடுக்கமுடியும். எனவே, இது படிப்படியாக செய்யவேண்டிய காரியமேயொழிய உடனடியாக, முழுமையாக, எடுத்த எடுப்பிலேயே ஓராண்டிலேயோ, இரண்டு ஆண்டுகளிலேயோ அனைத்துப் பள்ளிகளையுமே செய்ய இயலாது. தகுதியான பள்ளிகள் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் பல பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே முழுமையாக அவசியம் இருக்கக்கூடிய பள்ளிகள், நீண்ட காலமாகக் காத்திருக்கக்கூடிய பள்ளிகளை சில விதிமுறைகள், முன்னுரிமை அடிப்படையிலே தரம் உயர்த்த வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நிறைய பள்ளிக்கூடங்களிலே, குறிப்பாக மயிலாப்பூர் போன்ற தொகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளில், L.K.G., U.K.G. Students-ஐக்கூட fail ஆக்கி, School-ஐவிட்டு அனுப்பிவிடுகிறார்கள். 5 ஆம் வகுப்பு வரைக்கும் குழந்தைகளுக்கு பரீட்சை வைக்கக்கூடாது; pass பண்ண வேண்டும் என்று ஒரு rule இருக்கிறது. இருந்தாலும், இதை அவர்கள் நடைமுறைப்படுத்தாமல், compulsory-ஆக T.C. கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். பெற்றோர்களுக்கு மிகவும் தர்மசங்கடமான நிலையை உண்டாக்குகிறார்கள். அதேசமயத்தில்



2008 மே 5]

குழந்தைகளுடைய மனநிலையும் பாதிக்கப்படுகிறது. L.K.G.-லே A, B, C, D, அ, ஆ, கற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலேயே fail ஆக்குகிறார்கள் என்று சொல்லும்போது அது மிகவும் சங்கடமான ஒரு சூழ்நிலையாக இருக்கிறது. ஆகவே அந்த மாதிரிப் பள்ளிகளில் அவர்கள் இந்த வருடம் யாரைச் சேர்க்கிறார்களோ அந்த list அரசாங்கத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என்று கூற வேண்டும். அதே சமயத்தில் மாணவர்கள் நீக்கப்பட்டால் அந்தப் பள்ளிக்கூடத்தின்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டதைப்போல 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவர்களை நிச்சயமாக fail செய்யக்கூடாது என்று ஒரு சட்டமே இருக்கிறது. அடிப்படையிலே குழந்தைகளுக்கு மனரீதியான பாதிப்புகளை அது உருவாக்கும் என்பது முக்கிய காரணம். தான் கற்றுக்கொள்ளக்கூடிய கல்விக்கான அடிப்படை இலக்கணங்களை ஆரம்ப வகுப்புகளிலே கற்றுக்கொள்ளக்கூடிய அவர்களுக்கு, தேர்வு முறைகள் அவசியமில்லை என்பதும் அரசினுடைய கருத்து. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய பள்ளிகள்—இப்போது சென்னை நகரத்தைப் பொறுத்தமட்டிலே இரண்டு விதமான பள்ளிகள் இருக்கின்றன. ஒன்று C.B.S.E. Syllabus என்று சொல்லக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய பாடத் திட்டத்தின் அடிப்படையிலே இயங்கக்கூடிய பள்ளிகள். நம்முடைய பள்ளிகள் மற்றும் Matriculation பள்ளிகள் போன்று தமிழக அரசினுடைய சட்டதிட்டங்களுக்குட்பட்டு இயங்கக்கூடிய பள்ளிகள். தமிழக அரசினுடைய மேலாண்மையின்கீழ் வரக்கூடிய பள்ளிகளிலே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அப்படிப்பட்ட பள்ளிகளிலே அத்தகைய நிலை இருக்குமென்று சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும். உங்களுடைய தொகுதியிலே உள்ள அப்படிப்பட்ட பள்ளிகளை உறுப்பினர் என்னுடைய கவனத்திற்கு எடுத்து வருவார்கள் என்று சொன்னால் இந்தக் குறையை நிச்சயமாகக் களையமுடியும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாகச் சொல்லக்கூடிய இந்தக் கருத்தையும் நிச்சயமாக நான் கல்வித் துறை அதிகாரிகளை அழைத்துப் பேசி வரக்கூடிய கல்வியாண்டிலே இந்தக் குறைபாடுகள் எங்கேயும் வராத வகையிலே நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்வேன்.

[2008 மே 5

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு ஆண்டுதோறும் புதிய பள்ளிகள் துவக்குதல், பள்ளிகளைத் தரம் உயர்த்துதல் போன்ற பணிகளைச் செய்து கல்விச் சேவை செய்து வருகிறது. இதேவேளையில், தனியார் நிறுவனங்கள் பள்ளிகளைத் துவக்கி, அரசினுடைய எந்த உதவியையும் பெறாமல் தமிழ்வழிப் பள்ளிக்கூடங்களை நடத்திக்கொண்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நிலம், கட்டடம், ஆசிரியர்கள் ஊதியம் என்று அவர்களே கொடுத்து, நடத்திக்கொண்டிருக்கிற பள்ளிகள் தற்போது மூடப்படுகிற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படி மூடும் நிலையில் உள்ள, தரமான நல்ல தேர்ச்சி விழுக்காடு கொடுக்கிற அந்தப் பள்ளிகளுக்குக் குறைந்த அளவாவது அரசு மானியம் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இப்படி ஒரு பக்கம் கல்விச் சேவை நடைபெறுகிற அதேவேளையில் பதின்நிலைப் பள்ளி என்று சொல்லக்கூடிய அந்த Matriculation பள்ளிகள் நிறைய தொடங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பள்ளிக்காக அரசு அனுமதி பெற்று, அதன் கிளைகளாக, அனுமதி இல்லாமல் பல இடங்களிலே நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியிருக்குமானால் அம்மாணவர்கள் எந்த வகையிலே தேர்வு எழுத அனுமதிக்கப்படுகிறார்கள்? இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய மாண்புமிகு தலைவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கக்கூடிய கருத்தில் இரண்டு இருக்கின்றன. ஒன்று, அரசு உதவி பெறக்கூடிய பள்ளிகள்— Government aided schools. அதற்கு 1992 ஆம் ஆண்டிற்குப் பிறகு, தொடர்ச்சியாக இருக்கக்கூடிய ஆட்சிகளிலே, ஒரு கொள்கை முடிவு எடுத்திருக்கிறோம். என்னவென்று கேட்டீர்களானால் அத்தகைய பள்ளிகளுக்கு அரசு எந்தக் காலத்திலும் நிதி உதவி அளிப்பதில்லை. அவர்களே அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எந்தக் காலத்திலும்



2008 மே 5]

நிதி உதவி கோர மாட்டோம் என்கின்ற ஒரு நிபந்தனைக்குட்பட்டு கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நிதி உதவி அளிப்பது என்று நாம் எடுத்துக்கொண்டோமானால், மிகப் பெரிய பொருளாதாரச் சுமையே அரசுக்கு வரும். மிகப் பெரிய நிதிச் சுமை அரசுக்கு இருக்கிறது. எனவே, அதை ஒரு கொள்கை முடிவாகவே எடுத்து, *1992*–லிருந்து யாருக்கும் மானியம் கொடுப்பதில்லை என்பது எல்லா அரசுகளும் கடைப்பிடித்து வரக்கூடிய கொள்கை அது. அது நிதித் துறையினுடைய கட்டுப்பாட்டைச் சார்ந்த விஷயம். எனவே, இதுபோன்ற கொள்கை முடிவுகளை கேள்வி நேரத்திலே நான் பதில் சொல்வது என்பதும் சற்று சிரமமான காரியமும்கூட; இது அரசினுடைய கொள்கையாக இருக்கக்கூடிய காரியம். எனவே அதற்கான ஒரு முடிவினை நான் கேள்வி நேரத்திலே பதிலளிப்பது பொருத்தமாகவும் அமையாது.

இன்னொன்று, நீங்கள் சொன்னதைப்போல மெட்ரிக்குலேஷன் பள்ளிகள். மெட்ரிக்குலேஷன் பள்ளிகளைப் பொறுத்தமட்டிலே எல்லோருக்கும் பள்ளி தொடங்குவதற்கு நாங்கள் அனுமதி அளிக்கிறோம். சம்பத் கமிஷன் அறிக்கையைச் சட்டமன்றத்திலே வைத்ததற்குப் பிறகு, சம்பத் கமிஷன் அறிக்கையிலே என்னென்ன விதிமுறைகளைச் சொல்லியிருக்கிறார்களோ, அத்தகைய விதிமுறைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பள்ளிகளுக்கு மாத்திரம்தான் நாங்கள் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதுகுறித்த வழக்குகள்கூட High Court–க்கு வந்திருக்கிறபோது அவர்கள் இரண்டு மாவட்டங்களை—முதலிலே தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களையும் செக் பண்ணுங்கள் என்று சொன்னார்கள்— இப்போது மதுரை, கரூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் மட்டுமாவது முழுமையான ஆய்வுகளை மேற்கொள்ளச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, எங்கேயாவது இத்தகைய விதிமுறைகளை மீறியிருந்தது கவனத்திற்கு வரும் என்று சொன்னால், அரசு அத்தகைய பள்ளிகள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயங்காது. அத்தகைய பள்ளிகளுடைய அங்கீகாரத்தை எந்தக் காலத்திலும் நீட்டித்துத் தரவும் மாட்டோம். அதில் மிகத் தெளிவாக அரசு இருக்கிறது. சம்பத் கமிஷன் அறிக்கையிலே என்னென்ன விதிமுறைகள் வகுத்திருக்கிறார்களோ அவற்றை நிச்சயமாகப் பின்பற்ற வேண்டுமென்று அறிவுரைகளை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். நிதியுதவி பெறக்கூடிய பள்ளிகளுடைய மற்ற maintenance grant என்று சொல்லக்கூடிய அவர்களுடைய மானியத்தை இப்போது 2 சதவீதம் அளவுக்குக்

கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அது குறைவு என்று கேட்டிருக்கிறார்கள். வருங்காலங்களிலே அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அதுகுறித்தும் நாம் கலந்தாலோசிக்க இயலும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட நெமிலி ஒன்றியத்திலுள்ள மகேந்திரவாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் எண்ணம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதையும், அதேபோல சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி என்பதால், அங்கேயுள்ள நடுநிலைப் பள்ளிகளையெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளாகவும், அதேபோல உயர்நிலைப் பள்ளிகளையெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரமுயர்த்த அமைச்சர் முன்வருவாரா? விலையுயர்ந்த தங்கத்தைத் தன் பெயரிலே வைத்திருக்கின்ற தங்கமான அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். *(சிரிப்பு)*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கம் என்ற பொருள் வேண்டுமானால் என்னிடம் இருக்கலாம். ஆனால், அவரிடத்திலே அருள் அதிகமாக இருக்கிறது. *(சிரிப்பு)* பொருளைவிட அருள் அதிகம். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை, அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை என்பது திருக்குறள். எனவே எல்லாப் பள்ளிகளையும் தரமுயர்த்த வேண்டுமென்று சொன்னால் அது உடனடியாக சாத்தியமில்லை. படிப்படியாகத்தான் செய்ய முடியும். ஒரு பழமொழியே சொல்வார்கள்; கூடைக் கல்லும் பிள்ளையார் ஆகும் என்றால் எதைக் கும்பிடுவது என்று. படிப்படியாகச் செய்வதற்கு ஒரு வாய்ப்பு வந்ததானால் செய்ய இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடு)* திரு. மாரிமுத்து, உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.



**197—**

## முதலைகள்

***24270—திரு. எம். பன்னீர்செல்வம்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சீர்காழி தொகுதி, சிதம்பரநாதபுரம் அழிஞ்சியாற்றிலுள்ள முதலைகளை உயிரியல் பூங்காவில் ஒப்படைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, சிதம்பரநாதபுரம் கிராமத்தின் அருகே செல்லும் அழிஞ்சியாற்றில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்திலே ஏற்பட்ட மழை வெள்ளத்தால் எங்கிருந்தோ ஒரு பெரிய முதலை வந்து அழிஞ்சியாற்றின் கரையில் தினந்தோறும் மேய்ந்துகொண்டிருந்த விவசாயிகளின் ஆடுகளைப் பிடித்துக் கொன்று, உணவாக உட்கொண்டது. தற்சமயம் அழிஞ்சியாற்றில் தண்ணீர் குறைய ஆரம்பித்தவுடன் மெல்ல நகர்ந்து பக்கத்திலே கொள்ளிடம் வடிகால் ஆற்றில் வண்ணான்குட்டை என்ற இடத்தில் இன்றைக்கும் அந்த முதலை நடமாடிக்கொண்டிருக்கிறது. அதுபோன்று சீர்காழி தொகுதி பட்டியவேடு ஏத்தக்குடி பக்கமுள்ள கொள்ளிடம் ஆற்றுக் குட்டையில் மற்றொரு முதலை உள்ளது. மனிதர்கள் யாரையும் கடித்துவிடாமலும், அதேபோன்று கால்நடைகளை, ஆடுகளைக் கொன்றுவிடாமல் பாதுகாக்கவும், இந்த முதலைகளை உடனடியாகப் பிடித்து அரசு முதலைப் பண்ணைகளில் ஒப்படைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே விடையிலே கூறியதைப்போல, அந்த

முதலைகளையெல்லாம் பிடித்து சாத்தனூர் அருகில் இருக்கின்ற முதலைப் பண்ணையிலே விடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**198—**

**சாலை அரிப்பு**

***10134—திருமதி ரா. லீமா றோஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவட்டாறு தொகுதி, பட்டணங்கால் சாலையில் பொன்மனை முதல் இடைக்கட்டான் வரை சாலையின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரிப்பினைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவட்டாறு தொகுதி, பட்டணங்கால் சாலையில் பொன்மனை முதல் இடைக்கட்டான் வரை சாலையின் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரிப்பினை நிரந்தரமாகச் சரி செய்ய சாலையின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டவேண்டும். இதற்காக தனியார் நிலம் தேவைப்படுவதால் இச்சாலையை முழுமையாகச் சரி செய்ய தற்சமயம் இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த பட்டணங்கால் சாலை என்பது கனரக வாகனங்கள் செல்லும் முக்கியமான குலசேகரம்–சுருளோடு சாலையாகும். மலைப் பகுதிச் சாலையுமாகும். குலசேகரம்–அரசுமூடு முதல் மங்கலம், இடைக்கட்டான், பொன்மனை பகுதி என்பது பட்டணங்கால் சாலையின் பகுதியாகும். பல இடங்களில் அரிப்பு ஏற்பட்டு போக்குவரத்துக்கு தடை ஏற்படுவதோடு, விபத்துகளை ஏற்படுத்தும்



சாலையாகவும் உள்ளது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் புத்தன் டேம் பார்க்க வந்தபோது இதே சாலையில் நின்று அபாயகரமான சூழலைப் பார்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே, இந்தச் சாலை இருக்கக்கூடிய நிலையிலேயே சேனலின் பக்கத்தில் பக்கச் சுவர் கட்டி இருவழிச் சாலையாக ஆக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலை தமிழக அரசின் வகைப்பாட்டில் மாநில நெடுஞ்சாலையாக உள்ளது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆரல்வாய்மொழி முதல் நெடுமங்காடு வரை செல்லக்கூடிய அந்த மாநில நெடுஞ்சாலையில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதி ஏற்கெனவே ஒரு வழிச் சாலையாக இருந்தது. அதே நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, ஒரு அபாயகரமான பகுதியாக உள்ளதையும் நன்கு அறிவோம். ஒரு புறம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான வாய்க்கால் செல்லக்கூடிய பகுதி, அது ஏறத்தாழ 10 மீட்டர் அளவுக்கு ஆழங்கொண்டதாகும். இன்னொரு புறம் தனியாருக்குச் சொந்தமான நிலம் ஏறத்தாழ சுமார் 5 மீட்டர் அளவுக்கு ஆழம் கொண்ட பகுதியாகவும் உள்ளது. எனவே, இந்தப் பகுதியைப் பொறுத்தளவில், குறிப்பாக கிலோ மீட்டர் 30/0–லிருந்து 32/0 வரை சுமார் 94 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், அதேபோல, 32/0 முதல் 33/4 வரை சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவிலும், மொத்தமாக ஏறத்தாழ ஒரு கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் இருவழிச் சாலையாக மாற்றுகின்ற பணியும், அதேபோல, அபாயகரமான பகுதியிலே சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு, மண்ணரிப்பைத் தடுக்கின்ற வகையிலே, பாதுகாப்பை ஏற்படுத்துகின்ற வகையிலே பக்கச் சுவரும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நிலைமையும் உண்மையானதுதான். எனவே, எதிர்காலத்திலே படிப்படியாக அந்தச் சூழ்நிலையை மாற்ற அந்த அபாயகரமான பகுதிகளில் பக்கச் சுவர் அமைப்பதற்கும், சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்றுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

[2008 மே 5

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சாலையினுடைய தன்மையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கின்றார்கள். இவ்வாண்டு அந்தச் சாலை சீர் செய்யப்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, அண்மையில் ஏற்பட்ட பெருமழையால் பல சாலைகளில் இதுபோன்ற அரிப்பு ஏற்பட்டு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. பொன்மனை—ஈஞ்சக்கோடு, அழகியமண்டபம்—திருவட்டாறு சாலையில் பூவன்கோடு சந்திப்பு, குழித்துறை—ஆலஞ்சோலை சாலையில் அண்டுகோடு—உத்தரங்கோடு முதல் முழுக்கோடு வரையுள்ள சாலையும், கழுவந்திட்டை—மருதங்கோடு சாலையும், போக்குவரத்து நின்றுபோன அணைமுகம் சாலையும் சீரமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய முக்கிய சாலைகளை, குறிப்பாக மாநில நெடுஞ்சாலைகளின் அனைத்துப் பகுதிகளையும் நான் ஒரு நாள் முழுமையாகத் தங்கி பார்வையிட்டேன். அப்போதெல்லாம் சாலைகள் நல்ல நிலைமையிலே, போக்குவரத்துக்கு ஏற்ற நிலைமையிலே இருந்தன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். நிகழ்ச்சியிலே சந்திக்கின்றபோது அதைக் குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு கடந்த மாதம் எதிர்பாராமல் பெய்த மழையின் காரணமாக—குறிப்பாக தமிழகத்திலே மழையால் அதிகம் பாதிக்கக்கூடிய மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம்—அந்த அடிப்படையிலே அந்தச் சாலைகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். மொத்தமாக, கடந்த மழைக்கு மட்டும் சுமார் 7 ஆயிரம் கிலோ மீட்டர் நீள சாலைகள், அரசின் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சாலைகள் பாதிக்கப்பட்டன. அவை எல்லாம் ஓரளவுக்குச் செப்பனிடப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலைகள் எல்லாம் நிச்சயமாக, படிப்படியாக எதிர்காலத்திலே நல்ல முறையிலே போக்குவரத்துக்கு ஏற்ற வகையிலே சீரமைக்கப்படும். ஏற்கெனவே மூலக் கேள்வியில் உள்ள சாலையைப் பொறுத்தளவில் இந்த ஆண்டே சீர் செய்யவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அழுத்தமாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.



2008 மே 5]

படிப்படியாகச் சீரமைக்கப்படும் என்று நான் சொல்லியிருக்கின்றேன். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியைச் செப்பனிட வேண்டுமென்று சொன்னால், பக்க சுவர் கட்டித் தரவேண்டுமென்று சொன்னால், சுமார் 4 கோடி ரூபாய் தேவைப்படும்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** சாலையைப் பராமரிக்க வேண்டுமென்று சொன்னால், மேம்படுத்தவேண்டுமென்று சொன்னால், சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு நிதி தேவைப்படுகிறது. எனவே, படிப்படியாக அதை எதிர்காலத்திலே இந்த அரசு சீரமைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 199, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**199—**

## தொழிற்பயிற்சிப் பள்ளி

***16445—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறைமூலம் தொழிற்பயிற்சிப் பள்ளி நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளி நடத்தும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

[2008 மே 5

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரையில், 99 சதவிகிதம் அளவிற்கு ஆதி திராவிட மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே தொழிற்சாலைகளோ, ஆலைகளோ, பெரிய வியாபார ஸ்தலங்களோ இல்லை. அங்கே கூலித் தொழிலாளர்கள் பணிபுரிய தேயிலைத் தோட்டங்கள் மட்டுமே இருக்கின்றன. குறைந்த கூலியைப் பெற்று வருகின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய குழந்தைகள், கோவையிலே இருக்கக்கூடிய ஒரேயொரு தொழிற்பயிற்சிப் பள்ளிக்கு வந்து படிப்பதற்கு வசதியில்லாதவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் வால்பாறை தொகுதியிலே ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளி தொடங்க மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் தமிழ்நாட்டில் மொத்தம் 59 தொழிற்பயிற்சி நிலையங்களும், 605 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டத்தில் மட்டும் 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளி உள்ளதாகச் சொன்னார்கள்; மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அங்கே உள்ளன; 34 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போதுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில், இட ஒதுக்கீட்டின்படி, 18 விழுக்காடு பட்டியல் இனத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி மையங்களில் 50 விழுக்காடு; அதாவது, Government Quota மூலம் மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு விதிகளின்படி செய்யப்படுகின்றன. எனவே, அரசு மற்றும் அரசு அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் ஆதி திராவிட மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர். இந்நிலையில் ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாகத் தனியாகத் தொழிற்பயிற்சிப் பள்ளிகள் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 மே 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழக அரசு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அய்யா அவர்களுடைய தலைமையில் பல்வேறு அரசு நலத் திட்டங்களை ஆதி திராவிட மக்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறது. இந்த வேளையில், ஆதி திராவிட மாணவர்களுக்குப் பள்ளிகள் நடத்திக் கொண்டிருக்கின்ற ஆதி திராவிடர் நலத் துறை, ஏன் தொழிற்பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க முன்வரக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும், மிகவும் வறுமையிலே இருக்கின்ற ஆதி திராவிட மக்களைக் காப்பாற்றுகின்ற வகையில், மீண்டும் மறுவாழ்வு வழங்குகின்ற வகையில், வால்பாறை தொகுதியில் இருப்பதைப்போல தமிழ்நாட்டிலே பல்வேறு மாவட்டங்களில் 10 ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்த மாணவ, மாணவிகளுக்கு, ஆதி திராவிடர் நலத் துறை சார்பாகத் தொழிற்பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க ஏன் முன்வரக்கூடாது என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகத் தற்போது தொழிற்பயிற்சி மையங்கள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுமானால் அவருடைய கோரிக்கையைத் தொழிலாளர் நலத் துறையின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அத்துறை விரும்புகின்றபோது தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆரம்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 5

**200—**

## கட்டடம்

***41605—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டம், கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதுமில்லாததால், அரசினால் கட்டடம் கட்டுவதற்குத் தற்போது வாய்ப்பு ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எஸ்.எம்.டி. 363, கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 24-8-1988 ஆம் நாளன்று தொடங்கப்பட்டது. இதில் தற்போது 722 உறுப்பினர்கள் உள்ளனர். இந்தச் சங்கத்தில் கூத்தாடிபாளையம், வெள்ளயம்பாளையம், புதுக்குடியானூர், மாங்குட்டப்பட்டி, குறவன்காட்டானூர் ஆகிய பகுதிகளைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தச் சங்கம் 2001 முதல் 2005 ஆம் ஆண்டுவரை நல்ல இலாபத்தில் இயங்கி வந்தது. 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் சிறிது நஷ்டத்தில் இயங்கியது. தற்போது கடந்த ஏப்ரல் மாதம் மட்டும், ஏறத்தாழ 43,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்தச் சங்கம் இலாபத்தில் இயங்கி வருகின்றது. எனவே, கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, துறை சார்பாக மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க முன்வருவாரா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2008 மே 5]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு தினந்தோறும் 1,400 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. 170 உறுப்பினர்கள் நிரந்தரமாக பால் ஊற்றி வருகிறார்கள். தற்போது, சென்ற காலங்களைவிட 10 ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவுக்கு இருக்கிறது. அடிமனை வாங்குவதற்காக ரூபாய் 77 ஆயிரம் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த இடத்தில் ஒரு சென்ட் நிலம் 10 ஆயிரம் ரூபாய்க்குமேல் போவதாக அறிகிறோம். ஆக, 1½ இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. வருகிற ஓரிரண்டு மாதங்களில் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து அடிமனை வாங்கப்படும் என்பதையும், அடிமனை வாங்கியபிறகு — சட்டப்பேரவை உறுப்பினர்கள், நம்முடைய ராசிபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி போன்றவர்களும் தங்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்களைக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி அவர்களும் நிதி ஒதுக்கீடு செய்வார்களேயானால் அவர் குறிப்பிடுகிற இடத்தில் அந்தச் சங்கத்திற்கான கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அந்தப் பகுதியில் குடிநீர், சாலை வசதி போன்றவற்றிற்கு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி வருகின்றேன். அமைச்சர் அவர்கள், அந்த அடிநிலம் வாங்குவதற்காக துறையின்வாயிலாக நிதி ஒதுக்கீடு செய்து கொடுக்கப்படும் என்று கூறியிருக்கின்றார். அந்த அடிநிலத்தை பொதுமக்களின் சார்பாக சட்டமன்ற உறுப்பினராக நானே முன் நின்று, நான் இலவசமாக வாங்கி துறைக்கு ஒப்படைக்கின்றேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்,

[2008 மே 5

துறையின்மூலமாக கூத்தாடிபாளையம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்தில், இதுபோல் தமிழகத்தில் இலாபத்தில் இயங்கி வருகின்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களையெல்லாம் கண்டறிந்து ஒரு தொகுதிக்கு இரண்டு கட்டடங்களை அமைச்சர் அவர்கள் துறையின்வாயிலாக கட்டிக்கொடுத்தால் பால் வளத் துறைக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் பால் உற்பத்தியாளர்கள் மத்தியிலே நல்ல பெயர் ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அப்படி அமைச்சர் அவர்கள் கட்டிக்கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக இலாபம் வரக்கூடிய சங்கங்களுக்கு, சங்கத்தின்மூலமாக கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும். அப்படி இல்லாதபட்சத்தில் அடிமனைகள் இருக்குமேயானால்—நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் நிறையபேர் அதுபோல கட்டடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி, நம்முடைய குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் எல்லாம் நிதி ஒதுக்கீடு செய்து கட்டடம் கட்டுவதற்காக ஒத்துழைப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆக, அதிக வருமானம் உள்ள இடங்களில் சங்கமே கட்டடம் கட்டிக்கொள்ளும். வருமானம் குறைவாக உள்ள இடங்களில் மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வார்களேயானால் நிச்சயமாக கட்டடம் கட்டிக்கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



2008 மே 5]

# 2. தகவல் கோரல்

## (அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில் பயண இருக்கை ஒதுக்கீட்டில் முன்னுரிமை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மூன்று அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து அவையிலே எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள்.

பள்ளிப்பட்டு தொகுதியில் கூலி உயர்வு தொடர்பாக நெசவாளர்கள் போராட்டம் நடத்திவருவது குறித்தும், கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள அமராவதி அணையில் பாசனத்திற்கு தண்ணீர் இருந்தும். A.M.C. வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடாததால் கரும்புப் பயிர்கள் காய்ந்து வருவது குறித்தும், திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றிய உதவி தொடக்கக் கல்வி அலுவலரும், திண்டுக்கல் D.E.O. அலுவலகத் தட்டச்சரும் சேர்ந்து தொடக்கக் கல்வி இயக்குநரைப்போல கையெழுத்து போட்டு 9 ஆசிரியர்களுக்கு பணி மாறுதல் உத்தரவு கொடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும் மூன்று முன்னறிவிப்புகளை எடுத்துக்கொள்ளவிருக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. சுதர்சனம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே இருக்கின்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பு மாண்புமிகு ‹ பாநாயகர் அவர்களுக்கு உண்டு. நேற்றையதினம், நாகர்கோவிலிலிருந்து சட்டமன்றத்திற்கு வருகைதந்த 4 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அங்கே E.Q. கொடுக்கப்பட்டும், இரயிலிலே இடம் இல்லை என்றுகூறி, அவர்கள் சட்டமன்றப் பணியாற்றுவதற்குத் தடையாக அந்த நிருவாகம் இருந்திருக்கிறது. பல்வேறுபட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், 234 சட்டமன்ற உறுப்பினர்களில் அமைச்சர்கள் தவிர, மற்றவர்கள் அத்தனைபேருக்கும், வாரத்திலே இரண்டு நாட்கள் தொகுதிகளுக்குச் சென்று பணியாற்றிவிட்டுத் திரும்புகிறபோது, இப்படிப்பட்ட துன்பங்கள் நிகழ்கின்றன. நீங்கள் உடனடியாக மத்திய அரசைத் தொடர்புகொண்டு, சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போதெல்லாம் E.Q. கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த நேரத்திலே நிச்சயமாக இடம் கிடைப்பதற்க ஆவன செய்வீர்களா, முன்னுரிமை கொடுத்து

அவர்களுடைய seat-கள் confirm செய்து கொடுக்கப்படுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இதுசம்பந்தமாக உங்கள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால் அவர்கள் T.V.-க்கே பேட்டி கொடுத்திருக்கிறார். அவர் ஒருசில கோரிக்கைகளை வைத்திருக்கிறார். அந்தக் கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகளாகத்தான் தெரிகின்றன. இருந்தாலும், சட்டப் பேரவையின் சார்பாக மத்திய அரசுக்கு உரிய நடவடிக்கைக்காக பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

## (ஆ) பள்ளிப்பட்டு தொகுதி விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பள்ளிப்பட்டு தொகுதியில் கூலி உயர்வு தொடர்பாக நெசவாளர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி, திரு. கே.எஸ். விஜயகுமார், அ.இ.அ.தி.மு.க., டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இந்திய தேசிய காங்கிரஸ் ஆகியோர் விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானமாக அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. சுருக்கமாகச் சொல்லுங்கள். இந்தப் பிரச்சினை குறித்து agreement எல்லாம் போட்டு முடித்தாகிவிட்டது. எனவே, சீக்கிரம் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 20 நாட்களாக பள்ளிப்பட்டு தொகுதியில் விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்து பட்டினிச் சாவு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையில் நேற்றைக்கு முன்தினம் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இன்றைக்கு அந்த வேலைநிறுத்தம் கைவிடப்பட்டிருக்கிறது.

பள்ளிப்பட்டு தொகுதியில் பொதட்டூர்பேட்டை, அத்திமாஞ்சேரிப்பேட்டை, அம்மையார்குப்பம், வங்கனூர், ராஜா நகரம், மத்தேரி, ஆர்.கே. பேட்டை, பி.ஆர். பள்ளி, மத்தூர்,



குருவராஜபேட்டை இந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விசைத்தறி நெசவாளர்களுக்கெல்லாம் தெரிந்த ஒரே தொழில், நெசவுத் தொழில்தான். அவர்கள் கடந்த சில நாட்களாக வேலைநிறுத்தம் செய்து, இன்றைக்கு வேலைநிறுத்தம் கைவிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட கடந்த நான்கு நாட்களுக்கு முன்னால் அந்த விசைத்தறி நெசவாளர்கள் திருத்தணி R.D.O. அலுவலகத்திற்கு அருகிலே சுமார் 5,000 பேர், R.D.O.-வைப் பார்க்கச் சென்றபோது, R.D.O.-வைப் பார்க்க சில பேர் மட்டும் அனுமதிக்கப்பட்டு அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இந்த அரசு செவி சாய்க்காமல் போனதனுடைய காரணத்தினால் அன்றைக்கு அந்த 5,000 விசைத்தறி நெசவாளர்கள் R.D.O. அலுவலகத்திற்கு அருகே சாலை மறியலிலே ஈடுபடத் திட்டமிட்டு வரும்போது காவல் துறையினரால் தடியடி நடத்தப்பட்டு கலைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிக் கலைக்கப்படும்போது அவர்கள் ஓடி வண்டிகளிலே ஏறிச் செல்லும்போது, ஒரு லாரியில் சென்றவர்கள் சுமார் 25 பேர் லாரி கவிழ்ந்து அடிபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிச் சேர்க்கப்பட்டிருக்கிறவர்களுக்கு உரிய நிவாரணத்தை இந்த அரசு உடனடியாக வழங்க வேண்டும். மேலும், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கிறார்கள். வலியுறுத்தி இருக்கிற கோரிக்கைகள் எல்லாம் இந்த அரசு நிறைவேற்றாமல் உடனடியாக ஏதோ ஒரு காரணம் சொல்லி இன்றைக்கு அந்த வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுங்கள் என்ற ஒரு நிலைமையிலேதான் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றிருக்கிறார்கள்.

2005 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை இருந்த விலைவாசி இன்றைக்கு இல்லை. நூற்றுக்கு இருநூறு சதவிகிதம் விலைவாசி ஏறியிருக்கிறது. அப்பேர்பட்ட இந்தச் சூழ்நிலையில் அவர்கள் கூறியிருக்கின்ற இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நேற்றைக்கு முன்தினம்கூட முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை.

விசைத்தறித் தொழிலைச் சேர்ந்த அனைத்துக் கூலித் தொழிலாளர்களுக்கும் 40 சதவிகிதம் கூலி உயர்வும், விசைத் தறியாளர்களுக்கு 400 மீட்டர் பாவு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கூலி உயர்வும், வார்ப்புத் தொழிலாளர்களுக்கு 400 மீட்டர் பாவு ஒன்றுக்கு கூடுதலாக 160 ரூபாயும், பசை போடும் தொழிலாளர்களுக்கு கட்டு ஒன்றுக்கு கூடுதலாக 20 ரூபாயும், விசைத்தறியாளர்களுக்கு பாவு ஒன்றுக்கு 50 ரூபாய் வீதமும், பாவு போடுபவர்களுக்கு பாவு ஒன்றுக்கு 10 ரூபாய் வீதமும் போனஸ் வழங்கிட வேண்டுமென்றும் கேட்கிறார்கள்.

அந்தப் பகுதியிலே இன்றைக்கும் தொடர்ந்து மின்சாரம் தடைபட்டுக்கொண்டிருக்கிறது. மின்சாரம் தடைபடுவதால் அவர்களுடைய தொழிலும் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, இதையெல்லாம் கருத்திலேகொண்டு, 100 சதவிகிதமாக இருந்த விலைவாசி உயர்வு, இன்றைக்கு 200 சதவிகிதமாக உயர்ந்திருப்பதையும் கருத்திலேகொண்டு, உடனடியாக இந்த அரசு, அவர்களுடைய கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கிட வேண்டுமென்று இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

***டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–4–2008 முதல் 2–5–2008 வரை நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தைப்பற்றி அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் திரு. அரி அவர்கள் பேசுகின்றபோது, "ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவதைப்போல" என்ற பழமொழிதான் எனக்கு நினைவிற்கு வருகிறது. (குறுக்கீடுகள்) அடிப்படையிலே தொழில்ரீதியாக மட்டுமல்லாமல், பிறப்பாலும் ஒரு நெசவாளியாக நான் இருக்கின்றேன். கடந்த ஆட்சிக் காலத்தில்தான் கஞ்சித் தொட்டி திறக்கின்ற நிலைமை ஏற்பட்டது என்பதனை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அந்த அம்மையார் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, கஞ்சித்தொட்டி திறக்கின்ற நேரத்திலே, பிரியாணி சாப்பிட்டு, கொச்சைப்படுத்தியவர்களுக்கு, இதில் பேசுவதற்கு அருகதையே இல்லை என்பதை நான் இங்கே ஆணித்தரமாகக் கூற முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், நெசவாளர்களைப் பொறுத்தவரையிலே, அவர்களுக்கு நிறைந்த நன்மைகளைச் செய்தவர்கள் யார் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். சென்வாட் வரியை நீக்கியது யார் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். சிட்டா நூலுக்கு 2 சதவிகித வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் கேட்டபோது, தாயுள்ளத்தோடு, 46 கோடி ரூபாய் வருவாய் இழப்பு இருந்தாலும்கூட, அதை நீக்கியவர்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை நான்





ஆணித்தரமாகக் கூறமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, நெசவாளர் பெருமக்களுக்கு இலவச மின்சாரம். இரண்டு மாதத்திற்கு . . . (குறுக்கீடுகள்)

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பு முடிந்துவிட்டது. உட்காருங்கள். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், பேசுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர் பெருமக்கள் பல ஆண்டுகளாகக் கொடுத்துவந்த கோரிக்கையை ஏற்று, 2006 ஆம் ஆண்டு, ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்ற உடனேயே, கலைஞர் அவர்கள் விசைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை 500 யூனிட் மின்சாரமும், கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட் மின்சாரமும் இலவசமாகத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே நான் மிகையாகச் சொல்வதற்கு எதுவுமில்லை.

நான் சென்ற வாரம் ஆந்திராவிலே, சிந்தலப்பட்டடை கிராமத்திலே, மாண்புமிகு அமைச்சர் செங்கா ரெட்டி அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினேன். அங்கே இராஜீவ் காந்தி அவர்களின் சிலை திறப்பு விழாவிலே பேசினேன். அங்கேயிருக்கிற நெசவாளப் பெருமக்கள், தமிழ்நாட்டில் இலவச மின்சாரம் கொடுப்பதைப்போல எங்களுக்கும் கொடுங்கள் என்று, நம்மை உதாரணம் காட்டி அங்கே பேசுகிறார்கள். அந்த அளவிற்கு நம்முடைய அரசாங்கம் நெசவாளர் பெருமக்களுக்கு பெருநன்மை செய்திருக்கிறது என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். அதோடுமட்டுமல்லாமல். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பேசினார். அவர் பேசியதற்கு மாண்புமிகு உறுப்பினர் இராமன் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். இராமன் அவர்கள் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்க வேண்டுமே தவிர, அவர் பேசும்போது இடையிலே குறுக்கிடக்கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது அவர் அமைதியாக உட்கார்ந்துகொண்டு கேட்டார். அவர் பேசும்போது

நீங்கள் கேளுங்கள். உங்களுக்கு அதிலே சந்தேகம் ஏற்பட்டால், அவர் பேசி முடித்தபிறகுதான் கேட்க வேண்டுமே தவிர, இடையிலே குறுக்கிடக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பேசும்போது யாராவது குறுக்கிட்டார்களா? யாரும் குறுக்கிடவில்லையே! அவர் பேசி முடிக்கட்டும்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலே தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டது. நெசவாளர் பெருமக்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தினார்கள். அதற்கெல்லாம் செவிசாய்க்காத காரணத்தினால், 2006 ஆம் ஆண்டிலே நம்முடைய கலைஞர் அவர்கள், ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்றபோது, முதல் பட்ஜெட் தொடரிலேயே இலவச மின்சாரத்தை அறிவித்து, நெசவாளர் பெருமக்களுடைய வயிற்றிலே பால் வார்த்தார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே ஏதாவது மறுப்பு இருந்தால் சொல்லட்டும், நான் அதற்குப் பதில் சொல்கிறேன். ஏனென்று சொன்னால், நெசவாளர் பெருமக்களுடைய வாழ்க்கையிலே, அன்றைக்கும்சரி இன்றைக்கும்சரி, கருணை காட்டி செயல்படுபவர்கள் கலைஞர் அவர்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்த உணர்வின் அடிப்படையிலே, நான்கு முறை இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. நான்கு முறைகளிலே ஒருமுறைகூட, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே யாராவது பொறுப்பேற்று, அங்கே பங்கேற்றார்களா என்று நான் கேள்வி கேட்க விரும்புகிறேன். அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தையிலே, வேலைநிறுத்தம் தொடர்பான, கூலி உயர்வு தொடர்பான பேச்சுவார்த்தையிலே, நம்முடைய தொழிலாளர் நல அமைச்சகத்தின் சார்பாக இணை ஆணையர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஆர்.டி.ஓ. அவர்களும், டி.ஆர்.ஓ. அவர்களும், சட்டமன்ற உறுப்பினராகிய நானும்தான் பங்கேற்றோமேயொழிய, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒருவர்கூட அங்கே எட்டிப்பார்க்கவில்லை என்பதுதான் உண்மை என்பதை நான் இங்கே கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று அக்கறையோடு கேள்வி கேட்கின்ற நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர், அன்றைக்கு



எங்கே சென்றார் என்று நான் கேட்க விரும்புகிறேன். அதுவும், திருத்தணியிலே அந்தக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு வரவில்லை என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்தப் பேச்சுவார்த்தையிலே நல்லவிதமான முடிவு ஏற்பட்டு, இன்றைக்கு நெசவாளர் பெருமக்களெல்லாம் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். பொதுவாக நெசவாளர் பெருமக்களைப் பொறுத்தவரையிலே, தங்களுடைய வாழ்விலே ஏற்றம் கண்ட ஓர் ஆட்சியாக இந்த ஆட்சியை நினைக்கிறார்கள்.

*முற்பகல் 10–50*

அங்கே மின்சாரத் தடை இருக்கிறது, அதனாலே அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அரி அவர்கள் சொன்னார்கள். கடந்த ஐந்து ஆண்டுகால ஆட்சியிலே பள்ளிப்பட்டு தொகுதியிலே எத்தனை துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டன என்று நான் கேட்க விரும்புகின்றேன். 1996–2001 ஆம் ஆட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் ஆற்காட்டார் அவர்கள் இருந்தபொழுது, அங்கே விடியன்காடு, விளக்கணாம்பூடி, அத்திமாஞ்சேரிப்பேட்டை, மேளப்பூடி, கொளத்தூர் என்று வரிசையாக அந்த end முதல் இந்த end வரை, அந்த கடைசியில் இருந்து இந்த முதல் வரை அத்தனை பகுதிகளுக்கும் துணை மின் நிலையங்களை அமைத்துத் தந்தவர்கள் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் என்பதை நான் இங்கே நன்றியோடு பதிவு செய்யவேண்டும். 1971–லே அங்கே 33 கிலோ வாட்டாக நிறுவப்பட்ட அத்திமாஞ்சேரிப்பேட்டை துணை மின் நிலையம் 110 கிலோ வாட்டாக நிலை உயர்த்தப்பட்டதும் நம்முடைய கலைஞர் ஆட்சியில்தான் என்பதை நான் இங்கு நன்றியோடு கூறவேண்டும். ஏனென்று சொன்னால்—இவ்வளவு சொல்கிறீர்களே, நீங்கள் ஏதாவது ஒரு துணை மின் நிலையத்தை upgrade செய்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அறிவிப்பு தொடர்பானதை மாத்திரம் சொல்லுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மின்சாரத் தடையைப்பற்றிச் சொல்வதற்காகச் சொல்கிறேன். மின்சாரத் தடை ஏற்பட்டதற்கு அவர் குறை சொல்வதால், சொல்கிறேன். ஏதாவது ஓர் இடத்திலே ஒரு sub station நீங்கள் upgradation செய்திருக்கிறீர்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

ஒரு நல்ல செய்தியைச் சொல்லி, நிறைவு செய்ய விரும்புகின்றேன். கடந்த 2–5–2008–ல் நடைபெற்ற அந்த முத்தரப்புப் பேச்சுவார்த்தையிலே, எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இராஜேந்திரகுமார் அவர்களுடைய முன்னிலையிலே, நான் பங்கேற்ற நிலையிலே, தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளுடைய முன்னிலையிலே, நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சருடைய உத்தரவின்படி அங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தையிலே நல்ல விதமாக உடன்பாடு ஏற்பட்டு, என்றைக்கும் இல்லாத அளவுக்கு இன்றைக்கு கூலி வழங்கப்பட்டு, பாவுக்கு 440 ரூபாய் வழங்கப்பட்டு, நெசவாளர் பெருமக்கள் மகிழ்ச்சியோடு மறுபடியும் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன? சொல்லுங்கள்.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அரி அவர்கள் நெசவாளர் பிரச்சினையை சபைக்குத் தெரிவித்து, அதில் இருக்கின்ற சாதக பாதகங்களை நடுநிலையோடு அரசின் கவனத்திற்கு எடுத்துச் சொன்னார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர், திரு. இராமன் அவர்கள் தேவையில்லாமல் அதில் உள்ளே புகுந்து பலவித குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து கூறுகின்ற ஒரு புதிய பாணியை இப்பொழுது கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்.

நான் அவரைக் கேட்க விரும்புகிறேன், விலைவாசி உயர்வு நாட்டையே உலுக்கிக் கொண்டிருக்கின்றதென்று நாமெல்லாம் குரல் கொடுத்தபொழுது, உலக நாடுகள் அனைத்திலும் விலைவாசி உயர்ந்திருக்கின்றது; அதனால் இந்தியாவில் உயர்ந்திருக்கிறதென்ற கருத்தை அவர்கள் சொன்னார்கள். ஆனால், விலைவாசி உயர்வுக்கு இந்தியாதான் காரணம் என்று உங்கள் சிய்யான் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் சொல்லியிருக்கின்றார். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் என்ன பதில் தரப் போகிறார் என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.



**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு அருமையான கேள்வியை வைத்திருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக அமெரிக்க செனட் பாராளுமன்றம் சென்று, இந்தக் கேள்வியை திரு. ஜார்ஜ் புஷ்ஷிடம் கேட்டுத் திரும்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே கேள்வி கேட்டால், திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் அவரை அமெரிக்காவுக்குப் push பண்ணுவது சரியல்ல. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு மற்றும் திருத்தணி வட்டங்களில் மொத்தம் 7,500 விசைத்தறியாளர்கள் உள்ளனர். இந்த விசைத்தறியாளர்கள்மூலம் சுமார் 42,500 விசைத்தறி நெசவாளர்கள் லுங்கி மற்றும் கைக்குட்டைகள் நெய்து வருகின்றனர். விசைத்தறி நெசவாளர்கள் ஊதிய உயர்வு, போனஸ் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த 17–4–2008 முதல் தறிகளை இயக்காமல் வேலைநிறுத்தம் செய்துவந்தனர்.

இதுகுறித்து, முதற்சுற்றுப் பேச்சுவார்த்தை கடந்த 22–4–2008 அன்று திருத்தணி வருவாய்க் கோட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்றது. அன்றைய பேச்சுவார்த்தையில் நிருவாகத் தரப்பில் யாரும் வராததால், 26–4–2008 ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 26–4–2008 அன்று திருத்தணி கோட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சென்னை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்) அவர்களும், திருவள்ளூர் தொழிலாளர் ஆய்வாளரும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையில் விசைத்தறி தொழிலாளர் தரப்பில் மீட்டர் ஒன்றுக்கு ஊதியமாக இரண்டு ரூபாய் ஐம்பது பைசா வீதமும், அதாவது பாவு ஒன்றுக்குக் கூலியாக 1,000 ரூபாய் வீதம் வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தனர். லுங்கி வியாபாரிகள் மற்றும் Master weavers தரப்பில் மீட்டர் ஒன்றுக்கு 50 பைசா வீதம் பாவு ஒன்றுக்குக் கூலியாக 200 ரூபாய் மட்டுமே உயர்த்தித் தரப்படும் என்றும் தெரிவித்தனர். இதைத் தொழிலாளர் தரப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், வியாபாரிகள் தரப்பினர் சென்னையிலுள்ள மற்ற சங்க உறுப்பினர்களோடு கலந்து ஆலோசனை செய்துவிட்டு மீண்டும் பேசுவதாகத் தெரிவித்தனர்.

முற்பகல் 10–55

இதனையடுத்து, பேச்சுவார்த்தை 29–4–2008–க்கு தள்ளி வைக்கப்பட்டது. 29–4–2008 அன்று திருத்தணி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் தொழிலாளர் நல இணை ஆணையர், தொழிலாளர் நல உதவி ஆணையர் (சமரசம்), திருவள்ளூர் தொழிலாளர் நல ஆய்வாளர் மற்றும் கைத்தறித் துறை உதவி இயக்குநர் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இராஜேந்திர குமார் மற்றும் பள்ளிப்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ஆகியோர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தையின்போது, நிர்வாகத் தரப்பில் பாவு ஒன்றிற்கு கூலியாக ரூ.320 தருவதாகத் தெரிவித்தனர். ஆனால், தொழிலாளர் தரப்பில் பாவு ஒன்றிற்கு ரூ.860–க்கு குறையாமல் கூலியை வழங்கவேண்டுமென்றும், பாவு ஓட்டுவதற்கு ரூ.160 உயர்வும், பசை போடுவதற்கு ரூ.50 உயர்வும் தர வேண்டுமென்று கோரினார்கள். ஆனால், நிர்வாகத் தரப்பில் பாவு ஒன்றிற்கு ரூ.350 வரை கூலியாகத் தர முன்வைத்தனர். ஆனால், விசைத்தறி தொழிலாளர்கள் தரப்பில் ரூ.510–க்கு குறையாமல் கூலி வழங்க வேண்டுமென்று முடிவாகக் கூறினார்கள். எனவே, பேச்சுவார்த்தையில் எந்தவித உடன்பாடும் ஏற்படாததால் அடுத்த பேச்சுவார்த்தை 2–5–2008 பிற்பகல் 3–00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இறுதியாக 2–5–2008 அன்று நடைபெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தையின் முடிவில் ஒப்பந்தம் ஏற்பட்டது. நெசவு





நெய்வதற்கான கூலி பாவு ஒன்றிற்கு 400 மீட்டர் ரூ.370–ம் பாவு ஓட்டுவதற்கு பாவு ஒன்றிற்கு ரூ.50–ம், பசை போடுவதற்கு பாவு ஒன்றிற்கு ரூ.20–ம் ஆக, ரூ.440 கூலியாக வழங்குவதென்று ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் 15–5–2008 முதல் நடைமுறைக்கு வருகிறது. இந்த ஒப்பந்தம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். மேற்படி ஒப்பந்த ஷரத்துகள் வியாபாரிகள் சங்கத் தலைவர் தரப்பிலும், மாஸ்டர் வீவர் தரப்பிலும், நெசவாளர் தரப்பிலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டிருக்கிறது. ஆக, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்பட்டு அனைத்துத் தொழிலாளர்களும் இன்றைக்கு தொழிலில் ஈடுபட்டு பிரச்சினை சுமுகமாக முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்பு

### (அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளை மறு நாள் எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் நடக்கவிருப்பதால், நேரத்தின் அருமை கருதி, இன்று எடுத்துக்கொள்ளப் பெறுவதாக இருந்த மூன்று கவன ஈர்ப்புகள் குறித்த அறிவிப்புகளில் ஒன்றை இப்போது எடுத்திருக்கிறோம். மற்ற இரண்டும்—மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் கொடுத்த அந்த இரண்டும் நாளையதினம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 2. தகவல் கோரல்–தொடர்ச்சி

### (இ) அமராவதி பிரதானக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுதல்

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒரு கவன ஈர்ப்பினை நாளை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்கிறேன். ஏனென்று கேட்டால், அவர்கள் கொடுத்த அந்தக் கவன ஈர்ப்பில் என்ன சொல்லியிருக்கிறார்களோ, அதற்கான உத்தரவினை அரசு போட்டுவிட்டது.

அதாவது, அமராவதி ஆற்றிலிருந்து பிரதானக் கால்வாயிலே தண்ணீர் விடவேண்டும், பயிர் காய்கிறது என்ற கோரிக்கை குறித்து நான் சமீபத்திலே கோயம்புத்தூருக்கு போனபோது மாண்புமிகு அமைச்சர் திரு. பொங்கலூர் நா. பழனிசாமி அவர்களும், உடுமலைப்பேட்டை நகரமன்றத் தலைவர் திரு. வேலுசாமி அவர்களும், ஜெயராம கிருஷ்ணன் எங்களுடைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அவர்களும் மற்றும் விவசாயிகளும் வந்து கேட்டார்கள். ஆனால், அதிலே என்ன பிரச்சினை என்று கேட்டால், கோவை மாவட்டத்தில் அமராவதி ஆற்றிலே பிரதானக் கால்வாயில் ஆகஸ்ட் 1 ஆம் தேதியிலிருந்து ஜனவரி 31 வரை தண்ணீர் விட வேண்டும். ஆனால், இப்போது நாம் மே மாதத்தில் இருக்கிறோம். அதற்காக நான் பத்திரிகைக்கு என்ன சொன்னேன் என்றால், இதுகுறித்து முதலமைச்சர் அவர்களிடம் தனியாகக் கேட்கவேண்டும், ஏனென்றால் மூன்று மாதத்திற்கு முன்னால் விடவேண்டியிருக்கிறது என்று பத்திரிகைக்கு சொன்னதாக வந்திருக்கிறது. இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டேன். எதற்காக இப்போது மூன்று மாதத்திற்கு முன்னால் தண்ணீர் கேட்கிறார்கள் என்று கேட்டார்கள். கரும்பு காய்கிறது, தென்னைக்கு உயிர்த் தண்ணீர் வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று சொன்னேன். அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு சொன்னார்கள், ஆகஸ்ட் மாதம் வரையிலே தண்ணீர் விடமாட்டேன் என்று பயிர் காய்கிறபோது சொல்லக்கூடாது. அணையிலே நீர் இருந்தால், உடனே திறந்துவிடுவதற்கு உத்தரவிடவேண்டுமேதவிர, அதை என்னிடத்திலே கேட்கிறேன் என்றுகூடச் சொல்லி காலதாமதம் செய்யக்கூடாது என்று கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த உத்தரவைப் பெற்று மே மாதம் 10 முதல் 18 ஆம் தேதி வரையில் நாள் ஒன்றிற்கு 440 கன அடி வீதம் கரும்பு, தென்னைக்காகத் தண்ணீர் விடப்படும் என்ற உத்தரவை ஏற்கெனவே அரசு வழங்கிவிட்டது. எனவே, இதை எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்லியாகிவிட்டதல்லவா? (குறுக்கீடு) உட்காருங்கள்.



## 4. விதி 111–ன்கீழ் திருத்த அறிக்கை

### தென் மாநிலங்களிடையே பேருந்துகள் இயக்குவதுபற்றி 22-10-2007 அன்று அளித்த விடையில் திருத்தம் குறித்து போக்குவரத்துத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111–ன்கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றினைப் பேரவைக்கு அளிப்பார். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–10–2007 ஆம் நாளன்று சட்டப்பேரவையில், உடுக்குறியிட்ட வினா எண் 30749–க்கான துணைக் கேள்விக்கு பின்வருமாறு விவரங்களை அளித்திருந்தேன். "கர்நாடக மாநிலத்தோடு, 50 ஆயிரம் கிலோ மீட்டர் வரைக்கும் நாம் ஓட்டலாம் என்றும், கேரள மாநிலத்தோடு 5 ஆயிரம் கிலோ மீட்டர் ஓட்டலாம் என்றும், நம்முடைய பாண்டிச்சேரி மாநிலத்தோடு அவர்கள் 150 பேருந்துகள் ஓட்டினால் நாம் 400 பேருந்துகள் ஓட்டலாம் என்று இப்படியெல்லாம் ஒப்பந்தங்கள் வந்திருக்கின்றன.

இதுகுறித்து திருத்த அறிக்கையைப் பேரவைமுன் அளிக்கிறேன்.

கர்நாடகா மாநிலத்துடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் கர்நாடகா மாநிலப் பகுதியில் 53,313 கிலோ மீட்டரும், அதேபோல் கேரள மாநிலத்தில், கேரளப் பகுதியில் 5,031 கிலோ மீட்டரும் இயக்கலாம் என்றும், பாண்டிச்சேரி மாநிலத்துடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி 90 பேருந்துகள் இருமுனை வரியிலிருந்து ஒருமுனை வரியாகவும், 75 புதிதாகவும் இயக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி தடத்தில் 3:1 என்ற விகிதத்திலும், தமிழ்நாடு மற்றும் காரைக்கால் வழித்தடத்தில் 1:1 என்ற விகிதத்திலும் பேருந்துகளை இயக்கலாம் என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–00

## 5. அறிக்கைகள் அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் 16 முதல் 19 வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை**
**(ஆ) கோரிக்கை எண் 31 – தகவல் தொழில்நுட்பவியல் துறை**

### (அ) கோரிக்கை எண் 27 – தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008–2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ரூ. 10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ரூ 200,00,03,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 27, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.



**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000 ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 239, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9392, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12649, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13783, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14486, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2227, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2791, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10736, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12389, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15541, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16385, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் [illegible]ப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்[illegible]ற ரூ.200,00,03,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17053, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6310, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6449, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9544, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9851, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11208, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11338, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000 மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11890, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12071, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12201, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13964, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14700, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 16131, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10387, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15714, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15935, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13833, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16896, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1800, திரு. மு. பரஞ்ஜோதி.

**திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீரங்கம் தொகுதி, மணிகண்டம் ஒன்றியம், புங்கனூர் ஊராட்சியில் உள்ள கல் குவாரிகளில் சட்டத்திற்குப் புறம்பாகக் கல் வெட்டி எடுப்பதைத் தடுத்து அரசுக்கு ஏற்படும் இழப்பைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2441, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2543, திருமதி செல்வி ராமஜெயம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3572, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் அறநிலைய இடங்கள் பச்சமலை, தாந்தோனியம்மன் கோயில் இடங்கள் இருப்பதால் அதை அரசு விலை நிர்ணயித்து கோயில்களுக்கும் வருவாய் வருகின்ற வகையில்—சிப்காட்மூலம் சிறு தொழிற்சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3709, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4008, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4047, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் பகுதியில் 'SEZ' பொருளாதார மண்டலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4894, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரப்பர் அதிகமாக உற்பத்தியாகும் குமரி மாவட்டத்தில் ஒரு இரப்பர் தொழிற்சாலை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5104, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் சிறப்புத் தொழில் மையம் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5523, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப்புற தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6818, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர் தொகுதிக்குட்பட்ட பெரிய செவலை செங்கல்வராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி காகிதத் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6986, திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதி, விவசாய மக்களின் நலன் கருதியும் சுமார் பத்தாயிரம் தொழிலாளர்களின் நலன் கருதியும் நீண்ட காலமாக மூடிக் கிடக்கும் மதுரை பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையைத் திறக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8259, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலையில்லா இளைஞர்கள் தொழில் தொடங்குவதற்குக் கடனுதவி

வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8911, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், அரசு மரத்துப்பட்டி, எறவார்பட்டி, பானாமூப்பன்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மல்லிகைப் பூ அதிகமாக உற்பத்தியாவதால் வாசனைத் திரவியங்கள் தொழிற்சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9159, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9276, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் தொகுதியில் வேளாண் தொழில் சம்பந்தமான ஒரு புதிய தொழிற்சாலை தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10056, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிமெண்ட் ஆலைகளின் உற்பத்தியை அதிகரித்து சிமெண்ட் விலையைக் குறைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10208, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள சிமெண்ட் மற்றும் கம்பி ஆலைகளில் உற்பத்தியைக் கூட்டி சிமெண்ட், கம்பி விலையைக் குறைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10502, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரிய, மிகப் பெரிய தொழில் நிறுவனங்கள் தங்களின் தொழிலை ஆரம்பிக்கும்போதும், விரிவாக்கம் செய்யும்போதும், அந்நிறுவனங்கள் உள்ளூரில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை (Top priority) அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10861, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11237, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சிமெண்ட் ஆலைகளில் உற்பத்தி செய்யப்படும் சிமெண்ட்டின் விலையைக் குறைத்து மக்களுக்கு எளிதாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11460, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், வானூர் தொகுதியில் புதிய தொழிற்சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11474, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11824, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரும்பிலிருந்து நேரடியாக எத்தனால் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக்



கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11854, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12460, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தொகுதி, பொன்னமராவதி பகுதியில் சிப்காட் தொழில் வளாகம் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12492, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொழில் துறை முதலீடுகள் ஒரே பகுதியில் குவியாமல் பரவலாக்கப்படவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12522, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12719, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென் மாவட்டங்களில் தொழில்கள் தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில், ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12798*, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், வரகூர் தொகுதி, காரை கொளக்காளத்தம் பகுதிகளில் உள்ள மண்வளத்தைக் கொண்டு பீங்கான் தொழிற்சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கண்க்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12917*, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாலுகா தலைநகரில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட தொழிற்பேட்டைகள் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13000*, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் கனரக இரும்புத் தொழிற்சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13071*, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி நகரத்தையொட்டி தொழில் வளாகம் ஒன்றை ஏற்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13136*, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லின் பாரம்பரியமிக்க தோல் தொழில் நலிவுற்று வருகிறது. EI தோல் ஏற்றுமதிக்கு விதித்துள்ள 15% சுங்கவரியை மறுபரிசீலனை செய்து குறைத்திட மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13470*, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள சேகோ ஆலைகளை மீண்டும் நடத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13683, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென் மாவட்டங்களில் மற்றும் மதுரை மாவட்டத்தில் தொழில் வளர்ச்சிக்குக் கூடுதல் முக்கியத்துவம் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14249, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் கிரானைட் கற்கள் அதிகமாகக் கிடைக்கின்றன. கிரானைட் கற்களைப் பட்டை தீட்டும் தொழிற்சாலை மேலூரில் இல்லாததால் வெள்ளலூர் உள்ளிட்ட மேலூர் தொகுதியைச் சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் வேலைக்கு வெளிநாடு செல்லவேண்டியுள்ளது. மேலூர் தொகுதி இளைஞர்களுக்கு வேலை கொடுக்கும் வகையில் மேலூரில் கிரானைட் கல் பட்டை தீட்டும் தொழிற்சாலை அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14857, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.



**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளும் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கவேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் வழங்க அரசு முன்னுரிமை அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15048, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி, வைகுந்தம் ஊராட்சியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15308, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்நிய முதலீட்டாளர்கள் தமிழகத்தில் தொடங்கும் தொழிற்சாலைகளில் அரசு பங்குகளைப் பெற்று தமிழக அரசும் பங்குதாரராக இருக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமி[illegible]வைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16773, திரு. சு. கு[illegible]ன். இருக்கையில் இல்லை.

முற்பகல் 11–05

வெட்டுத் தீர்மானம் எண் 16987, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருசெங்கோடு தொகுதியில் புதிய தொழிற்சாலை ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17004, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் விளையும் உயர்தர இரப்பரை மூலதனமாக வைத்து இரப்பர் சம்பந்தப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கனரகத் தொழிற்சாலை அமைத்து படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17081, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும்போது விவசாய விளை நிலங்கள் பாதிக்காதவாறு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தொழில் துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.200,00,03,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 31, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 243, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9161, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12354, திருமதி ராணி வெங்கடேசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 12656, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தல்லவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12884, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14490, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2218, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2801, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8932, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10740, திரு. கு. பாண்டுரங்கன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11514, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12397, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13259, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16395, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6340, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6447, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10956, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11168, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11409, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12024, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12263, திரு. தி.க. ராஜா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13976, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14551, திரு. த.அ. மேகநாதன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 15073, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10386, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15718, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15990, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13837, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீமானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16806, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 16880, திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1830, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2541, திருமதி செல்வி ராமஜெயம்.



**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3712, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் பெரிதும் வளர்ந்து வரும் ஐ.டி. தொழிலில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தொழிலாளர் நலன் மற்றும் பணி நேரம் வரையறுக்கச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4018, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4038, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி பகுதியில் additional I.T. Park அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5753, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9637, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் கல்வி அறிவு பெற்றவர்கள் அனைவரும் கணினி இயக்கம் தெரிந்திட, கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகளில் கணினி சிறப்புப் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்து, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு அவர்களையும் ஆற்றல் உள்ளவர்களாக மாற்றவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10016, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று கரூரில் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10060, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலருக்கும் கணினிப் பெட்டி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10344, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து மேல்நிலைப் பள்ளிகளிலும் இண்டர்நெட் இணைப்புடன்கூடிய கணினி மையம் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10764, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரி தொகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *10862*, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *11240*, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பயன்பாட்டினை தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய தலைநகரங்களுக்கும் விரிவுபடுத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11459*, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டத்திலுள்ள அனைத்து மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் கணினிப் பயிற்சி வகுப்புகள் நடத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *11850*, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் நகரத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12459*, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12486*, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஊராட்சிகள்தோறும் சமுதாய இணையதள வசதிகள் ஏற்படுத்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *12533*, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *12720*, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் தொடங்கப்படும் ஐ.டி. பார்க் துணைத் தொழிற்சாலையை ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைத்துத் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12915, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற மாணவர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12972, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13029, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலத்தில் மென்பொருள் தொழிற்கூடங்கள் துவக்கி தகவல் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13070, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி பகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின்மூலம் டைடல் பார்க் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13134, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல்லில் ஐ.டி. பார்க் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13753, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியிலுள்ள சிப்காட் வளாகத்தில் தகவல் தொழில்நுட்ப வளாகம் அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13775, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட கைங்குளம் ஊராட்சிப் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *13782*, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*770,86,12,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*10,00,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *14255*, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதுமுள்ள அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசுக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களில் அதிக மதிப்பெண் பெறுவோருக்கு அரசே இலவசக் கணினிகளை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*770,86,12,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*10,00,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *15056*, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*770,86,12,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*10,00,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *15176*, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, மேட்டுப்பாளையம் நகரில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*770,86,12,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*10,00,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *16947*, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூரில் மென்பொருள் பூங்கா மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*770,86,12,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*10,00,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *16989*, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு தொகுதியில் தகவல் தொழில்நுட்பத் துறையின் சார்பாக தொழில் பூங்கா (டைடல் பார்க்) அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய *31* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*770,86,12,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*10,00,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17003, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜாக்கமங்கலம் உப்பளம் பகுதியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17054, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மறைமலை நகரில் அமைந்துள்ள C.M.D.A. தொழிற்பேட்டை வளாகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா (I.T. Park) அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு



வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடங்குகின்றது. இன்று இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

முற்பகல் 11–10

***திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டில் பொறுப்பேற்கின்றபோது, முந்தைய அரசு கடுமையான நிதிச் சீரழிவை விட்டுச்சென்றதற்குப் பின்னர், உலக வங்கி, ஆசிய வங்கி, ரிசர்வ் வங்கி போன்ற வங்கிகளெல்லாம், கடன் கொடுக்க மறுத்த நிலையில், தமிழகத்தை, இருக்கின்ற கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் பிளாக் லிஸ்ட்டில் சேர்த்துவிடுவோம் என்ற நிலையில், அதுமட்டுமல்லாமல் இயற்கைச் சீற்றங்களான, சுனாமி, வறட்சி, வெள்ளம், இத்தனையையும் எதிர்நோக்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இரண்டு தொழிற் கொள்கைகளை, தமிழகத்தில் வகுத்ததின் விளைவாக, இன்று தமிழகம், தொழிலில் முதன்மையாக விளங்குகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பெருமைக்குரிய தமிழகத்தினுடைய வருங்கால முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த ஏற்றுமதியில், 2001 ஆம் ஆண்டில் வெறும் 3,116 கோடி ரூபாய் அளவுக்கு மட்டும்தான் ஏற்றுமதி இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீர்திருத்த

@ 203 முதல் 298 வரையிலான பக்கங்களில் இணைப்புகள்-I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

நடவடிக்கைகளால், தொழில்நுட்ப ஏற்றுமதியானது, 15,000 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்தது. அது மட்டுமல்லாமல், அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட, உலகத் தரம் வாய்ந்த வெளிப்புறக் கட்டமைப்பு, கல்விசார் கட்டமைப்பு மற்றும் அறிவுத் திறன் கட்டமைப்பு ஆகியவற்றின் காரணமாக Philips, Accenture, i–Gate, Syntel, Customer Care, Seimens போன்ற பல்வேறு நிறுவனங்கள் தங்களது செயல்முறைப் பணிகளை சென்னையிலே தொடங்கின.

இதுமட்டுமல்லாமல், தனியார் மற்றும் பொதுத் துறையினருடன் இணைந்து, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் ஓசூர் போன்ற நகரங்களை மேம்படுத்தி தொழில்நுட்பவியல் பூங்காக்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட முறையான திட்டங்களாலும், உலகத் தரம் வாய்ந்த வெளிப்புறக் கட்டமைப்பு, கல்விசார் கட்டமைப்பு மற்றும் அறிவுத் திறன் கட்டமைப்பு ஆகிய அடிப்படை வசதிகள் காரணமாகவும், தமிழகம் மின்சார உற்பத்தியில் மிகை மாநிலமாக இருந்ததாலும், தமிழகம் அமைதிப் பூங்காவாக இருந்ததாலும், பொருளாதார வளர்ச்சி இருந்ததாலும், மிகப் பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முன்வந்தன என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விழைகின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற மண்டலங்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலமாகத் தமிழகம் முழுவதும் பரவலாக வேலைவாய்ப்பை கொடுக்கின்ற அளவில் செய்வோம் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்பட்டதற்குப் பின்னர் அது பரவலாக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் இல்லை. குறிப்பிட்ட தொழில்களுக்கும், குறிப்பிட்ட பகுதிகளிலும் மட்டும்தான், சிறப்புப் பொருளாதார மண்டலம் இன்று வரை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் இன்று என்னென்ன சலுகைகள் வழங்கி இருக்கின்றீர்கள் என்பதை வெளிப்படையாக இதுவரை அறிவிக்கவில்லை. மேலும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ஒதுக்கீடு பெற்ற, வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்களில்,



குறிப்பாக நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்களும், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் அதிகமாக ஒதுக்கீட்டில் தொழில் தொடங்க முயற்சி எடுக்கவில்லை என்கின்ற குறிப்பு எங்களுடைய கவனத்திற்கு வருகின்றது என்பதையும், அரசின் கவனத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆரம்பிப்பதற்கு இரண்டு ஆண்டுகாலமாக முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த அரசு, ஏற்கெனவே நடந்துகொண்டிருக்கின்ற பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள், தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழில்களுக்கு என்ன பாதுகாப்பை அளித்திருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டம், தொழில் மாவட்டம். தென்னிந்தியாவின் மான்செஸ்டராக விளங்கிய கோவை மாவட்டம், பஞ்சாலை, பனியன் தொழில், விசைத்தறி, pumpset, foundry போன்ற தொழிற்சாலைகள் மிகுந்த அந்தத் தொழில் நகரத்தில் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து, இல்லாத அளவுக்கு அத்தனைத் தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர்களும், கடந்த 12 ஆம் தேதியன்று, பத்தாயிரம் பேர் ஊர்வலமாக வந்து, தொழில் தொடங்குகின்ற முதலாளிகள், தங்கள் கஷ்டமான நிலைமைக்ளை எடுத்துக்கூறி ஊர்வலம் வரக்கூடிய ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–15*

அதற்குக் காரணம் இன்று செயற்கையாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மின் தட்டுப்பாடு. அடிக்கடி மாறிக் கொண்டிருக்கின்ற கச்சாப் பொருட்களினுடைய விலையில் ஏற்படும் இறக்க, ஏற்றங்கள், டாலர் வீழ்ச்சிக்காக கொடுக்க வேண்டிய compensation சரியாகக் கொடுக்காத நிலைமை; அதுமட்டுமல்லாமல் போதுமான மானியம் வங்கிகள் கொடுப்பதில்லை. இந்த நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

Foundry தொழிலில் மட்டும் சுமார் 5 இலட்சம் பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த 5 இலட்சம் பேரில் இன்று 30 சதவிகிதம் பேருக்குத் தொழில் இல்லாத நிலைமையில், தொழிற்சாலையை மூடிக் கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது.

பஞ்சாலைத் தொழிலில் இன்று தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் T.N.T.C. அதேபோன்று N.T.C. அதுமட்டுமல்லாமல் மற்றும் இருக்கக்கூடிய சிறு பஞ்சாலைகள், பெரிய பஞ்சாலைகள் உள்ளிட்ட சுமார் 3,000 பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் 30 சதவிகிதம் மூடக்கூடிய நிலைமையில் இருக்கின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்—இந்திய துணைக் கண்டத்திலேயே ஏற்றுமதி அதிகமாக இருக்கக்கூடிய முன்னணித் தொழில், தமிழகத்தில் முன்னோடியாக இருக்கக்கூடிய தொழில், முதன்மைத் தொழில் பஞ்சாலைத் தொழில், விசைத்தறி, அதேபோன்று பனியன் தொழிற்சாலை, பம்பு செட்ஸ். இவற்றில் முதன்மையாகத் தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்தத் தொழிற்சாலைகள் அத்தனையும் மூடக்கூடிய அபாயகரமான நிலையில் இருக்கின்றபொழுது நீங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று வைத்துக்கொண்டு புதிய தொழிற்சாலைகளை உருவாக்கிக்கொண்டு, எற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளுக்கு மின்சாரத்தைக் கொடுக்காமல் மறுத்துவிட்டு புதிய தொழிற்சாலைகளுக்கு சுமார் 1,000 மெகா வாட் அளவுக்கு நீங்கள் கொடுத்ததனுடைய விளைவாக இன்று மின் தட்டுப்பாடு ஏற்பட்டு, இருக்கின்ற தொழிற்சாலைகளை முடக்கக்கூடிய சூழ்நிலையும், பள்ளியில் படிக்கக்கூடிய, பரீட்சைக்குப் படிக்கக்கூடிய பள்ளிக் குழந்தைகளுக்குக்கூட படிப்பதற்கு மின்சாரம் இல்லாத சூழ்நிலையும் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய பல்லடம் தொகுதி மிக அதிகமாக விசைத்தறிகள் இருக்கக்கூடிய பகுதி. தமிழகத்திலே இருக்கக்கூடிய 5 இலட்சம் விசைத்தறிகளில் ஒன்றரை இலட்சம் கோவை மாவட்டத்திலும், அதில் சுமார் ஒரு இலட்சம் அளவுக்கு விசைத்தறிகள் பல்லடம் தொகுதியிலும் இருக்கின்றன. இங்கு விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் நாற்பதும் தமிழகம் முழுவதும் 80 கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே இதுபோன்ற மின்சாரத் தடைபாடும்—துணி ஏற்றுமதி இல்லாத சூழ்நிலையிலும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மின் கட்டணச் சலுகை அளித்தார்கள்.

இங்கே பேசிய உறுப்பினர்கூடக் குறிப்பிட்டார்கள். ஏதோ பேச்சுக்குப் பேசினாரே ஒழிய விசைத்தறியைப் பொறுத்தவரையில்



புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான் 1991–1996–லும் சரி, 2001–2006–லும் சரி மின்சாரக் கட்டணத்தை மூன்று முறை குறைத்து—E.B. Tariff–ஐ குறைத்தது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எந்தச் சலுகையும் வழங்கவில்லை என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

82 இலட்சம் வேட்டிகளும், 80 இலட்சம் இலவசச் சேலைகளும் கொடுத்தது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில். தற்போது 2 கோடியே 72 இலட்சம் இலவச வேட்டிச் சேலைகள் கொடுக்கப்பட்டுள்ள நிலையில், அன்று 60 சதவிகிதத்தை கோவை மாவட்டத்திற்குக் கொடுத்ததை இப்போது புறக்கணித்து, வெறும் 12 சதவிகிதம்தான் இலவச வேட்டி, சேலைகள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசில் அங்கு கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இந்திய துணைக் கண்டத்திலேயே (குறுக்கீடு) இப்போது பேச முடியாது. I am not yielding. நான் பேசி முடித்த பிறகு பேசச் சொல்லுங்கள். அதுமட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திலேயே விசைத்தறிக்கென்று ஒரு நவீனப் பூங்கா அமைக்க வேண்டுமென்று அப்போது ஆணையிட்டு பல்லடம், ஈரோடு, திருச்செங்கோடு, ஆண்டிப்பட்டி ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 200 கோடி ரூபாய் அளவில் திட்டமிட்டு முதற்கட்டமாக தமிழக அரசின் நிதியில் 4 கோடியே 87 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு முதன்முறையாக பல்லடத்தில் துவங்கக்கூடிய அந்த முயற்சியை எடுத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, விசைத்தறியாளருக்கு நவீன விசைத்தறி நாடா பொருத்துவதற்காக 50 சதவிகித மானியம் கொடுத்தது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில்தான் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுபோன்று விசைத்தறிக்கும், கைத்தறிக்கும் காவலாக இருந்தது புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சி என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திருப்பூரில் பனியன் கம்பெனிகள் இருக்கின்றன. இந்த பனியன் கம்பெனிகள் சுமார் 8 ஆயிரம் கோடியிலிருந்து 9 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கின்றன. ஏற்றுமதி செய்வதில் இன்றைய நிலையில் ... டாலர் வீழ்ச்சி,



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228385
சென்னை-600 008
D
V211,3,P06
P08-521

போதுமான அளவுக்கு மானியம் கொடுக்காத நிலைமை ஆகியவற்றால் ரூ.1,500 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதாக நமக்குத் தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 11–20*

இதன்மூலமாக இலட்சக்கணக்கான பேர் வேலை இழக்கக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. விசைத்தறியில் 3 இலட்சம், அதுபோன்று பஞ்சாலையில் 2–1/2 இலட்சம், 3–1/2 இலட்சம், foundries–ல் 3 இலட்சம் இப்படி இலட்சக்கணக்கான பேர் இன்று அவர்களாகவே தொழிலை மூடிக்கொண்டு, தொழில் செய்யமுடியாமல் இருக்கின்ற சூழ்நிலையில் நீங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று வைத்துக்கொண்டு புதிய தொழிலுக்கு ஊக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஏற்றுமதி செய்து அன்னியச் செலாவணியை மத்திய அரசுக்கு ஈட்டிக் கொடுக்கும் இத்தொழிலுக்கு அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஆறு, ஆறு துணை மின் நிலையங்கள் 2 முறை அறிவிக்கப்பட்டு அவைதான் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்லாமல், 2 முறை கொண்டு வரப்பட்ட குடிநீர்த் திட்டம்தான் 10 இலட்சம் பேர் இருக்கக்கூடிய திருப்பூர் நகருக்கே இன்று குடிநீர் ஆதாரமாக இருந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், இந்தியாவிலேயே முதல்முறையாக Tirupur Development Corporation என்று அமைக்கப்பட்டு முதலாளிகளும், அரசும் இணைந்து அந்த நகரை வளப்படுத்துவதற்காக, அதிலே ஒரு I.A.S. அதிகாரியை நியமித்த அரசு, அம்மாவின் அரசு என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் இரண்டு பாலங்கள், அதேபோன்று புறவழிச் சாலைகள் எல்லாம் அமைக்கப்பட்டன. இங்கே இருக்கிற தமிழக அரசை, நான் மெத்தப் பணிவோடு கேட்பதெல்லாம் ஒன்றுதான்; நீங்கள் மத்தியில் அங்கம் வகித்துக்கொண்டிருக்கிறீர்கள். பல ஆண்டுக் காலமாக பி.ஜே.பி.யோடும், பின்பு காங்கிரசோடும் இணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த மாநிலத்தின் தொழில் நகரமாக இருக்கின்ற கோவை நகருக்கு நீங்கள் எதைச் செய்திருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்திக் கேட்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே இருக்கின்ற அனைத்துப்



பஞ்சாலைகளும் விசைத்தறி, பனியன் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, விஸ்கோஸ் தொழிற்சாலை மூடி இருக்கின்றது. அதுமட்டுமல்ல, ஊட்டியில், Hindustan Photo Films தொழிற்சாலை மூடப்பட்டிருக்கின்றது. இதுபோன்று தமிழகம் முழுவதும் இருக்கின்ற ஆலைகள் மூடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், மத்தியில் மட்டும் 10, 12 ஆண்டுகாலமாக நீங்கள் அமைச்சரவையில் அங்கும் வகித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்படி இருக்கின்ற நிலைமையில், இப்போது சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கக்கூடிய நிலைமையில், பழைய தொழிலில் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களைப் பற்றி நீங்கள் நினைத்துப் பார்க்கவேண்டும். இன்று பஞ்சாலை, பனியன், விசைத் தறித் தொழிலில் இருக்கக்கூடிய தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மின்சார சலுகை வழங்கவேண்டும். அதுமட்டுமல்ல, வரிச் சலுகை வழங்க வேண்டும். நிதர்சனமான ஒரு உண்மையைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் அவர்கள் கூறுகின்ற கருத்தெல்லாம் நூலிலும், அதேபோல ஆயத்த ஆடையிலும் உலகளவில் நமக்குப் போட்டியாக இருக்கக்கூடிய சீன நாட்டிற்கும், வங்காள தேச நாட்டிற்கும், பஞ்சு ஏற்றுமதி செய்வதன்மூலமாக, நமது தொழில் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்று பஞ்சாலையில் இருக்கிற அத்தனை அமைப்பைச் சார்ந்தவர்களும் சுட்டிக்காண்பிக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நமது தமிழகத்தைச் சார்ந்த பஞ்சாலை, பனியன் தொழிற்சாலைகள், அதேபோல பவுண்டரி, பம்பு செட் தொழிற்சாலைகளைக் காப்பாற்ற தமிழகத்தின் பல்வேறு கட்சிகளின் ஒட்டுமொத்த கூட்டணியைச் சேர்ந்த நீங்கள், மத்தியில் இருந்து பல்வேறு சலுகைகளை இங்கே வாங்கிக் கொடுப்பதை, விட்டுவிட்டு சிறப்புப் பொருளாதார மண்டலம் என்று வைத்துக்கொண்டு இவ்வாறு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் ஓர் உதாரணத்தைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன். சுஸ்லான் தொழிற்சாலை என்று சிறப்புப் பொருளாதார மண்டலத்தின்மூலமாக கருமத்துப்பட்டியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் இருக்கின்ற அத்தனை பகுதிகளிலும், விசைத்தறி குடிசைத் தொழிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 1 இலட்சம் விசைத்தறிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. வெளி மாவட்டத்தைச்

சேர்ந்த தொழிலாளர்கள் இங்கே வந்து தங்கி இருந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். 1997 ஆம் ஆண்டு, இது அரசுக்குட்பட்ட கூட்டுறவுத் தொழிற்பேட்டையின்மூலமாக ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் 307 ஏக்கர் பூமியை, அரசுக்குச் சொந்தமான பூமியை, அண்ணா தொழிற்பேட்டை அமைத்து சிறு தொழிலை ஆரம்பிக்க வேண்டிய இந்த அரசும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஊரகத் தொழில் அமைச்சரும் இணைந்துகொண்டு அங்கே பெருந்தொழிலுக்கும், புதிதாக வருகின்ற தொழிலுக்கும் அங்கே 100 ஏக்கர் நிலத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் புதிதாக சுஸ்லான் தொழிற்சாலை ஆரம்பிப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் வேலுசாமி அவர்கள் சொல்கிறார்கள். சுஸ்லான் தொழிற்சாலை 300 ஏக்கர் நிலப் பரப்பில் நீண்ட நாட்களுக்கு முன்பு அவர்களாகவே வாங்கினார்கள். அதற்கு அருகில், 1989 ஆம் ஆண்டிலேயே அண்ணா தொழிற்சங்கம் என்ற பெயரில் Industrial Co-operative Society என்ற ஒரு நிறுவனத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு ஆரம்பித்து பின்னர் அது கிடப்பிலே போடப்பட்டது.

முற்பகல் 11–25

இப்போது சுஸ்லானும், அண்ணா தொழிற்சங்கமும் இணைந்து ஒரு எல்லைக் கோட்டை வகுத்துள்ளன. சுஸ்வான் விரைவிலே தொழிலை ஆரம்பிக்கவிருக்கிறது. இதன்மூலம் 3,000 பேர்களுக்கு வேலை கொடுக்க இருக்கிறார்கள். அண்ணா தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையிலே, அதற்குரிய 310 ஏக்கருக்குப் பதிலாக 315 ஏக்கரில், விரைவிலே இந்த மாதத்திலேயே புதிதாக 585 உறுப்பினர்களுக்கு அந்த நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டு விரைவிலே தொழில் தொடங்கவிருக்கிறார்கள். எனவே, தவறான செய்தியை உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே பதிவு செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நான் கேட்பது எல்லாம்—இருக்கின்ற தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக சுமார் 80 கோடி ரூபாய் அளவில் 9 துணை மின் நிலையங்கள் இருக்கின்ற விசைத் தறி பஞ்சாலைக்காக புரட்சித் தலைவி



அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்டன. இன்றையதினம் உயர் மின் இணைப்பு நேரடியாக சுஸ்லான் கம்பெனிக்குச் செல்கிறது. அதுமட்டுமல்ல குடிப்பதற்கு அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் இல்லை. ஆனால், நேரடியாக சுஸ்லான் கம்பெனிக்கு, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைக்கு, அது செல்கின்றது என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு சில விஷயங்களை மட்டும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும், அதேபோன்று அறநிலையத் துறையின் மூலமாக அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் கோயில் மூலமாக அமைக்க வேண்டுமென்று ஆணையிட்டதை 2 ஆண்டு காலமாக இந்த அரசு செய்யவில்லை என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீர்ப் பிரச்சினை கோவை மாவட்டத்தில் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலையில் 2–வது குடிநீர் திட்டத்தை நிறைவேற்றாமல் இருக்கின்ற அரசாக இது விளங்கிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், வேளாண்மைத் துறை மூலமாக அறிவிக்கப்பட்ட பல்லடம் வெங்காய குளிர் பதன கிடங்கையும், அதேபோன்று கண்ணம்பாளையத்தில் இருக்கக்கூடிய விதைப் பண்ணைகள் அருகில் இருக்கக்கூடிய (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. No. இப்போது நேரம் 11.27 ஆகியிருக்கிறது. ஏற்கெனவே 15 நிமிடங்கள் உங்களுக்குப் பேச ஒதுக்கப்பட்டன. நீங்கள் 17 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். சீக்கிரம் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** ஒரே நிமிடம். கண்ணம்பாளையம் டெர்மினல் மார்க்கெட்டை இப்போது வேறு இடத்திலே மாற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. மேலும் அருள்மிகு வாழைத்தோட்டத்து அய்யன் கோயில், திருவேங்கடநாத பெருமாள் கோயில்களுக்கு தலா ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டு, அந்தத் திட்டம் சட்டமன்றத் தேர்தல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டத்தைப் பற்றி பலமுறை நான் ஒத்திவைப்புத் தீர்மானம் மூலமும், கேள்வி மூலமும் கேட்டிருக்கின்றேன். ஆனால், அந்தத் திட்டத்தில் இதுவரை இடிக்கப்பட்ட கட்டடங்கள் அப்படியே இருக்கக்கூடிய அளவில்,

மோசமான நிலையில் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும், நபார்டு வங்கியின் மூலமாக வண்ணத்தங்கரை, செங்கத் துறையில் மாதப்பூர் ரோட்டில் இருக்கின்ற குளத்திற்கு அருகே பாலம் கட்டுவதற்காக அம்மாவினுடைய ஆட்சியிலே பரிந்துரை செய்யப்பட்ட அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள். ஆனால், நீங்கள் 18 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். சீக்கிரம் உங்கள் பேச்சை முடியுங்கள்.

**திரு. செ.ம. வேலுசாமி:** 25,000 ரூபாய் அரசின் மூலமாகக் கொடுக்கப்பட்ட அந்த நிதியை இன்னும் பூரணமாகப் பயன்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு புதிய தொழிலை ஊக்குவிக்கத்தான் நினைக்கிறதே ஒழிய பழைய தொழிலை முடக்குவதாக இது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு கோடீஸ்வரர்களை மேலும் கோடீஸ்வரர்களாக ஆக்குவதற்குத்தான் இது பயன்படுகிறது. அதாவது உலகின் கோடீஸ்வரர்களில் இந்தியாவில் 4 கோடீஸ்வரர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலை இன்னும் ஒரு 10 ஆண்டு காலத்தில் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் முதலாவதாக வரக்கூடிய நிலைமை இருக்கின்றது என்று Focus பத்திரிகை குறிப்பிட்டதைப்போல, தமிழக அரசு கடந்த 2 ஆண்டு காலமாக கோடீஸ்வரர்களை மேலும் கோடீஸ்வரர்களாக ஆக்குவதற்காக புதிய தொழிற்சாலைகள் ஆரம்பித்து, பழைய தொழிற்சாலைகளை முடக்கக்கூடிய நிலையை மாற்ற வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலுசாமி அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்பதற்காகத்தான், சில விளக்கங்களை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். மின் தடை ஏற்பட்டக் காரணத்தினாலே கோயம்புத்தூர் மாவட்டத்திலே Powerloom எல்லாம் இயங்கவில்லை என்றும், மின் தடையாலே



கைத்தறி, நெசவுத் தொழிலே பாதிக்கப்பட்டிருப்பதைப் போன்று இங்கே பேசினார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொழிலதிபர்களையெல்லாம் கூப்பிட்டு Staggering Holidays வைத்து தமிழகத்தை 6 மண்டலங்களாக மாற்றி ஒவ்வொரு மண்டலமும் ஒவ்வொரு நாள் விடுமுறை விட்டு தொழில் நடத்துங்கள் என்று சொல்லும்போது அவர்கள் ஒத்துக்கொண்டாலும்கூட Powerloom–ஐப் பொறுத்தவரையிலே மறுநாளே இங்கே வருகைத் தந்து, "எங்களுக்கு விதிவிலக்குத் தாருங்கள். எங்களுக்கு மின்சாரத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் தளர்வு செய்யாதீர்கள்" என்று கேட்டார்கள். உடனே தமிழக மின் வாரியம் powerloom உற்பத்தி செய்துகொண்டு வருகின்றவர்களுக்கும் மின்சாரத்தை தொடர்ந்து வழங்கிக் கொண்டுதான் வருகிறது. எந்த powerloom–க்கும் மின்சாரத்தைத் தடை செய்யவில்லை.

முற்பகல் 11–30

இரண்டாவது, தமிழ்நாட்டிலே கடந்த ஒரு வார காலமாக 1,000 மெகா வாட்டிலிருந்து 1,400 மெகா வாட் வரையிலும் தினந்தோறும் காற்றாலைகள் மூலமாக மின்சாரம் நமக்குக் கிடைத்துக்கொண்டிருக்கிறது. நாம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கிக்கொண்டிருந்த 600 மெகா வாட் மின்சாரத்திலேகூட நேற்றையதினம் 200 மெகா வாட் மின்சாரம் நமக்குத் தேவையில்லை என்று அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிட்டோம். இப்படி, தமிழ்நாட்டிலே காற்று வீசி மின்சாரம் நமக்குத் தேவையானதைவிட இன்னும் கூடுதலாகவே 200 மெகா வாட் மின்சாரம் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மின்சாரத் தடை, மின்சாரத் தடை என்று சொல்லி நேரத்தை வீணாக்குவதைப் பார்த்து நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு point of order, please.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. செங்கோட்டையன்; உங்கள் time ஆகிவிட்டது. நிறையப் பேர் பேசவேண்டும். (குறுக்கீடு) உறுப்பினர் பேசியாகிவிட்டது; அடுத்தது நீங்களும் பேச வேண்டுமா?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் விளக்கத்தில் மின்சாரத் தடையேயில்லை விசைத் தறிகளுக்கு என்று குறிப்பிட்டார். வாரத்திற்கு ஒரு நாள் விசைத் தறிகளை இயக்கக்கூடாது என்று எல்லா பகுதிகளுக்கும் circular விடப்பட்டிருக்கிறது. அது அமைச்சருக்குத் தெரியுமா? அது நீக்கப்பட்டிருக்கிறதா? தொழிற்சாலைகளுக்கும் அதுதான். அதுபோல, மாதத்திற்கு ஒருமுறை மின்சாரத்தைச் சரி செய்கிறோம், repair என்று சொல்லி அதற்கும் நிறுத்தப்படுகிறது, 5 நாட்கள் நிறுத்தப்படுகிறது மாதத்தில். ஆகவே, அமைச்சர் அவர்களுக்குத் தரப்பட்ட தகவல் தவறான தகவல் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். Staggering holidays என்று சொல்லி முதலிலே தொழிலதிபர்களெல்லாம் சேர்ந்து ஒத்துக்கொண்டார்கள். ஆனால், பிறகு powerloom உரிமையாளர்கள் என்னையும், மின் வாரியத் தலைவரையும் சந்தித்து எங்களுக்கு விதிவிலக்குத் தாருங்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு விதிவிலக்குத் தரப்பட்டது. அவர்களுக்கு holiday என்று தனியாக இல்லை. அவர்கள் எப்போது வேண்டுமானாலும் powerloom–ஐ இயக்கிக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. வேண்டுமானால் powerloom உரிமையாளர்களை உங்கள் மாவட்டத்திலே போய்க் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) கிரிக்கெட்டின் பிதாமகன் பிராட்மேனைப் பற்றிச் சொல்வார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சின்னசாமி, உட்கார்ந்துகொண்டு பேசாதீர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** 'Broadman was, without any question, the greatest phenomenon in the history of Cricket' என்று சொல்வார்கள்.



நாங்கள் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களைச் சொல்வோம், 'Kalaignar is, without any question, the greatest phenomenon in the history of India'. (Thumping of desks) not only Tamil Nadu, but also the history of அவர்கள் இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு நீண்ட தலைவர் கலைஞர் அவர்கள் இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு நீண்ட innings–க்குச் சொந்தக்காரர். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு எதிரணியில் விளையாடியவர்கள் காணாமல் போயிருக்கலாம் அல்லது எதிரணிகளே காணாமல் போயிருக்கலாம் அல்லது எதிரணிக்குத் தலைமையேற்றவர்கள் காணாமல் போயிருக்கலாம். ஆனால், ஒரு நீண்ட விளையாட்டிற்கு, பல வெற்றிகளுக்குச் சொந்தக்காரரான தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வெற்றிக்குச் சிறந்த opening partnership தேவை. எங்கள் தலைவருக்குச் சிறந்த partner ஆக, best partner ஆக நீண்ட வரலாற்றிற்குச் சொந்தக்காரர், ஒரு சிறந்த பட்ஜெட்டினை வழங்கியிருக்கின்ற மாண்புமிகு கழகப் பொதுச் செயலாளர் இனமான பேராசிரியர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நிதானமான ஆட்டக்காரர்கள் உண்டு, அதிரடி ஆட்டக்காரர்கள் உண்டு. ஆனால், அமைச்சுப் பணியிலும், ஆட்சிப் பணியிலும் நிதானத்தை வெளிப்படுத்தி திரு. சச்சின் டெண்டுல்கரைப்போல பல சாதனைகளைப் படைத்துக்கொண்டு, கழகப் பணியிலே குறிப்பாக இளைஞரணி மாநாட்டில் திரு. டோனியைப்போல அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி எதிரணிகளைத் திகைக்கச் செய்திருக்கின்ற எங்கள் இளம் ஆட்ட நாயகன் (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் துறையின் அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, கிரிக்கெட் விளையாடுகின்ற நேரத்தில் எல்லோரும் அம்பயரைத்தான் பார்த்திருப்பார்கள். எந்த நேரத்திலே கை தூக்குவார், four கொடுப்பாரா, six கொடுப்பாரா என்று. அதேபோல், எங்கள் நேரத்தை நிர்ணயிக்கின்ற, சமயத்திலே out–ம் கொடுக்கின்ற, எங்கள் நேர வழிகாட்டி, மாண்புமிகு கழகப் பொருளாளர் அவர்களையும் வணங்கி, இந்த மானியக் கோரிக்கை மீதான எனது உரையைத் துவங்குகிறேன்.

முற்பகல் 11–35

இதற்கு முன்னர் இங்கே பேசி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ அவர்களுடைய ஆட்சியில் I.T. துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதுபோலவும், I.T. ஏற்றுமதி மிகப் பெரிய அளவிலே இருந்ததுபோலவும், 2005–2006 ஆம் ஆண்டு புள்ளிவிவரங்களைச் சொன்னார்கள். ஆனால், 2005–2006–லே ரூ.14,115

கோடியாக இருந்த மென்பொருள் ஏற்றுமதி, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு 2006–2007 ஆம் ஆண்டில் 20,700 கோடி ரூபாய் ஆனதை அவர்கள் மறந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், வருகின்ற 2008 ஆம் ஆண்டில் அது ரூ.28,000/– கோடியைத் தொடவிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்னும் அவருக்கு நான் சொல்ல விரும்புவதெல்லாம், இந்தத் தகவல் தொழில்நுட்பத் துறையின் சிருஷ்டிகர்த்தரவே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) 1998 ஆம் ஆண்டு தொழில் துறையிலிருந்து இந்தத் துறையைப் பிரித்து இந்தத் துறைக்கென்று ஒரு தனித் துறையை அமைத்துக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல, இந்தத் துறைக்கென்று ஒரு தொழில்நுட்பக் கல்வி நிலையத்தை அமைத்துக் கொடுத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். இந்தியாவிலே இருக்கின்ற மற்ற மாநிலங்கள் முழுவதும் தங்கள் மாநிலத்திலே செயல்படுத்துவதற்கு விரும்பி, இன்றைக்கும் பார்த்து வியக்கின்ற வகையில் உலகத்தரம் வாய்ந்த ஒரு டைடல் பூங்காவை 2000 ஆம் ஆண்டில் அமைத்துக் கொடுத்தவரும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் தாண்டி, இன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னையிலே மட்டும் இருக்கின்ற இந்த வளர்ச்சியை அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சேர்ப்பதற்குத்தான் சமீபத்திலே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதிலே, கோவையில் விளாங்குறிச்சியிலும், திருச்சியிலே நவல்பட்டிலும், சேலத்திலே ஜாகிர் அம்மாபாளையத்திலும், மதுரையில், இலந்தைகுளத்திலும், கின்னிமங்கலத்திலும், வடபழஞ்சி கிராமங்களிலும், திருநெல்வேலி கங்கைகொண்டான் சிப்காட்டிலும், கிருஷ்ணகிரியில் ஓசூர் விஸ்வநாதபுரத்திலும், வேலூரிலும் புதிய I.T. Park அமைத்து, இப்படி தொடர்ந்து மற்ற மாவட்டங்களுக்கும் இந்த வளர்ச்சியை விரிவுபடுத்திக்கொண்டிருப்பவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்ய விரும்புகின்றேன்.

அதேபோல், உலகத்திலே இருக்கின்ற I.T. படித்த இளைஞர்கள் எல்லாம் எந்த நிறுவனத்திலே பணிபுரிய விரும்புவார்களோ அந்த நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்றன. உலகமே ஒரு துறைக்குப் பின்னால் சென்று கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது தகவல் தொழில்நுட்பத் துறை ஒன்றுதான். அந்தத் தகவல் தொழில்நுட்பவியல் துறையைப்



பொறுத்தவரையில் இந்தியாவிலே தமிழகத்தை நாடித்தான் வந்துகொண்டிருக்கிறார்கள். உலகத்திலேயே எந்த நிறுவனங்களைப் பெரிய நிறுவனங்கள் என்று வியக்கின்றோமோ அவை Wipro, HCL, ஆக இருந்தாலும் Satyam Computers ஆக இருந்தாலும், Cognizant ஆக இருந்தாலும், SCOPE International ஆக இருந்தாலும், அதேபோல் Sutherland Global Services ஆக இருந்தாலும் இவை அனைத்தும் இன்றைக்கு சோழிங்கநல்லூர் I.T. Park–லே அமையவிருக்கின்றன. இப்படி பல இலட்சக்கணக்கான படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிக்கொடுக்கின்ற நல்லதொரு தலைவராக எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், நாங்கள் சொல்வதைவிட அந்த I.T. Sector–லே இருக்கின்ற பெரிய நிறுவனங்களின் அதிகாரிகள், தலைமைப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள், தமிழகத்தைக் குறித்து சொல்கின்ற நேரத்தில் Cognizant–ன் President and Managing Director திரு. சந்திரசேகரன் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், "Tamil Nadu is a happening State for the I.T. Sector. Of late, because of the Government's initiatives, the sector has found enormous potential for growth in the State" என்று மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையும் தாண்டி சொல்லவேண்டும் என்றால் கர்நாடகாவைச் சேர்ந்த ஒரு தொழில் அதிபர் சொல்கிறார் "...Compares Tamil Nadu with his native State of Karnataka"— அதாவது அவர் சொன்னதை குறிப்பிட்டுப் பத்திரிகையிலே எழுதுகிறார்கள். "...Points out that Tamil Nadu is far more responsive in promoting tier two and three cities with most of the Companies' work force coming from these Cities. The Government move will prov de respite on the cost front."

இதைத்தான் நான் முன்பே குறிப்பிட்டேன், மாவட்ட அளவிலே, பல்வேறு நகரங்களிலே தலைவர் கலைஞர் அவர்கள் இந்த I.T. துறையை விரிவாக்கிச் செல்வதன் விளைவாக, I.T. துறையிலே எந்த நிறுவனங்கள் பெரிய நிறுவனங்கள் என்று சொல்கிறோமோ அந்த நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் எல்லாம் இன்றைக்கு தமிழகத்தைப் போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–40

அப்படி I.T. துறையிலே கிடைக்கின்ற வேலைவாய்ப்பினையும் மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்காக திருநெல்வேலியிலே Empower I.T. என்ற ஒரு முகாம் நடத்தப்பட்டு, 12 ஆயிரம் மாணவர்களையும்,

34 தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களையும் அங்கே ஒருங்கிணைத்து பல்வேறு மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு அருமையான வாய்ப்புக் கிடைத்தது.

அதேபோல, சென்னையிலே எங்களது உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்கள், படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்காக ஒரு மிகப் பெரிய Job Fair–ஐ நடத்தி கிட்டத்தட்ட 3,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தன்னுடைய அமைச்சுப் பணியைத் தாண்டி சமூகவியல் பணியாக அதனை இன்றைக்கு தளபதி அவர்கள் நிகழ்த்தி பணியமர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் தாண்டி இன்றைக்கு Tidel Park–ஐ ஒட்டி, இரண்டாவது Tidel Park அமைய இருக்கிறது. D.L.F. நிறுவனம் மிகப் பெரிய அளவிலே அந்த Tidel பூங்காவை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல Tata Infrastructure நிறுவனத்தோடு இணைந்து மூன்றாவது Tidel Park –ம் அமைய இருக்கிறது. இந்த நேரத்திலே சிலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று. வெள்ளை மனம் படைத்த தலைவர் எங்கள் தலைவர் கலைஞர். கிராமத்தில் இருக்கின்ற ஏழை இளைஞனும், உலகத்திலே இருக்கின்ற பெரிய தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனங்களிலே பணிபுரிய வேண்டும் என்றுதான் இன்றைக்கு அல்லும், பகலும் அயராது உழைத்து, காலையோ, மாலையோ, இரவோ, எந்த நேரமாக இருந்தாலும் தலைமைச் செயலகத்திற்கு வந்து பணிபுரிந்து, இந்தியாவில் இருக்கின்ற பெரிய நிறுவனங்கள் அனைத்தும் இங்கே தொழில்புரிய வாய்ப்பை அளித்து, தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு அச்சாரமிட்டுக் கொண்டிருக்கின்றார்.

இன்னும் சொல்லப்போனால், தலைவர் கலைஞர் அவர்கள் அப்படி வந்த TATA நிறுவனத்தாரிடம் பேசுகின்ற நேரத்தில், அவர்கள் பேசியதைப் பத்திரிகையிலே எழுதினார்கள். நீங்கள் I.T. Sector–களில் மாத்திரம் உங்களுடைய பணியைச் செய்தால் போதாது. "நீங்கள் Automobile தொழிலிலும் உங்களுடைய பணியை இங்கே துவங்கவேண்டும்" என்று கூறியிருக்கிறார்கள்.

அதேபோல, கப்பல் கட்டும் தளத்திற்கு MoU sign செய்ய வந்த L&T நிறுவனத்தாரிடம் தலைவர் கலைஞர் அவர்கள் பேசியதை 'இந்து' பத்திரிகைக் குறிப்பிடுகிறது, "The Chief Minister assumed the role of a seasoned Marketing Executive when A.M. Nayak, the Head of India's biggest Engineering and Construction Firm, Larsen & Toubro Ltd., called on him at



the Secretariat here on Tuesday morning to sign a Memorandum o
Understanding on their Shipyard Project". அந்த நேரத்தில் தலைவா
கலைஞர் கேட்கிறார், "Why don't you set up a unit in Nanguneri?" தலைவா
கலைஞர் அவர்கள் ஒரு சிறந்த marketing மேலாண்மையாளராக
அங்கே பரிணமித்தார் என்று அந்தப் பத்திரிகை குறிப்பிடுகிறது
அவர்கள் அங்கே வந்த நேரத்தில்கூட "நீங்கள் ஏன் நாங்குநேரி சிறப்புப்
பொருளாதார மண்டலத்திலே உங்களுடைய யூனிட்டைத்
தொடங்கக்கூடாது" என்று கேட்கிறார் என்றால், எந்த நிமிடத்திலும்
தலைவர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முன்னேற்றத்தில் அந்த
அளவிற்குக் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பதை இங்கே
நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும்
தாண்டி அந்தப் பத்திரிகை குறிப்பிடுகிறது, "The Chief Minister came
into the meeting after a particularly noisy and difficult session in the Assembly.
But the moment he met the L & T people, he saw the opportunity and made a
request." அதுதான் தலைவர் கலைஞர் அவர்கள். எந்த இடர்ப்பாடுகள்
இருந்தாலும், எந்த இடர்ப்பாட்டைச் சந்தித்தாலும் தமிழகத்தின்
வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பதற்கு, இந்த
நேரத்திலே இந்தச் சான்றை, இந்த மன்றத்திலே பதிவு செய்ய
விரும்புகிறேன்.

I.T. துறை மாத்திரம் அல்ல, தொழில் துறையிலும் தலைவர் கலைஞர்
அவர்கள்தான் பல முதலீடுகளைத் தொடங்கி தமிழகத்தில்
முதலீடுகளைப் பெருக்கியவர். முதன்முதலாக சிப்காட்டை உருவாக்கிக்
கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்தான். 1971–லே
இராணிப்பேட்டையிலும், ஓசூரிலும் சிப்காட் வளாகங்களை
ஏற்படுத்திக் கொடுத்தவர் தலைவர் கலைஞர்தான். அதேபோல்
1989–லே இராணிப்பேட்டை சிப்காட் வளாகத்தையும், ஓசூர் சிப்காட்
வளாகத்தையும் விரிவுபடுத்தி அமைத்தவரும் தலைவர் கலைஞர்
அவர்கள்தான். 1996–லே 4–வது முறையாக தலைவர் கலைஞர்
அவர்கள் முதலமைச்சராக வருகிறார். ஸ்ரீபெரும்புதூரிலும்,
இருங்காட்டுக்கோட்டையிலும் சிப்காட் வளாகங்கள் அமைகின்றன.
கும்மிடிப்பூண்டியில் ஏற்றுமதி வளாகம் அமைகிறது. அன்றைக்கு
1996–லே தலைவர் கலைஞர் அவர்கள் அமைத்துக் கொடுத்த
வளாகங்கள்தான் இன்றைக்குப் பெருமளவிலே வளர்ந்து சென்னை–
பெங்களூரு சாலையே இன்றைக்கு தொழிற்சாலை நிறைந்த ஒரு
சாலையாக மாறி இருக்கிறது. அதையும் தலைவர் கலைஞர் அவர்கள்
மத்திய அரசுக்கு, பிரதமர் அவர்களுக்கு அந்த சென்னை–பெங்களூரு
சாலை இன்னும் பெரிய அளவிலே வளர்ச்சிப் பெறுவதற்கு Industrial

Corridor ஆகக் கொண்டு வரவேண்டும் என்று எழுதி இருக்கிறார்கள். அவர்கள் அதற்கு ஒப்புதல் வழங்கியிருக்கிறார்கள் என்றால் தலைவர் கலைஞர் அவர்கள் 1971–லே துவங்கிய பணி, 1996–லே தொடர்ந்து நிகழ்த்திய பணி இன்றைக்கு 2008–லே பலன் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

1996–லே தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்துக் கொடுத்த தொழில் கொள்கையின் காரணமாக Hyundai நிறுவனம் 2,450 கோடி ரூபாய் முதலீட்டில் 1 இலட்சத்து 20 ஆயிரம் கார்களை ஒவ்வோர் ஆண்டும் தயாரித்து, நேரடியாக 2,500 பேருக்கு வேலைவாய்ப்பினையும், மறைமுகமாக 25,000 பேருக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கியது.

முற்பகல் 11–45

அதேபோல Mitsubishi Lancer நிறுவனம், Ford Motor தொழிற்சாலை, இவையெல்லாம் வந்து குவிந்த நேரத்தில் சென்னையை இந்தியாவின் Detroit என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது Hyundai நிறுவனத்தின் விரிவாக்கம், Ford நிறுவனத்தின் விரிவாக்கம் அதேபோல Nissan–Renault கம்பெனியின் புதிய தொழிற்சாலை, Nissan நிறுவனத்தின் புதிய தொழிற்சாலை, Ashok Leyland கம்பெனியின் விரிவாக்கம் என்று சென்னை இந்தியாவின் Detroit–ஆக அல்ல, உலகத்தில் automobile தொழில் வளர்ச்சியடைந்த மிகப் பெரிய 10 நகரங்களில் ஒன்றாக இடம் பெறக்கூடிய அளவிற்கு வளர்ந்துகொண்டிருக்கிறது என்றால் தலைவர் கலைஞர் அவர்களுடைய உழைப்புதான் காரணம் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் பதிவு செய்துகொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்கிறேன்.

ஏதோ உள்கட்டமைப்பு வசதியும் வெளிக் கட்டமைப்பு வசதியும் கடந்த ஆட்சியிலே, அவர்களுடைய ஆட்சியிலே செய்யப்பட்டதாக பேசிய சட்டமன்ற உறுப்பினர் கூறினார். கிராமத்தில் கட்டமைப்பு வசதிகள் இன்றைக்கு எந்த அளவு செய்யப்படுகின்றன என்பதற்கு ஓர் உதாரணத்தை நான் சொல்ல விரும்புகின்றேன். இந்தியாவில் இருக்கின்ற பெரிய அறிஞர்களும், தொழில் அதிபர்களும், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களும் குறிப்பிட்டுச் சொல்வது கிராமப்புற வளர்ச்சியிலே அக்கறை காட்ட வேண்டும் என்பதுதான். அந்த வளர்ச்சியில்தான் தலைவர் கலைஞர் அவர்கள் அக்கறை காட்டுகிறார். இப்பொழுது உள்ளாட்சித் துறைக்குப்



பொறுப்பேற்றிருக்கின்ற நம்முடைய தளபதி அவர்கள் கிராமப்புறங்களும் நகர்ப்புறங்கள் பெற்றுள்ள வளர்ச்சியை பெற வேண்டுமென்று அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைக் கொண்டு வந்து, கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறார். அதேபோல பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்துக்கொண்டிருக்கிறார். PURA என்ற திட்டம், Providing Urban facilities in Rural Areas என்று சொல்வார்கள், அந்தத் திட்டத்தை இப்பொழுது தமிழகத்திலே கொண்டு வந்துள்ளார்கள். தமிழகத்திலே உள்ள அனைத்துக் கிராமங்களும், அனைத்துப் பேரூராட்சிகளும், நகராட்சிகளும் மிகப் பெரிய அளவிற்கு வளர்ச்சி பெற்று, இன்றைக்கு சென்னையிலே தொழில் தொடங்க வேண்டுமென்று விரும்புபவர்கள், நாளை இந்தக் கிராமங்களுக்குச் செல்லக்கூடிய அளவிற்கு, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்துக்கொண்டிருப்பவர் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தொழில் வளர்ச்சிக் கொள்கை குறித்து, ஏற்கெனவே இருக்கின்ற தொழில்களுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று முன்னாலே பேசிய உறுப்பினர் கேட்டார். கடந்த ஆட்சியில் தொழில் வளர்ச்சிக் கொள்கை கொண்டு வந்த நேரத்தில், புதிய கொள்கையைக் கொண்டு வந்ததன்மூலம் (மணியடிக்கப்பெற்றது) அவர்கள் செய்ததைவிட அதிகமாக 2007 ஆம் ஆண்டிலே புதிதாக வழங்கப்பட்டிருக்கின்ற தொழில் கொள்கையின்மூலமாக 2010–க்குள் 20 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நிச்சயமான நிலை ஏற்படுமென்று இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசங்கர், சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** அதேபோல G.S.D.P.–யானது 2010–லே 21 சதவிகிதத்திலேயிருந்து 27 சதவிகிதத்திற்கு உயரக்கூடிய நிலையிருக்கிறது. இதையெல்லாம் தாண்டி எங்களுடைய பகுதிக்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே கிடைத்த நல்ல காரியங்களுக்கு நான் நன்றிகூற விரும்புகின்றேன். எங்களுடைய ஆண்டிமடம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி; கல்வியிலே பின் நிலையில் இருக்கிற தொகுதி. அரசுப் பள்ளிகளைத் தாண்டி மேற்படிப்புக்கென்று கல்வி நிறுவனம் எதுவும் இல்லாத நிலையில் தலைவர் கலைஞர் அவர்கள் எங்களுக்கு

ஓர் அரசு I.T.I. வழங்கியிருப்பதற்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, எங்களுடைய ஜெயங்கொண்டம், ஆண்டிமடம், கும்பகோணம் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மதனத்தூர் பாலத்தினை தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து நிதி வழங்கியிருக்கிறார்கள். அதற்கு இந்த நேரத்திலே எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட நாளாக இந்தக் கோரிக்கையை எழுப்பியவர் மறைந்த சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் க.சொ. கணேசன் அவர்கள். அவருடைய பெயரை இந்தப் பாலத்திற்கு வழங்க வேண்டுமென்று தலைவர் அவர்களிடம் இந்த நேரத்திலே கோரிக்கை வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** தலைவர் கலைஞர் அவர்கள் பின்தங்கிய பெரம்பலூர் மாவட்டத்திற்கு, ரூ.900 கோடியிலே M.R.F. Tyre தொழிற்சாலையை வழங்கியிருக்கிறார்கள்.

அடுத்து, சிறப்புப் பொருளாதார மண்டலம். இந்தியாவிலேயே எந்தப் பிரச்சினையும் இல்லாமல் கிட்டத்தட்ட 2,500 ஏக்கர் நிலம் இதற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ள பெரம்பலூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் ரூபாய் 5,000 கோடி மதிப்புள்ள தொழில்கள் வரவிருக்கின்றன. கிட்டத்தட்ட 50,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலையிருக்கிறது. அதை வழங்கிய தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய பிரச்சினை; ஆண்டிமடம் தொகுதி, ஜெயங்கொண்டம் தொகுதியின் பிரச்சினை. 18, 20 ஆண்டுக் காலமாக கிடப்பிலே கிடக்கிற திட்டம், ஜெயங்கொண்டம் நிலக்கரித் திட்டம். 1989-1990 ஆம் ஆண்டிலே தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில்தான் முதன்முதலாக அந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கான பணியை ஆரம்பித்தார்கள். இடையிலே வந்த ஆட்சியிலே இந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. இப்பொழுது மத்தியிலும் நம்முடைய ஆட்சி, மாநிலத்திலும் நம்முடைய ஆட்சி. இப்பொழுது மத்திய அமைச்சரவை அதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. தலைவர் கலைஞர் அவர்களும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்திற்கு அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு வாய்ப்பினை அளித்திருக்கிறார்கள். ஆனால், சிலர் அந்தத் திட்டத்தை முடக்குவதற்கு



ஏதோ அந்த மண் அவர்களுக்கு மாத்திரம் சொந்தம் என்று சொல்லிக்கொண்டு அந்தத் திட்டத்தை முடக்குவதற்குச் செயல்படுகிறார்கள்.

நான் சொல்கிறேன். அந்தத் திட்டத்திலே எடுக்கப்படுகின்ற நிலத்திலே என்னுடைய நிலமும் (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய மூதாதையர்கள் புழங்கிய நிலமும் எடுக்கப்படுகிறது.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு)

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** என்னுடைய நிலமும்தான் அந்தத் திட்டத்திற்கு எடுக்கப்படுகிறது. எனவே, அந்த நிலம் எடுக்கப்படுகின்ற மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்களே, அங்கே எந்தத் தடையும் கிடையாது. நீங்களே அந்த மக்களுக்கு நீதி வழங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு தனி நீதிமன்றங்களை வழங்கியிருக்கிறீர்கள். மக்கள் நீதிமன்றத்தை நாடிச் சென்றிருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டத்தைத் தொடங்கி எங்கள் வாழ்வில் ஒளியேற்றுங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீது நடக்கின்ற விவாதத்தில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கலந்துகொண்டு என் கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய வாய்ப்புத் தந்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய நாட்டை வாழ்த்துங்கள் என்று ஔவைக் கிழவியைக் கேட்டபோது, ஔவைக் கிழவி, "வரப்புயர" என்ற வாழ்த்தியதாகச் சொல்வார்கள்.

*வரப்புயர நீர் உயரும்,*
*நீர் உயர நெல் உயரும்,*
*நெல் உயர குடி உயரும்,*
*குடி உயரக் கோனுயரும்"*

என்று அவள் வாழ்த்தியதாக நம்முடைய இலக்கியங்கள் சொல்கின்றன. ஆனால், இன்று அவள் உயிரோடு இருந்திருந்தால் நம் தமிழ்நாட்டை வாழ்த்துங்கள் என்று அந்த மாபெரும் கிழவியிடம் கேட்டால், அவர் "தொழில் உயர" என்று வாழ்த்தியிருப்பாள். ஏனென்று சொன்னால். ஒரு மாநிலத்தின் வளர்ச்சியும் ஒரு மாநிலத்தின் முன்னேற்றமும், ஒரு மாநிலத்தின் எதிர்காலமும், அந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. எங்கே தொழில் வளர்ச்சி நிறைவாக இருக்கிறதோ, எங்கே முதலீடுகள் அதிகமாக இருக்கின்றனவோ, எங்கே வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுகின்றனவோ அங்கே அமைதியான சமூக வாழ்க்கை இருக்கும் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆகவே, ஒரு அரசாங்கத்தினுடைய செயல்பாட்டை, ஒரு அரசின் நிர்வாகத் தரத்தை யாராவது எடைபோட்டுப் பார்க்க விரும்பினால், அவர்களுக்கு இருக்கின்ற முதல் குறியீடு, அந்த மாநிலத்தில் வருகின்ற முதலீடுகளுடைய ஒட்டுமொத்தமான கணக்கைப் பார்த்தாலே அந்த மாநிலத்தினுடைய ஆட்சியினுடைய தரத்தை நம்மால் நிர்ணயிக்கமுடியும். ஒரு நல்ல அரசு வறுமையைப் பங்கிட்டுக் கொடுப்பதிலே வெற்றிகரமாகச் செயல்படுவேன் என்று சொல்லமுடியாது. வறுமையையும் ஏழ்மையையும் எல்லோருக்கும் பரவலாக நாங்கள் பங்கிட்டுக் கொடுத்தோம்; ஆகவே, இது ஏழைகளுக்கு நெருக்கமான அரசு என்று ஒரு காலத்திலே சொல்லப்பட்டது. ஆனால், அந்தப் பொருளாதாரத்தை மாற்றிச் சிந்தித்ததன் காரணமாகத்தான் எங்கள் இனிய தலைவர் இராஜிவ் காந்தி அவர்கள் 'நான் வறுமையைப் பங்கிட்டுக் கொடுக்க வரவில்லை. நான் வளத்தையும் செல்வத்தையும் பங்கிட்டுக் கொடுக்க வந்திருக்கிறேன்' என்று சொல்லி இந்த நாட்டிலே வளத்தை உருவாக்க விரும்பினார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டிலே செல்வத்தை உருவாக்க விரும்பினார்.

நம்முடைய அருமை நண்பர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இந்த மாமன்ற உறுப்பினர் இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோது, தகவல் தொழில்நுட்பத் துறையிலே இன்று தமிழகம் பெற்றிருக்கிற மிகப் பெரிய, பிரம்மாண்டமான வளர்ச்சியை இந்த அவையிலே பதிவு செய்தார். இன்று The I.T. Capital of India is Chennai – தகவல் தொழில்நுட்பத்திலே இந்தியாவினுடைய தலைநகரம், சென்னை. அரசியல் தலைநகரம் டெல்லி, பொருளாதாரத் தலைநகரம் மும்பை. ஆனால், தகவல் தொழில்நுட்பத்தினுடைய தலைநகரம் இந்தியாவுக்கு சென்னைதான் (மேசையைத் தட்டும் ஒலி)



என்று அத்தகைய ஒரு அங்கீகாரத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று சொன்னால் இதற்கு மூல விதையைப் போட்டவர் மறைந்துபோன எங்கள் மாபெரும் தலைவர் இராஜிவ் காந்தி என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவரைப்போல இன்று நம்முடைய முதல்வருக்கு என்ன ஏற்பட்டிருக்கிறதோ—நம்முடைய முதல்வர் அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்னால், நான்கு நாட்களுக்கு முன்னால், அறிக்கை அளித்தார். மானியக் கோரிக்கை இன்று நடந்தாலும்கூட, தொழில் துறை மானியக் கோரிக்கை பத்திரிகைகளிலே ஐந்து நாட்களாக நடந்துகொண்டிருக்கிறது. பல வாதப் பிரதிவாதங்கள் நடக்கின்றன. பல கருத்துகள் சொல்லப்பட்டன. நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூட தான் சொல்லவேண்டிய பதிலுரையை ஏழு பக்க அறிக்கையாக நேற்றைய முன்தினமே சொல்லி முடித்துவிட்டார். இதை எதற்குச் சொல்கிறேன் என்று சொன்னால், இன்று நம்முடைய முதல்வருக்கு ஏற்பட்டிருக்கிற இந்தக் கேள்விக் கணைகளும் நம்முடைய முதல்வரை நோக்கிச் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளும் அமரர் இராஜிவ் காந்தியை நோக்கி அந்தக் காலத்திலே சொல்லப்பட்டன. The Computer Kid – ஒரு கம்ப்யூட்டரைக் கையிலே வைத்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு சிறு பையன் என்று இந்த நாட்டிலே இருக்கின்ற பிரதான எதிர்க்கட்சிகள் சொல்லின. ஆனால், இந்த கம்ப்யூட்டர் தொழில்நுட்பம்தான், இந்தத் தகவல் தொழில்நுட்பம்தான் இன்னும் 15, 20 ஆண்டுகளில் இந்தியாவை உலகின் மிகப் பெரிய வல்லரசாக ஆக்கப் போகிறது என்று அந்த இளைஞன் கனவு கண்ட காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த குற்றச்சாட்டுகளைப்பற்றிக் கவலைப்படவில்லை.

முற்பகல் 11–55

நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர்கூட இன்று சொன்னார். 'அமெரிக்க ஜனாதிபதி திரு. புஷ் சொல்கிறாரே, உலகத்திலே விலைவாசி உயர்வுக்கு இந்தியாதான் காரணம் என்று சொல்கிறாரே' என்று சொன்னார். நான்கூட வேடிக்கையாகச் சொன்னேன், 'நீங்கள் வேண்டுமானால், அமெரிக்கப் பாராளுமன்றத்திற்குச் சென்று அதைச் சொல்லுங்கள்' என்று சொன்னேன். ஆனால், உண்மை என்னவென்று சொன்னால், இப்போது America is able to recognise and feel the developments made in India. ஒரு காலத்திலே, 'அமெரிக்க டாலருக்குச் சளி பிடித்தால், இந்திய ரூபாய்க்குக் காய்ச்சல் வரும்' என்று சொல்வார்கள். ஆனால், இப்போது சரித்திரம் மாறியிருக்கிறது. இந்திய ரூபாய்க்குச் சளி

பிடித்தால், அமெரிக்க டாலருக்குக் காய்ச்சல் வரக்கூடிய காலத்தை நாம் உருவாக்கித் தந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது எதற்காக அமெரிக்காவிலே பஞ்சம் வந்திருக்கிறது? இப்போது எதற்காக அமெரிக்காவிலே ரேஷன் வந்திருக்கிறது? இப்போது எதற்காக அமெரிக்க டாலர் வீழ்ச்சியடைகிறது? என்ன காரணம்? இந்தியாவிலே வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறது. இந்தியாவிலே இருக்கின்ற நடுத்தட்டு வர்க்கத்தின்—the great middle class of India— வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறது; உலகமே ஆச்சரியப்படுகிறது. The Sleeping Giants என்று ஒரு காலத்திலே அழைக்கப்பட்ட இந்தியாவும், சீனாவும் இப்போது விழித்துக் கொண்டிருப்பதால், இப்போது ஏகாதிபத்திய—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த என்னுடைய அருமை நண்பர்கள் இங்கே என்னைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். நான் அவர்களுக்குக்கூட பதில் சொல்வதற்காகக் குறிப்புகளை வைத்திருக்கிறேன்—இதை நான் சொல்லவில்லை. மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியால் கல்கத்தாவிற்கு அழைத்து வரப்பெற்ற நம்முடைய Lord Swaraj Paul—இந்திய வம்சாவழியைச் சார்ந்த உலகின் மிகப் பெரிய கோடீஸ்வரர் என்று வரைமுகப்படுத்தப்பட்டவர்; அவரை இந்தியாவிற்கு அழைத்து வந்தார்கள்; அழைத்து வந்தது யார்? அவரைத் தூதுக் குழுவிலே அழைத்து வந்தது மேற்கு வங்க மாநில அரசு.

மேற்கு வங்க மாநிலத்திலே, சிங்கூரிலே, எங்கே போராட்டம் நடந்ததோ, எங்கே S.E.Z. என்று சொல்லக்கூடிய அந்த Special Economic Zone–லே மிகப் பெரிய இரத்தக் களறி நடந்ததோ, அங்கே அந்த வளர்ச்சியைப் பெறவேண்டிய அவசியத்தை இந்த நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக Swaraj Paul வரவழைக்கப்பட்டார். அந்த Swaraj Paul–தான் சொல்கிறார்; யாரைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு சொல்கிறார்? மேற்கு வங்க அரசு அவருக்கு நல்தூதுவராக உதவிக்கு அனுப்பிய மேற்கு வங்க மாநில முதலமைச்சரைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு சொல்கிறார். "The shift from an agricultural economy to an industrial one could cause some little pain. But, there is no way. Agriculture cannot provide jobs to all and only industry can provide jobs to the new generation. They need jobs."

இதைச் சொன்னவர் நம்முடைய இந்திய வம்சாவழியைச் சார்ந்தவர்;' England–லே போய், அங்கே குடியேறி, உலகத்தினுடைய மிகப் பெரிய கோடீஸ்வரர்களில் ஒருவர் என்று அழைக்கப்பட்டவர்; முதலீடுகளைச் செய்வதற்காக மேற்கு வங்க அரசால் அழைத்து



வரப்பட்டவர்; அந்த Caparo என்று சொல்லக்கூடிய, அவர் தலைமை வகிக்கிற மிகப் பெரிய தொழில் நிறுவனம், இப்போது கல்கத்தாவிலே டாடா நிறுவனத்திற்குப் பக்கத்திலே முதலீடு செய்திருக்கிறது. ஆகவே, 'டாடாவும், பிர்லாவும் எனக்கு வேண்டியவர்கள்' என்று சொல்ல அரசியல்வாதிகள் அச்சப்பட்ட காலம் உண்டு. 'டாடாவும், பிர்லாவும் எனக்கு வேண்டியவர்கள்' என்று சொன்னால், முன்பு ஏழைகள் வாக்களிக்கமாட்டார்கள். ஆனால், இப்போது அப்படியல்ல; 'டாடாவும், பிர்லாவும் நான் கூப்பிட்டால் வருவார்கள்' என்று சொன்னால்தான், மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், வேலைவாய்ப்பு வேண்டும்.

நான் கடந்த 4, 5 நாட்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். கடந்த ஒரு மாத காலமாக நம்முடைய பிரபல பத்திரிகைகளில் அரசின் செயற்குறிப்புகளைப் பார்த்தால், நாளொன்றுக்கு ஒரு புதிய ஒப்பந்தம்; நாளொன்றுக்கு ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம்; நாளொன்றுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகப் பெரிய தொழிற்குழுமங்களைச் சந்திக்கிறார்கள்; முதலீடுகளை நீங்கள் பார்க்கவேண்டும். உலகப் பொருளாதாரம் எப்படி மாறியிருக்கிறது? உலகப் பொருளாதாரத்தின் வேகத்தை உணர்ந்து கொள்ளக்கூடிய தலைவர்கள் எங்கே இருக்கிறார்கள்? நாட்டில் என்ன மாற்றம் நடக்கிறது? உலகத்தில் உற்பத்திற்குத் தொழில் முதலீடு எங்கேயிருந்து வரவேண்டும்? அந்தப் பொருளாதாரத்தின் சூட்சுமத்தை யார் அறிந்து கொள்கிறார்களோ, அவர்கள்தான் உலகத்தினுடைய வரைபடத்திலே, தமிழகத்தை உயர்த்தி, அந்தத் தொழில்களிலே முதலிடத்தில் உட்கார வைக்கமுடியும்.

உலகமயமாக்கல் என்றால் என்ன என்பதைப்பற்றி ஒரு எழுத்தாளன் அருமையாகச் சொன்னான். உலகமயமாக்கல் என்றால் என்ன என்பதற்கு அவன் சொல்கின்ற விளக்கம்; ''டென்மார்க் இனக் கால்நடைகளை, ஆஸ்திரேலியப் புல்வெளிகளில், பங்களாதேஷ் சிறார்களை விட்டு மேய்க்கச் சொல்லி, அவற்றிற்கு மெக்சிகோ கோதுமை, உமி, எகிப்திய பருத்தி விதை மற்றும் இந்திய எண்ணெய் விதைகளை ஜப்பானியத் தொழில்நுட்பத்தில் தீவனமாக்கி ஊட்டி, சிகாகோ கசாப்பு ஆலைகளில் ஜெர்மானிய இயந்திரங்களைக் கொண்டு பதப்படுத்தி, பொதி கட்டி, பிரிட்டானியக் கப்பல்களில் ஏற்றி, பசிபிக் தீவு ஒன்றில் பதிவு செய்யப்பட்ட ஓர் அரபு ஷேக்– அமெரிக்கத் தூதர் கூட்டு நிறுவனம், சீனத்துப் பெருஞ்சந்தையில் விற்பனை செய்து முடிக்கிறபோது, உலகமயமாக்கல் முடிவடைகிறது' என்று சொல்கிறார்.

முதலீடு ஒரு நாட்டிலிருந்து வரவேண்டும்; தொழில்நுட்பம் ஒரு நாட்டிலிருந்து வரவேண்டும்; தொழிலாளர்கள் மற்றோர் நாட்டிலிருந்து வரவேண்டும்; அதை விற்பதற்குச் சந்தை வேறோர் நாட்டிலே வேண்டும். இவையெல்லாம் ஒன்று சேர்ந்து நடக்கின்றபோதுதான், உலகமயமாக்கல் என்கிற (குறுக்கீடு) நீங்கள் பேசப் போகிறீர்களே அம்மா? தலைவர் அவர்களே, இந்தக் குறுக்கீட்டை என் நேரத்தில் கழித்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

*நண்பகல் 12–00*

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமயமாக்கலினுடைய விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு விலைவாசி இந்தியாவில் உயருகிறது என்று சொல்கிறபோதெல்லாம் உலகத்தினுடைய பல நாடுகளைச் சுட்டிக்காட்டி, அங்கேயும் உயருகிறது என்ற விளக்கத்தையும் அவர்களே சொல்கிறார்கள்; காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த உலகமயம்தான் உலக நாடுகள் முழுவதும் விலைவாசியை உயர்த்தியிருக்கிறது என்பது அதனுடைய இன்னொரு பக்கம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், சகோதரி பாலபாரதி அவர்கள் சொன்ன கருத்திலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதற்கு நீங்கள் என்ன மாற்று வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். நீங்களும் டாடாவை அழைத்துச் செல்கிறீர்கள். நீங்களும் மெக்கின்சியிடம் உங்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்கிறீர்கள். உலகமகா கோடீஸ்வரர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கெல்லாம் திரு. புத்ததேவ் பட்டாச்சார்யா போய் முதலீடுகளைக் கேட்கிறார். அவரே சொல்கிறார், "நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற பொருளாதாரத் தத்துவம் இப்போது தோற்றுவிட்டது. இன்று முதலீடுகளை மையமாக வைத்துக்கொண்டிருக்கின்ற அந்தப் பொருளாதார தத்துவம்தான்



இப்போது வெற்றி அடைகிறது. அவர்களால்தான் வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும்" என்று அவரே சொல்லியிருக்கிறார். வேண்டுமென்றால் நான் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசினுடைய அரசியல் கட்டமைப்புக்குள்ளே நின்றுதான் மேற்கு வங்கமானாலும், கேரளாவானாலும், தமிழகமானாலும் ஆட்சி நடத்தவேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அந்தந்த மாநிலத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு அந்த மாநில அரசு என்ற முறையிலே வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கு சில முயற்சிகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இது ஒன்றும் புதிதல்ல. இப்போது ஏதோ டாடா, பிர்லாவை தொழில் செய்ய அழைக்கிறார்கள் என்று சொன்னார்கள். இது ஒன்றும் புதிதல்ல. நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். முதல் கம்யூனிஸ்ட் அரசு 1957–லே கேரளாவிலே ஏற்பட்டபோது, அன்றைக்கும் பிர்லாவை கேரளாவிற்கு அழைத்து, இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அவர்கள் முதல்வராக இருந்தபோது அங்கே தொழில் தொடங்க அழைத்திருக்கிறார். இது ஒன்றும் புதிதல்ல. ஆகவே, மாற்றுத் திட்டம் என்ன என்பதை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு இடதுசாரிக் கட்சிகளின் சார்பில் பல பக்கங்கள் கொண்ட விரிவான அறிக்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்குத் தேவைப்படுமானால், பேரவைத் தலைவர் அனுமதித்தால், இந்த அவையிலே அதுபற்றி விவாதிக்கவும் நான் தயாராக இருக்கிறேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்று, முடித்துவிடுகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்திய மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதாக இங்கே ஒரு செய்தியைக் குறிப்பிட்டார்கள். ஆனால், மத்தியிலே ஆளுகிற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் அமைக்கப்பட்ட மிகச் சிறந்த பொருளாதார மேதை திரு. அர்ஜுன் சென் குப்தா அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட அந்தக் குழு நம்முடைய நாடாளுமன்றத்திலே கொடுத்திருக்கிற அறிக்கை இந்தியாவில் 77 சதவிகித கிராமப்புற மக்கள் வெறும் 20 ரூபாய் தினம் வருமானம் பெறுகிற நிலையிலேதான் வாழ்கிறார்கள் என்கிறது. உங்களுடைய அரசால் அமைக்கப்பட்ட பொருளாதார

வல்லுநர் குழுவின் அந்த அறிக்கை நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்கள் உலகப் பொருளாதாரத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கு என்ன? உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நம்முடைய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர், அன்புச் சகோதரர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் சொன்ன கருத்திலே எனக்கு உடன்பாடு உண்டு. (குறுக்கீடு) அதாவது, டாடாவையும், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், கொஞ்சம் இருங்கள். திரு. கலைராஜன், சொல்லுங்கள்.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உணர்வுகளை நீங்கள் காயப்படுத்திவிட்டீர்கள். ஏனென்றால், உலகப் பொருளாதாரத்தைப் பற்றி தெரியாதவர்கள் திராவிட இயக்கத்துக்காரர்கள் அல்ல. திராவிட இயக்கத்துக்காரர்களுக்கு உலகப் பொருளாதாரத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். நீங்களும் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர். அது ஒன்று. இப்போது நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் சொன்னார், . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** திராவிட இயக்கம் என்று சொல்லி அவர் உள்ளே நுழைந்துவிடக்கூடாது. அ.தி.மு.க. திராவிட இயக்கம் அல்ல. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. வி.பி. கலைராஜன்:** என்னை நீங்கள் கேட்க விடவில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நேரம் இல்லை. திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வாதத்திற்குள்ளே போக விரும்பவில்லை. ஒன்றைமட்டும் சொல்லி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், ஒரு நிமிடம். அவர் பேசட்டும்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் சொல்கிறேன். மார்க்சிஸ்ட் உறுப்பினர் இங்கே பேசுகிறபோது சொன்னார்: பிர்லாவை அழைத்தவர்கள் கேரளாவை ஆண்ட நம்பூதிரிபாடு அரசாங்கம் என்று. இப்போது, பத்திரிகையிலே பார்த்துக்கொண்டிருக்கிறோம், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், முல்லைப் பெரியாறு பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று முயற்சி செய்தபோது, கரம் கொடுக்கக்கூட மறுத்தவர் கேரள முதல்வர் திரு. அச்சுதானந்தன். அவர் சொல்லியிருக்கிறார், டாடாவும், பிர்லாவும் இங்கே இருக்கக்கூடாது என்று சொல்லி விரட்டியடிக்கிறார். ஆனால், மேற்கு வங்கத்திலே அந்த மாநிலத்தினுடைய இதே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முதல்வர், டாட்டாவுக்கும் பிர்லாவுக்கும் பட்டுக் கம்பளம் விரிக்கிறார். ஆக, இவர்களுடைய கொள்கையிலேயே ஏன் இத்தனை மாறுபாடு? ஒரே கட்சி, ஒரே நாட்டிலே இத்தனை மாறுபாட்டை ஏன் செய்கிறார்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் இப்படி எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? நேரம் இல்லை. (குறுக்கீடுகள்) அவர் பேசிக்கொண்டிருக்கிறார். கடைசியில் நீங்கள் இந்த subject சம்பந்தமாகப் பேசும்போது சொல்லுங்கள்.

பிற்பகல் 12–05

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி, உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள் சொன்னதைப்போல எங்கள் கொள்கையில் எந்தத் தடுமாற்றமும் இல்லை. எங்கள் கொள்கைகளைப் புரிந்துகொள்வதிலேதான் உங்களுக்குத் தடுமாற்றம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். பேசுங்கள், மைக் வரும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது திராவிட இயக்கம் என்று நீங்கள் அண்ணா தி.மு.க.வைச் சேர்த்துவிடாதீர்கள் என்று இங்கே அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் புரிந்துகொள்ளாத காரணத்தினால்தான் குறிப்பிடுகிறேன். என்றைக்கும் திராவிட இயக்கத்தின் ஒரு பரிணாம வளர்ச்சியாகத்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்ந்து வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் சொன்னது இந்த மானியக் கோரிக்கைக்கு மிகத் தேவைய ன கருத்து. அதாவது டாடாவையும், பிர்லாவையும் அவர்கள் சந்திக்கின்றபோது வேலைவாய்ப்புக்காகச் சந்திக்கிறார்கள்; ஆனால் காங்கிரஸ்காரர்கள் சந்திக்கின்றபோது முதலாளிகளுக்கு நெருக்கமாக இருக்கிறார்கள்; இதுதான். ஆனால், எங்களுக்கு அதனால் பயம் இல்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று டாடா குழுமத்திடம் கையேந்தியிருக்கிறார். அவர்கூட அருமையாகச் சொன்னார், டாடா குழுமம் இன்று இந்தியாவிலே மட்டும் அல்ல, உலகிலே இருக்கின்ற மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் வளர்ந்து வருகின்ற ஒரு இந்திய நிறுவனமாக இருக்கின்றது. தனி மனிதனோ ஒரு தனிப்பட்ட கூட்டு நிறுவனமோ இனிமேல் இந்த உலகத்தினுடைய பொருளாதார சூழ்ச்சியிலே நிற்க முடியாது என்பதற்காகத்தான் பிரம்மாண்டமான தொழிற்குழுமங்கள் சிருஷ்டிக்கப்படுகின்றன. ஒரு காலத்திலே அத்தகைய



தொழிற்குடும்பங்கள் ஐரோப்பா கண்டத்திலே இருந்தன, அமெரிக்காவிலே இருந்தன என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இன்று இந்தியாவினுடைய தொழில்நுட்பனர்கள் இன்று உலகமெல்லாம் சென்று அமெரிக்கக் கம்பெனிகளை வாங்கிக் குவிக்கின்ற அந்தக் காட்சியை நாம் பார்க்கிறோம். எங்களுக்கு அதில் ஒரு வருத்தம் உண்டு, அதில் ஒருவர்கூட தமிழர் இல்லை. இன்று இந்தியாவிலே வகைப்படுத்தப்பட்டிருக்கின்ற மிகப் பெரிய கோடீஸ்வரர்களிடம் ஏன் முதலமைச்சர் கையேந்துகிறார்? முதலமைச்சர் முதலீட்டுக்குக் கையேந்தவேண்டிய அவசியம் என்ன? டாடா குழுமத்திடம் கேட்கிறார், 'இந்த முயற்சியை நீங்கள் நடத்துங்கள்' என்று. டாடா குழுமம் தமிழகத்திற்கு வந்து தொழில் துவங்க வேண்டுமென்று முதலமைச்சர் கையேந்துகிறார். நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்தத் தமிழகத்திலே முதலீடு வரவேண்டுமென்பதற்காக, முதலீடுகள் மூலமாக வேலைவாய்ப்புகள் பெருக வேண்டுமென்பதற்காக, வேலைவாய்ப்புகள் வளர்வதன்மூலமாக மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமென்பதற்காக ஒரு முதலமைச்சர் கையேந்துகிறார் என்பது, அந்த பிச்சை எடுப்பதிலே சிறுமை இல்லை. அதிலேதான் தமிழகத்தினுடைய பெருமை இருப்பதாக நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னார்கள், நண்பகல் உணவுத் திட்டத்திற்காக நான் பிச்சை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று. இன்று கலைஞர் அவர்கள் சொல்லுகிறார் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்காக நான் பிச்சையெடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று சொல்கிறார். எங்களுக்கு என்ன மகிழ்ச்சி என்று சொன்னால் கர்ம வீரர் போட்டுவைத்த புள்ளிகள் இன்று க லைஞரின் காலத்தில் கோலங்களாக மாறுகின்றன என்பதுதான் எங்களுக்கு இருக்கின்ற மன நிறைவு. (மேசையைத் தட்டும் ஒலி)

1967–க்கு முன்னால் காங்கிரஸ் கட்சி இந்தத் தமிழ்நாட்டை ஆண்டபோது இந்தியக் குடியரசினுடைய முன்னாள் குடியரசுத் தலைவர் பெரியவர் வெங்கட்ராமன் அவர்கள் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது நாள் ஒன்றுக்கு ஒரு தொழிற்சாலை என்று பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அதற்கு ஒரு வரையறை வைத்திருந்ததாகச் சொல்லுவார்கள். டெல்லியிருந்து விமானத்திலே வருகின்றவர்கள் சென்னை எப்பொழுது வருகின்றது என்று பார்த்தால் "எப்பொழுது புகைப்போக்கிகள் நிறைய இருக்கின்றனவோ அப்பொழுது நாங்கள் சென்னை வந்துவிட்டோம், தமிழ்நாடு வந்துவிட்டோம்" என்று சொன்னதாகச் சொல்வார்கள். அந்தக்

காலம்தான் இன்று மீண்டும் வந்திருக்கிறது. இன்று தினசரி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படுகிறது.

அதிலேகூட இந்த நியாயமான சாதனைகளைப் பாராட்டுவதற்கான ஒரு மன தைரியம், அரசியல் தைரியம் வேண்டும். ஏனென்று சொன்னால், நம்முடைய குடியரசுத் தலைவர் திரு. அப்துல் கலாம் அவர்கள் பேசுகின்றபோது அவர் சொல்லுவார், 'Politics should be development–oriented; politics should not be power–oriented'. 'அரசியல் என்பது வளர்ச்சியை முன் நிறுத்தியதாக இருக்கவேண்டும். அரசியல் என்பது அதிகாரத்தை முன்நிறுத்தியதாக இருக்கக்கூடாது' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட வளர்ச்சியை முன்நிறுத்திய அரசியலில் காங்கிரஸ் கட்சிக்கு நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால்தான் எப்பொழுதெல்லாம் நன்மை நடக்கிறதோ, எப்பொழுதெல்லாம் முன்னேற்றம் நடக்கிறதோ, எந்தத் தலைவர் தொலைநோக்குப் பார்வையோடு சமூகத்திற்கு வழிகாட்ட தன் கற்பனைகளைக் கனவாக்கிக்கொண்டு, நனவாக்கி நிஜங்களுக்காக வருகிறாரோ அவரை நாங்கள் பாராட்டுகிறோம். அதை நான் இந்த மன்றத்திலே சொன்னால்கூட ஒரு வேளை தோழமைக்கட்சிக்காரன் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய அன்பைப் பெற்றவன், அதனால் சொல்கிறேன் என்று நினைக்கலாம். ஆனால், இங்கே பதிவு செய்திருக்கிறார்கள். நான் ஒன்றிரண்டு செய்திகளை மட்டும் இந்த அவையிலே சொல்வதற்கு ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 12–10*

D.L.F. என்ற பெரிய முதலீட்டுக் கம்பெனி. தமிழகத்தில் முதலீடு செய்ய வருகிறபோது, நம்முடைய கலைஞர் அவர்கள் அதன் தலைவரைப் பார்த்துக் கேட்கிறார். அந்தச் செய்தி-- "The Chief Minister M. Karunanidhi, on Wednesday, had a question for them. Why did you take so long to come up to Tamilnadu'?" அந்த D.L.F. என்கிற நிறுவனம், ஒரு சாதாரண நிறுவனம் அல்ல. ஏறக்குறைய 224 மில்லியன் சதுர அடிகளில், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களுக்கு மிகப் பெரிய கட்டடங்களை அமைத்துக் கொடுத்த இந்திய நிறுவனம். இப்பொழுதுதான் முதல்முறையாகத் தமிழகத்திற்கு வருகிறது. இத்தனை ஆண்டுகள் வரவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள், "நீங்கள் வருவதற்கு ஏன் இவ்வளவு நாட்கள் ஆனது" என்று கேட்டபோது, அந்த D.L.F. நிறுவனத்தின் Chairman K.P. Singh சொன்னதாக வந்தது. "they decided to invest in the State because the procedures now were simple and transparent and there was a clear cut system



in place, we are now able to compete, Mr. Singh told the Chief Minister". "இப்பொழுது தமிழக அரசாங்கத்தினுடைய விதிகள் எளிமையாக இருக்கின்றன. தமிழகத்தினுடைய நிர்வாகம் திறந்த நிர்வாகமாக இருக்கிறது. அணுகுமுறை இலகுவாக இருக்கிறது. முதலமைச்சரைப் பார்க்க முடிகிறது. அதிகாரிகள் எங்கள் கோரிக்கைகளை நியாயமாகக் கேட்கிறார்கள். கேட்கின்ற கோரிக்கைகள் நியாயமாக இருந்தால், நாங்கள் அதை அழுத்த வேண்டியதில்லை. யாரையும் தேடவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, வருகிறோம்." என்று சொல்கிறார்.

இதை நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட உணர்வுகள் முதலீட்டாளர்கள் மத்தியில் இருந்தால்தான், ஒரு மாநிலத்திற்கு முதலீடுகள் வரும். ஆங்கிலத்தில் அழகாகச் சொல்வார்கள், capital is a coward, முதலீடு என்பது கோழை, it will flee–run away from the seen at the slightest disturbance. ஒரு சிறிய தடை வந்தால்கூட, முதலீடு என்பது நம்மைவிட்டு ஓடிவிடும். ஆகவேதான், எந்த மாநிலத்திலே முதலீடுகளுக்குச் சாதகமான சூழ்நிலை இருக்கிறதோ, அந்த மாநிலத்தைத் தேடித்தான் முதலீடுகள் வரும். அத்தகைய சூழ்நிலையைத்தான் இன்று கலைஞர் அவர்கள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள்.

எத்தனையோ புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், அவற்றையெல்லாம் புள்ளி விவரங்களாக இந்த அவையிலே சொல்ல நான் விரும்பவில்லை. நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கின்றன. இங்கே கடந்த மூன்று நாட்களாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தந்த பதிலிலே இருக்கின்றன. எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் வந்திருக்கிறது, எத்தனை ஆயிரம் கோடி ரூபாய்க்கான முதலீடுகள் வர இருக்கின்றன, எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டிருக்கிறோம், எத்தனை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன, எத்தனை in the pipeline, எவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் வேண்டுமென்றால், ஒரு சிறிய தகவல். இந்த ஒரே ஆண்டில் மட்டும் மத்திய அரசுக்கு வரவேண்டிய கலால் வரி, தமிழகத்திலே ஒரே ஆண்டிலே 16 விழுக்காடு அதிகமாகியிருக்கிறது. கடந்த ஆண்டு, மத்திய அரசுக்கு நாம் கொடுத்திருக்கின்ற Customs duty, Chennai zone has paid 16 thousand, 581 crores. It is nearly a 16 percent incease over the previous year. கடந்த ஆண்டைவிட 16 விழுக்காடு அதிகமாக நாம் கலால் வரியும், சுங்க வரியும் கட்டியிருக்கிறோம் என்று சொன்னால், அதற்கு என்ன காரணம் என்று வகைப்படுத்தியிருக்கிறார்கள் என்றால், தமிழகத்தினுடைய உற்பத்தி அதிகரித்திருக்கிறது.

தமிழகத்திலேயிருக்கின்ற பணப் புழக்கம் அதிகரித்திருக்கிறது. வரி கட்டுகின்ற வருமானம் அதிகரித்திருக்கிறது. வரி கட்டுவதற்கான இறக்குமதி அதிகரித்திருக்கிறது. வரி கட்டுவதற்கான ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது. 43 ஆயிரத்து, 176 கோடி ரூபாய்க்கு தமிழகத்திலிருந்து மட்டும் ஏற்றுமதி செய்திருக்கிறோம். இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இவை கடந்த ஆண்டிலே நாம் பெற்ற முன்னேற்றம்.

இன்று ஒரு பெரிய கேள்வியை வைக்கிறார்கள். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பது என்பது, மிகப் பெரியதொரு அரசியல் பிரச்சினையாக மாறியிருக்கின்றது. தமிழகத்தில் மட்டுமல்ல, மேற்கு வங்கத்தில். இன்று எங்கெல்லாம் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்கிற பெயரிலே, புதிய தொழில் முயற்சிகளை நாம் ஊக்குவிக்கிறோமோ, அங்கெல்லாம் பெரிய கேள்விக்குறியாகியிருக்கிறது, அரசியலாக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நான் ஒன்று மட்டும் சொல்வேன். எந்தப் பிறப்பும், எந்த வளர்ச்சியும், எந்தப் புதிய முயற்சியும் சேதமில்லாமல் உருவானதாக வரலாறு இல்லை. நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், நெய்வேலி தொழிற்சாலையைத் தொடங்குகிறபோது, வெறும் 27 கோடி ரூபாயிலே உருவாக்கப்பட்ட தொழிற்சாலை அது. ஆனால், இந்த நெய்வேலிச் சுரங்கம் இன்று எவ்வளவு பெரிய பிரம்மாண்டமான நிறுவனமாக வளர்ந்து, எவ்வளவு பெரிய ஆலமரமாக உருவாகி, எத்தனை பேரைத் தாங்கி, எவ்வளவு பெரிய வருவாயைக் கொடுத்திருக்கிறது? நல்ல தலைவர்கள் காண்கின்ற கனவும், கற்பனையும்தான் ஒரு தலைமுறையை வழிநடத்திச் செல்கின்றன.

நம்முடைய தலைவர் அவர்கள்கூட, நம்முடைய முதல்வர் அவர்கள்கூட, நெகிழ்ச்சியோடு சொல்லியிருக்கிறார்கள். ஸ்ரீபெரும்புதூரை என் கனவிலே பார்த்தேன். இன்று நிஜமாக்கிப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். ஸ்ரீபெரும்புதூர், பெங்களூருக்குப் போகின்ற வழியில் இரண்டு பக்கமும், வெறும் கட்டாந்தரையாகக் கிடந்த இடம். இன்று உலக வரைபடத்திலே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தொழில் மையமாக வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது ஒரு தலைவனின் கற்பனை.

*பிற்பகல் 12–15*

ஒவ்வொரு சமூகத்தினுடைய வளர்ச்சியும், ஒவ்வொரு சமூகத்தினுடைய எதிர்காலமும் அதை வழி நடத்திச் செல்கின்ற தலைவர்களின் கற்பனைகளோடும், கனவுகளோடும் நிரந்தரமாகப்



பின்னப்பட்டிருக்கின்றன. அந்தக் கற்பனைகளும், கனவுகளும் நனவாகின்றபொழுது, அவை யதார்த்தங்களாக மாறி மிகப் பெரிய வளர்ச்சியை தமிழகத்திற்குக் கொண்டு வருகின்றன. ஆகவேதான், கலைஞரைப் பார்க்கின்றபொழுதெல்லாம், அதிகமாகக் கனவு காணுங்கள், அதிகமாகக் கற்பனை செய்யுங்கள் என்று நாங்கள் சொல்கிறோம். அந்தக் கற்பனைகள், கருவிலே கலைக்கப்படுகின்றபோது, உண்மையிலே நாங்களெல்லாம் நெஞ்சம் பதறி விடுகிறோம்.

இன்று தென் மாவட்டங்களிலே வளர்ச்சி என்று பேசுகின்றோமே—தென் மாவட்டங்களிலே சாத்தான்குளத்திற்கு வரவேண்டிய அந்த மிகப் பெரிய தொழிற்சாலை—இன்று எங்களிலே எத்தனைபேர், எத்தனை தென் மாவட்டத்துக்காரர்கள் இரத்தக் கண்ணீர் விடுகிறார்கள் தெரியுமா?

நல்லதங்காள் கதை என்று எங்கள் கிராமத்திலே சொல்வார்கள், ஓர் அருமையான, அற்புதமான பெண்; மிகத் திறமையானவள், உயர்குடியில் பிறந்தவள், வாழ்ந்து செழிக்க வேண்டியவள், குடும்பச் சூழ்நிலை சரியில்லாததன் காரணமாக கடைசியாக அவள் தற்கொலை செய்துகொள்வதை எழுதி நல்லதங்காள் கதை என்று கிராமங்களிலே பாடுவார்கள்.

இன்று அதைப்போலத்தான், சேதுசமுத்திரமாக இருந்தாலும்சரி, சாத்தான்குளமாக இருந்தாலும்சரி, 21–வது நூற்றாண்டு தொழில் துறையிலும், வியாபாரத் துறையிலும் நல்லதங்காள் கதையாகிப்போனதோ என்று நாங்கள் எல்லோரும் பயப்படுகிறோம். எத்தனை பேருக்குத் தொழில் தந்திருக்க முடியும்! இன்று நம்முடைய 'தினமலர்' பத்திரிகையில் அருமையான கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்கள். சாத்தான்குளத்திற்கு வரவேண்டிய தொழிற்சாலையை, சேதுசமுத்திரத் திட்டத்தை, இந்தத் தமிழகம் எடுத்துக்கொண்ட பல்வேறு நல்ல முயற்சிகளை, இந்த அரசியல்வாதிகள் எப்படிக் கெடுத்தார்கள், எப்படிப் பேசினார்கள் என்று வரிவரியாகப் போட்டிருக்கிறது அப்பத்திரிகை. அதை நீங்கள் ஒவ்வொருவரும் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று டாடா குழுமம் அங்கே தொழிற்சாலை தொடங்குமா, தொடங்காதா? தென் மாவட்டத்து மக்கள் காலங்காலமாகக் கண்டிருந்தக் கனவுகள், எங்கள் இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய வேலைவாய்ப்புகள்—நாங்கள் எல்லோரும் கற்பனையிலே பார்த்தோம்,

ஒரு ஜாம்ஷெட்பூர் உருவாகும் என்று. சாத்தான்குளம் என்பது 50 ஆண்டுகள், 60 ஆண்டுகள் கழித்து எங்கள் பிள்ளைகள், பேரக்குழந்தைகள் இருக்கின்றபோது, தென்மாவட்டத்திலே, தூத்துக்குடி அருகிலே ஒரு ஜாம்ஷெட்பூராக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், எங்கள் கனவுகளும், உங்கள் கனவுகளும், கருவிலேயே கலைந்து போயின. அதை நினைத்துத்தான் இன்று வருத்தப்படுகிறோம். அதற்காகத்தான் இந்த மன்றத்திலே நான் சொல்ல விரும்புகிறேன், எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும் ஒரு சிலர் தியாகம் செய்யாமல், ஓர் எதிர்காலத் தலைமுறை வாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒவ்வொரு தலைமுறையும், அடுத்த தலைமுறைக்காகத் தியாகம் செய்துதான் ஆகவேண்டும். மணிமுத்தாறு அணை தோண்டுகின்றபோது, தமிழகத்திலே இருக்கின்ற பிரபலமான பல்வேறு திட்டங்கள் உருவாகின்றபோது, இடப்பெயர்ச்சிகளும், சேதங்களும் இல்லாமல் எங்காவது முன்னேற்றம் நடந்ததுண்டா என்று உலகப் பொருளாதாரத்தைத் தெரிந்தவர்கள் சொல்லட்டும்.

வேலைவாய்ப்புகள் இல்லையென்று சொல்கிறார்களே, நம்முடைய பிரதமர் மன்மோகன் சிங் அவர்களும், அன்னை சோனியா காந்தி அவர்களும் நோக்கியா தொழிற்சாலைக்கு வந்திருந்தபொழுது, நான், அண்ணன் சுதர்சனம், நம்முடைய அருமைக்குரிய சகோதரி யசோதா அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிநடத்திச் செல்ல, அந்தத் தொழிற்சாலையின் உள்ளே பார்த்துக்கொண்டிருந்தோம். அந்தத் தொழிற்சாலையிலே வேலை பார்க்கின்ற பெண்கள், ஜப்பானிலிருந்து வந்திருக்கின்றார்களா இல்லை ஐரோப்பா, அமெரிக்காவிலிருந்து வந்திருக்கின்றார்களா? இல்லை. விழுப்புரத்திலிருந்து, கடலூரிலிருந்து, திருவண்ணாமலையிலிருந்து பாலிடெக்னிக் படித்துவிட்டு நம் குடும்பத்துப் பெண்கள், மிகச் சாதாரணப் பெண்கள், நோக்கியா என்கிற பிரம்மாண்டமான தொழிற்சாலையிலே, அதற்கான விசேஷ உடைகளை உடுத்தி, அவர்கள் வேலை செய்வதைப் பார்க்கின்றபோது பாரதியினுடைய கனவு நனவாகிறது என்று நான் நினைத்தேன். ஆகவே, வேலைவாய்ப்பு உருவாகவில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்? நோக்கியா தொழிற்சாலைக்கு மட்டும் ஒரு நாளைக்கு 80 பஸ்கள் போகின்றன. இந்தியாவிலே, சோழிங்கநல்லூரிலே போய்ப் பாருங்கள், சிறுசேரியிலே போய்ப் பாருங்கள், இன்போசிஸ், சத்தியம் என்று சொல்லக்கூடிய மிகப் பிரபலமான நிறுவனங்களில் வேலை முடித்து வெளியே வருகின்றபோது வாசலிலே நின்று பாருங்கள். எத்தனை



ஆயிரக்கணக்கான இளைஞர்கள் 30 வயதில், 35 வயதில் பை நிறையக் காசோடு, கண் நிறைய எதிர்பார்ப்புகளோடு, நாளை இந்தியா எனது இந்தியா என்கின்ற நம்பிக்கைக் கனவோடு, வருகின்ற அந்த இளைஞர்களைப் பார்த்தால் தெரியும்.

தொழில் தொடங்குகின்றபோது வேலைவாய்ப்புகள் உருவாகும். ஆகவேதான், அந்தத் தொழிலை உருவாக்குவதற்கான வாய்ப்பினைக் கொடுக்கவேண்டும். அதுவேதான் எங்களுடைய கோரிக்கை. அந்தத் தொழிலை உருவாக்குகின்றபோது, நண்பர் கோவிந்தசாமி அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். பிரம்மாண்டமான நிறுவனங்கள் வருகின்றபோது, பிரம்மாண்டமான தொழில் குழுமங்கள் வருகின்றபோது, ஏழை எளியவர்கள் நசுக்கப்பட்டுவிடக்கூடாது என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. அதிலும், குறிப்பாக நிலம் எடுப்பு என்பது, நிலத்தைக் கையகப்படுத்தி ஒப்படைப்பது என்பது, அரசு எடுக்க வேண்டிய அரசியல் முடிவு. 5,000 ஏக்கர், 10,000 ஏக்கர், 15,000 ஏக்கர் நிலம் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்தத் தேசத்தினுடைய எதிர்காலம் நாடுகின்ற எவரும் ஒத்துக்கொள்ள முடியாது. ஏனென்று சொன்னால், land is a strategic resource. அவர்கள் அதிகமாகச் சொல்வார்கள், The producer of the land has stopped the production long back என்று சொல்வார்கள்.

இன்னும்கூட நான் என்ன சொல்கின்றேன் என்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நல்ல முயற்சிகளை ஊக்குவிக்கிறார்கள். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்கிறேன். H T.L. நிறுவனத்திற்காக – Hindustan Teleprinters நிறுவனத்திற்காக 1972–லே நாம் இடத்தைக் கொடுத்தோம். அந்த இடத்தை, அந்த அதிகாரிகள் குடியிருப்புக் கட்டுவதற்காக நம்முடைய அரசிடமிருந்து, சிட்கோவிடமிருந்து வாங்குகிறார்கள். ஆனால், வாங்கிய இடத்தை, சில ஆயிரம் ரூபாய்களுக்கு நாம் விற்ற இடத்தை, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களுக்கு விற்கிறார்கள்.

*பிற்பகல் 12–20*

அது தனியார் நிறுவனம் அல்ல. அது மத்திய அரசுக்குச் சொந்தமான நிறுவனம். அவர்களே நம்முடைய மாநில அரசு இடத்தை வாங்கி, சில ஆயிரங்களுக்கு வாங்கி, பல கோடிகளுக்கு Real Estate வியாபாரமாக விற்கிறார்கள் என்று சொன்னால், தனிப்பட்ட முதலாளிகள் கையில் அவ்வளவு பெரிய நிலவுடைமைகள் கிடைத்தால்

என்ன நடக்கும் என்பதை அரசு தயவு செய்து கவனமாகப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் கோரிக்கை வைக்க விரும்புகிறேன். நாம் இடங்களை வழங்குகின்றபோது, 500 ஏக்கர், 1,000 ஏக்கர் என்று வழங்குகின்றபோது, தயவு செய்து அந்த இடங்களை அவர்களுக்கு விற்றுவிடாமல் ஒரு 60 ஆண்டுகள், 65 ஆண்டுகள், 70 ஆண்டுகள் என்று long lease–க்கு விடலாம். ஏனென்று சொன்னால், அந்த நிலங்களின்மேல் நமக்குள்ள உரிமை அப்படியே இருக்கும்.

1973–ல் H.T.L. நிறுவனத்திற்கு அந்த இடம் வழங்கப்படுகின்றபோது, 2008–ல் அந்த இடம் நமக்குத் தேவைப்படும் என்று நாம் நினைத்திருக்க மாட்டோம். ஆனால், இந்த அரசு அந்த இடத்தை எங்களுக்குத் திரும்பக் கொடுங்கள் என்று கேட்கிறது. ஆனால், அவர்கள் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிய இடத்தை பல கோடி ரூபாய்க்கு விற்கின்றார்கள்; அரசாங்க இடத்தை விற்கின்றார்கள். அதாவது, நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்று சொன்னால், இன்று மிகப்பெரிய நிறுவனங்கள், டாடாவைப் போன்ற நிறுவனங்கள், மற்றவர்கள் இங்கே S.E.Z. என்று சொல்லக்கூடிய மிகப்பெரிய வளர்ச்சியைச் செய்கின்றவர்களுக்கு இடையே ஒரு பகுதியையாவது சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கான இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். இரண்டு மில்லியன் சதுர அடிக்கு நான் கட்டுகிறேன், 10 இலட்சம் சதுர அடிக்கு நான் கட்டுகிறேன் என்று சொல்கிறவர்கள் குறைந்தபட்சம் அதில் நான்கில் ஒரு பங்கு இடத்தையாவது சாதாரண சிறுதொழில் முனைவோருக்காகக் கொடுக்கவேண்டும். இதற்கு தரமணியில் நல்ல முன்னுதாரணம் இருக்கிறது. ஆனால், அப்படிப் பெரும் தொழில்முனைவோர் மிகப் பெரிய விலைக்கு அவற்றை விற்கிறார்களேயொழிய அதை சாதாரண நடுத்தரத் தொழில் முனைவோருக்கு விற்கத் தயாராக இல்லை. அவர்களுடைய எண்ணத்தை அரசு தயவு செய்து கவனத்தில் கொள்ள வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

அடுத்து முக்கியமானது, e–waste. இந்த e–waste என்பது இன்று மிகப் பெரிய ஒரு சவாலாக இருக்கிறது. அதைப் பற்றிய ஒரு கொள்கையை நாம் இதுவரை வகுக்கவில்லை. அதிலே இருக்கின்ற Lead, Cadmium போன்ற நச்சுப் பொருட்கள் பரவலாக தூக்கியெறியப்படுகின்றன. அவை நாளைய சமூகத்திற்கு மிகப் பெரிய பேரழிவை உண்டுபண்ணும். அதற்காக ஒரு கொள்கையை வகுக்க வேண்டும் என்பதை



கேட்டுக்கொண்டு, நல்ல தொழிற்கல்வி, நல்ல இளைஞர்கள், அற்புதமான தொழில்சூழல், ஏற்றுக்கொண்டு கேட்கத் தயாராக இருக்கின்ற அரசாங்கம், அரசாங்கம் என்ன நினைக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு செயல்படுகின்ற அதிகாரிகள், அவர்களுக்கு உறுதுணையாக இருக்கின்ற தோழமைக் கட்சிகள் என்ற ஒரு அற்புதமான சூழ்நிலை தமிழகத்திலே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையைச் சாதகப்படுத்தி, தமிழகத்தை இந்தியாவின் முதலாவது மாநிலமாகக் கொண்டு போகவேண்டிய மிகப் பெரிய பொறுப்பினை டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற நம்பிக்கையோடு, இலட்சிய வெறியோடு, அந்த நம்பிக்கையிலே அவர்கள் வெற்றிபெறுவார்கள், அதற்கு காங்கிரஸ் பேரியக்கம் என்றும் துணை நிற்கும் என்று சொல்லி அமைகின்றேன், நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

***திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் ஆகிய துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகளில் பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 2008 ஜனவரி மாதம் வரை ஏறக்குறைய 1 இலட்சத்து 85 ஆயிரத்து 640 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது என்ற அறிவிப்பு தமிழகத்தின் தொழில் வளர்ச்சியின் வீச்சு என்பது நமக்கு நல்ல செய்தியாக உள்ளது. கடந்த 2007 மே மாதத்திலிருந்து 2008 ஜனவரி வரையிலே ஏறக்குறைய 44 ஆயிரத்து 88 கோடி ரூபாய் முதலீடு வந்துள்ளது என்பது தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு நல்லதொரு அறிகுறியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய தமிழகத்திலே தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, வேலூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் அமையப்பெற்றுள்ளன. அதேசமயத்தில் இதுபோன்ற தொழிற்பூங்காக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் வரவேண்டும். அதிலும், குறிப்பாக, இராமநாதபுரம், சிவகங்கை, விழுப்புரம் மற்றும் தருமபுரி போன்ற மாவட்டங்களிலே சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு தரிசு நிலம் ஏராளமாக உள்ளது. அங்கு அவற்றிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்திலே சிப்காட் நிறுவனம், பல இடங்களில் தொழில்முனைவோருக்கான இடங்களைத் தேர்வு செய்து கொண்டிருக்கிறது. அவர்கள் தொழில் செய்வதற்கு ஏற்ற இடங்களை, நல்ல இடங்களைத் தேர்வு செய்து கொடுக்கும் வகையில் நிலங்களை கையகப்படுத்துகிற முயற்சியிலே மிகக் குறைந்த விலையை மட்டுமே கொடுப்பதாக நில உரிமையாளர்கள் புழுங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, கூடுதலான விலையை வழங்குவதற்கு நம்முடைய அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது சிப்காட் நிறுவனம் பல்வேறு இடங்களிலே நிலங்களை விற்பனை செய்கிறபோது, கூடுதல் விலைக்கு அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து விற்கிறது. அப்படி விற்கிறபோது, அந்த நிலங்களிலே கிடைக்கின்ற வருவாயில் ஒரு தொகையினை அவர்களுக்கு மீண்டும் கொடுப்பதற்கான முயற்சிகளை நம்முடைய அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–25*

அதேபோன்று, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் கடந்த 2 ஆண்டுகளில் வசூலித்த தொகை ஒரேமாதிரியான தொகையாக இருக்கிறது. அது எப்படி என்று சொன்னால், 2006–2007–ல் 369 கோடி ரூபாய், அதேபோன்று, 2007–2008–லும் 369 கோடி ரூபாய்தான் வசூலித்திருக்கிறோம் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அது சரியான அறிவிப்பா என்று கேட்க விரும்புகிறேன்.

அப்பாவி மக்கள், ஏராளமானவர்கள் TIIC–லே கடன் கேட்டுச் சென்றால் நிறைய பேர்களுக்குக் கடன் கொடுக்க மறுப்பதாகத் தகவல் வந்திருக்கிறது; உடனடியாக கடன் கொடுப்பதற்கான முயற்சியை TIIC நிறுவனம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை ஏறக்குறைய 637 கோடி ரூபாய், அதிலே கடன் வழங்கிய தொகை வெறும் 375 கோடி ரூபாய் மட்டுமே. எனவே, விரைந்து கடன் வழங்குவதற்கான முயற்சியை நம்முடைய TIIC நிறுவனம் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தமிழ்நாட்டிலே மிகப் பெரிய தொழில் புரட்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதுபோன்ற தொழில் புரட்சியிலே அனைவருக்கும் தனியார் துறையிலே இட ஒதுக்கீட்டைக் கொண்டு



வருவதற்கான முயற்சியை நம்முடைய அரசாங்கம் இந்த ஆண்டே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், வேலையில்லாத இளைஞர்கள் இந்த நாட்டிலே 50 இலட்சம் பேர் இருப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. அந்தவகையிலே, குறிப்பாக ஆதி திராவிட, பழங்குடியின மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பின்தங்கிய மக்களுடைய இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையிலே இன்றைக்கு அரசாங்கமே சொல்கிறது, மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் சேர்ந்து 15 சதவிகிதம் மட்டுமே வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும்; எஞ்சியிருக்கிற 85 சதவிகித வேலைவாய்ப்பு தனியார் நிறுவனங்களிடம் இருக்கிறது என்று. எனவே, தனியார் தொழிற்சாலைகளில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டே இட ஒதுக்கீடு கொண்டு வருவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பார்த்தால், தனியார் தொழிற்சாலைகள் இலாபகரமாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆனால், கூட்டுறவுத் தொழிற்சாலைகளும், அதேபோன்று நம்முடைய பொதுத் துறை நிறுவனங்களும் நட்டத்திலே இயங்குவதாகத் தகவல் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு மிகப் பெரிய ஒரு குழுவை அமைத்து இதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மூடிக்கிடக்கும் தொழிற்சாலைகளைத் திறப்பதற்கான முயற்சியை எடுக்கவேண்டும். அதிலும் குறிப்பாக, நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் போன்ற ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன; இந்தத் தொழிற்சாலைகளைத் திறக்க வேண்டும். குறிப்பாக, என்னுடைய மாவட்டத்திலே இருக்கிற மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சம்பந்தமாகத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அதைக் கூட்டுறவுத் துறைமூலம் நடத்த வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், அரசாங்கம் இன்றைக்கு tender விட்டிருக்கிறது. தனியாருக்கு விடப்போகிறோம் என்று சொல்லி இருக்கிறது. 2 ஆம் தேதிகூட அதற்கான ஒரு பொதுக் குழுவைக் கூட்டினார்கள். படானம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையினுடைய பொதுக் குழுவைக் கூட்டினார்கள். அங்கு வந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள், இதைத் தனியாருக்கு விடக்கூடாது, கூட்டுறவுத் துறைமூலமே நடத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்து, அந்தப் பொதுக் குழுக் கூட்டமே பாதியில் நின்றுவிட்டது. எனவே,

அந்த மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். நானும் அதிலே ஓர் உறுப்பினர், 18 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக அதில் இருக்கிறோம். ங்களுடைய அந்த உணர்வுகளைப் புரிந்துகொண்டு கூட்டுறவுத் துறைமூலம் நடத்தவேண்டும். அதற்கான தொகை, ஆலையை நடத்துவதற்கு வெறும் 20 கோடி ரூபாய் இருந்தால் போதும் என்று அறிக்கையிலே அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக தகவல் சொல்கிறது. எனவே, அதை உடனடியாக நம்முடைய அரசாங்கம் கூட்டுறவுத் துறையில் நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது, தொழிற்சாலைகள் அமைகின்ற இடங்களைப் பார்த்தால், சுற்று வட்டாரத்தில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு என்பது கேள்விக்குறியாக இருக்கிறது, எட்டாக்கனியாக இருக்கிறது. இதை என் தொகுதியிலேகூட நான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். எனவே, எந்த இடங்களிலே இந்தத் தொழிற்சாலைகள் வருகின்றனவோ அவற்றைச் சுற்றியிருக்கிற அந்தப் பகுதி இளைஞர்களுக்கும், படித்த பெண்களுக்கும் வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கு நம்முடைய அரசாங்கம் தொழிற்சாலைகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தமிழகத்தில் சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் காணாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இந்தத் தொழில்கள்தான் இந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்து வந்தன; உற்பத்தியும் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படும் நிலையில் இருந்தது. உதாரணத்திற்கு, வின்சென்ட், காளிமார்க், கோல்டு ஸ்பாட் போன்ற நிறுவனங்கள், நம்முடைய உள்ளூர் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்துகொண்டிருந்தன. ஆனால், இப்போது அந்த நிறுவனங்களே இல்லாமல் போய்விட்டன. மாறாக, கோக்க கோலாவும், பெப்ஸியும் வந்திருக்கின்றன. அந்நிய முதலீடு வந்திருந்தாலும்கூட வேலைவாய்ப்பு என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அவர்கள் எவ்வளவு விலை நிர்ணயிக்கிறார்களோ அந்த விலைக்குத்தான் வாங்கிக் குடிக்கிற நிலையில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு சில்லறை வணிகத்தில், Reliance, Wal–Mart போன்ற நிறுவனங்கள் தமிழகத்திலே வியாபித்திருக்கின்றன. ஒவ்வொரு சிறு, சிறு நகரத்திலும் வந்து, அவர்கள் இந்தச் சிறு தொழில்களை, வணிகர்களை நசுக்குகிற வேலையிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நம்முடைய அரசாங்கம் Wal–Mart, Reliance போன்ற நிறுவனங்களை அனுமதிக்கக்கூடாது.



மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள், அதை நிறுத்துவதற்கான முயற்சியை, மத்திய அரசோடு கலந்தாலோசித்து தடுக்கப்படும் என்று சொன்னார்கள். இதுவரையிலே அது தடுத்து நிறுத்தப்படவில்லை. எனவே, தமிழகத்திலே இருக்கின்ற இலட்சோப இலட்சம் சிறு கடைகளை வைத்திருக்கின்ற வணிக நிறுவனங்களுக்கு இது மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கின்றது. அதேபோன்று ஒவ்வொரு கடையிலும் வேலை செய்கின்றவர்களின் 5, 6 குடும்பங்களும் பட்டினிக்கு ஆளாகும் நிலை இருக்கின்றது. இதை அரசு உணர்ந்து, உடனடியாக Reliance, Wal–Mart போன்ற வணிக நிறுவனங்களை மூடவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–30*

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், அளவிடமுடியாத மனித ஆற்றல் உள்ளது. அவ்வளவு மனித ஆற்றலையும் வீணாக்காமல், அந்த மனித ஆற்றலைப் பயன்படுத்தி, உற்பத்தியைப் பெருக்குகின்ற வகையில் தொழிற்சாலைகளை உருவாக்கவேண்டும். சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் பல்வேறு தொழில்கள் குடிசைத் தொழிலாக நடந்துகொண்டிருக்கின்றன. அந்த நாடுகள்தான் இன்றைக்கு உலகப் பொருளாதாரத்தை, உலகச் சந்தையை நிர்ணயிக்கின்ற நாடுகளாக இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, இதுபோன்ற மனித உழைப்புகளை அதிகமாகக் கொண்ட தொழில்களை உருவாக்கவேண்டும். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்து, நூறு பேர்களுக்கு வேலை கொடுப்பதைவிட, நூறு கோடி ரூபாய் முதலீடு செய்து, ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கின்ற தொழிற்சாலைகளைத் தமிழகத்திலே உருவாக்கவேண்டுமென்று நம்முடைய அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் மறைந்த முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. மாறன் அவர்களாலே கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டம் கடந்த ஆட்சியிலே கிடப்பிலே போடப்பட்டது. இப்போது அதற்கு உயிரூட்டியிருப்பதாகச் சொல்கின்றார்கள். தென்மாவட்டப் பகுதி மக்களுக்கு மிக அதிகமாக வேலைவாய்ப்பைக் கொடுப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, இனியும் காலந்தாழ்த்தாமல், நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உடனடியாகத் தொடங்குவதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இப்போது பல்வேறு நிறுவனங்கள் டிட்கோவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன. அரசு நிறுவனமான டிட்கோ அதில் உரிமைதாரராக இருக்கவேண்டுமென்று சொல்கின்றார்கள். அப்படி இருக்கின்றபோது, டிட்கோ அதில் எவ்வளவு பங்கு செலுத்துகின்றது, தனியார் எவ்வளவு பங்கு செலுத்துகின்றார்கள் என்ற செய்தியை நம்முடைய அரசு வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்திலே விவசாயம் சார்ந்த தொழில்கள் ஏராளமாக இருக்கின்றன. விவசாயம் சார்ந்த அந்தத் தொழில்களை சிறப்புப் பொருளாதார மண்டலத்திலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். வேளாண்மைக்குத் தனியாக சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நம்முடைய அரசு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய நிறுவனர் அய்யா அவர்கள்கூட, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வெளியிட்ட தமிழ்நாட்டுக்கான தொழில் கொள்கையிலே, வேளாண் வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சி பற்றியும், ஒரு நாட்டின் மூலதனப் பங்கு இளைஞர் என்பதால், இளைஞர் மேம்பாட்டுக் கொள்கை, 2020 இறுதியில் தமிழகத்தின் தொலைநோக்குத் திட்டம் (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்துவிடுகின்றேன், தலைவரே இவ்வாறு பல்வேறு திட்டங்களை மக்களுக்கும் அரசுக்கும் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். அவற்றிலேயும் நம்முடைய அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதுமட்டுமல்ல, இப்போது விவசாயிகளால் உணவுப் பொருட்கள், காய்கறிகள், பழவகைகள் ஆகியவற்றை குறிப்பிட்ட பருவகாலங்களில் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சில சமயங்களில் பெரும்பாலும் விற்பனையில் மந்த நிலை ஏற்பட்டு, அவற்றை உற்பத்தி செய்த விவசாயிகள் அறுவடை செய்யப்பட்ட அவற்றைக் குப்பையில் போடுவதையும், அறுவடையே செய்யாமல் விட்டுவிடுவதையும் பார்க்கின்றோம். எனவே, அந்தப் பொருட்களைச் சேகரித்து, பாதுகாத்து வைக்கவும், விவசாயிகளைக் காப்பாற்றவும் தமிழகத்திலே ஆங்காங்கே மாவட்டந்தோறும் குளிர்பதனக் கிடங்குகளையும், உணவுப் பூங்காக்களையும் அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

எங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தில் தர்பூசணி அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டாலும் வருடத்திற்கு ஒரு முறைதான் மகசூல் செய்யப்படுகின்றது. ஆனால், அதைச் சேமிக்க முடியவில்லை. எனவே வருடம் முழுக்க தர்பூசணி கிடைப்பதற்கும், தர்பூசணி சாறு கிடைப்பதற்கும், செங்கல்பட்டிலே தர்பூசணி சாறு தயாரிக்கும்



தொழிற்சாலையை அமைக்கவேண்டுமென்றும், அதற்காக குளிர்பதனக் கிடங்கை அமைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று உறுப்பினர் தம்பி திரு. வேல்முருகன் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார், நம்முடைய முதல்வர் அவர்களும் அறிவித்தார்கள். பண்ருட்டியில் பலாப்பழ ஜாம் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், நேரம் ஆகிவிட்டது. இன்னும் நிறையப் பேர் பேசவேண்டியிருக்கின்றது. (குறுக்கீடு) நீங்களே பாருங்கள், 12–22-க்கு நீங்கள் பேச ஆரம்பித்தீர்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** தென்னை உற்பத்தியை அதிகப்படுத்தி, தென்னை விவசாயிகள் வயிற்றிலே பால் வார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, தமிழகத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளிலே புதிதாக கனிமப் பொருட்கள் ஏதாவது கண்டறியப்பட்டிருக்கின்றனவா? அதற்காகத் தனியாக ஏதாவது குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படிப்பட்ட அமைப்புகள் இருக்கின்றனவா? அதன்மூலம் இன்றைக்கு நிறைய புதிய வரவுகளைத் தேடி, புதிய தொழிலைத் தொடங்குவதற்கான முயற்சியை நம்முடைய அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர்களின் நலன் கருதி, மீன்களைப் பதப்படும் தொழிற்சாலைகள், மீன்களைப் பதப்படுத்தும் நவீனக் கிடங்குகள், அதிநவீனப் படகுகள் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி. (குறுக்கீடு)

**திரு. கி. ஆறுமுகம்:** கொஞ்சம் இருங்கள் தலைவரே. மேடம், ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், நிறையப் பேர் பேசவேண்டியிருக்கின்றது.

*பிற்பகல் 12–35*

**திரு. கி. ஆறுமுகம்:** சுனாமி நிதிக்கான ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வெறுமனே கிடக்கின்றது. எனவே, அந்த மீனவ மக்கள் நலன் கருதி, இதுபோன்ற தொழிற்சாலைகளை நம்முடைய அரசாங்கம் அமைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று,

மதுரையில் சிப்காட் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தும் முயற்சிகளை விவசாயிகள் எதிர்ப்பதால், மாவட்ட ஆட்சித் தலைவர் வேறு இடம் பார்ப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதை உடனடியாக அமைப்பதற்கான முயற்சியை நமது அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழ்நாடு அரசின் விரைவான, வெளிப்படையான அணுகுமுறையால், இம்மாநிலத்தில் முதலீட்டாளர்கள் அதிக அளவில் முதலீடு செய்கிறார்கள்; புதிய தொழில்கள், தொழிற்சாலைகள், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகின்றன என்ற தொழிற் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, நமக்கு நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. புதிய தொழில்கள் தமிழகத்தில் உருவாவதற்கு, தமிழக அரசு எடுக்கும் முயற்சிகள் பாராட்டுக்குரியது. அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது.

சிறப்புப் பொருளாதார மண்டலத்தை பொறுத்தவரை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கின்ற அதே சமயத்தில், சிறப்புப் பொருளாதார மண்டல சட்டத்தையும், விதிகளையும் திருத்த வேண்டுமென்று, நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சி வலியுறுத்தியதை நினைவுகூர்கின்றேன்.

காரணம், சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையின் இன்றைய வடிவம், சமச்சீரான வளர்ச்சியை ஊக்கப்படுத்தவில்லை. அது தொழில் நடவடிக்கை என்பதைவிட, சொத்து விற்பனையில் ஈடுபடும் ஊக வணிகர்களின் நலன்களைப் பாதுகாக்க வகுக்கப்பட்ட திட்டமாக உள்ளது. ஏராளமான பரப்பளவு கொண்ட நிலம், அதிலும் பல இடங்களில் வளமான விவசாய நிலங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கும் தனியார் வசம் ஒப்படைக்கப்படுகிறது. அத்துடன் 10 ஆண்டுகளுக்கு, வரி விடுமுறை விடப்படுவதுடன், தாராளமான வரிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஆகவேதான்,



பல்பொருள் உற்பத்தி சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஒதுக்கப்படும் நிலப் பரப்பளவைக் குறைக்கவேண்டும்; நிலப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்த வேண்டும்; வகைதொகையற்ற முறையில் வரிச் சலுகைகள் அளிப்பது நிறுத்தப்படவேண்டும்; தொழிலாளர்களின் உரிமைகள் உறுதி செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கைகளை நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சியின் சார்பாக வலியுறுத்தினோம். அந்த அடிப்படையில், மாநில அரசின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் புதிய முதலீடுகள், புதிய தொழில் நிறுவனங்கள் வருவதை வரவேற்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, வெளிநாட்டு முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் பற்றிய முழு விவரங்கள் இந்தச் சபையில் வைப்பது உதவியாக இருக்கும் என்று கருதுகிறோம். அனைத்து ஒப்பந்தங்களையும் வரிக்கு வரி விவாதிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனாலும், periodical–ஆக ஒப்பந்தங்களை முன் வைப்பது, புரிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும். சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் நிலப் பயன்பாடு, உற்பத்திக்கான இடம், உள்கட்டுமான ஏற்பாடுகள், கடைகள், வீடுகள் போன்றவற்றுக்கான நிலப் பயன்பாடு பற்றிய அரசின் அணுகுமுறையும், ஒப்பந்த விவரங்களும் வெளியிடப்படுவது, கூடுதலாக அரசின் கொள்கைகளைப் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில், மாநில அரசு கொடுத்துள்ள சலுகைகள் என்னென்ன என்பதை நமது சபை உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதும் உதவியாக இருக்கும். புதிய முதலீடுகள்மூலம் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களில், தொழிற்சங்கங்கள் செயல்படக்கூடாது என அரசு முடிவு செய்துள்ளதா? இது பற்றிய அரசின் அணுகுமுறை என்ன? ஹுண்டாய் போன்ற நிறுவனங்கள் தொழிற்சங்கத்தை அனுமதிக்க முடியாது என பகிரங்கமாக அரசு அதிகாரிகளிடமே கூறுகிறார்களே? இந்த அரசு அதை அனுமதிப்பது ஏன்?

பன்னாட்டு நிறுவனங்கள், இந்திய சட்டங்களை மதித்து நடக்க வேண்டுமென அரசு வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த வேண்டும். வால்–மார்ட், ரிலையன்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு சில்லறை வர்த்தகத்தில் அனுமதி வழங்கக்கூடாது.

கொள்கை குறிப்பில், இந்தியாவில் தாராளமயமாக்கல் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டபின், உலக அளவில் ஏற்பட்டுள்ள வியக்கத்தக்க மாற்றங்களின் தாக்கம் நம்மால் உணரப்படுகிறது; அண்மைக் காலமாக நிலவும் வரலாறுகாணாத வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தமிழகம் முழுமையாகப் பயனுறச் செய்திடல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாராளமயமாக்கல், தமிழகத்தில் ஏற்படுத்திவரும் பாதிப்பான இன்னொரு பக்கத்தையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோவையில், இரும்பு சார்ந்த என்ஜினியரிங் தொழில்கள், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல் பஞ்சாலை சார்ந்த தொழில்கள், தங்க நகைத் தொழில்கள், இவை யாவும் கடும் நெருக்கடியைச் சந்தித்துக்கொண்டிருக்கின்றன. கோவையில் மட்டும், 52 ஆயிரம் சிறு, குறு தொழிற்சாலைகளில் 69 வகையான தொழில்கள் அனைத்தும் இரும்பையே மூலப்பொருளாகக் கொண்டுள்ளன. எப்போதும் சுறுசுறுப்பாகச் செயல்படும் நகரின் தொழிற்சாலைப் பகுதிகள் இப்போது களையிழந்து காணப்படுகின்றன.

இதற்குக் காரணம், மத்திய அரசு கடைப்பிடித்து வரும் தவறான பொருளாதாரக் கொள்கையான ஆன்லைன் வர்த்தகம்தான் என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். மத்திய அரசின் கனிம வளத் துறையின் கொள்கைப்படி, இரும்பை மதிப்புக்கூட்டப்பட்ட நிலையில்தான் ஏற்றுமதி செய்யவேண்டும். ஆனால், தற்போது மத்திய அரசு இரும்புத் தாதுவை இரும்பாகவோ, இயந்திரங்களாகவோ மாற்றி ஏற்றுமதி செய்யாமல், இன்றைக்கு இரும்புத் தாதுவை அப்படியே ஏற்றுமதி செய்து, இயந்திரங்களை இறக்குமதி செய்கிறார்கள்.

*பிற்பகல் 12–40*

இதன் காரணமாக 8 சதவிகிதம் முதல் 10 சதவிகிதம் வரையிலுள்ள உற்பத்தி நமது தமிழகத்திலே முடங்கியிருக்கிறது. கட்டுமானக் கம்பிகள் 2004–ல் ஒரு டன் ரூ. 20 ஆயிரமாக இருந்தது 4 ஆண்டுகளில் ரூ. 25 ஆயிரமாக உயர்ந்துள்ளது. இரும்பு வர்த்தகத்தில் Online–முன்பேர வர்த்தக முறையைத் தடை செய்யவேண்டும். ஒரு கிரைண்டரின் உற்பத்திச் செலவு கடந்த 3 மாதங்களில் 35 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

கட்டுமானத்தில் பயன்படும், செம்பு ஒரு கிலோவுக்கான விலை 150 ரூபாயாக இருந்தது, தற்போது 475 ரூபாயாக உயர்ந்துள்ளது.



30 சதமானக் குறுந்தொழில்கள் மூடப்படும் அபாய நிலை உருவாகி இருக்கிறது. இவை யாவும் தமிழகத்தைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதை தங்களது கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பஞ்சாலைகளில் கடும் தொழில் நெருக்கடியை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். பஞ்சு இன்று அபூர்வப் பொருளாக மாறி உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் வலுவான முன்பேர வர்த்தகம் என்பதும் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு 355 கிலோ ரூ.18,000–க்கு விற்றது. இந்த ஆண்டு ரூ.23,000–க்கு விற்கிறது. 10–க்கும் மேற்பட்ட வெளிநாட்டு வர்த்தகர்கள் இங்கே கொள்முதல் செய்கிறார்கள். அதனை ஏற்றுமதி செய்கிறார்கள். அடுத்த ஆண்டு பருத்தியை இப்போதே பேசி முடித்துவிட்டார்கள். இந்தச் செயற்கையான பற்றாக்குறையால் மூலப் பொருளை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. உற்பத்திச் செலவும் அதிகமாகிறது. டாலர் மதிப்பும் வீழ்ச்சியடைந்து மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. பஞ்சாலைகளில் மீதமாகக்கூடிய waste cotton–ஐயும் ஏற்றுமதி செய்கிறார்கள். இதனால் மோட்டா ரக நூல் உற்பத்தி பாதிக்கப்பட்டு bedsheet–போர்வை தயாரிக்கக்கூடிய உடுமலை, கோவை, ஈரோடு, ராஜபாளையம், சேலம் (மணியடிக்கப்பெற்றது) வெள்ளக்கோவில் பகுதிகளில் இப்போது இந்த ஆலைகள் மூடப்படும் சூழ்நிலை உருவெடுத்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையிலே தங்கத்தின் விலையும் கடுமையான அளவுக்கு உயர்ந்து இலட்சக்கணக்கான ஊழியர்களும், தொழிலாளிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அநேகமாக நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள்தான் Online வர்த்தகத்திலிருந்து விதிவிலக்கு பெற்றிருக்கிறார் என்று நான் அறிகிறேன்.

SPIC Urea கம்பெனியை தனியாருக்குக் கொடுத்தால் என்ன ஆகும் என்று, ஏற்பட்ட நிகழ்வு நமக்கு இப்போது முன்னெச்சரிக்கையாக கொண்டிருக்கிறது. அந்த ஆலை நிறுத்தப்பட்டு 450 ரூபாய்க்கு விற்கப்பட்ட உரம் 750 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையில் இதைத் தனியாருக்குக் கொடுத்த அந்த அரசியல் நிகழ்வுகளுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. SPIC Urea உரக் கம்பெனியை தமிழக அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வர வேண்டும்.

இராமநாதபுரம் பகுதியில் பெருங்குளம், பெரியபட்டினம், வழுதூர் ஆகிய பகுதிகளில் கிடைக்கும் எரிவாயுவை தூத்துக்குடி பகுதிக்கு

குழாய்மூலம் கொண்டு வரவேண்டும். சாத்தான்குளம் பகுதியில் Titanium Di–Oxide ஆலையை பொதுத் துறை நிறுவனமாக அரசே நடத்த முன்வரவேண்டும். இயற்கை எரிவாயு மையம் தூத்துக்குடியை மையமாக வைத்துக் கொண்டுவரப்படவேண்டும்.

இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், நெல்லை, மதுரை புறநகர்ப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்கும், சிறு, குறு தொழில்கள் பாதுகாக்கப்படவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இலட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வளிக்கும் கிராமிய கைவினைப் பாரம்பரியத் தொழில்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் முறையில் கொள்கைகள் உருவாக்கப்படவேண்டும்.

தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான மின் சக்தி குறித்து கடந்த பல ஆண்டுகளாக முறையான கவனம் செலுத்தப்படவில்லை. மத்திய, மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள பொதுத் துறை நிறுவனங்கள் பாதுகாக்கப்படவேண்டும். சேது சமுத்திரத் திட்டத்தை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** விரைந்து நடத்திட மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திட வேண்டும். தமிழகத்தில் கிடைக்கக்கூடிய கனிமங்கள், விவசாயம் சார்ந்த பொருட்களைக் கொண்டு தொழில்கள் துவங்கவேண்டும்.

திண்டுக்கல்லில் பல்வேறு தொழில்கள் இன்றைக்கு பாதிப்படைந்திருக்கின்றன. E.I.தோல்களுக்கு *15* சதவிகிதம் சுங்க வரி மத்திய அரசு போடுவதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்தவேண்டும்.

திண்டுக்கல்லில் Leather Park மற்றும் வேளாண் உணவுப் பொருள் சார்ந்த பூங்கா ஒன்று அமைக்கவேண்டும். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவித்த ஜவுளிப் பூங்கா அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்லாமல் இருக்கிறது. அநேகமாக சென்னையில் ஆரம்பித்து திருச்சி வரை பல்வேறு தொழில்களை அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையில் துவங்கி கன்னியாகுமரி வரையிலும். . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, உரையை முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** கன்னியாகுமரி வரை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் திண்டுக்கல் மாவட்டம், இருந்த தொழில்களையும் இழந்திருக்கிறது. புதிய தொழில்களை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு பாண்டியராஜபுரம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை அரசு ஏற்று நடத்தவேண்டும் எனக் கருத்து தெரிவித்து நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி. உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரம் *7* நிமிடங்கள்தான்.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முதலில் நன்றி கூறுகிறேன். விருதுநகர் மாவட்டம், ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை நவீனப்படுத்துவதற்காக பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அண்ணன் உதயசூரியன் தலைமையில் வந்திருந்த குழுவிடம் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் அளித்த கோரிக்கையின் அடிப்படையில் அவர்களும் முதல்வரிடம் சொல்லி இந்த நிதிநிலை அறிக்கையில் ரூபாய் *82* கோடி ஒதுக்கியதற்கு விருதுநகர் மாவட்ட மக்களின் சார்பில் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *12–45*

கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை தொழில் வளர்ச்சிக்கு எதிரான கட்சி அல்ல. தொழிலைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கின்ற அந்தத் தனியாரைத்தான் கம்யூனிஸ்ட்களாகிய நாங்கள் எதிர்க்கிறோம். இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு வகையான புதிய, புதிய தொழில்கள் வருவதும், தகவல் தொழில்நுட்பத்தில் தமிழகம் முன்னேறுவதையும் நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இலக்கு என்பது எதிர்காலத்தில் *27* சதவிகிதம் வர வேண்டும் என்று அறிக்கையில் கூறப்பட்டிருப்பதை நாங்கள் முற்றாக ஆதரிக்கிறோம். ஆனால், அதேசமயத்தில் இன்றைக்கு சிறப்புப் பொருளாதார

மண்டலங்களுக்கு நிலங்கள் கையகப்படுத்தப்படும்போது, விவசாய நிலங்களைக் கையகப்படுத்தக்கூடாது என்று ஏற்கெனவே அறிக்கையில் சொல்லி இருக்கிறார்கள். நாங்குநேரியில் இன்றைக்கு தகவல் தொழில்நுட்பப் பூங்கா வருகிறது. எங்களுக்கெல்லாம் மனம் குளிர்கிறது. ஆனால், அந்த நாங்குநேரிக்கு ஜீயர் மடத்தினுடைய இடத்தைக் கைப்பற்றும்போது நஞ்சை நிலங்களையும் சேர்த்தே கைப்பற்றி இருக்கிறார்கள். அந்த நஞ்சை நிலத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் விதி விலக்கு கொடுக்கவேண்டும். குறிப்பாக அங்கே இருக்கின்ற தெற்கு ஆலங்குளம், வேப்பங்குளம் போன்ற இடங்களில் இருக்கின்ற நிலத்தை, நல்ல கொழுப்பு குட்டி நஞ்சை என்று சொல்வார்கள், அந்த நஞ்சை நிலத்திற்கு விதி விலக்கு கொடுக்க வேண்டும். அதோடு ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறுவுவதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு இடம், எவ்வளவு ஏக்கர் என்பதை நிர்ணயம் செய்யவேண்டும்.

பொதுவாக சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஒரு குறிப்பிட்ட நகரத்தை மட்டும் சுற்றி இராமல் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்லப்படவேண்டும். எங்கள் விருதுநகர் மாவட்டத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும் என்று 2007–2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. ஆனால், இதுவரை நடவடிக்கையும் இல்லை, 2008–2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும் அதுசம்பந்தமாக எதுவும் கூறப்படவில்லை. எனவே, திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதோ என்ற ஒரு சந்தேகத்தை எங்கள் மாவட்ட மக்களுக்கு இது ஏற்படுத்துகிறது.

இப்போது பஞ்சாலைத் தொழில் என்பது ஒரு கடுமையான நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறது. எங்கள் விருதுநகர் மாவட்டத்தில் இருக்கின்ற பஞ்சாலைத் தொழில் நெருக்கடியிலுள்ளது. எனவே, அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்கும், அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கடந்த கூட்டத்தில் நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் போராடிக்கொண்டிருக்கும்போதே நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிரச்சினை சம்பந்தமாக உடனடியாக மத்திய அமைச்சரிடம் சொல்லி அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம் என்ற உறுதிமொழியை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இதே சட்டமன்றத்தில்



அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் அதன்மீதான நடவடிக்கை என்பது சரியாக இன்னும் வரவில்லை. எனவே, நமது சட்டமன்றத்தின்மூலம் மத்திய அரசை நிர்ப்பந்தித்து, அந்த நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுவதற்கு, மாநில அரசு முயற்சி எடுக்கவேண்டும்.

தொழில் வளர்ச்சியில் மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் செயல்பாடுகள் இருக்கவேண்டும். Hyundai, Ford Car கம்பெனிகள் தொடங்கப்பட்டபோதே 6,000 கோடி ரூபாய் மூலதனம் என்று பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டது. இறுதியில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுடைய எண்ணிக்கையைப் பார்க்கும்போது, முதலீட்டிற்குத் தகுந்தாற்போல தொழிலாளர்களுடைய எண்ணிக்கை இல்லை. அதிலும் குறிப்பாக, தமிழர்கள் எத்தனை பேர் என்று கணக்குப் பார்க்கும்போது முக்கியப் பணிகளில் எல்லாம் தமிழர்கள் பெரும்பாலும் இல்லை. மற்ற பணிகளில்தான் தமிழர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, பெரிய கம்பெனிகளோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தும்போது, தமிழர்களுக்கு, தமிழ்நாட்டுக்காரர்களுக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கக்கூடிய முறையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அமைக்கப்படவேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படும்போது பல்வேறுவிதமான சலுகைகள் அதிகமாக அள்ளிக் கொடுத்துவிடுகிறார்களோ என்ற ஒரு சந்தேகம் மக்களிடத்திலே ஏற்படுகிறது. எனவே, அந்த ஒப்பந்தத்தினுடைய அறிக்கையை அவை உறுப்பினர்களுக்காவது கொடுத்தால் உதவியாக இருக்கும் என்ற ஒரு பொதுவான கருத்து இப்போது இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 12–50

தமிழ்நாட்டில் ஏற்கெனவே நடந்துகொண்டிருந்த தொழில்கள், மக்களுடைய வாழ்வை ஆதாரமாகக் கொண்டு நடந்துகொண்டிருந்த பல தொழில்கள் இன்றைக்கு மூடப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்கு நூற்பாலைகள், கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. எங்கள் தொகுதியில் இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அதை அரசே நேரடியாக எடுத்து நடத்த முடியாவிட்டாலும், அரசாங்கமும், தனியாரும் சேர்ந்தாவது அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

தொழில்களுக்கெல்லாம் அடிப்படை, விவசாயத் தொழில். எனவே, தனியாக ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது விவசாயத் துறைக்கு அமைக்கப்படவேண்டும். உலகமயம், தாராளமயம் கடைப்பிடிக்கப்பட்ட நாடுகளில் எல்லாம் பெரும் நெருக்கடியிலும், சிக்கல்களிலும் இப்போது மக்கள் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். உலகமயம், தாராளமயத்தின் மூலமாகத்தான் இப்போது உலகத்திலேயே உணவு நெருக்கடி என்பது ஏற்பட்டிருக்கிறது. அதை மறந்துவிட்டு, ஜார்ஜ் புஷ் போன்றவர்கள் கூட, இந்தியர்கள் சாப்பாட்டு இராமன்கள் அதனால்தான், உணவு விலை கூடிவிட்டது என்று சொல்லி இந்தியர்களையே இன்றைக்கு குறை சொல்லக்கூடிய அளவுக்கு அமெரிக்காவின் ஜார்ஜ் புஷ்ஷுக்கு தைரியம் வந்திருக்கிறது. ஆனால், மத்திய அரசோ, நமது பிரதமரோ அதைப்பற்றி இதுவரை ஒரு வார்த்தைகூட கண்டிக்காதது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.

**திரு. தி. இராமசாமி:** அது வருத்தப்படக்கூடிய ஒரு செய்தியாக இருந்து கொண்டிருக்கிறது. உணவு உற்பத்தி என்பது உலகம் முழுதும் வீழ்ச்சியடைந்திருந்தாலும் இந்தியாவில் உணவு உற்பத்தித் தன்னிறைவில், உணவு உற்பத்தியில் கடந்த காலங்களைவிட வீழ்ச்சி ஏற்படாமல் இருந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு இந்திய விவசாயிகள்தான் காரணம். அவர்கள் பாதுகாக்கப்படவேண்டும். அவர்களைப் பாராட்ட வேண்டும். விநியோகத்தில் ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகள்தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணமே தவிர இந்தியர்கள் அதிகமாக உணவு உண்பதுதான் இதற்குக் காரணம் என்று கூறுவதைக் கண்டிக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அதைப்போல மதுரையில் சிப்காட் அமைக்கக்கூடிய அந்த இடத்தை கையகப்படுத்துவதற்கு விவசாயிகள் எதிர்த்தார்கள் என்ற காரணத்தால் கையகப்படுத்தக்கூடிய அந்த இடம் கைவிடப்பட்டிருக்கிறது. வேறு மாற்று இடம் தேர்வு செய்து கையகப்படுத்தி, மதுரையில் சிப்காட் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கான அந்த பெருமுயற்சியை உடனடியாக அரசாங்கம் செய்யவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானதாஸ் அவர்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 5 நிமிடங்கள்.

***திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், மக்கள் தலைவர் அண்ணன் வைகோ அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக அரசின் கவனம் தென் தமிழகத்தின் பக்கம் திரும்ப வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். தென் தமிழகத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி உற்பத்தி மையங்களையும், சுற்றுலா மையங்களையும் ஏற்படுத்தவேண்டும்.

சீனாவில் பட்டாசு ஏற்றுமதி செய்வது எளிதாக உள்ளது. ஆனால், நம் நாட்டிலிருந்து பட்டாசு ஏற்றுமதி செய்வதில் பல சிரமங்கள் உள்ளன. இவற்றைக் களைந்து பட்டாசுப் பொருட்களை தாராளமாக ஏற்றுமதி செய்ய வழிவகைகள் செய்தால் சிவகாசியில் பட்டாசுத் தொழில் மேலும் வளரும். பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்து ஏற்படாவண்ணம் பாதுகாக்க விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டும். விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

வாகன உற்பத்தி, கட்டுமானம், ஜவுளி, தகவல் தொழில்நுட்பம் போன்ற தொழில்களுக்கு தேர்ச்சியும், திறமையும் மிக்க ஊழியர்கள் தேவைக்கேற்ப தமிழகத்தில் இல்லையெனக் கூறப்படுகிறது. எனவே, இத்துறைகளில் போதிய பயிற்சி நிறுவனங்களை உருவாக்க வேண்டும். தென் மாவட்டங்களில் கல்வி, உணவு பதப்படுத்துதல் மற்றும் சுற்றுலாத் துறைகளில் அதிக முதலீடு தேவை. தென் மாவட்ட வளர்ச்சிக்கான தனித் திட்டம் தீட்டி அதில் விவசாயம், சுற்றுலா, ஜவுளி, அச்சுத் தொழில், பட்டாசுத் தொழில், தீப்பெட்டித் தொழில் போன்ற தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்து இத்தொழில்களின் மேம்பாட்டிற்கு வழி செய்யவேண்டும். அச்சுத் தொழில் சிவகாசியில் முக்கியத் தொழில். இதை மேலும் நவீனப்படுத்தி, அச்சுத் தொழிலில் உலகின் தலைநகரமாக சிவகாசியை உயர்த்த வேண்டும். சிவகாசியைச் சார்ந்த பகுதியில் பட்டாசு, தீப்பெட்டி, அச்சுத் தொழில் அதிகம் நடைபெறுவதால் அப்பகுதிக்குச் சிறப்பு அந்தஸ்தை வழங்கி ஊக்கப்படுத்த வேண்டும்.

பிற்பகல் 12–55

பல இலட்சம் மக்களுக்கு வேலைவாய்ப்பையும், அன்றாட வருமானத்தையும் தருகின்ற குடிசைத் தீப்பெட்டித் தொழில் பாதுகாக்கப்படவேண்டும். குடிசைத் தீப்பெட்டி உற்பத்தியாளர்களின் குறைகளைக் கண்டு சீரமைக்க உயர்மட்டக் குழு அமைத்து அவர்களுக்கு அரசு உதவிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிவகாசி தொகுதியிலுள்ள ஆலங்குளம் சிமெண்ட் ஆலைக்கு மேலும் கூடுதலாக நிதி ஒதுக்கி சீரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் நிறுவனத் தொழிலாளர்களின் நியாயமான நீண்டநாள் கோரிக்கைகளை அரசு பரிசீலித்து உதவவேண்டுமெனக் கோருகிறேன்.

அடுத்து, மின்னணுக் கழிவுகள் (e–waste). அதிகமான எண்ணிக்கையில் Tidel Park மற்றும் software நிறுவனங்கள் உருவாவதால், மின்னணுக் கழிவு அதிகமாக ஏற்படுகின்றது. பல மேலைநாடுகள் இந்த மின்னணுக் கழிவால் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, e–waste management — மின்னணுவுக் கழிவுக்காக ஒரு கொள்கையைத் தமிழக அரசு உருவாக்க வேண்டும் என்று ஆளுநர் உரையின் மீதான விவாதத்திலேயே நான் குறிப்பிட்டிருந்தேன். அதற்காக என்ன கொள்கையைத் தமிழக அரசு வகுத்துள்ளது என்பது தெரிவிக்கப்படவில்லை. தொழில் தொடங்குவதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய பல்வேறு நடைமுறைகள், வழிமுறைகள் மேலும் எளிமைப்படுத்தப்பட்டு அனுமதி விரைவில் தரப்பட வேண்டும்.

தொழில் துறை வெற்றி பெற அறிவியல் தொழில்நுட்பக் கொள்கை, தொழில் துறைக் கொள்கை, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கொள்கைகள் ஒருங்கிணைக்கப்படவேண்டும். பின்லாந்து நாட்டின் தொழில் துறை வெற்றிக்கு இதுவே முக்கிய காரணம். உலகிலேயே பின்லாந்து நாட்டில்தான் தொழில் துறை வெற்றிகரமாகச் செயல்படுகின்றது. காரணம், அந்தத் தொழில் துறைக் கொள்கை, நான் குறிப்பிட்ட இந்த அம்சங்களை உள்ளடக்கியதாகும்.

ஒரு நல்ல பொருளாதார அல்லது ஒரு தொழில் நிர்வாகத்தின் வெற்றி என்பது வேலைவாய்ப்பை உருவாக்குவதில்தான் அடங்கியுள்ளது. "அடுத்த 10 ஆண்டுகளில் பல மேலைநாடுகளில் தொழிலாளர் தட்டுப்பாடு ஏற்படும் நிலையில், தமிழகம் உட்பட நம் நாட்டில் 47 மில்லியன் மக்கள் தொழில் தேடும் நிலையில் இருப்பார்கள். அதுவும் இவர்களின் சராசரி வயது 24 ஆக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது" என ஆய்வுகள் கூறுகின்றன. எனவே, தமிழக அரசு இதைக் கருத்தில்கொண்டு திட்டங்கள் தீட்ட வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க இடம் பார்க்கப்பட்டது. விவசாயிகள் எதிர்ப்புக் காரணமாக அந்த இடம் கைவிடப்பட்டது. வேறு இடம் பார்ப்பதாக ஆட்சியர் அறிவித்துள்ளார். காலதாமதம் இல்லாமல் விரைவில் பொருத்தமான இடத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன். வாய்ப்பிற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன். திரு. எல். ரவிச்சந்திரன், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

***திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழை கைத்தறி நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த சாதாரணமான என்னை, கழகத்தில் சேலம் மாநகர் மாவட்டத்தில் 11–வது வட்ட கழகச் செயலாளராக ஆக்கி, ஒரு கிளைக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினர் ஆகலாம் என்று ஜனநாயக ரீதியில் மாண்புமிகு அம்மா அவர்களின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில், கிளைக் கழகச் செயலாளராக இருந்த என்னை அன்றைக்கு சட்டமன்ற வேட்பாளராக அறிவித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியால் 12,817 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச் செய்த சேலம் 1–வது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக மைனாரிட்டி சமூகமான, வெள்ளுடைவேந்தர் சர். பிட்டி தியாகராயரின் தெலுங்கு தேவாங்கர் குலத்தைச் சார்ந்த ஒருவரை, எந்தவொரு அரசியல் கட்சியும் சட்டமன்ற உறுப்பினர் ஆக்காமல் இருந்த நிலையில், துணிச்சலாக என்னை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய ஒப்பற்ற தலைவி, சரித்திரத்

தலைவி, தேசியத் தலைவி, எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, என் நெஞ்சார்ந்த நன்றியினை அவரது பொற்பாதங்களில் வைத்து சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை, மானியக் கோரிக்கை எண் 31– தகவல் தொழில்நுட்பத் துறையில் எனது கருத்துகளைப் பதிவு செய்ய அனுமதி அளித்ததற்கு தங்களுக்கும் என் நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் எத்தனை புதிய தொழில்கள் தொடங்கப்பட்டன, எத்தனை தொழில்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் சென்றார் என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1–00

மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சியை எடுத்துக்கொண்டோமானால், 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இன்றைய ஆட்சியாளர்களின் அன்றைய ஆட்சியில் ரூ.1,11,100/– கோடியாக இருந்ததை, மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் தனது நிர்வாகத் திறமையால் 2001 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை ரூ.1,88,928/ – கோடியாக உயர்த்திச் சாதனை புரிந்தார். தி.மு.க. ஆட்சிக்கும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்கும் உள்ள வித்தியாசம் அதிகப்படியாக ரூ.77,828 கோடி ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, தமிழகத்தில் உற்பத்தித் துறையில் முதலீடு என்று கணக்குப் பார்த்தால், அதிலும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களே முன்னிலையில் இருக்கிறார்கள்.

1991 முதல் 1996 வரை எங்கள் அம்மா அவர்களின் ஆட்சியில் ரூ.35,953/– கோடியாக இருந்ததை, பின்வந்த தி.மு.க. ஆட்சியில் ரூ.37,306/– கோடியாக சுமார் 1,347 கோடி ரூபாய் உயர்த்தியது. ஆனால், மீண்டும் 2001–ல் ஆட்சிக்கு வந்த எங்கள் அம்மா அவர்களின் பொற்கால



ஆட்சியில் அது 2001 முதல் 2006 வரைக்கும் சுமார் ரூ.45,490/– கோடியாக உயர்த்தி அதாவது முந்தைய தி.மு.க. ஆட்சியைவிட 8,184 கோடி ரூபாய் உற்பத்தித் துறையில் முதலீட்டைப் பெருக்கி ஓர் வளமான தமிழகத்தை உருவாக்கினார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல, ஏற்றுமதித் துறையினை எடுத்துக்கொண்டாலும் எங்கள் மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக் காலமே சிறந்து விளங்கியது என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டு. 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற இன்றைய ஆட்சியாளர்களின் அன்றைய ஆட்சியில், ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக ரூ.18,000/– கோடி மட்டும்தான் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், அதற்குப் பின்பு 2001–ல் ஆட்சிக்கு வந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் சராசரியாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.40,000/– கோடி ரூபாயாக உயர்த்தி முந்தைய ஆட்சியாளர்களின் ஆட்சியைவிட ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக சுமார் ரூ.22,000/– கோடி ரூபாய் உயர்த்திக்காட்டி சாதனை படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்படி எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், முன்னால் இருந்த தி.மு.க. ஆட்சியைவிட மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலமே சிறந்து விளங்கியதற்கு இதுவே சிறந்த எடுத்துக்காட்டாகும். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழகம் தொழில் துறையில் எவ்வளவு சிறப்பாக இருந்தது என்பதற்கு இன்னும் சில எடுத்துக்காட்டுகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சர்க்கரைத் துறையில் மாநிலத்தில் உள்ள பொதுத் துறை நிறுவனத்தில், தி.மு.க.வின் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆட்சியில் கிட்டதட்ட ரூ.623/– கோடி ரூபாய் நஷ்டத்தையும், மேலும் ரூ.1,000 கோடி ரூபாய் அளவிற்கு தொடர் நஷ்டத்தையும் உருவாக்கிவிட்டுப் போனார்கள். ஆனால், பின்பு 2001 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மாண்புமிகு அம்மா அவர்கள் தமது நிர்வாகத் திறமையால் நசிந்துகிடந்த ஐந்து சர்க்கரை ஆலைகளை நஷ்டத்தில் இருந்து இலாபத்தில் இயக்கினார்கள். அந்தப் பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

அதுபோல், 1996–2001 வரை நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை ரூ.174/– கோடியை மாண்புமிகு அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சிக்கு வந்தபின்புதான் வழங்கினார்கள். அந்த ஏழை கரும்பு விவசாயிகள் குடும்பங்களில் ஒளிவிளக்கு ஏற்றிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

[திரு. எல். ரவிச்சந்திரன்] [2008 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும் அம்மா அவர்களின் 1991–1996 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் உள்ள தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் கிட்டத்தட்ட ரூ.13/– கோடி இலாபத்தில் இயங்கி வந்தது. அந்த நிறுவனத்தை பின்பு 1996–ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. ஆட்சியில் G.O.75 என்ற ஓர் ஆணையைப் போட்டு, அந்த G.O.–ல் உள்ள பல குளறுபடிகளினால் 1996–2001 வரை சுமார் ரூ.13/– கோடி ரூபாய் இலாபத்தில் இருந்த தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தை, கிட்டத்தட்ட ரூ.10 கோடி ரூபாய் நஷ்டத்திற்குத் தள்ளிய ஆட்சி தி.மு.க. ஆட்சி. அதுபோல, விருத்தாசலத்தில் உள்ள நஷ்டத்தில் இயங்கி வந்த கல் நார் தொழிற்சாலையை ரூ.24 இலட்சம் இலாபத்தில் இயக்கிய பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

அதுபோல, வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள வெடிமருந்துத் தொழிற்சாலை 1996–2001 வரை தி.மு.க. ஆட்சியில் நஷ்டத்தில் இருந்ததை மாற்றி பின்பு 2001–2006 ஆம் ஆண்டில், அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் அந்த வெடிமருந்துத் தொழிற்சாலையை தமது நிர்வாகத் திறமையால் இலாபகரமாக மாற்றி சாதனை புரிந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

*பிற்பகல் 1–05*

மேலும், தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1996–2001 வரை நஷ்டத்தில் இயங்கி வந்ததை மீண்டும் அம்மா அவர்கள் 2001–ல் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சுமார் 1 கோடி ரூபாய் அளவிற்கு இலாபம் ஈட்டச் செய்தது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேலம் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை, 1991 முதல் 1996 வரை ஆட்சி செய்த மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களுடைய காலத்தில் சுமார் 3 கோடி ரூபாய் இலாபத்தில் வைத்துவிட்டுச் சென்றார்கள். ஆனால், பின்பு 1996–ல் ஆட்சிக்கு வந்த இன்றைய ஆட்சியாளர்கள் 2001 ஆம் ஆண்டு முடிய 3 கோடி ரூபாய் இலாபத்தில் இருந்ததை அவர்கள் உயர்த்தினார்களா என்று கணக்குப் பார்த்தால் ஏமாற்றம்தான் மிச்சம். அந்த தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனத்தை சுமார் 27 கோடி ரூபாய் நஷ்டத்திற்குத் தள்ளிய பெருமை இன்றைய தி.மு.க. ஆட்சியையே சேரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள். . .



2008 மே 5]

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்கு மாறான ஒரு தகவலைத் தந்து கொண்டிருக்கிறார். அவர் புதியதாகப் பேசுகிறார் என்று நினைக்கிறேன். அதனால் பேசட்டும் என்றுதான் நானும் இருந்தேன். சேலம், தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் கடந்த ஆட்சியிலே நஷ்டத்திலே இருந்தது. இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இப்பொழுது இலாபத்திலே இருக்கிறது. ஏதோ நஷ்டத்திலே இருக்கிறதுமாதிரி ஒரு உண்மைக்கு மாறான தகவலையெல்லாம் அவையிலே பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன், உரையை முடியுங்கள்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் தொழில்கள் தமிழகத்தில் எந்த அளவிற்கு இலாபகரமாக, முன்னேற்றப் பாதையில் சென்றன என்பதற்கு இந்த மாமன்றத்திலே மேலும் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கரூர் மாவட்டம், புகளூர் காகிதத் தொழிற்சாலை 1991 முதல் 1996 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் சுமார் 274 கோடி ரூபாய் இலாபத்தில் இருந்தது. ஆனால், அதன்பின்பு வந்த தி.மு.க. ஆட்சியில் 274 கோடி ரூபாய் இலாபத்தை 120 கோடி ரூபாயாகக் குறைத்தது இன்றைய ஆட்சியாளர்களின் சாதனை.

அதுபோல Great place to Work என்ற அமெரிக்க நிறுவனமும், Grow Talent என்ற புதுடெல்லி நிறுவனமும், Business World என்ற பத்திரிகையும் உலகத்தில் உள்ள தொழில்களை ஆய்வு செய்து முன்னேற்றப் பாதையில் உள்ளது என்று கூறியது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான். இதுபோல இந்தியாவிலேயே சிறந்த ஆளுகைக்கான விருதை தமிழகம் சார்ந்த அந்தக் காகிதத் தொழிற்சாலை பெற்றதும் சிறப்பு வாய்ந்த அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே, கார் உற்பத்தியில் அதிகக் கார்களை உற்பத்தி செய்து தமிழகம் சாதனை ஈட்டியதும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான். கார் உற்பத்தியில் தமிழ்நாடு உலகத்திலேயே முதலிடம் பெற்றதும்

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான். 23-2-1996 ஆம் ஆண்டு சென்னையில் ஃபோர்டு கார் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதற்குக் காரணமாக இருந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

அதுபோல ஹுண்டாய் கார் கம்பெனி தொழிற்சாலை சென்னைக்கு வருவதற்குக் காரணமாக இருந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை இந்தச் சபைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்றைய ஆட்சியில் வீடுகளில் எரிவாயு அடுப்புகள் இருக்க எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில்லை. மருத்துவமனைகள் இருக்க போதிய மருத்துவர்களும், மருந்துகளும் இல்லை. நாட்டில் நிலமற்ற ஏழை விவசாயிகள் இருக்க அவர்கள் உழுவதற்கு இரண்டு ஏக்கர் நிலம் இல்லை. பள்ளிகள் இருக்க போதிய ஆசிரியர்கள் இல்லை. தொழிற்சாலைகள் இருக்க ஆலைகள் இயங்குவதற்கு மின்சாரம் இல்லை. இந்த ஆட்சி இருக்க சாதனைகள் இல்லவே இல்லை என்பதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையில் அன்றாட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறையினுடைய மானியக் கோரிக்கைகளின்மீது நடைபெற்றிருக்கக்கூடிய விவாதத்திற்கு சில விளக்கங்களை அளிக்கக்கூடிய ஒரு பெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்தப் பெரும் வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்திருக்கக்கூடிய நமது தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இயக்கத்தில் இருப்பவர்கள்மீது பெரிய அளவில் நம்பிக்கை வைப்பதும், அதன் காரணமாக சில அரிய பொறுப்புகளை அவர்களிடத்திலே ஒப்படைத்து பணியாற்றச் செய்வதும், அந்தப் பணியை ஆற்றுவதைப் பார்த்து ஆறுதலும், பெருமையும் அடைவதும் தலைவர் கலைஞர் அவர்களுடைய தனிப் பெரும் தலைமைப் பண்பாகும் என்பதையும் நான் இங்கே அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

"Trust men and they will be true to you; Treat them greatly and they will show themselves great." "உடனிருப்பவர்கள்மீது நம்பிக்கை வையுங்கள், அவர்கள் உண்மையாக நடந்துகொள்வார்கள்; அவர்களைப் பேரன்போடு நடத்துங்கள், நீங்கள் பெருமையடையும்படி அவர்கள் செயலாற்றுவார்கள்." அறிஞர் எமெர்சன் வகுத்துத் தந்த அந்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்பவர்தான் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

பல ஆண்டுக் காலமாக தொழில் மற்றும் வணிகத்தில் நீண்ட பாரம்பரியம் கொண்ட மாநிலமாகும் நம்முடைய தமிழகம். சங்க காலந்தொட்டு, தமிழ்நாட்டினுடைய வணிகர்கள் இன்றைய கிரேக்கம், சீனா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மியான்மர், மலேயா, அரபு நாடுகள் போன்ற பல்வேறு வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு, வணிகத் தொடர்பு கொண்டிருந்திருக்கிறார்கள் என்பது கடந்தகால வரலாறாக அமைந்திருக்கிறது. கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஏலமும், இலவங்கமும், இஞ்சியும், மிளகும் மேற்காசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. யூதர்களின் தலைவர் மோசஸ் நடத்திய வழிபாட்டில் தமிழகத்து ஏலக்காயைப் பயன்படுத்தியிருக்கிறார். அந்தக் காலம் கி.மு. 1490 ஆம் ஆண்டு. தென் அரேபிய நாட்டினுடைய ஷேபா, மன்னர் சாலமனைச் சந்திக்கச் சென்றபோது ஏலம், இலவங்கம் போன்ற நறுமணப் பொருட்களைத்தான் எடுத்துச் சென்றிருக்கிறார். அது சாலமனினுடைய காலம், கி.மு. 1000 ஆம் ஆண்டு.

எகிப்திய வரலாற்றிலிருந்து ஒரு நிகழ்ச்சியை நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். பேரழகி கிளியோபாட்ராவிற்கும் அவருடைய காதலன் ஆண்டனிக்கும் ஒரு போட்டி நடந்ததாம். எவர் அதிக செலவிலே விருந்து வைக்கிறாரோ அவரே போட்டியில் வென்றதாகக்

கருதப்படும். ஆண்டனி பெரும் செலவு செய்து ஒரு பெரிய விருந்தைப் படைத்தார். ஆனால், கிளியோபாட்ரா என்ன செய்தாள் தெரியுமா? பெரும் செலவு செய்து விருந்து வைத்தாளா, இல்லை. அதிகமானப் பண்டங்களைத் தயாரித்து, அந்த உணவைப் படைத்தாளா, அதுவும் கிடையாது. பிறகு என்ன செய்தாள்? கிளியோபாட்ரா தன்னுடைய கழுத்தில் அணிந்திருந்த முத்தை எடுத்து திராட்சை ரசத்திலே அதைக் கரைத்து விருந்து வைத்தாள். ஆண்டனி வைத்த விருந்தினுடைய செலவைவிட பெரும் மதிப்பு கொண்ட வகையில் அந்த விருந்து அமைந்ததாம். அதனால் கிளியோபாட்ரா போட்டியிலே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அந்த விலை மதிக்க முடியாத முத்து எங்கிருந்து, எகிப்து நாட்டிற்குச் சென்று, கிளியோபாட்ராவினுடைய கழுத்தை அலங்கரித்தது தெரியுமா? நம்முடைய தமிழகத்தினுடைய சொந்த முத்து, கொற்கை முத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டு இதே அவையில் இதே மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்து உரையாற்றுகிறபோது பட்டினப்பாலை பாடலில் இடம் பெற்றிருக்கக்கூடிய சில வரிகளைக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடற் துகிரும்
கங்கை வாரியும், காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின்"

என்பதே அந்தப் பாடலின் வரிகளாகும்.

அதாவது, அயல்நாடுகளிலிருந்து கடல் வழியாக மரக் கலங்களில் வந்த குதிரைகளும், தரை வழியாக வண்டிகளின்மூலம் கொண்டு வரப்பட்ட மிளகு மூட்டைகளும், தமிழகத்தின் வடதிசை மலைகளில் கிடைக்கும் விலையுயர்ந்த மணியும், பொன்னும், குடகு மலையில்



விளைந்த மணம் வீசும் சந்தனக் கட்டைகளும், அகில் கட்டைகளும், தென்திசைக் கடலில் மூழ்கி எடுத்த முத்தும், கீழ்திசைக் கடலில் மூழ்கி எடுத்து வந்த பவளமும், கங்கையாற்றுப் பகுதியில் விளைந்த பொருட்களும், காவிரிப் பாசனத்தில் விளைந்த பல பொருட்களும், ஈழ நாட்டு உணவுப் பொருட்களும், கடார நாட்டுப் பல பொருட்களும் என அருமையானதும், அளவில் பெரிய வகையிலானதும் ஆகிய பொருட்கள் எல்லாம் ஒன்றாக வந்து கலந்து, குவிந்து, வளம் நிறைந்து காணப்படும் பெரும் தெருக்களைக் கொண்டது காவிரிப்பூம்பட்டினம் என்று காவிரிப்பூம்பட்டினம் எவ்வாறு மிகப் பெரிய வாணிப மையமாக விளங்கியது என்று அன்றைக்கு இந்த அவையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–15

ஆம். அதேபோலத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் எப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறதோ, அப்போதெல்லாம் தொழில் வளத்தைப் பெருக்கிட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து பல திட்டங்களைத் தீட்டி, அதற்காகத் தொடர்ந்து தன்னுடைய கடமையை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இதே தமிழகத்தில் காங்கிரஸ் பேரியக்கத்தினுடைய ஆட்சி நடைபெற்ற அந்தக் காலகட்டத்தில்—எங்களுடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள்— பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அவரைத் தொடர்ந்து பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் இதே தமிழகத்தினுடைய முதலமைச்சர்களாகப் பொறுப்பிலிருந்த அந்தக் காலகட்டத்திலே தொழில் வளர்ச்சிக்குப் பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு, அதன்மூலமாகப் பல தொழிற்சாலைகள் இதே தமிழகத்திலே உருவாகியிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நெய்வேலிச் சுரங்கம், திருச்சி பெல் நிறுவனம், கிண்டி, அம்பத்தூர் தொழிற்பேட்டைகள் போன்ற பல தொழிற்சாலைகள் அந்தக் காலகட்டத்திலேதான் தமிழகத்திற்கு வந்து சேர்ந்தன. (மேசையைத் தட்டும் ஒலி)

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பிலிருந்தபோது, இன்றைக்கு திருச்சிக்கு அருகில் இருக்கக்கூடிய திருவெறும்பூர் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய பெல் கனரகத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. மத்திய அரசு கனரகத்

தொழிற்சாலையைத் தமிழகத்திற்கு வழங்க வேண்டுமென்று முடிவெடுத்தபோது, அந்த இடத்தைத் தேர்வு செய்வதற்காக மத்தியிலே இருக்கக்கூடிய சில அதிகாரிகள் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள்; பல மாவட்டங்களில் தங்களுடைய பயணத்தை நடத்தி ஆய்வு நடத்துகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் திருப்தியான இடம் கிடைக்கவில்லை. அதனால் சென்னைக்குத் திரும்பி, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த, மாண்புமிகு பெருந்தலைவர் காமராஜர் அவர்களைச் சந்தித்து, கனரகத் தொழிற்சாலை வைக்கக்கூடிய, அதை உருவாக்கக்கூடிய ஏற்ற இடம் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதனால் இந்தத் திட்டத்தை வேறு மாநிலத்திற்கு மாற்றிவிடலாம் என்று நாங்கள் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப் போகிறோம் என்று சொன்னபோது, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், கனரகத் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னால் என்ன வசதிகள் தேவை என்று கேட்டார். உடனே அந்த அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள்; பரந்த நிலம் வேண்டும், நீர் வளம் நிறைந்திருக்கக்கூடிய நிலமாக அது அமைந்திடவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். உடனடியாகப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் அந்த அதிகாரிகளிடத்திலே சொன்னார்களாம்; நீங்கள் உடனடியாக திருச்சிக்குச் செல்லுங்கள்; திருச்சியிலியிருந்து தஞ்சைக்குச் செல்லக்கூடிய வழியிலே திருவெறும்பூர் என்கிற ஓர் ஊர் இருக்கிறது. அங்கே போய்ப் பாருங்கள்; நீங்கள் கேட்கிற வசதிகள் எல்லாம் கிடைக்கும் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். உடனே அந்த அதிகாரிகள், தமிழகத்தைச் சார்ந்த சில அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு, அந்தப் பகுதிக்குச் சென்று, அந்த இடத்தைப் பார்வையிட்டு அந்த இடத்தை உடனடியாகத் தேர்வு செய்து அந்த இடத்திலே இன்றைக்கு அமைந்திருக்கக்கூடிய பெல் நிறுவனம்தான் அந்த நிறுவனம் என்பதை *(மேசையைத் தட்டும் ஒலி)* நான் இங்கே பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் எதற்காகக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், அன்றைக்கு மத்தியிலிருந்து வந்த அதிகாரிகள், நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த அதிகாரிகளிடத்திலே பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப்பற்றிப் பாராட்டிச் சொல்கிறபோது சொன்னார்களாம், "உங்களுடைய முதலமைச்சர் தமிழகத்தினுடைய புவியியல் விவரத்தையே தன்னுடைய மூளையிலே பதிய வைத்திருக்கிறார்" என்று பாராட்டிச் சொன்னார்களாம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இது திருவெறும்பூரில் அமைந்திருக்கக்கூடிய பெல் நிறுவனத்தினுடைய வரலாறு.



அதேபோன்று ஒரு வரலாறு இராணிப்பேட்டையில் அமைந்திருக்கக்கூடிய சிப்காட்டுக்கும் உண்டு. நான் அதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற நேரத்தில், அன்றைக்கு தொழில் துறை அமைச்சராக இருந்தவர் மதிப்பிற்குரிய திரு. வெங்கட்ராமன் அவர்கள். ஒரு தொழில் வளாகத்தை இராணிப்பேட்டையிலே உருவாக்க வேண்டுமென்று அன்றைக்கு அரசு முடிவெடுத்து, அதற்காக இடத்தையும் தேர்வு செய்தது. தேர்வு செய்ததற்குப் பின்னால் அந்த இடத்திற்குச் சரியான வசதிகள் இல்லை; தொழில் வளாகம் தொடங்குவதற்கு ஏற்ற இடம் இல்லையென்று அன்றைக்கு இருந்த ஆட்சி முடிவு செய்தது. அதற்குப் பிறகு இடத்தைத் தேர்வு செய்து, அந்த இடம் சரியாக இருக்காது என்று அவர்களே முடிவு செய்து, அதற்குப் பிறகு அதை விற்பதற்கான முயற்சிகளில் கடந்த கால ஆட்சி ஈடுபட்டது. அதாவது, அன்றைக்கு இருந்த காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி. அந்த நேரத்திலேதான் தமிழகத்திலே 1967 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அண்ணா தலைமையிலே ஆட்சி வருகிறது. அண்ணா மறைவிற்குப் பிறகு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறார். அந்தச் சூழ்நிலையிலேதான் அவரிடத்திலே அந்தக் கோப்பு வருகிறது. அந்தக் கோப்பைப் பார்த்ததற்குப் பின்னால் அன்றைக்குத் தொழில் துறை அமைச்சராக இருந்த திரு. மாதவன் அவர்களையும் அழைத்துக்கொண்டு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் நேரடியாக இராணிப்பேட்டைக்குச் சென்று அந்த இடத்தை ஆய்வு செய்கிறார். "ஏன் இந்த இடத்தை விற்க வேண்டும்? தேவையில்லை, இந்த இடத்திலேயே இந்தத் தொழில் வளாகத்தை உருவாக்கலாம், உருவாக்க முடியும்" என்று சொல்லி, அப்படி அமைந்த இடம்தான் இன்றைக்கு இராணிப்பேட்டையில் அமைந்திருக்கக்கூடிய சிப்காட் தொழில் வளாகம் என்பதை நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–20*

ஆக, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்டதுதான் 'சிப்காட்'; 1971–லே 'சிட்கோ'; அதைத் தொடர்ந்து 'எல்காட்'; தூத்துக்குடியிலே 'ஸ்பிக்' தொழிற்சாலை; ஆலங்குளத்திலே 'அரசு சிமென்ட் தொழிற்சாலை'; மதுரை மேலூரில் அமைந்திருக்கக்கூடிய 'பாண்டியன் கெமிக்கல்ஸ்'; 'சேலம் இரும்பாலை' இப்படிப் பல தொழிற்சாலைகள் கழக ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டிருக்கின்றன. *(மேசையைத் தட்டும் ஒலி)*

இங்கேகூட அ.தி.மு.க.–வைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாம் பேசுகிறபோது, ஏதோ அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழ்நாடு தொழில் துறையில் முன்னுக்கு வந்தது போன்று, 'எங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் நாங்கள் முன்னேற்றினோம்' என்றெல்லாம் பெருமையோடு பேசினார்கள். நான் இங்கே அடக்கத்தோடு தெரிவிக்க விரும்புவது, 1989–91, இரண்டே ஆண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தொழில் வளர்ச்சியிலே அதிக அக்கறையை எடுத்த நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அந்தப் பணியில் ஈடுபட்ட காரணத்தால், இந்தியாவிலேயே நம்முடைய தமிழகம் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில், மூன்றாவது இடத்திற்குக் கொண்டு வரப்பட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்குப் பின்னால், 1991–லே ஆட்சி மாற்றம்; அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. 1991–லிருந்து 1996 வரை ஐந்து ஆண்டுக் காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மூன்றாவது இடத்திலிருந்த நம்முடைய தமிழகத்தை ஐந்தாவது இடத்திற்குப் பின்னுக்குத் தள்ளியது; அதுதான் உண்மை. அதற்குப்பிறகு மீண்டும் 1996–லே கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், தொழில் வளர்ச்சியிலே அதிக அக்கறை எடுத்துக் கொண்டதற்குப்பிறகு—1996–லே, இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் CMIE என்கிற மையத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேகூடத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள்; 'தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு முதலிடத்திலே இருக்கிறது' என்று அவர்களே அன்றைக்குக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள்.

சமீப காலமாக வெளிநாட்டு நிறுவனங்கள் நம்முடைய தமிழ்நாட்டிலே தொழில் தொடங்கி வருவதையும், அதைப்போல, தமிழகத்தைச் சார்ந்திருக்கக்கூடிய நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்களோடு தொடர்புகொண்டு, தமிழகத்திலே தொழில் தொடங்கி வருவதையும், நம்முடைய அரசு சிறப்பான வகையில் ஊக்குவித்துக் கொண்டிருக்கிறது.

1990–91 ஆம் ஆண்டு முதல், உலகளவில் தொழிற்கொள்கைகள் பல மாறுதல்களை அடைந்திருக்கின்றன. அதாவது, கட்டுப்பாடுகள், நிபந்தனைகள், அரசு அனுமதிகள் என்று இருந்துவந்த லைசென்ஸ் ராஜ்ஜியம் அகற்றப்பட்டு, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை (Liberalised Economic Policy) இப்போது அமல்படுத்தப்படுகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.



அதேபோல, சர்வதேசத் தடையற்ற வணிகம் மற்றும் தொழில் கொள்கைகளுக்கு இணங்க, மத்திய அரசு மேற்கொண்டிருக்கக்கூடிய தொழில் மற்றும் வர்த்தகக் கொள்கைகளுக்கு ஏற்ப, தமிழகத்தைத் தொழில் துறையில் மட்டுமல்லாமல், ஏற்றுமதி, இறக்குமதி போன்ற இனங்களிலும் முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்கு இந்த அரசு சிறப்பான முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த முயற்சிக்கு உறுதுணையாக இருந்து அரசினுடைய கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றக்கூடிய நிறுவனங்கள்; நிலவியல் மற்றும் சுரங்கம் (Geology and Mines), சர்க்கரைக் கழகம் (Sugar Corporation), தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் (TANCEM), தமிழ்நாடு உப்பு நிறுவனம் (Tamil Nadu Salt Corporation), தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN), தமிழ்நாடு மேக்னசைட் கழகம், தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (TEL) போன்ற நிறுவனங்களெல்லாம் இப்போது இந்த அரசுக்குத் துணை நின்று தன்னுடைய கடமையை ஆற்றிக் கொண்டிருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகம் எப்பொழுதெல்லாம் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறதோ, அப்பொழுது போடப்பட்டிருக்கக்கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU–Memorandum of Understanding), அதன்மூலமாக வரப்பெற்றிருக்கக்கூடிய முதலீடுகள், அதன்மூலமாக இப்போது உருவாகிக் கொண்டிருக்கக்கூடிய வேலைவாய்ப்புகள், இவையெல்லாம் இப்போது நம்முடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய முயற்சிகளுக்கு எடுத்துக்காட்டுகளாய், சான்றுகளாய் விளங்கிக் கொண்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், 1991–96–ல் அ.தி.மு.க.–வினுடைய ஆட்சி நடைபெற்றபோது, அந்த ஐந்தாண்டுக் காலத்தில் 1,700 கோடி ரூபாய் முதலீட்டிலே, ஒரேயொரு MoU கையெழுத்திடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால், 1996–2001–ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, 3,728 கோடி ரூபாய் முதலீட்டிலே 9 MoUs கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு மீண்டும் தமிழ்நாட்டிலே அ.தி.மு.க. 2001–லே ஆட்சிக்கு வந்து ஐந்தாண்டுக் காலம், அதாவது 2006 வரையிலே பொறுப்பில் இருந்தபோது, 2,560 கோடி ரூபாய் முதலீட்டிலே 6 MoUs கையெழுத்திடப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 1–25*

இப்போது ஐந்தாம் முறையாக தமிழ்நாட்டிலே நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த 2006–2008, இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலே, நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், 18 ஆயிரத்து 483 கோடி ரூபாய் முதலீட்டிலே (மேசையைத் தட்டும் ஒலி) 14 MoU–க்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. அதன்மூலமாக ஏறக்குறைய ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதாவது, அ.தி.மு.க. ஆட்சியினுடைய 10 ஆண்டுக்காலம், 1991–லிருந்து 1996–வரை மற்றும் 2001–லிருந்து 2006–வரை, அந்த 10 ஆண்டுக்காலத்தில், 4,260 கோடி ரூபாய் முதலீட்டிலே மொத்தம் 7 MoU–க்கள் கையெழுத்திடப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய 7 ஆண்டுக்காலம், அதாவது 1996–லிருந்து 2001 வரை, 2006–லிருந்து 2008 வரை, இந்த 7 ஆண்டுக்காலத்திலே, 22 ஆயிரத்து 211 கோடி ரூபாய் முதலீட்டிலே 23 MoU–க்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஒன்றை நான் குறிப்பிட வேண்டுமென்று சொன்னால், அ.தி.மு.க. ஆட்சியினுடைய 10 ஆண்டுக்கால முதலீட்டைவிட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய 7 ஆண்டுக்கால முதலீடு 4 மடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில், இந்த ஆட்சியிலே, Motorola, Apollo Tyres, Tessolve Corporation, DELL Computers, Growth Link Limited, Samsung Electronics, Caparo வாகனத் தொழிற்சாலை, Sanmina கழகம், Tata உருக்கு நிறுவனம், M.P.B.L. மறுசுழற்சி சக்தி நிறுவனம், Hyundai Motor நிறுவனம், Renault–Nissan நிறுவனம், Signet Solar நிறுவனம், M.R.F. ஆகிய 14 தொழில் நிறுவனங்கள் 18 ஆயிரத்து 483 கோடி ரூபாய் முதலீட்டிலே MoU ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்த 14 தொழில் நிறுவனங்களில் 6 தொழில் நிறுவனங்கள் ஏற்கெனவே தங்களுடைய உற்பத்தியையும் தொடங்கியிருக்கின்றன என்பதையும் நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அண்மையிலேகூட, மத்திய அரசினுடைய வர்த்தக மற்றும் தொழில் அமைச்சகத்தினுடைய அறிக்கையிலே, தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சியைப் பார்த்து அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.



தமிழகத்திலே தொழில் முதலீடு சமீபகாலமாக அதிகரித்து வருகிறது. அதையொட்டி ஒரு புள்ளிவிவரத்தையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 2006 மே மாதம் முதல் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை இந்த 20 மாத காலத்திலே 44 ஆயிரத்து 88 கோடி ரூபாய் இதனுடைய முதலீடு உயர்ந்திருக்கிறது என்று அந்த அமைச்சகம் பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறது. அதுமட்டுமல்ல, மும்பையிலே இருக்கக்கூடிய இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம், C.M.I.E.–Centre for Monitoring Indian Economy என்கிற அந்த மையம், தமிழகத்திலே தொழில் நிறுவனங்களுடைய முதலீடு வெகுவாக உயர்ந்திருக்கிறது என்று சொல்லி, அவர்களும் ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள். அதாவது, 2006–ல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பேற்றபோது, C.M.I.E. அறிக்கையின்படி, தமிழ்நாட்டிற்கு வரக்கூடியதாக மதிப்பிடப்பட்ட முதலீடு ரூபாய் ஒரு இலட்சத்து 73 ஆயிரத்து 523 கோடி. ஆனால், மார்ச் 2008 நிலவரப்படி, முதலீட்டினுடைய அளவு ரூபாய் 3 இலட்சத்து 48 ஆயிரத்து 704 கோடி என்று கணக்கிடப்பட்டு, 20 மாதங்களிலே மட்டுமே, இந்த முதலீட்டினுடைய மதிப்பு 100 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்று C.M.I.E. என்கிற அந்த நிறுவனம் குறிப்பிட்டுக் காட்டியிருப்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, Hyundai நிறுவனத்தினுடைய தலைவர் திரு. சங் அவர்கள் அண்மையிலே நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு ஒரு கடிதமே எழுதியிருக்கிறார்கள். Hyundai Motor தொழிற்சாலையினுடைய சிறப்பான செயல்பாட்டிற்கு உங்களுடைய நேர்மையான மற்றும் நியாயமான கொள்கைகள்தான் காரணம் என்று அவர் பாராட்டி ஒரு கடிதம் எழுதியிரு. கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் Signet Solar நிறுவனத்தினுடைய தலைவர் சமீபத்திலே தலைமைச் செயலகத்திற்கே நேரடியாக வந்து ஒரு MoU கையெழுத்து போடுகிறபோது, அவர் ஒன்றை வெளிப்படையாக எடுத்துச் சொன்னார். அரசினுடைய வெளிப்படையான அணுகுமுறைதான் தன்னை தமிழ்நாட்டிற்கே அழைத்து வந்திருக்கிறது என்று அவரும் பாராட்டிப் பேசியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, நோக்கியா இந்தியா செயல் நிறுவனராக இருக்கக்கூடிய திரு. சச்சின் சக்சேனா என்பவர் சமீபத்திலே ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார். 14–4–2008 அன்று வெளிவந்த Times of India நாளிதழிலே அந்தச் செய்தியைக்கூட எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். "The availability of skilled labour force, a friendly

business environment, excellent State Government support, competitive cost level and good logistics connections like Airport, Harbour and Highway, availability of suitable place of land—These are the factors that made us choose Chennai as a manufacturing destination."

பிற்பகல் 1–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** "....says Mr. Sachin Saxena, Operations Director of Nokia India. Nokia which found Chennai cheaper than China by 11%, produced 125 million hand sets in just over two years of operation in Chennai." அதாவது நோக்கியா நிறுவனத்தினுடைய செயல் நிறுவனர் சச்சின் சக்சேனா குறிப்பிடுவது "திறமையான தொழிலாளர்கள், நட்புணர்வுடன்கூடிய தொழில் சூழ்நிலை, மாநில அரசினுடைய சிறந்த ஆதரவு, குறைந்த விலைவாசி, துறைமுகம், விமான நிலையம், நெடுஞ்சாலைகள் என சிறந்த போக்குவரத்து வசதிகள், தேவைக்கேற்ற தகுந்த நில வசதி எங்களது உற்பத்தி மையமாக சென்னையைத் தேர்வு செய்ய வைத்தது" என்று குறிப்பிட்டுக்காட்டி மேலும் ஒன்றைச் சொல்லுகிறார். சீனாவைவிட தமிழ்நாட்டில் உற்பத்திச் செலவு 11 சதவிகிதம் குறைவாக உள்ளதால் 12 கோடியே 50 இலட்சம் செல் போன்களை கடந்த இரண்டு ஆண்டுகளில் நோக்கியா நிறுவனம் தயாரித்திருக்கிறது என்று தன்னுடைய பாராட்டை அந்தப் பத்திரிகையிலே அவர் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்.

அதைப்போல சாம்சங் நிறுவனம் என்ன கூறுகிறது என்றால், அதுவும் அந்தப் பத்திரிகையிலேதான் வெளிவந்திருக்கிறது. "The Mercer Cost of Living Survey in March last year rated the cost of living index in Chennai as 63.7, while Mumbai, New Delhi and Shanghai were way ahead at 84.9, 82.3 and 91.2 respectively. Little wonder that Samsung which started making colour televisions in Chennai last year, plans to gradually shift the manufacturing of other consumer durables from Noida to the city." அதாவது விலைவாசி சென்னையில் 63.7, மும்பையில் 84.9, டில்லியில் 82.3, சீனாவில் உள்ள ஷாங்காய் நகரில் 91.2 புள்ளிகளாக உள்ளது என்று தெரிவித்துள்ளது. இதனால்தான் சாம்சங் நிறுவனம் கடந்த ஆண்டு சென்னையில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்க ஆரம்பித்து பின்னர் நொய்டாவிலிருந்து தனது இதர நுகர்வோர் தயாரிப்புகளையும்



சென்னைக்கு மாற்ற திட்டமிட்டு வருகிறது என்ற அந்தச் செய்தியையும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அதேபோல i–Smart மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தினுடைய துணைத் தலைவர் என்ன குறிப்பிடுகிறார் என்று சொன்னால், "The huge success of the Automobile Industry and Infotech Companies shows people are dedicated and loyal to organizations, he says. Eventhough we have delivery centres in Mumbai, Calcutta, Bangalore and Colombo, our Chennai Centre is very special for i–Smart because of the positive work culture and the strong bonding and loyalty that develops between the employer and employees. அதாவது i–Smart நிறுவனம் என்ன கூறுகிறது என்று சொன்னால் சென்னையில் தானியங்கி தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தினுடைய பணியாளர்களின் அர்ப்பணிப்பு மனப்பான்மையும், கடமைப்பாடும் மும்பை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் உள்ள தமது மையங்களைவிடச் சிறப்பாக உள்ளது என்றும் நிறுவனம் மற்றும் தொழிலாளர்களிடையே சிறப்புப் பணித் தொடர்பு அடிப்படையில் சென்னை சிறப்பிடம் பெற்றிருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, உலகளவிலே பார்க்கிறபோது இன்றைக்கு ஒருசில நாடுகளை மட்டுமே தேர்ந்தெடுத்து தங்களுடைய தொழில்களைத் தொடங்கக்கூடிய சில நிறுவனங்கள் இந்திய நாட்டிலே இருக்கின்றன.

வாகன நிறுவனங்களை உருவாக்கக்கூடிய Hyundai, Ford, Renault–Nissan, அதேபோல மின்னணு உபகரணங்கள் உற்பத்திக்குக் காரணமாக இருக்கக்கூடிய நிறுவனங்கள் DELL, Nokia, Motorola, Flextronics, Foxconn, Moser Baer, Signet Solar போன்ற நிறுவனங்கள் எல்லாம் இன்றைக்கு இந்தியாவில், குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டிலே சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் போன்ற மாவட்டங்களில் தங்களுடைய நிறுவனங்களை, தங்களுடைய உற்பத்திகளையெல்லாம் தொடங்கிக்கொண்டிருக்கின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அதைப்போல தமிழகத்திலே ஜப்பான், கொரியா, தைவான், ஜெர்மனி, ஃபிரான்ஸ், அமெரிக்கா போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து மேலும் கூடுதலாக தொழில் முதலீடுபெற பல்வேறு முயற்சிகளை நம்முடைய அரசு எடுத்து வருகிறது. அதிலே ஓரளவுக்கு வெற்றியும் கண்டுகொண்டிருக்கிறது என்பதை நம்மால் மறுக்க முடியாது. அதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் கடந்த 29–4–2008 அன்று அமைச்சரவைக் கூட்டம் கூடியது.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தைப்பற்றி நான் குறிப்பிட்டுச்சொல்லுகிறபோது ஒரு புள்ளிவிவரத்தையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே இதே தமிழ்நாட்டில் 2001–லிருந்து 2006 வரையில்' அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது நடத்தப்பட்டிருக்கக்கூடிய அமைச்சரவைக் கூட்டத்தினுடைய எண்ணிக்கை எவ்வளவு என்றால் 65; திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பேற்று இந்த இரண்டாண்டு காலத்தில் அதாவது 2006–லிருந்து 2008 வரையிலே இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய அமைச்சரவைக் கூட்டங்கள் எவ்வளவு என்று கேட்டால் 28.

பிற்பகல் 1–35

அ.தி.மு.க. ஆட்சியிலே 65 கூட்டங்கள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அந்த 65 கூட்டங்களின் மூலமாக விவாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தொழில் துறை தொடர்பான பொருட்கள் எவ்வளவு என்றால், 35. தி.மு.க. ஆட்சியிலே, கடந்த இரண்டாண்டு காலத்திலே, 2006 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையிலே, நடைபெற்றிருக்கக்கூடிய அமைச்சரவைக் கூட்டங்களிலே, தொழில்துறை தொடர்பாக விவாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பொருட்கள் எவ்வளவு தெரியுமா? 51 பொருட்கள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், கடைசியாகக் கூடிய அமைச்சரவைக் கூட்டம், 29–4–2008 அன்று நடைபெற்றது. அன்று மாத்திரமே, தொழில் துறையைப் பொறுத்தவரை 13 பொருட்கள் வைக்கப்பட்டு, அந்; 13 பொருட்களையும் அமைச்சரவை ஏற்றுக்கொண்டது என்பதையும் நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த அமைச்சரவைக் கூட்டத்திலே, 17 ஆயிரத்து 400 கோடி ரூபாய் முதலீட்டிலே, 13 திட்டங்களுக்கு ஒப்புதல் தந்து, அதற்கான MoU கையெழுத்துகளெல்லாம் விரைவிலே போடப்பட இருக்கின்றன.

ஆக, 2008 ஆம் ஆண்டிலே மட்டுமே, இந்த ஒரு வருடத்தில் மட்டுமே, 30 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டிற்கு, MoU கையெழுத்திடப்படுகிறது என்று சொன்னால், நான் பெருமையோடு தெரிவிக்க விரும்புகிறேன், தமிழக வரலாற்றிலே, குறிப்பாக இந்தத் தொழில் துறையிலே மிகப் பெரியதொரு சரித்திர சாதனை இது என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே,



இத்தகைய தொழிற்புரட்சிக்கு அரசினுடைய வெளிப்படையான அணுகுமுறை, துரித செயல்பாடு, சிறந்த உட்கட்டமைப்பு, தொழில் அமைதி, சட்டம்–ஒழுங்கு, திறன்மிக்க மனித வளம்தான் காரணம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் தொழிற்சாலைகள், வணிகப் பகுதிகள், போக்குவரத்து, வீட்டு உபயோகத்திற்காகப் பெருகிவரும் எரிவாயுத் தேவையைக் கருத்திலேகொண்டு, ரிலையன்ஸ் நிறுவனத்தின்மூலமாக, கிருஷ்ணா–கோதாவரி ஆற்றுப் படுகையிலேயிருந்து பெறப்படக்கூடிய எரிவாயுவை, சென்னை உட்பட 25 நகரங்களுக்கு விநியோகம் செய்வதற்காக ஒரு புதிய திட்டத்தை நாம் ஏற்கெனவே ஆரம்பித்திருக்கிறோம். அதற்காக 11 ஆயிரம் கோடி ரூபாய் வரையிலே முதலீடு செய்யப்பட்டு, அதன்மூலமாக நேரடி வேலைவாய்ப்பாக மூவாயிரம் பேருக்கும், மறைமுக வேலைவாய்ப்பாக 30 ஆயிரம் பேருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தைப்பற்றி மத்திய அரசுக்கு நாம் ஏற்கெனவே பரிந்துரை செய்து, கடிதமும் அனுப்பியிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிற்சாலைகளை ஒரு தொகுப்பாக அமைப்பதன்மூலமாக கட்டமைப்பு வசதிகளை நாம் எளியவகையிலே அமைத்திட முடியும். அந்தவகையிலே, அந்தச் சூழ்நிலையை சிறப்பான வகையில் நாம் பெற்றிட முடியும். ஆகையால்தான், சென்னை, மணலி, எண்ணூர், செங்கல்பட்டு, ஸ்ரீபெரும்புதூர், இராணிப்பேட்டை ஆகிய இடங்களைத் தொடர்புபடுத்தி, தொழிற்பெருங்கூடங்களை அமைக்க இந்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இப்பொழுது, டெல்லி–மும்பை தேசிய நெடுஞ்சாலையை தொழிற்சாலைகள் தொகுதிகள் கொண்ட, அதாவது industrial corridor ஆக, தொழில் பெருவழியாக உருவாக்குவதற்கு மத்திய அரசு திட்டமிட்டு, அந்தப் பணியிலே இன்றைக்கு ஈடுபட்டிருக்கிறது. அதேபோல, நம்முடைய தமிழகத்திலே, சென்னை–பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையையும் industrial corridor ஆக, தொழில் பெருவழியாக உருவாக்கித்தர வேண்டுமென்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்குப் பதில் கடிதம்கூட, பிரதமர் அவர்களே கையொப்பமிட்டு, நம்முடைய முதல்வர் அவர்களுக்கு அனுப்பி, ஒப்புதலையும் தந்தது மட்டுமல்ல, அதனுடைய அடிப்படைப் பணிகளும் இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி
ஆகியவற்றின் பயன்கள் குறிப்பிட்ட ஒரே பகுதியில் சென்று
அமைந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான், இவை தமிழ்நாடு
முழுவதும் பரவிட வேண்டும், பல மாவட்டங்களிலும் இவை
பரவிடவேண்டும் என்ற அந்த நிலையிலே, இன்றைக்கு அரசு பல
திட்டங்களையெல்லாம் அறிவித்துக்கொண்டிருக்கிறது என்பது
உங்களுக்குத் தெரியும். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால்,
தென்மாவட்டப் பகுதியில், ஏற்கெனவே இங்கே பேசுகிறபோதுகூட
சிலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள், திருநெல்வேலி மாவட்டத்தில்,
நாங்குநேரி பகுதியில், டிட்கோ உதவியோடு கூட்டு முயற்சியோடு ஒரு
சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு ஏற்கெனவே
திட்டமிட்டோம். மறைந்த மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறன்
அவர்களுடைய சீரிய முயற்சியோடு அந்தத் திட்டம்
உருவாக்கப்பட்டது. கடந்த 2001 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக்
கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது, பிப்ரவரி மாதம்,
அதற்கான அடிக்கல் நாட்டு விழாவிலேகூட நம்முடைய தமிழக
முதல்வர் அவர்கள் நேரடியாகச் சென்று அந்த விழாவை நடத்தி
வைத்தார்கள் என்பது உங்களுக்கும் தெரியும். ஆனால், ஆட்சி மாற்றம்
வந்த காரணத்தால் இடையிலே அது தடைபட்டுப் போயிருந்தது. அது
கிடப்பிலே போடப்பட்டிருந்தது. ஆனால், மீண்டும் 2006 ஆம்
ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்
பின்னால், அந்தத் திட்டத்தை மீண்டும் நிறைவேற்ற வேண்டும் என்று,
அதற்காகக் கலந்துபேசி, அந்த முயற்சியிலே நாம் ஈடுபட்டு,
ஐதராபாத்தில் இருக்கக்கூடிய A.M.R. Construction, TIDCO மற்றும் கூட்டு
நிறுவனங்களின்மூ )மாக, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நாம் முடிவு
செய்திருக்கிறோம். மே 2007 ஆம் ஆண்டில் மத்திய அரசும் அதற்கு
முறையான அனுமதியைத் தந்திருக்கிறது என்பதை நான் இங்கே
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–40*

இந்த உயர் தொழில்நுட்பப் பூங்கா உருவாகிற நேரத்தில்
பொறியியல், மருத்துவயியல், வாகன உதிரிப் பாகங்கள், மின்னணுப்
பொருள்கள், மென் பொருள்கள், தகவல் தொழில்நுட்பம், பொருள்
போக்குவரத்து தொடர்பான தொழில்களெல்லாம் தொடங்குவதற்கு
திட்டமிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, ஆரம்பக் கட்டப்
பணிகள்கூட 30–4–2008 அன்று தொடங்கப்பட்டிருக்கின்றன
என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
அதைக் கிடப்பிலே போட்டுவிடக்கூடாது என்றுகூட இங்கே
திரு. ஆறுமுகம் அவர்கள் பேசுகிறபோதுகூட குறிப்பிட்டுச்



சொன்னார்கள். ஆரம்பக் கட்டப் பணிகளெல்லாம் தொடங்கப்பட்டிருக்கின்றன. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் முழுமையடைகிறபோது 15,000 கோடி ரூபாய் முதலீட்டிலே, 70,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, தமிழகத்தில் அமையவிருக்கக்கூடிய பல்பொருள் சார்ந்த முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ற பெருமையை முதலில் நாங்குநேரிதான் பெறப்போகிறது என்பதையும் நான் இங்கே அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதற்கான ஒப்பந்தம்கூட 10–4–2008 அன்று நம்முடைய முதல்வர் அவர்கள் முன்னிலையிலே கையெழுத்தாகியிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோல, விருதுநகர் மாவட்டத்தைப்பற்றிகூட இங்கே பேசுகிறபோது கேட்டார்கள்; நம்முடைய உறுப்பினர் திரு. இராமசாமி என்று நான் கருதுகிறேன். அவர்கள் இங்கே பேசுகிறபோது, என்னவாயிற்று என்று ஒரு கேள்வி கேட்டார்கள். அதற்கான பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் சார்பிலே, அதாவது TIDCO அமைப்பின் சார்பிலே, 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய வகையிலே அந்த Special Economic Zone–சிறப்புப் பொருளாதார மண்டலம்—2,500 ஏக்கர் நிலத்திலே உருவாக்கப்படவிருக்கிறது. அப்படி உருவாக்கப்படுகிற நேரத்திலே இயந்திரங்கள் தயாரிப்பது, மின்னணுப் பொருள்களை உருவாக்குவது, ஜவுளி உற்பத்தி, உணவு பதப்படுத்துதல் போன்ற திட்டங்களெல்லாம் இதன்மூலமாக உருவாக்கப்படவிருக்கின்றன. கூட்டுத் தொழில் பங்குதாரர்களை இப்பொழுது TIDCO தேர்வு செய்வதற்கான முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தென் மாவட்டங்களினுடைய தொழில் வளர்ச்சியை அடிப்படையாக வைத்துதான் தூத்துக்குடி துறைமுகத்தை நவீனப்படுத்தவும், அதேபோல தூத்துக்குடியிலே இருக்கக்கூடிய விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மதுரை விமான நிலையத்தைக்கூட விரிவுபடுத்த வேண்டுமென்று 110 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே 614 ஏக்கர் இடத்திலே அந்த விரிவாக்கத் திட்டப் பணிகளைக்கூட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 27–4–2008 அன்று மதுரைக்குச் சென்று அடிக்கல் நாட்டு விழாவைக்கூட நடத்தி வைத்திருக்கிறார்கள்.

திருச்சி, மதுரை, நெல்லை, கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகளெல்லாம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைதவிர, சிப்காட் நிறுவனத்தின்மூலமாக மதுரை மற்றும் தூத்துக்குடியில் தொழில் வளாகங்கள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. இதற்காக சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் அமைக்கப்படவிருக்கின்றன. கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படவிருக்கின்றன. அதுமட்டுமல்ல, மதுரை, தேனி, இராமநாதபுரம், திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மூன்று ஆண்டுகளில் 50 கோடி ரூபாய்க்குக் குறையாமல் முதலீடு செய்யக்கூடிய நிறுவனங்களுக்கெல்லாம் வரிச் சலுகையும் நாம் வழங்கவிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது எந்த வகையில் என்பதெல்லாம் என்னுடைய அறிவிப்பிலே வெளியிடப்பட இருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, பின்தங்கியிருக்கக்கூடிய தென் மாவட்டங்கள் இனி வேகமான தொழில் வளர்ச்சியை அடையும் என்பது நிச்சயம், நிச்சயம் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, கடந்த இரண்டு ஆண்டுகளில் டிட்கோ சிறந்த முறையிலே செயல்பட்டு, தமிழகத்தினுடைய பல பகுதிகளில், சென்னை, எண்ணூர், சோழிங்கநல்லூர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, விருதுநகர், நாமக்கல், கடலூர் போன்ற பகுதிகளில் சிறப்புப் பொருளாதாரா மண்டலங்களை அமைப்பதற்கு, தனியார் தொழில் முனைவோர்களோடு இணைந்து அந்தப் பணிகளிலே இப்பொழுது ஈடுபட்டிருக்கிறது. அடுத்த ஐந்து ஆண்டு காலத்திற்குள்ளாக சுமார் 30,000 கோடி ரூபாய் முதலீட்டிலே மூன்று இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வரக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களெல்லாம் உருவாக்கப்படுகின்ற நேரத்திலே சில சந்தேகங்களையெல்லாம் நம்முடைய உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த இடங்களையெல்லாம் கையகப்படுத்துவீர்களா, கட்டாயப்படுத்திக் கையகப்படுத்துவீர்களா, விளைநிலங்களையெல்லாம் கையகப்படுத்துவீர்களா என்றெல்லாம் இங்கே பல கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். இங்கே மட்டுமல்ல வெளியிலும் சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அறிக்கைகள் எல்லாம்



விட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே அடக்கத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன்; இந்த அரசைப் பொறுத்தவரையில் நில உரிமையாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்திதான் அந்த நிலங்களெல்லாம் வாங்கப்படுகின்றன. கட்டாயமாக நிலம் கையகப்படுத்துவது என்பது இந்த அரசினுடைய கொள்கை இல்லை என்பதை நான் உறுதியோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்பொழுதல்ல, ஏற்கெனவே தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபொழுது, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1996–2001–லே தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது கலைஞர் முதலமைச்சராக இருந்தபொழுது செங்கல்பட்டுக்கு அருகே 1,526 ஏக்கரிலே Mahindra World City ஒன்று உருவாக்கப்பட்டது. திரு. ஆறுமுகம் மறந்திருக்க மாட்டார். எனவே, பலருக்கும், இங்கே இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரியும். Mahindra World City உருவாக்கபட்டபொழுது வெறும் 43 ஏக்கர் நிலம் மட்டுமே அரசு கையகப்படுத்தி அவர்களிடத்திலே ஒப்படைத்தது. எஞ்சிய நிலம், 1,483 ஏக்கரை அந்த நிறுவனமே சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்திதான் வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

பிற்பகல் 1–45

அதேபோலதான், இப்பொழுது பெரம்பலூரிலே உருவாக்கப்பட்டு வரக்கூடிய சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு இதுவரை 2,480 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த 2,480 ஏக்கர் நிலம் இப்போது கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நில உரிமையாளர்களிடம் முறையாகப் பேச்சுவார்த்தை நடத்திதான் அது வாங்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் அரசு கடைப்பிடிக்கிறது. தொடர்ந்து இதையேதான் அரசு கடைப்பிடிக்கும் என்பதை நான் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல சிப்காட் தொழில் வளாகங்களில், Samsung, Caparo, Dell, Komatsu போன்ற நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன. கடந்த 37 ஆண்டுகளில் சிப்காட் மூலமாக 22,847 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு தொழில் நிறுவனங்களுக்கு செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், சிப்காட்

வளாகங்களில் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில், 7 தொழில்சார்ந்த தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அவை சிறப்புப் பொருளாதார மண்டலங்களாகத் தொடங்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், திருப்பெரும்புதூர்–ஓரகடம் பகுதியிலே மின்னணு பொருள் உற்பத்தி; இராணிப்பேட்டையிலே தோல் பொருள்; இருங்காட்டுக்கோட்டையிலே காலணி உற்பத்தி; பெருந்துறையிலே பொறியியல்; செய்யாறு பகுதியிலே மோட்டார் வாகன உதிரிப் பாகம்; கங்கைகொண்டான் பகுதியிலே போக்குவரத்து பொறியியல் பொருட்கள்; ஆகவே, இந்த ஏழு தொழிற்சார்ந்த தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு, இதற்கான முதலீடு 13 ஆயிரத்து 705 கோடி ரூபாய். இதன்மூலமாக ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, கடந்த 2007–2008 ஆம் ஆண்டில், சிப்காட் நிறுவனத்தினுடைய இலாபம், நாம் பெருமைபடத்தக்கவகையில் சொல்லவேண்டுமென்று சொன்னால் 72 கோடியே 14 இலட்சம் ரூபாய் ஆகும். இந்த நிறுவனத்தின் வரலாற்றிலேயே, இதுதான் அதிக இலாபத் தொகையாகும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம், TNPL. இந்த நிறுவனத்தைப் பற்றி சொல்லவேண்டுமென்று சொன்னால், சக்கையிலிருந்து அதிக அளவிலே காகிதம் தயாரிக்கக்கூடிய, மிகச் சிறப்பாக செயல்படக்கூடிய, ஒரு நிறுவனம் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதுமட்டுமல்ல, உலகத்தில் ஒரு பெரிய காகித ஆலை நிறுவனமாக இந்த ஆலை அமைந்திருக்கிறது. இந்த ஆலை பல விருதுகளையும் பெற்றிருக்கிறது. இது பலவகையில் இலாபத்தையும் தொடர்ந்து ஈட்டிக்கொண்டிருக்கிறது. ஆலையின் தற்போதைய காகித உற்பத்தி ஓர் ஆண்டிற்கு 2 இலட்சத்து 45 ஆயிரம் டன். இதுவே 2010 ஆம் ஆண்டிற்குள் ஆண்டிற்கு 4 இலட்சம் டன் காகித உற்பத்தி செய்யக்கூடியவகையில் இந்த ஆலை விரிவுபடுத்தப்படவிருக்கிறது. இதற்கான முதலீடு ரூ. 725 கோடி. இதனுடைய விரிவாக்கப் பணி இந்த ஆண்டு தொடங்கப்படவிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், டான்செம். இன்றைக்கு சர்வதேச அளவிலே சிமெண்ட் விலை உயர்ந்திருப்பதை எல்லோரும் ஒப்புக்கொள்கிறோம். இதே அவையிலே பல உறுப்பினர்கள்



பேசியிருக்கிறீர்கள். ஏன், வெளியிலே இருக்கக்கூடிய சில அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள் — பல பத்திரிகைகள் எல்லாம்கூட இதுபற்றி விமர்சனம் செய்து எழுதி இருக்கின்றன. வெளிச் சந்தையில் ஒரு மூட்டையினுடைய விலை ரூ.270 தமிழகத்திலே விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை. இதே நிலை, ஏற்கெனவே கடந்தகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலும் ஏற்பட்டது என்பதை நாம் மறுக்கமுடியாது. மறைக்கவும் முடியாது. (குறுக்கீடு) அதாவது, 2001–லே (குறுக்கீடு) சொல்கிறேன், ஆதாரத்தோடு சொல்கிறேன். 2001–லே ஏற்பட்டது. அதாவது, 23–8–2001 அன்று இதே அவையில், இதோ இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினராக அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய மதிப்பிற்குரிய திரு. சி. ஞானசேகரன் அவர்கள் இதே அவையிலே பேசியிருக்கிறார். அவைக்குறிப்பில் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் நானும் பேசுகிறேன். அவர் பேசுகிறபோது, ஒரு கேள்வியைக் கேட்டார், அப்போது, இந்தச் சட்டமன்றத்தில். சிமெண்ட் விலை உயர்வை நிச்சயமாகக் குறைப்பேன் என்று அறிவித்தீர்களே, உரிமையாளர்களை அழைத்துப் பேசியும் விலை குறையவில்லையே என்று அவர் கேட்டபோது, அன்றைக்கு அப்போது இந்த அவையிலிருந்த முதலமைச்சர், அன்றைக்கு இருந்த முதலமைச்சர் ஒரு பதில் சொன்னார். ஆலை அதிபர்களை இரண்டு முறை அழைத்துப் பேசியிருக்கிறோம். விலையைக் குறைக்க வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளலாமேதவிர, இதற்குமேல் மாநில அரசுக்கு இதிலே அதிகாரம் இல்லை என்று குறுப்பிட்டுள்ள அவருடைய பேச்சு அவைக்குறிப்பிலே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய ஆட்சியில், நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், கடந்த கால ஆட்சியைப்போல அலட்சியப்படுத்திவிடாமல், அக்கறை எடுத்துக்கொண்டு, ஆலை அதிபர்களையெல்லாம், ஒரு முறைக்கு பல முறை இதே தலைமைச் செயலகத்திற்கு அழைத்து அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, பேச்சுவார்த்தையை நடத்தியதுமட்டுமல்ல, விலையைக் குறைப்பதற்கும் அவர்களை இணங்கச் செய்து, சாமானிய நடுத்தர மக்களுக்கு ஒரு மூட்டை 200 ரூபாய் விலையிலும், பெரிய அளவிலே வாங்கக்கூடியவர்களுக்கு ஒரு மூட்டை 220 ரூபாய் விலையிலும் வாங்குவதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அண்மையிலேகூட, ஹிந்து பத்திரிகையிலே 26–4–2008 அன்று, இந்த அரசினுடைய செயல்பாட்டினைப் பாராட்டி ஒரு செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். "The Government scheme to sell cement at

concessional price has met with good response. Steps to stem cement price rise pay off" என்று குறிப்பிட்டு தமிழக அரசு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம், குறைந்த விலையில் சிமென்ட்டை விற்பனை செய்ய மேற்கொண்ட நடவடிக்கை நல்ல பலனைத் தந்துள்ளது. பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே உங்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1–50

அதைப்போன்று, சர்க்கரை ஆலைகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 2006–2007 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் இதுவரை இல்லாத சாதனையாக் 2 கோடியே 75 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டது. 2007–2008 ஆம் ஆண்டில் 9 சதவிகித சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு விலையாக ஒரு டன்னுக்கு ரூ.1,034 என அரசு நிர்ணயம் செய்துள்ளது. மேலும், கரும்பை ஆலைக்குக் கொண்டுவரும் செலவை ஆலைகளே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிட்டு, அந்த உத்தரவை இன்றைக்கு அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்களை மின்சார வாரியத்தின்மூலமாக நிறுவிட நம்முடைய அரசு முடிவு எடுத்திருக்கிறது. இதற்கான மதிப்பீடு ரூ.925 கோடி. இதனால் 185 மெகாவாட் கூடுதலாக மின் உற்பத்தியும் செய்யப்படும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைக்கு நம்முடைய அரசின் சார்பில், இந்தத் தொழில் துறையைப் பொறுத்தவரையில் பல ஊக்கத்தை, உற்சாகத்தை அவர்களுக்கு வழங்கி, பெரும் வளர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அதற்குக் காரணம் மாநில அரசினுடைய புதிய தொழில் கொள்கை என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. எனவே, தொழில் நிறுவனங்களுடைய நிர்வாகிகள், கூட்டமைப்பினுடைய பிரதிநிதிகள், வல்லுநர்கள் இவர்களையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் தலைமைச் செயலகத்திற்கு பலமுறை அழைத்து, அவர்களோடு ஆலோசனை நடத்தி, கலந்துபேசி, அதற்குப் பிறகு 5–11–2007 அன்று இந்தப் புதிய தொழில் கொள்கை உருவாக்கப்பட்டது.இந்தத் தொழில் கொள்கையின் நோக்கங்கள் அனைத்தையும் சொல்வதற்கு நேரம் இல்லை. எனவே, குறிப்பிட்ட சிலவற்றை நான் உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.



2011 ஆம் ஆண்டுக்குள் 20 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைக் கூடுதலாக வழங்கிட வேண்டும்; மொத்த உற்பத்தியினுடைய மதிப்பில் தொழில் துறையினுடைய பங்கை 21 சதவிகிதத்திலிருந்து 27 சதவிகிதமாக உயர்த்திக் காட்டவேண்டும்; ஏற்றுமதியினுடைய மதிப்பை ரூ.70 ஆயிரம் கோடியிலிருந்து ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாயாக 2011 ஆம் ஆண்டுக்குள் உயர்த்திடவேண்டும்; தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சிக்கான உற்பத்தி செய்திடவேண்டும்; சுற்றுச்சூழலைக் கருத்தில்கொண்டு தொழில் வளர்ச்சியை உருவாக்கிடவேண்டும்; நில உரிமையாளர்களுடைய ஒப்புதலைப் பெற்றுத்தான் நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும்; இதுவும் கொள்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. விவசாயம் சார்ந்த தொழில் மேம்பாடு. இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் இந்தத் தொழில் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, தமிழகத்தினுடைய பாரம்பரியத் தொழில்களாக இருக்கக்கூடிய வேளாண்மை, நெசவு, தோல் பதனிடுதல் போன்ற அந்தத் தொழில்களைக்கூட ஊக்கப்படுத்தக்கூடிய வகையில் இந்தப் புதிய தொழில் கொள்கை உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பாக சில விளக்கங்களை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் தகவல் தொழில்நுட்பம் என்பது சமுதாயத்தினுடைய அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்புபடுத்தக்கூடிய ஒரு சிறப்பான துறையாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். செயற்கையான இடைவெளியைக்கூட இன்றைக்கு மனித சமுதாயத்துடன் ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மாபெரும் துறையாக இந்தத் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது. கணினி மற்றும் இணையதளம் சார்ந்த செயல்பாட்டில் நம்முடைய தமிழ்நாடு இன்றைக்கு ஒரு முதல் மாநிலமாக, ஒரு முன்னோடி மாநிலமாக விளங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1997 ஆம் ஆண்டிலேயே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான், இந்தியாவிலேயே முதன்முதலாக தகவல் தொழில்நுட்பவியலுக்கு ஒரு கொள்கை வகுக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, மாநில தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிக்

குழுவும் அப்போதுதான் அமைக்கப்பட்டது. 1998–லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பொறுப்பிலே இருந்தபோதுதான் இந்தத் தகவல் தொழில்நுட்பத்திற்கென்று தனித் துறையும் உருவாக்கப்பட்டது. ஏற்கெனவே இது தொழில் துறையோடு இணைக்கப்பட்டிருந்தது. தனித் துறை எப்போது உருவாக்கப்பட்டது என்று சொன்னால், தி.மு.க. ஆட்சியிலே, கலைஞர் ஆட்சியிலேதான் 1998–லேதான் உருவாக்கப்பட்டது. இதே ஆண்டில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கல்வி நிலையம் (TANITEC) அப்போது உருவாக்கப்பட்டது. 1999 ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் சென்னையிலே தமிழ் இணையக் கருத்தரங்கம், அதாவது, Tamilnet 99 என்ற ஒரு பெரிய கருத்தரங்க மாநாட்டை இதே சென்னையிலே நாம் நடத்தினோம். அந்த மாநாட்டின் மூலமாகத்தான் கணினியிலே தமிழைப் பயன்படுத்துவதற்கேற்றவாறு தமிழ் விசைப் பலகை (Keyboard) மற்றும் தமிழ் எழுத்துரு (Font) இந்த வடிவமைப்புகள் எல்லாம் அப்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றை சர்வதேச அளவில் நாம் பயன்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் அமெரிக்காவிலே இருக்கக்கூடிய சர்வதேச Unicode Consortium என்ற அமைப்பிலேகூட இன்றைக்கு தமிழ்நாடு பதிவு செய்துகொண்டிருக்கிறது. தமிழ் மென்பொருளை ஊக்குவிக்கக்கூடிய வகையிலே அதற்காக வளர்ச்சி நிதியும் உருவாக்கப்பட்டது.

*பிற்பகல் 1–55*

17–2–2000 அன்று தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான் தமிழ் இணையப் பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே ஆண்டு, 4–5–2000 அன்று வழித்தட உரிமம் வழங்கக்கூடிய அந்தக் கொள்கையையும் ஏற்படுத்தித் தந்தோம். உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பப் பூங்கா–Tidel Park இன்றைக்குக் கம்பீரமாகக் காட்சி அளித்துக்கொண்டிருக்கிறதே, அதையும் தரமணியிலே 4–7–2000 அன்று நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்தான் வருகை தந்து திறந்து வைத்தார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மன்னிக்கவும், நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே, அன்றைக்குப் பிரதமராக இருந்த மதிப்பிற்குரிய திரு. வாஜ்பாய் அவர்கள் திறந்து வைத்தார்கள் என்று மாற்றி, திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே, தகவல் தொழில்நுட்பவியல் துறையிலே தமிழகம் தொடர்ந்து பல முன்னேற்றங்களைக் கண்டு



வருகின்றது. அதற்கு சில புள்ளிவிவரங்களைக்கூடச் சொல்லலாம். இங்கே அ.தி.மு.க.வைச் சார்ந்தவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். அவர்கள் சொன்னது உண்மைதான், 2000–2001–லே மென்பொருள் ஏற்றுமதி மதிப்பு ரூபாய் 3,113 கோடிதான். நாங்கள் மறுக்கவில்லை. ஆனால், 2006–2007–லே அதனுடைய ஏற்றுமதி மதிப்பு ரூபாய் 20,083 கோடி. இதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு இப்போது 2007–2008–லே 28,295 கோடி ரூபாய்க்கு மென்பொருள் ஏற்றுமதி. ஆக, 2006–2007 ஆம் ஆண்டைவிட இப்போது ஏற்றுமதி 36 சதவிகிதம் இந்த ஆட்சியிலே உயர்ந்திருக்கின்றது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டிலே இப்போது 100–க்கும் மேற்பட்ட மென்பொருள் நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் 10 மென்பொருள் நிறுவனங்கள் நம்முடைய தமிழ்நாட்டிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, TCS, Wipro, Mahindra, HCL, Satyam, CTS, Infosys போன்ற நிறுவனங்கள் அவற்றில் அடங்கும். கணினி மற்றும் தகவல் தொடர்பு உபகரணங்களான வன்பொருள், அதாவது hardware உற்பத்தி நிறுவனங்களாக இருக்கக்கூடிய Nokia, Foxconn, Flextronics, Motorola போன்ற நிறுவனங்களும் இன்றைக்கு உற்பத்தியைத் தொடங்கியிருக்கின்றன. அதேபோன்று Samsung, ASPOCOMP, Spelmech, Salcomp, Perlos, Jabil, Wintek போன்ற மின்னணு நிறுவனங்கள்கூட தமிழகத்தில் நிறுவுவதற்கு முன்வந்திருக்கின்றன. அதுமட்டுமல்ல, hardware ஆக இருந்தாலும், software ஆக இருந்தாலும், மென்பொருளாக இருந்தாலும், வன்பொருளாக இருந்தாலும், அவற்றைத் தயாரிக்கக்கூடிய நிறுவனங்கள் இன்றைக்குப் போட்டி போட்டுக்கொண்டு நம்முடைய தமிழகத்திற்கு வந்துகொண்டிருக்கின்றன என்று சொன்னால், இது நம்முடைய தமிழகத்திற்கே கிடைத்திருக்கின்ற பெருமை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தகவல் தொழில்நுட்பக் கொள்கையில் நாம் இன்றைக்குப் பல சாதனைகளைப் புரிந்துகொண்டிருக்கின்றோம். இந்தக் கொள்கை 1997 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு மாறி வரக்கூடிய சூழ்நிலை, வளர்ந்துவரக்கூடிய தொழில் புரட்சி, அதேபோல பொருளாதார சூழ்நிலை, கூடுதல் வேலைவாய்ப்பு ஆகிய இவற்றையெல்லாம் அடிப்படையாக வைத்து, இப்பொழுது ஒரு புதிய தொழிற் கொள்கையை நாம் உருவாக்கியிருக்கின்றோம். அதாவது 'புதிய

தொழில்நுட்பக் கொள்கை 2008' என்று ஒன்றை உருவாக்கியிருக்கின்றோம். கடந்த அமைச்சரவைக் கூட்டத்திலே அதற்கான ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் விரைவிலே அதை வெளியிட இருக்கின்றார்கள் என்பதையும் நான் இங்கே முன்கூட்டியே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இந்தப் புதிய தொழில் கொள்கையின் நோக்கம் என்னவென்று சொன்னால், இந்திய அளவிலே தகவல் தொழில்நுட்பத்தில் தற்போது 11 சதவிகிதமாக உள்ள தமிழ்நாட்டின் பங்கை, வரும் 2011-க்குள் 25 சதவிகிதமாக உயர்த்திடவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தெற்காசிய நாடுகளில் தமிழ்நாட்டைத் தகவல் தொழில்நுட்ப மையமாக உருவாக்கிடவேண்டும். 2011-க்குள் 8 இலட்சம் பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு, 22 இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பு, ஆக மொத்தம், 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திடவேண்டும் என்ற நிலையிலே அந்தக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோல தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்று சொன்னால், இன்றைக்கு மத்திய அரசு தமிழகத்திற்கு 37 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு அனுமதி தந்திருக்கின்றது. அந்த 37 சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் ஏற்கெனவே 19 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் செயல்பாட்டைத் தொடங்கிவிட்டன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

தரமணியில் டைடல் பார்க்குக்கு இணையாக மேலும் இரண்டு தொழிற்பூங்காங்கள், டிட்கோ மற்றும் தனியார் கூட்டுறவில் அமைக்கப்படவிருக்கின்றன. சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம் ஆகிய இடங்களில் எல்காட் மூலமாக சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படவிருக்கின்றன. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 1 ஆம் தேதியன்று ஏற்கெனவே நான்கு நிறுவனங்களுக்கு 61.9 ஏக்கர் நிலத்திற்கான நில ஒதுக்கீட்டு ஆணையைக்கூட வழங்கியிருக்கின்றார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதேபோல சிறுசேரி சிப்காட் வளாகத்திலே TCS, CTS, Hexaware ஆகிய நிறுவனங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை இப்போது அமைத்து வருகின்றன. ஆகவே, தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையில், சென்னையைத் தவிர, இதர மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கு, பொருளாதார வளர்ச்சியை உருவாக்கித் தருவதற்கு, இதர பகுதிகளுக்கும் இது



சென்றடையவேண்டுமென்று நம்முடைய அரசு சிறப்பான முயற்சியை தொடர்ந்து எடுத்து வருகின்றது. அதற்கு சில உதாரணங்களை நான் இங்கே எடுத்துச் சொல்லவேண்டுமென்று சொன்னால், கோவையில் 17 இலட்சம் சதுர அடி பரப்பளவில், 335 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கப்பட்டு வருகின்றது. நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் கோவைக்கே சென்று 24-2-2007 அன்று அதற்காக அடிக்கல் நாட்டியிருக்கின்றார்கள். இதனுடைய பணிகள், வருகின்ற 2009 ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிவடைய இருக்கின்றன என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-00

அதேபோல, மதுரை மாவட்டத்தில் இலந்தைக்குளத்திலும், வடபழஞ்சி கிராமத்திலும், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட, மதுரைக்கே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நேரடியாகச் சென்று கடந்த 26-4-2008 அன்று அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, வடபழஞ்சி கிராமத்திலே, மூன்று நிறுவனங்களுக்கு 115 ஏக்கரும், இலந்தைக்குளத்திலே மூன்று நிறுவனங்களுக்கு 12.5 ஏக்கரும், நிலம் ஒதுக்கீடு செய்து, நில ஒதுக்கீட்டு ஆணையை 1 ஆம் தேதியன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

திருச்சியிலே 137 ஏக்கர் நிலப்பரப்பிலே, எல்காட் மூலமாக தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. அங்கே ஒரு நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நில ஒதுக்கீட்டு ஆணையைக் கடந்த 1 ஆம் தேதியன்று வழங்கியிருக்கின்றார்கள்.

சேலத்திலே, 164 ஏக்கர் நிலப்பரப்பில் எல்காட் மூலமாக சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே, கங்கைகொண்டான் பகுதியில் 500 ஏக்கர் பரப்பளவிலே, எல்காட் மூலமாகத் தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, ஒரு நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நில ஒதுக்கீடு ஆணையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

கிருஷ்ணகிரி மாவட்டத்திலே, ஓசூரில் 172 ஏக்கர் பரப்பளவில் எல்காட் மூலமாக தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேகூட வேலூரிலே சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவாக்கப்படும் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எனவே, அதுவும் எல்காட் மூலமாக விரைவிலே நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, தகவல் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையில், கல்வியையும் மேம்படுத்த வேண்டுமென்ற நிலையிலே, இன்றைக்கு அரசு ஒரு சிறப்பான முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதாவது, சர்வதேசத் தரத்திலே, இந்திய தகவல் தொழில்நுட்ப வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையம், I.I.I.T.D. & M – (Indian Institute of Information Technology, Design & Manufacturing) என்ற நிலையில், ஒரு உயர்கல்வி நிலையத்தை காஞ்சிபுரம் மாவட்டத்திலே மேலக்கொட்டையூர், நல்லாம்பாக்கம் கிராமத்திலே 101 ஏக்கர் பரப்பளவிலே அமைக்கும் அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி முடிவடைகின்றவரை தற்காலிகமாக சென்னை ஐ.ஐ.டி. வளாகத்திலே வகுப்புகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மத்திய நிதி உதவியைப் பெற்று தேசிய மின் ஆளுகை மாவட்டம், e–governance District என்ற வகையில் தமிழகத்திலே இருக்கக்கூடிய எல்லா மாவட்டங்களிலும் அதை நிறைவேற்ற முடிவு செய்திருக்கிறோம். முதல் கட்டமாக திருவாரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர், கோயம்புத்தூர் ஆகிய 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து இப்போது அந்தப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, தகவல் தொழில்நுட்பப் பூங்காவினுடைய பயன் என்பது மாவட்ட அளவிலே மட்டும் அமைந்துவிடாமல், கிராமப் பகுதிகளுக்கும் செல்லவேண்டும் என்ற அடிப்படையில்தான் தனியார் பங்கேற்போடு மூன்று கிராமங்களுக்கு ஒரு பொது சேவை மையம் 5,440 மின்னணு சேவை மையங்களைத் தொடங்க நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. 2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்தப் பணிகளும் நிறைவடைய இருக்கின்றன. இந்த மையங்கள் உருவாக்கப்படுகின்றபோது, கிராம மக்களுக்கு என்ன பயன் என்று கேட்டால், நில விவரம், பத்திரப் பதிவு, சான்றிதழ்கள், ரேஷன் கார்டு, வாக்காளர் பட்டியல், இரயில், பேருந்து பயணச் சீட்டு, வங்கிச் சேவை,



தொலைத் தொடர்பு, வேளாண்மை விவரம் போன்ற பல்வேறு வசதிகளோடு இந்தச் சேவை நிறுவனம் பணியாற்ற இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய தமிழக அரசினுடைய இணைய தளம் என்பது தேசிய மின் ஆளுகை மாநாட்டிலேகூட முதலிடம் பெற்று, தங்கப் பதக்கத்தையும் பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, Dataquest என்ற பத்திரிகையின் சார்பிலே, சிறந்த மின் ஆளுகை மாநிலம் என்ற அந்த விருதையும் நம்முடைய அரசுதான், இந்தத் துறைதான் பெற்றிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இங்கே வேலைவாய்ப்பை பற்றிக்கூட பேசும்போது பலர் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்திய மென் தொழில்நுட்பப் பூங்கா, S.T.P.I. என்று சொல்லக்கூடிய ஒரு அமைப்பு, அந்த அமைப்பின் சார்பில் குறிப்பாக தகவல் தொழில்நுட்பத் துறையினுடைய வேலைவாய்ப்பினுடைய விவரத்தினை ஒரு புள்ளிவிவரத்தோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதாவது, அ.தி.மு.க. வினுடைய ஆட்சியில் 2001–2006, ஐந்தாண்டு காலம் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது 1,00,590 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது. இப்போது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2006–2008 இரண்டாண்டு காலத்தில் மட்டுமே, 1,26,810 பேர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று S.T.P.I. என்று சொல்லக்கூடிய அந்த நிறுவன அறிக்கையிலே புள்ளிவிவரங்களோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தொழில் துறையிலே நான் இங்கே சில அறிவிப்புகளை வெளியிட இருக்கின்றேன். மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் வாழும் மக்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை நிலைகளை மேம்படுத்திடவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்கிடவும் துணைபுரியும் வகையில், அந்த மாவட்டங்களில் தொழில்களைத் தொடங்கிட முன்வரும் முதலீட்டாளர்களுக்கு, ஊக்கம் அளித்திடும் நோக்கத்துடன் பல்வேறு சிறப்புச் சலுகைகளை வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

பொதுவாக ரூபாய் 250 கோடிக்கு மேல் முதலீடு செய்யும் உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு வரிச் சலுகைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், தென் மாவட்டங்களில் ரூபாய் 50 கோடிக்கும் மேலாக முதலீடு செய்யும் நிறுவனங்களுக்குப் பின்வரும் வரிச் சலுகைகள் அளிக்கப்படவுள்ளன:

• ரூபாய் 50 கோடிக்கு மேல் ரூபாய் 100 கோடி வரை முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு, அவர்கள் மூன்று ஆண்டுகளில் செலுத்தவேண்டிய மதிப்புக் கூட்டு வரியை ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு திரும்பச் செலுத்தும் வகையில், 0.1 சதவிகிதம் வட்டி வீதத்தில், மென்கடனாக வழங்கப்படும்.

• ரூபாய் 100 கோடிக்கு மேல் ரூ.200 கோடி வரை முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு அவர்கள் நான்கு ஆண்டுகளில் செலுத்தவேண்டிய மதிப்புக் கூட்டு வரியை ஏழு ஆண்டுகளுக்குப் பின் திரும்பச் செலுத்தும் வகையிலான மென்கடனாக 0.1 சதவிகித வட்டி வீதத்தில் வழங்கப்படும்.

• ரூபாய் 200 கோடிக்கு மேல் ரூ.250 கோடி வரை முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு அவர்கள் ஐந்து ஆண்டுகளில் செலுத்தவேண்டிய மதிப்புக் கூட்டு வரியை ஏழு ஆண்டுகளுக்குப் பின் திரும்பச் செலுத்தும் வகையிலான மென்கடனாக 0.1 சதவிகித வட்டி வீதத்தில் வழங்கப்படும்.

தற்போது ரூபாய் 250 கோடியிலிருந்து ரூபாய் 1,500 கோடி வரையிலான முதலீடுகளுக்கு வரிச் சலுகைகள் மென்கடனாக வழங்கப்படுகின்றன. தென் மாவட்டங்களுக்கு ஒரு சிறப்புச் சலுகையாக, இது மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டானில் 255 ஏக்கர் பரப்பளவில் போக்குவரத்துப் பொறியியல் பொருட்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சியை மேலும் பெருக்கிட, சிப்காட் நிறுவனம், மதுரை மாவட்டம். திருமங்கலம் வட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பளவிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் 2,000 ஏக்கர் பரப்பளவிலும் விளை நிலங்களாக இல்லாத பகுதிகளைத் தேர்ந்தெடுத்து தொழிற்பூங்காக்களை அமைக்கும்.



அதைப்போலவே சிப்காட் நிறுவனம், வேலூர் மாவட்டம், காட்பாடி மற்றும் இராணிப்பேட்டை வட்டங்களில் 3,160 ஏக்கர் பரப்பளவிலும், வாலாஜா வட்டத்தில் 3,998 எக்கர் பரப்பளவிலும், காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டத்தில் 2,300 ஏக்கர் பரப்பளவிலும், திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் 1,471 ஏக்கர் பரப்பளவிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் வட்டத்தில் 4,969 ஏக்கர் பரப்பளவிலும் தொழிற்பூங்காக்களை உருவாக்கும்.

ஒரு தொழில் தொடங்க வேண்டுமெனில், புத்துக்கும் மேற்பட்ட அனுமதிகளும், தடையின்மைச் சான்றிதழ்களும், அரசின் பல்வேறு துறைகளிடமிருந்து பெறவேண்டிய நிலை இருப்பதால், காலதாமதமும், அலைச்சலும் ஏற்படுகிறது. இந்த நிலையினைத் தவிர்த்து, தற்போதுள்ள நடைமுறைகளை முற்றிலும் எளிமைப்படுத்தி பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைக்கவும், அதன்மூலம் ஒற்றைச்சாளர முறையில் (Single Window Clearance) திட்டங்களுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் ஒரே இடத்தில் வழங்கிடவும், சிறப்புச் சட்டம் விரைவில் கொண்டு வந்து நிறைவேற்றப்படும்.

ஜப்பான், கொரியா, பின்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் ஏற்கெனவே தமிழகத்தில் அதிக அளவில் முதலீடுகளைச் செய்துள்ள நிலையில், அந்த நாடுகளிலிருந்து இன்னும் அதிகமான முதலீடுகளை ஈர்த்திடும்வண்ணம், தேவைக்கேற்ப, ஒவ்வொரு நாட்டிற்கும் எனத் தனித்தனியே சிறப்புத் தொழிற்பூங்காக்களைத் தமிழக அரசு அமைத்திடவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் 1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட காகித இயந்திரத்தின் இயக்க நாட்களை நீட்டிப்புச் செய்யும் திட்டம் 66 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

ஆலங்குளம் சிமெண்ட் ஆலை தற்போது ரூபாய் 82 கோடி செலவில் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. அதில் எரிபொருள் சிக்கனம், மாசுக் கட்டுப்பாடு மற்றும் உற்பத்தி அதிகரித்தல் போன்றவை கூடுதலாக ரூபாய் 4.72 கோடி செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழகத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் புதிய பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. திட்டத்திற்கான செலவில் மத்திய அரசின் பங்கு 60 சதவிகிதம் என்றும், மாநில அரசின்

பங்கு 15 சதவிகிதம் என்றும் வரையறுக்கப்பட்டு, மீதமுள்ள 25 சதவிகிதத் தொகையினை தொழிற்சாலைகளே ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல்படுத்தப்படும்.

திருப்பெரும்புதூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் தொழில் துறையில் மிக வேகமாக வளர்ந்து வரும் மையமாக விளங்குகிறது. அங்குள்ள தொழிற்சாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கிடவும், சமூகக் கட்டமைப்பு மற்றும் நவீனக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தவும் ஒரு பெருந்திட்டம் தயாரித்து, விரைவில் செயல்படுத்தப்படும்.

தமிழகத்தில் . உள்ள கிரானைட் கனிம வளத்தினை அறிவியல் பூர்வமாகவும், முழு அளவிலும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கேற்ப, சுரங்கம் மற்றும் கனிம வளங்கள் குறித்து ஒரு விரிவான கொள்கையைத் தமிழக அரசு உருவாக்கிட உள்ளது.

தமிழகத்தில் தொழில் தொடங்க உகந்த சூழ்நிலைகளைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்படுத்தி வருவதால், புதிய முதலீடுகள் தொடர்ந்து வரிசையாக வந்தவண்ணம் உள்ளன. 29–4–2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மட்டும், 17 ஆயிரத்து 400 கோடி ரூபாய் முதலீட்டில் 13 திட்டங்களுக்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 18,750 பேர்களுக்கு நேர்முகமாகவும், 6,450 பேர்களுக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஒரே அமைச்சரவைக் கூட்டத்தில் இத்தனைத் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது இதுவே முதல் முறை என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தொழில் வளர்ச்சி வரலாற்றில் இது ஒரு புதிய அத்தியாயம் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க கழக அரசு உறுதி பூண்டுள்ளது. இதற்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் முதலீட்டளவைக் கணக்கிலே கொள்ளாமல், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் தவிர்த்து இதர மாவட்டங்களில் 750 பேர்களுக்கு மேல் வேலையளிக்கும் ஒவ்வொரு பெருந்தொழிலுக்கும் வேலைவாய்ப்பு அடிப்படையிலான சிறப்புச் சலுகைகள் அளிக்கப்படும்.

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொழில் துவங்கும் நிறுவனங்கள் 1,500 பேர்களுக்கு மேல்



வேலைவாய்ப்பு அளித்தால் இத்தொகுப்புச் சலுகை அளிக்கப்படும். இச்சலுகை பெறுவதற்கு இந்தத் தொழில் நிறுவனங்களில் பணிபுரிவோர் குறைந்தது 75 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் தற்போது வழங்கப்படும் முதலீடு அடிப்படையிலான தொகுப்புச் சலுகைகளும் தொடர்ந்து வழங்கப்படும். அதில் எந்தவிதமான மாற்றமும் கிடையாது.

பிற்பகல் 2–10

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள முதலீடு மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான நிபந்தனைகளை தொழில் நிறுவனங்கள் நிறைவேற்றுவதை உறுதி செய்திட, உயர்நிலை அலுவலர் குழு ஒன்றினை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலு)

அடுத்து தகவல் தொழில் நுட்பத் துறையினுடைய சில .அறிவிப்புகள்.

தகவல் தொழில்நுட்பவியலுக்கென சென்னை, கோவை, மதுரை, சேலம், திருச்சி, ஓசூர் மற்றும் திருநெல்வேலியில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்பட உள்ளன.

இதில், மதுரை, திருநெல்வேலி, ஓசூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய இரண்டாம் நிலை நகரங்களில் 50,000 சதுர அடி கொண்ட தகவல் தொழில்நுட்பவியலுக்கான கட்டடங்கள் கட்டப்படும். இவற்றில் தகவல் தொழில்நுட்பத் தொழில் முனையும் சிறிய முதலீட்டாளர்கள் தங்கள் நிறுவனங்களைத் துவக்கலாம்.

இவ்வாண்டு நிதிநிலை அறிக்கையில் வேலூரில் புதிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். இதற்கேற்ப வேலூர் மாவட்டத்தில் புதிய தகவல் தொழிட்பவியல் பூங்கா அமைக்கப்படும்.

ஓசூரில் இருக்கக்கூடிய விஸ்வநாதபுரம் கிராமத்தில் 172 ஏக்கர் நிலப்பரப்பில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைத்திட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 26–2–2008 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்கள். இந்த இடத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள் தவிர குடியிருப்பு மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகள் அடங்கிய ஒருங்கிணைந்த தகவல்

தொழில்நுட்பவியல் வளாகம் அரசு மற்றும் தனியாரின் கூட்டு முயற்சியில் அமைக்கப்படும்.

சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களிலும் மின் ஆளுமை பயிற்சி முகாம்கள் அமைக்கப்படும். இம்முகாம்களில் ஆசிரியர்கள் மற்றும் அரசு அலுவலர்களுக்கு மின் ஆளுமையில் பயிற்சி அளிக்கப்படும்.

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு என்பது இந்தியாவிலேயே முதல் பெரும்பரப்பு வலையமைப்பாகும். மாவட்டம், வட்டம் மற்றும் வட்டார அளவில் அமைந்துள்ள அனைத்து அரசு அலுவலகங்களையும் இதன்மூலம் இணைக்க முயற்சிகள் எடுக்கப்படும்.

முதற்கட்டமாக வருவாய்த் துறை, பதிவுத் துறை, கருவூலத் துறை, குடிமைப் பொருள் வழங்கல் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை போன்ற துறைகள் இவ்வாண்டு பெரும்பரப்பு வலையமைப்புமூலம் இணைக்கப்படும்.

தமிழ்நாட்டில் இணையதள வசதிகள் அடங்கிய 5,440 பொதுச் சேவை மையங்கள் கிராமப் பகுதிகளில் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்று பொதுச் சேவை மையங்கள் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் 8–4–2008 அன்று துவக்கி வைக்கப்பட்டன. மீதமுள்ள பொதுச் சேவை மையங்கள் அனைத்தும் இந்த ஆண்டிலேயே அமைக்கப்படும்.

சென்னை பெருங்குடியில் மாநில தரவு மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தரவு மையத்தில் சேகரிக்கப்படும் தரவுகளின் நகலை மற்றொரு இடத்தில் பாதுகாப்பாக வைப்பதற்கு தகவல் தொழில்நுட்பவியல் பேரிடர் மீட்பு மையம் அமைப்பது அவசியம் என்பதால், அது ரூ.12 கோடி மதிப்பீட்டில் மதுரையில் அமைக்கப்படும்.

தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் ஒரு இலட்சம் பொறியியல் பட்டதாரிகளும், மூன்று இலட்சம் கலை மற்றும் அறிவியல் பட்டதாரிகளும் உருவாகி வருகின்றார்கள். இவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் சென்னை மாவட்டத்தில் இரண்டு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி மையங்களும், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும், ஒரு தகவல் தொழில்நுட்பவியல் பயிற்சி மையமும்



அமைக்கப்படும். இம்மையங்களில் ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்கு அரசு செலவில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம்மூலம் பயிற்சி அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் இரண்டாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பத் துறைக்குத் தகுதியான இளைஞர்கள் பெருமளவில் இருக்கின்றனர். அந்த இளைஞர்களின் திறமைகளைக் கண்டறிய 2008 ஜனவரி 18 மற்றும் 19 ஆம் தேதிகளில் "Empower IT" என்ற முகாம் திருநெல்வேலியில் நடத்தப்பட்டது. இதில் 12,000 இளைஞர்களும் 34 தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களும் பங்கேற்றன. இந்த முகாம் நடத்தப்பட்டதன் காரணமாக, இப்பகுதியில் வாழும் இளைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன. இதேமாதிரியான முகாம்கள் வரும் ஆண்டில் திருநெல்வேலி, மதுரை, திருச்சி மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் நடத்தப்படும்.

அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிப்படியாக தமிழ்நாடு பெரும்பரப்பு வலை அமைப்பு மூலமாக இன்டர்நெட் வசதிகள் செய்து தரப்படும். இந்தியாவிலேயே இணைய தளத்தில் பள்ளிப் பாடப் புத்தகங்களை வெளியிட்ட முதல் மாநிலம் தமிழகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) "கல்வி ஒரு சுமை அல்ல" என்ற ஒரு புதிய திட்டத்தை பரீட்சார்த்த முறையில் இரண்டு பள்ளிகளில் அறிமுகப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பாடப் புத்தகங்கள் சிறிய மடிக் கணினிகளில் (laptop) பதிவு செய்யப்படும். இதுதான் அந்த laptop.

(மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் சிறிய மடிக்கணினியை அவையில் காண்பித்தார்.)

பள்ளிக்கூடக் குழந்தைகளுக்குத்தான், உங்களுக்கு இல்லை. (சிரிப்பு) பாடங்களை விளக்க மல்டிமீடியா முறையில் பாடத் திட்டங்கள் உருவாக்கப்படும். இதனால் மாணவர்கள் பாடப் புத்தகங்களை வகுப்புக்குச் சுமந்து செல்லவேண்டிய அவசியம் இராது.

அனிமேஷன் மற்றும் மல்டிமீடியாவைப் பயன்படுத்தி எளிதில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள சிறப்பு மென்பொருள் உருவாக்கப்படும். அயல்நாட்டு மொழிகளில் தேர்ச்சி பெற்ற தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு உலக அளவில் பெரும் வேலைவாய்ப்புகள் இருக்கின்றன.

தமிழக மாணவர்கள் ஜப்பானிய மற்றும் கொரிய மொழிகளை எளிதில் கற்றுக்கொள்ள ஏதுவாக 'எல்காட்'மூலம் தகுந்த மென்பொருள் உருவாக்கப்படும். இத்திட்டத்திற்கு கிடைக்கப்பெறும் வரவேற்பைப் பொறுத்து மற்ற அயல்நாட்டு மொழிகளைக் கற்பதற்கான மென்பொருள்களும் உருவாக்கப்படும்.

சென்னை தவிர மற்ற மாவட்டங்களில், இந்த ஆண்டு ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களிலிருந்தும், சென்னை மாநகரில் செப்டம்பர் மாதத்திலிருந்தும் அரசு கேபிள் டிவி இணைப்பு வழங்கும் பணி தொடங்கப்படும்..(மேசையைத் தட்டும் ஒலி)

அறிவிப்புகள் இன்னும் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே பேசியிருக்கிறீர்கள். சில கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். முடிந்தவரை அவர்களுக்கு பதில் சொல்ல வேண்டும். செ.ம. வேலுசாமி அவர்கள் பேசுகிறபோது பேசினார்— இப்போது அவர் இங்கு இல்லை—இருந்தாலும் நான் இங்கு அவருக்கு பதில் சொல்ல விரும்புகிறேன். அதாவது நலிந்த தொழிற்சாலைகளைப் பற்றி இந்த ஆட்சி கவலைப்படவில்லை என்ற வருத்தத்தோடு இங்கே சொன்னார்கள். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, பெரும்பாலும் கூட்டுறவு மற்றும் கைத்தறித் தொழிற்சாலைகள் நலிவடைந்திருப்பது உண்மை. ஆனால், நலிவடைந்திருக்கக்கூடிய தொழிற்சாலைகளை மேம்படுத்த நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது கடன் தவணைக் காலம் நீட்டித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரே தவணையில் கடனை முடிக்கக்கூடிய திட்டத்தின்கீழ் அபராத வட்டி, கூட்டு வட்டி மற்றும் சாதாரண வட்டிகளுக்குரிய தள்ளுபடிகளை அளித்து அந்த நிறுவனங்களை விடுவிக்கின்ற அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–15

அதேபோல, நம்முடைய அன்பிற்குரிய சகோதரர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. ஞானதாஸ் அவர்களும் பேசுகிறபோது e–waste–ஐப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த e–waste–ஐக் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் கொள்கை ஒன்றை வகுத்துக்கொண்டுள்ளது. விரைவில் அது தொடர்பான கொள்கை அரசால் வெளியிடப்படும். மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள இந்தப் பிரச்சினை நிச்சயமாக சரிசெய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



அதேபோல, நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது H.T.L. நிறுவனத்திற்கு வழங்கிய நிலத்தை பல மடங்கு அதிகமாக விலைக்கு விற்றுவிட்டதாக ஒரு செய்தியை இங்கே சொன்னார்கள். அந்தச் செய்தி உண்மையான செய்தி அல்ல. அது தவறானது. H.T.L. நிறுவனம் விற்க உத்தேசித்திருந்த 11 ஏக்கர் நிலத்தை தமிழக அரசே திரும்பப் பெற்றுக்கொள்ள கடந்த 25–3–2008 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள் இங்கே பேசுகிறபோது மூடப்பட்ட சர்க்கரை ஆலையைத் திறப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் மதுரா சர்க்கரை ஆலைகள் மீண்டும் இயக்கப்படும் என நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இதே அவையில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நிலம் தொழிற்சாலைகளுக்கு குறைவான விலைக்கு விற்கப்படுகிறது என்ற ஒரு செய்தியை நம்முடைய திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். எல்காட் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும் அரசு நிலங்களில் மட்டுமே தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்கப்படுகின்றன. நில ஆர்ஜிதம் செய்யப்படுவதே கிடையாது. நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்போது வருவாய்த் துறையால் நிர்ணயிக்கப்படக்கூடிய விலையை அடிப்படையாகக் கொண்டுதான், எல்காட் நிறுவனத்தின் சேவைக் கட்டணத்தை சேர்த்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, திரு. இராமசாமி அவர்கள் பேசுகிறபோது நாங்குநேரி SEZ–க்காக நஞ்சை நிலம் எடுத்ததைப் பற்றி ஒரு பிரச்சினையை இங்கே எடுத்துச்சொன்னார்கள். நாங்குநேரி SEZ–க்காக 2,500 ஏக்கர் நிலம் தேவைப்பட்டது. அதில் சுமார் 400 ஏக்கர் நிலம் வானமாமலை மடத்தினால் TIDCO நிறுவனத்திற்கு விற்கப்பட்டது. இதில் சுமார் 67 ஏக்கர் நிலம் மட்டுமே நஞ்சை நிலம் ஆகும். இதுவும் மார்க்கெட் விலைக்கு வாங்கப்பட்டதால் நிலம் கையெடுப்பு என்ற அந்தக் கேள்வி எழவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, திரு. ரவிச்சந்திரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது அரசாணை எண் 75-ன் மூலம் சிறு தொழில் நிறுவனங்களுக்கு இருந்த சலுகை குறைக்கப்பட்டதை சட்டத் திருத்தத்தின்மூலமாக அ.தி.மு.க. அரசு அளித்தது என்ற ஒரு செய்தியை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பொதுத் துறை நிறுவனங்கள், சிறு தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு வழங்கப்படும் சலுகைகள் தற்போதும் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. முந்தைய அரசு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை நீடித்திருந்த சலுகையை 2006–லே 5 ஆண்டுகள் நீடித்து இந்தக் கழக அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இங்கே முடிந்த அளவுக்கு சில விளக்கங்களையெல்லாம் பதிலுரையாக நான் தந்திருக்கிறேன் என்று நான் நம்புகிறேன். இருந்தாலும் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தொழில் துறை மானியக் கோரிக்கைமீது தந்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்கள் 258. அதேபோல தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைமீது தந்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்கள் 177. ஆகவே, இந்த பதில் இங்கே ஓரளவுக்கு உங்களுக்கு திருப்தி தந்திருக்குமென நான் உளமாற நம்புகிறேன். இது முதல்வர் அவர்கள் தலைமையின்கீழ் இருக்கின்ற துறை என்பது உங்களுக்குத் தெரியும். நம்முடைய முதல்வர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு, உரிய நேரத்தில், உரிய வகையிலே, உரிய நடவடிக்கை எடுத்து உங்கள் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்று அவருடைய சார்பிலே இந்த நேரத்திலே நான் உங்களுக்கெல்லாம் உறுதி தர விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தந்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு கோரிக்கை எண் 27–தொழில் துறை மற்றும் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறைக்கான மானியக் கோரிக்கைகளை எல்லாம் நீங்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று உங்களையெல்லாம் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றே ஒன்று. இந்தத் தமிழகத்திலே தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்பம் என்பது மேலும் வளர்ச்சி பெற்றாகவேண்டும். அதற்கு இரண்டு வழிச் சாலைகள் 4 வழிச் சாலைகளாகவும், 4 வழிச் சாலைகள் 6 வழிச் சாலைகளாகவும், 6 வழிச் சாலைகள் 8 வழிச் சாலைகளாகவும் விரிவு பெற்றாகவேண்டும். துறைமுகங்களும், விமான நிலையங்களும் விரிவு பெற்று பொலிவு பெற்றாகவேண்டும். வேலைவாய்ப்புகள் பல்கிப் பெருகிட வேண்டும். தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தொழில் வளம் தழைத்திடவேண்டும். இதுதான் நம்முடைய தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய இலட்சியம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய இலட்சியம் நிறைவேறுகிறபோது,

*"இன்பம் இன்பம் இதோ பார்*
*கிடந்த துன்பம் தொலைந்தது, தொலைந்தது*
*அடிமை வாழிய தொழிலே,*
*செந்தமிழ் வாழிய, வாழிய வண்டமிழே"*

என்ற பாவேந்தரின் வீர வரிகளோடு விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அமரமூர்த்தி, சொல்லுங்கள்.

பிற்பகல் 2–20

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கம் 2008 ஜனவரியிலேயே துவங்கப்படும் என்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதைப்பற்றி பதிலுரையிலே எதிர்பார்த்தோம். ஒன்றும் சொல்லப்படவில்லை.

அதேபோல, சிமெண்ட் விலை இப்போது தாறுமாறாக உயர்ந்துகொண்டிருக்கிறது. எனவே, புதிய சிமெண்ட் ஆலைகள் துவக்குவதைப் பற்றியும், இருக்கிற சிமெண்ட் ஆலைகளை நவீனப்படுத்தி அதிக அளவிலே சிமெண்ட்டைப் பொதுமக்களுக்கு விற்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது சிமெண்ட் விலை உயர்ந்திருக்கின்றது, கடந்த 2001–லும் சிமெண்ட் விலை உயர்ந்திருந்தது. அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது

கூட்டங்கள் கூட்டப்பட்டன. விலைவாசியைக் கட்டுப்படுத்துவது என்பது எங்கள் கையிலே இல்லை என்று சொன்னதாக அவர் பதில் சொல்லியிருந்தார். ஆனால், அன்றைக்கே, நீங்கள் 1996–2001–லே ஆட்சியிலிருக்கின்றபோது, சிமெண்ட் விலை உயர்ந்திருந்தது, 200 ரூபாய்க்கு மேலே சிமெண்ட் விலை உயர்ந்திருந்ததைச் சுட்டிக்காட்டி இன்றைக்கும் உங்களுடன் கூட்டணியாயிருக்கின்ற இங்கே காங்கிரஸ் உறுப்பினராக இருக்கின்ற நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்கூட அன்றைக்கு சத்தியமூர்த்தி பவனிலே சிமெண்ட் விற்றார்கள்—அன்றைக்கு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக இரட்டை வரி விதிக்கப்பட்டது. 145 ரூபாய்க்குள்ளே விற்றால், 16 . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, இது விவாதமா?

**திரு. சி.வி. சண்முகம்:** இல்லை, குறை சொல்லவில்லையே? உங்களை எதுவும் குறை சொல்லவில்லையே? எதுவும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றார், எடுத்த நடவடிக்கையைச் சொல்கிறேன். 145 ரூபாய்க்குள்ளே சிமெண்ட் விற்றால் 16 சதவிகிதம் வரி. 145 ரூபாய்க்கு மேல் விற்றால் 24 சதவிகிதம் வரி. அப்படி மொத்தம் வசூலிக்கப்பட்ட வரியிலே 90 சதவிகிதத் தொகை 16 சதவிகிதத்திற்குள்ளே வசூலிக்கப்பட்டது. அதையேதான் நாங்கள் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஆனால், இன்றைக்கு நீங்கள் ஆட்சிக்கு வந்து சிமெண்ட் வரி குறைக்கப்பட்டிருக்கின்றது. 12.5 சதவிகித சிமெண்ட் வரி குறைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், சிமெண்ட் இன்றைக்கு 270 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கின்றது. அப்படியென்றால், இடைப்பட்ட பணம் யாருக்குப் போகிறது என்பதுதான் எங்களுடைய கேள்வி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே அவர்கள் செய்தார்கள், 145 ரூபாயாகக் குறைத்தார்கள். இதே அவையிலே விவாதம் நடந்தது, அப்போது அவர்களே சொன்னார்கள், உங்களிடம் cartel இருந்தது. அப்போதிருந்த அண்ணன் மாறன் அவர்களுக்கும் India Cements–க்குமெல்லாம் cartel இருந்தது என்றெல்லாம் இங்கே வைத்துச் சொன்னார்கள். நாங்கள் அப்போது அதை எதிர்த்தெல்லாம் பதில் சொன்னோம், Cartel எல்லாம் கிடையாது, விலையைக் குறையுங்கள் என்று. அதற்குத்தான் 145 ரூபாய் என்று சொன்னார்கள். இரண்டு மாதங்களுக்கு 145 ரூபாய்க்கு விற்றார்கள். அடுத்து, cartel யாருக்கு



மாறிவிட்டது என்று தெரியவில்லை, அடுத்து cartel காற்று மாறியவுடனேயே (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஆட்சியிலேயே 210 ரூபாய்க்கு வந்தது என்பதுதான் உண்மை, அதிலே எந்தவிதமான மாற்றமும் கிடையாது. (குறுக்கீடுகள்) உங்கள் ஆட்சிக் காலத்திலேயே வந்துவிட்டது. (குறுக்கீடுகள்)

***திரு. விடியல் எஸ். சேகர்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் சாயக் கழிவுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு 2,000 ஏக்கர், 3,000 ஏக்கர், 4,000 ஏக்கர் என்று கையகப்படுத்தி பன்னாட்டு நிறுவனங்களுக்கு நம்முடைய அரசு வழங்கவிருக்கிறது. இதை நான் எதிர்ப்பாகச் சொல்லவில்லை. அந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு இப்படி வழங்கக்கூடிய அந்த 4,000 ஏக்கர், 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் அவ்வளவு பரப்பளவிலும் அவர்கள் அந்தத் தொழிற்சாலையைத் துவங்குகின்றார்களா? தொழிற்சாலை தொடங்கப்படவில்லை என்று சொன்னால், அந்த நிலத்தை அரசு திரும்பப் பெறுவதற்கு ஏதாவது ஒப்பந்தம் வழிவகை செய்கிறதா? ஆகவே, ஒட்டுமொத்தமாக, ஆயிரக்கணக்கான ஏக்கர் கையகப்படுத்துவதிலே விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகத்தான் இதைக் கேட்கிறேனே தவிர, தொழிற்சாலைகள் வரக்கூடாது என்பதற்காக அல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில், இப்படி தொழிற்சாலைகள் துவங்குகிற நேரத்தில் அங்கே தொழிற்சங்கங்கள் துவங்குவது, (குறுக்கீடு) நான் கேட்டுவிடுகிறேன், தொழிற்சங்கம் துவங்குவது, வேலைவாய்ப்புப் பெறுகிற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிடர்களுக்கு வேலைவாய்ப்புப் பெறுவதற்கு பன்னாட்டு நிறுவனங்களிடம் உத்தரவாதம் பெற அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி அவர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு ஏற்கெனவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அவர்கள் பதில் சொன்னார்கள். அரசாங்கம் கொடுக்கின்ற நிலங்கள் lease அடிப்படையிலேதான் கொடுக்கப்படுமே தவிர,

அவர்களுக்கே சொந்தமாக ஆக்கப்படமாட்டாது என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேலைவாய்ப்பிலே 75 சதவிகிதம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் கொடுக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி வேலைவாய்ப்புக் கொடுக்கின்ற நேரத்தில், நாம் விகிதாச்சார அடிப்படையிலே கொடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)

*பிற்பகல் 2–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 27–தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தொழில்துறை பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.305,26,45,000/–, மூலதனக் கணக்கில் ரூ.10,84,37,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.200,00,03,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.



### (ஆ) கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய 31 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.770,86,12,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,00,00,000/–ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 3. அறிவிப்பு—தொடர்ச்சி

### (ஆ) சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு அருகே விளையாட்டுப் போட்டிகள் நடத்த ஏற்பாடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறும் நாட்களில் மாலை நேரங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது விருந்தினர்களின் பொழுதுபோக்கிற்காகவும், அவர்களின் தகவலுக்காகவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் சிலம்பம், யோகா,

[பேரவைத் தலைவர்] [2008 மே 5

டேக்வோண்டோ, குத்துச்சண்டை, உஷு ஆகிய விளையாட்டுகள் காட்சிப் போட்டிகளாக 5–5–2008, 6–5–2008, 8–5–2008, 12–5–2008 மற்றும் 13–5–2008 ஆகிய நாட்களில் மாலை 6–00 மணி முதல் 8–00 மணி வரை சட்டமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பு வளாகத்தில் B, C மற்றும் D தொகுப்புகளுக்குப் பின்புறம் அமைந்துள்ள சிறுவர்கள் விளையாட்டுத் திடல் அருகில் நடைபெறவுள்ளன. சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விளையாட்டுப் போட்டிகளை உறுப்பினர்கள் அனைவரும் கண்டுகளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6–5–2008) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

54. 2006 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 28 ஆம் நாள் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் மாற்றம் செய்து, யாதொரு வணிகர், பழைய அல்லது பயன்படுத்தப்பட்ட கண்ணாடி புட்டிகள் ஆகியவற்றின் கடைசிக் கொள்முதலின்போது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும்; மற்றும் கழிவுத்தாள் மற்றும் கழிவுக் காகித அட்டை ஆகியவற்றின் கடைசிக் கொள்முதலின்போது செலுத்தத்தக்க வரியை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள காலம் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 19–12–2007 ஆம் நாளிட்ட 198 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

55. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர்



2008 மே 5]

பாதுகாப்புத் (சி.ஜே.1) துறையின் 25–1–2008 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

56. 2006–2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்து இரண்டாவது ஆண்டறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

57. 2006–2007 ஆம் ஆண்டிற்கான அரசு இரப்பர் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

172. மானியக் கோரிக்கை எண் 27–தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

173. தொழில் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

174. தொழில் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

175. மானியக் கோரிக்கை எண் 31–தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009. (தமிழ், ஆங்கிலம்)

176. தகவல் தொழில்நுட்பவியல் துறை பற்றிய செயல்பாட்டு ஆய்வுரை, 2007–2008. (தமிழ், ஆங்கிலம்)

177. பால் வளம் (கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008–2009. (தமிழ்)

*178.* மீன் வளம் (கால்நடைப் பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், *2008–2009.* (தமிழ்)

*179.* மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கை. *(2007–2008)*

*180.* மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை. *(2007–2008)*

*181.* மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. *(2007–2008)*

*182.* மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(2007–2008).*



# இணைப்பு–I

*(97 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 27—தொழில் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

### முன்னுரை

அரசின் முக்கியக் குறிக்கோள், அரசியல், சமூக, தொழில், வர்த்தக, பொருளாதார நிலைகளில். சீராகவும் விரைந்தும் முன்னேற்றம் காண்பது, முன்னேற்றத்தின் பயன் மாநிலம் முழுவதும் வாழும் மக்கள் அனைவருக்கும் சம அளவில் கிடைக்கச் செய்வது ஆகியனவாகும். அரசு இந்தக் குறிக்கோள்களை அடையத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகிறது. இந்தியாவில் தாராளமயமாக்கல் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டபின் உலக அளவில் ஏற்பட்டுள்ள வியக்கத்தக்க மாற்றங்களின் தாக்கம் நம்மால் உணரப்படுகிறது. அண்மைக்காலமாக நிலவும் வரலாறு காணாத வாய்ப்புகளைப் பயன்படுத்தி, தமிழகம் முழுமையாகப் பயனுறச் செய்திடல்வேண்டும்.

தமிழ்நாடு அரசின் விரைவான, வெளிப்படையான அணுகு முறையினால் இம்மாநிலத்தில் முதலீட்டாளர்கள் அதிக அளவில் முதலீடு செய்கிறார்கள். உற்பத்தித் துறையில் புதிய முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது. வழக்கமான துணி நூல் மற்றும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருள் போன்ற மிக வலுவான தொழிற்சாலைகளோடு மின் எணு வன்பொருள், தானியங்கி மற்றும் உதிரிப் பாகங்கள் போன்ற உற்பத்தித் துறையில், தமிழ்நாட்டில் முதலீடு செய்வதில் முதன்மையாக இருக்கிறார்கள். உலகளவில் உற்பத்தியில் முதன்மை மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குவதுதான் அரசினுடைய நோக்கமாகும்.

தற்சமயம் மைய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் தொழில் உதவிகளுக்கான தலைமைச் செயலகம் மற்றும் இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம், மாநில வாரியாக முதலீட்டு விவரங்களை வெளியிடுகிறது.

*3.* தொழில் முனைவோர் ஒப்பந்தம், ஏற்புக் கடிதம், தொழில் உரிமம் ஆகிய வகைகளின்கீழ் புதிய தொழில் திட்டங்களில் ரூபாய் *1,41,552* கோடி தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முதலீட்டுக்கு ஏப்ரல்

2006 வரை ஒப்புதல் அளித்துள்ளதாக மைய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் தொழில் உதவிகளுக்கான தலைமைச் செயலகம் தெரிவித்துள்ளது. ஜனவரி 2008 வரை ரூ.1,85,640 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது. மே 2006-லிருந்து ஜனவரி 2008 வரையில் ரூ.44,088 கோடி முதலீடு உயர்ந்துள்ளதாக இதிலிருந்து தெரிகிறது. இந்த உயரிய முதலீடு ஆகஸ்ட் 1991 முதலான மொத்த முதலீட்டில் 23.7 சதவிகிதமாகும். இது கடந்த 20 மாதங்களில் தொழில் துறை கண்டுள்ள மிகப் பெரும் வளர்ச்சியைக் காட்டுகிறது.

பல்வேறு மாநிலங்களில் செய்யத்தக்க முதலீடுகள் குறித்து இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இம்மையத்தின் 1996 ஆம் ஆண்டு மே மாத அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் இதுவரை செய்யத்தக்க முதலீடு ரூ.90,650 கோடியாக இருந்தது. ஆனால் 2001 ஆம் ஆண்டு ஏப்ரலில் ரூ.1,57,903 கோடியாக உயர்ந்தது. இதேபோல், 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ரூ.1,73,529 கோடியாக மட்டும் இருந்தது. இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மைய அறிக்கையின்படி மார்ச் 2008 வரை தமிழகத்தில் மொத்த முதலீடு ரூ.3,48,704 கோடியாக உயர்ந்தது. எனவே, தமிழகத்தில் ஜூலை 2006-லிருந்து மார்ச் 2008 வரை திட்டமிடப்பட்டு வந்து கொண்டுள்ள (Investment in pipeline) முதலீடுகளின் மதிப்பு 1,75,175 கோடி ரூபாய்களாகும். இது கடந்த இரண்டு ஆண்டுகளில் 100 சதவிகிதத்திற்கு அதிகமாகச் செய்யப்பட்ட முதலீடுகளின் உயர்வினைக் காட்டுகிறது.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தமிழக அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளினால் வாகன உற்பத்தி மற்றும் அதன் உபகரணங்கள் உற்பத்தி, மின்னணுவியல் வன்பொருள், மென்பொருள்களின் உற்பத்தி மையமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இவ்வகைத் தொழிற்சாலைகளை அதிக அளவில் அமைக்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மரபு வழித் தொழில்களான ஜவுளி, ரெடிமேட் ஆடைகள், தோல் மற்றும் சர்க்கரைத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கும் அரசு ஊக்கமளித்து வருகிறது. இதன் காரணமாக 1 இலட்சத்து 49 ஆயிரத்து 140 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் 18 ஆயிரத்து 483 கோடி முதலீட்டிலான 14 தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு உலகப் புகழ் வாய்ந்த ரெனால்ட்-நிசான், சாம்சங், சிக்னெட் சோலார் போன்ற தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்



செய்யப்பட்டுள்ளன. மேலும், அசோக் லேலண்ட், நிசான் மற்றும் மோசர்பேர் ஆகிய நிறுவனங்களுடன் விரைவில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த நிதியாண்டில் மட்டும் 30 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான தொழிற்சாலைகளை அமைப்பதற்காக 25 தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.


மேற்கண்டதிலிருந்து குறிப்பிடத்தக்க முதலீடுகளை அதிக அளவில் கவரும் முக்கியத் துறைகளாக மோட்டார் வாகனம் மற்றும் மின்னணு வன்பொருள் துறைகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

நாட்டின் வருமானம் அதிகரிக்கும்பொழுது, உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தேவைகளும் அதிகரிக்கும். இந்த அதிகத் தேவையைச் சமாளிக்க நமது நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் வெளிநாட்டு நிறுவனங்கள் பலவற்றால் முதலீடு செய்யப்படுவது அதிகரிக்கும். எனவே, அதிக முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் உலகத் தரம் வாய்ந்த புதிய கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுற்றுச்சூழல்களை நமது மாநிலத்தில் உருவாக்கி அதன்மூலம் தமிழ்நாட்டினை ஓர் உற்பத்திக் கூடமாக மாற்றலாம் என்பதே இந்த அரசின் தொலைநோக்குப் பார்வையாகும்.

உற்பத்தித் துறையும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாகும். ஏனெனில், இத்துறை பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சிகள் எதுவும் இல்லாத இருவகையினருக்கும் நிறைய வேலைவாய்ப்புகளை அளிக்கிறது. மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காக வேலைவாய்ப்புகளைப் பெற விழைகின்றனர். தமிழகத்தைத் தொழில்மயமாக்குவதன்மூலம் இத்தகையோருக்கு உரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடமுடியும் என்று அரசு கருதுகிறது. தமிழகத்தைத் தொழில்மயமாக்குவதன் பயன்கள் மாநிலத்தின் எல்லாப் பகுதிகளையும் சென்றடைவது எளிதாகும். இருப்பினும், சென்னை மாநகரம் தமிழகத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது. சென்னை மாநகரைச் சுற்றி அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த பல கட்டமைப்பு வசதிகள் மூலமாக முதலீடுகளை ஈர்ப்பதில் சென்னை மாநகரம் பெரிய காந்தம்போல் செயல்பட்டு வருகிறது. தமிழகத்தின் தென்பகுதியில் ஒன்றும், வட பகுதியில் ஒன்றுமாக இரு பெரும் தொழில் மையங்களை உருவாக்கி, அதன்மூலம் முதலீட்டினைப் பெறவும் மற்றும் வளர்ச்சியை எட்டவும் அரசு விரும்புகிறது. சென்னைக்கு வெளியே பிற நகர்புறப் பகுதிகளில்


[2008 மே 5

சி.எம்.ஐ.இ. - மே 1996-லிருந்து உத்தேசிக்கப்பட்ட முதலீடுகளின் நிலவரம் (ரூ. கோடியில்)




2006-07 மற்றும் 2007-08 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பகுதி முதலீடுகள் (ரூ. கோடியில்)

14 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ரூ. 18,483 கோடி






2008 மே 5]

தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்திடும் நோக்கில் அரசு ரூ.350 கோடி முதலீட்டிற்கு பதிலாக ரூ.250 கோடி முதலீட்டில் மூன்று ஆண்டுகளுக்கு கட்டுமான அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகைகளை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் நீங்கலாகப் பிற பகுதிகளுக்கு வழங்க உள்ளது. இதற்காக தென் மாவட்டங்கள்மீது தனிக் கவனம் செலுத்தி அதன்மூலம் தொழில் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழி வகுக்கப்படும்.

இன்று நாட்டில் நிலவும் தாராளமயமான சூழலில் உரிமம் அளித்தல் என்ற கருவியை மட்டும் பயன்படுத்தி பின்தங்கிய மாவட்டங்களில் முதலீடுகளை அரசினால் அனுமதிக்க இயலாத நிலை உள்ளது. இதனைச் செய்வதற்கான ஒரே வழி, உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, மேம்படுத்தப்பட்ட தொழில் நிலங்களை ஏற்படுத்தித் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான வழிமுறைகளை எளிமைப்படுத்துவதே ஆகும். எனவே, இந்த அரசு தென் மாவட்டங்கள்மீது சிறப்புக் கவனம் செலுத்த முடிவு எடுத்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைத் திட்டம், நான்கு வழிச்சாலை அமைக்கும் பணியை விரைவாகச் செயல்படுத்துவதன்மூலம் மதுரையிலிருந்து தூத்துக்குடி வரை மற்றும் மதுரையிலிருந்து திருநெல்வேலி வரை தென் மாவட்டங்களில் முதலீடுகளை ஈர்க்க இயலும். அதுபோலவே, மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்கள் விரிவுபடுத்தும் பணிகளை விரைந்து முடிக்க மத்திய அரசினை இந்த அரசு அணுக உள்ளது. தூத்துக்குடி துறைமுகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த இயந்திரமயமாக்கிடவும் பெரிய சரக்குக் கப்பல்களை நிறுத்துவதற்கு ஏற்ப ஆழப்படுத்திடவும் மத்திய அரசின் உதவியோடு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மதுரை மற்றும் தூத்துக்குடி விமான நிலையங்களைப் பன்னாட்டுப் போக்குவரத்துக்கு ஏற்ப விரிவுபடுத்துவதற்கு மைய அரசிடம் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதே சமயத்தில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி முன்னேற்ற நிறுவனம் முக்கிய இடங்களில் 1000-2000 ஏக்கர் நிலப் பரப்பளவில் நான்கிலிருந்து ஐந்து புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்கும். தென்மாவட்டங்களில் தேர்ந்த மனித ஆற்றல் வளம் ஏற்கெனவே உள்ளதால் இந்தியா மற்றும் வெளிநாடுளைச் சேர்ந்த பெரிய முதலீட்டாளர்கள் தாங்கள் முதலீடு செய்யுமளவுக்குரிய இடமாகத் தேர்வு செய்யுமளவுக்கு தென் தமிழகம் அமையும்.

[2008 மே 5

தற்போதைய அரசின் முந்தைய பதவிக்காலமான 1996-2001-ல் திருப்பெரும்புதூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சிறந்த தொழில் மையமாக மேம்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வரசால் விதைக்கப்பட்ட விதை இன்று பலனீட்டத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் திருப்பெரும்புதூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இந்த நிலை தொடர்வதன்மூலம் பெரிய அளவிலான முதலீடுகளை இவ்வரசு முழுமனதோடு வரவேற்கிறது. நாட்டின் மிகச் சிறந்த தொழில் நகரமாகத் திருப்பெரும்புதூர் உருவாகும் என்பதைத் தமிழக அரசு உணர்ந்துள்ளது. இத்தொழிற்பகுதியில் சுமார் 2,00,000 வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இதைத் தொடர்ந்து இப்பகுதியில் வாழும் மக்களின் குடியிருப்பு மற்றும் சமூகக் கட்டமைப்புத் தேவைகளும் அதிகரிக்கும். உலகின் பல பகுதிகளிலிருந்தும் பெரிய முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்க்கும் வண்ணம் திருப்பெரும்புதூரில் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.

இரண்டு காரணங்களுக்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மிகவும் அவசியமாகும். முதலாவதாக, உள்நாட்டுத் தொழிலாளர்களின் வருவாய் ஈட்டும் திறன் பெருகவும், அவர்தம் தொழிற்திறன்கள் மேம்படுவதற்கும் உதவும் வகையில் அவர்கள் புதிய தொழில்நுட்பத்தையும், தொழில் நேர்த்தியையும் தம்மோடு கொண்டு வருவர். இரண்டாவதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் உடன் இருப்பது, முதலீடு செய்வதற்கு உகந்த இடம் தமிழகம் என்பதற்குரிய முத்திரை அடையாளமாக அதன் தகுதியை உயர்த்தும். எனவே, பிற நாடுகளிலிருந்து முதலீடுகளைக் கவர்வதற்கு தீவிர முனைப்புடன் கூடிய முயற்சியில் அரசு ஈடுபடும். நாம் அனைத்து நாடுகளிலிருந்து முதலீடுகளை வரவேற்போம். அதேநேரத்தில், ஏற்கெனவே பெரிய தொழிற்சாலைகளை அமைத்து முதலீடுகள் செய்துள்ள நாடுகளின்மீது தனிக் கவனம் செலுத்தினால் நல்ல பயன்கள் ஏற்படும். தமிழ்நாட்டில் இனி வருங்காலங்களில், ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், பின்லாந்து மற்றும் கொரியா போன்ற நாடுகளிலிருந்து பெரும் முதலீடுகளை கவரத்தக்கதாக தமிழ்நாடு விளங்கும் என்பது வெளிப்படை. இந்நோக்கத்திற்காக, நம் நாட்டில் அமைந்துள்ள அந்நாடுகளின் தூதரகங்களோடு தொடர்புகளை ஏற்படுத்தி, அந்நாடுகளின் உயர்மட்டக் குழுவினர் தமிழ்நாட்டிற்கு வருவதற்கும் நம் நாட்டிலிருந்து அத்தகைய குழுவினர் அந்நாடுகளுக்குச் செல்வதற்கும் அரசு முயற்சிகள் மேற்கொள்ளும்.



2008 மே 5]

பெரும் எண்ணிக்கையிலான முதலீட்டாளர்கள் எந்த ஒரு நாட்டிலிருந்தும் தமிழகம் வந்து தொழில் தொடங்க விரும்பினால், அந்த நாட்டிற்காகவே அரசு தொழிற்பேட்டைகளை நிறுவும். இத்தகைய முயற்சி பன்னாட்டு நிறுவனங்களைப் போன்று, பெருமளவில் பண வசதியற்ற நிறுவனங்களுக்கும் உதவிகரமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சொந்த நாட்டிலிருந்து பிற நாடுகளில் தொழில் முயற்சியை மேற்கொள்ளும்பொழுது அவர்கள் நாட்டின் தொழிற்சாலைகள் அருகில் இருப்பின் உதவிகரமாக அமையும்.

. அதிவேக தொழில்மயமாக்கலின் பயன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினர் மற்றும் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளையும் உயிரூட்டம் கொண்டதாக மாற்றும் என்பது தெள்ளத் தெளிவு. வேறுபட்ட புவியியல் அமைவிடங்களைக் கொண்ட, பலதரப்பட்ட வள ஆதாரங்களை எதிர் நோக்கியுள்ள பல்வேறு அளவிலான தொழில் நிறுவனங்களை ஊக்கப்படுத்த வேண்டும். இதனை எய்துவதற்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் நிலம் மற்றும் சமூகக் கட்டமைப்பு வசதிகளை அளிப்பதுடன் ஒரு தொழிற்சாலையை நிறுவுவதற்குரிய நடைமுறைகளை எளிமைப்படுத்திடவேண்டும். நிலத்தை வாங்குதல், பதிவு செய்தல், பயன்பாட்டினை மாற்றுதல், திட்ட அனுமதி பெறுதல், கட்டட வசதி அனுமதி பெறுதல் போன்றவற்றிற்கான நடைமுறைகளுக்கு குறிப்பிடத்தக்க காலம் மற்றும் முயற்சி தேவைப்படுகிறது. தமிழ்நாட்டில் தொழில்மயமாக்கலில் எழுச்சியை ஏற்படுத்திட அரசு ஒரு சட்டத்தினை இயற்றும். இச்சட்டம் தொழில்களை விரைவாக நிறுவுவதற்கு வசதி செய்யும். இதேபோன்று, மாநில மற்றும் மாவட்ட அளவில் ஒற்றைச் சாளர முறையின் செயல்பாடுகள் குறிப்பிடத்தக்க அளவில் விரைவுபடுத்தப்படும்.

இந்திய உற்பத்தியாளர்கள் ஏற்றுமதிகளில் விலைப் போட்டிகளைச் சந்திப்பதில் மேம்பாடு கண்டிட மத்திய, மாநில அரசுகள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஏற்படுத்துவதற்கான கொள்கையை உருவாக்கியுள்ளன. மிகுந்த கவனத்துடன் தேர்வு செய்த இடத்தில் நிறுவப்படும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தமிழக இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் திறனைப் பெற்றிருக்கும். மேலும், இவை உலகளவிலான வணிகத் தரத்தினை கொண்ட பொருள்களைத் தமிழகத்தில் உற்பத்தி செய்ய உதவும். சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிலங்களை

வாங்குவது மிகவும் பிரச்சினைக்குரிய செயல். எனவே, இதற்காக கட்டாய நிலக் கையகப்படுத்துதலை அரசு மேற்கொள்வதில்லை. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்மூலம் தொடர்ந்து பொதுமக்களுக்கு வளத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சி செய்யும். மாறாக, இவை, ஏழை விவசாயிகளைத் துன்பத்திற்கு உள்ளாக்கும் கருவியாக அமையாது.

நம் மரபுவழியான தொழில்களை மேம்படுத்துவதற்குத் தொடர்ந்து சிறப்பான கவனத்தைச் செலுத்துவோம். அரசு அண்மையில் தனது புதிய தொழிற்கொள்கையை அறிவித்துள்ளது. இக்கொள்கையின் முக்கிய நோக்கம், 2011 ஆம் ஆண்டிற்குள் 20 இலட்சம் கூடுதல் வேலைவாய்ப்பினை ஏற்படுத்துதல், 2011 ஆம் ஆண்டிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் உற்பத்தித் துறையின் பங்கீட்டினை 21 சதவிகிதத்திலிருந்து 27 சதவிகிதமாக உயர்த்துதல் மற்றும் தமிழ்நாட்டில் ஏற்றுமதியை இரு மடங்காக்குவதன்மூலம் ஏற்றுமதி மதிப்பாக ரூ.1,40,000 கோடியினை எட்டுதல் ஆகியவை ஆகும். புதிய தொழிற்கொள்கை பன்முக செயல்திறன்களைக் கையாள்வதன்மூலம் தொழில்மயமாக்கலின் தாக்கத்தை மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் ஏற்படுத்தித்தர முற்படுகிறது. தொழில் பிரிவுகள் மற்றும் தொழில் மையங்களை முக்கியமான இடங்களில் அமைக்கவும், அவை தொடர்பான கட்டுமானங்களை அமைக்கவும் இது சிறப்புக் கவனத்தைச் செலுத்த உதவும்.

அரசு நிறுவனங்கள், தங்களுடைய சமுதாயக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அந்நிறுவனங்களுக்கு ஊக்கம் தரும். அந்நிறுவனங்கள், தொழிற்சாலைகளை ஒட்டிய இடங்களில் சமுதாய நலனுக்கான திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திட அரசு வலியுறுத்தும். இப்பொருள் பற்றிய ஒரு குறிப்பு இப்பொழுது மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஒரு விதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வகையில் சில நிறுவனங்கள், ஏற்கெனவே அரசு மருத்துவமனைகள் மற்றும் கல்வி நிலையங்களில் வசதிகளை மேம்படுத்த முன்வந்துள்ளன.

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

'டிட்கோ' நிறுவனம், 1965-ல் அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து முக்கியமாக அரசு-தனியார் பங்கேற்புடன் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தி வருகிறது. புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களுடன் 'டிட்கோ' நிறுவனம் சேர்ந்து ஏற்படுத்திய கூட்டுத் துறை தொழில்கள்





மற்றும் தொழில் முனைவோர் பல்வகைத் தயாரிப்பு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொண்டு மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இரும்பு & உருக்கு, பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள், உரம், இரசாயனப் பொருட்கள், மோட்டார் வண்டிகள், மலர்ச் செடிகள் வளர்ப்பு, மின் & மின்னணுவியல், தகவல் தொடர்பு, மின் சக்தி, பொறியியல், தோல் பொருட்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாடு போன்ற பல்வேறு துறைகளில் டிட்கோ நிறுவனம் 100-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை, பல ஆண்டுகளாக கூட்டுத்துறை தொழில் முயற்சிகள் வாயிலாக மேம்படுத்தியுள்ளது.

அண்மைக் காலத்தில், வளர்ந்து வருகிற வணிகம் மற்றும் தொழில் சூழலுக்கேற்ப, மாநிலத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தொடர்ந்து முதலீடுகள் செய்வதை உறுதிசெய்வதற்காக, 'டிட்கோ' நிறுவனம், அடிப்படைக் கட்டமைப்பு வசதி மற்றும் நவீன வசதிகளை உருவாக்குகிற வகையில், அதன் நடவடிக்கைகளைப் பல்திறப்படுத்தியுள்ளது. கணிசமான அளவு மூலதனம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல் ஆகியவற்றின்மூலம் உள்ளூர் பொருளாதாரமும், மக்களும் பயனடைகிற வகையில், தொழில் முனைவோர்களைக் கண்டறிவதுடன், தொழில் முனைவோர் கண்டறிந்த பொருளாதார ரீதியில் செயல்படக்கூடிய வாய்ப்புகளுக்கும் உதவி புரிகிறது. சமவீத பங்கு முதலீடு மற்றும் உதவிபுரிதல் ஆகியவற்றின்மூலம் தொழிற்சாலைத் திட்டங்களில் 'டிட்கோ' நிறுவனம் கொண்டுள்ள ஈடுபாடு, திட்டங்களின்மூலம் விரைவில் பயனடைவதற்கான நிலையான பாதையை அமைக்க வகை செய்கிறது. டைட்டன் தொழிற்சாலைகள், தமிழ்நாடு பெட்ரோலியத் தயாரிப்புப் பொருட்கள், தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், டைசல் உயிரி தொழிற்பூங்கா, மஹேந்திரா வேர்ல்டு சிட்டி, அஸ்ஸெண்டாஸ் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஆகியவை 'டிட்கோ' நிறுவனத்தின் தொழில் மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்துவதற்கான 'டிட்கோ' நிறுவனத்தின் முயற்சிகளுக்கு சில எடுத்துக்காட்டுகளாகும்.

மாநிலம் முழுவதிலும் சமச்சீரான தொழில் வளர்ச்சியை அடையவும், உள்ளூர்ப் பொருளாதாரம் மற்றும் சமுதாய வளர்ச்சியை விரைவுபடுத்தவும், தமிழ்நாட்டில், தொழிற்சாலைகள் மற்றும் குறிப்பிட்ட தொழிலை நோக்கமாகக் கொண்ட அடிப்படைக்

கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகிற மற்றும் மேம்பாட்டுக்கு உதவுகிற செம்மையான மற்றும் செயல்திறன் வாய்ந்த தொழில்களை அமைத்தலே 'டிட்கோ' நிறுவனத்தின் நோக்கமாகும். ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ள தொழிற்சாலைகள், ரூபாய் 30,200 கோடிக்கு மேற்பட்ட முதலீட்டையும், 4 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் அளிக்கும்.

## செயல்படுத்தப்பட்டு வருகிற மற்றும் பரிசீலிக்கப்பட்டு வருகிற திட்டங்கள்

### திருவள்ளூர் மாவட்டத்தில் கப்பல் கட்டும் தளம் – சிறு துறைமுக வளாகம்

'டிட்கோ' நிறுவனம் திருவாளர்கள் லார்சன் & டூப்ரோ லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து திருவள்ளூர் மாவட்டம் எண்ணூர் துறைமுகம் அருகில் காட்டுப்பள்ளி கிராமத்தில், ரூ.3,068 கோடி முதலீட்டில் உலகத்தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த கப்பல் கட்டும் தளம் மற்றும் சிறு துறைமுக வளாகம் ஒன்றினை கூட்டு முயற்சியில் அமைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. மிகப் பெரிய சரக்குக் கப்பல்களை உள்ளடக்கிய வணிகக் கப்பல்கள், பாதுகாப்பு படைக் கப்பல்கள், நீர் மூழ்கிக் கலங்கள், பெட்ரோலிய முற்றாய்வு பணி மற்றும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் அடங்கிய ஆழ்கடல் மேடைகள் ஆகியவற்றைக் கட்டுதல் இத்திட்டத்தின் பல அம்சங்களுள் அடங்கும். கனரக இயந்திர பாகங்கள் மற்றும் உதிரிப் பாகங்களைத் தயாரிப்பதற்கான பல துணைப் பிரிவுகளை, இந்தக் கப்பல் கட்டும் தளம் உருவாக்கும். இத்திட்டம், 2010 மார்ச் திங்களுக்குள் நிறைவேற்றப்படும் என்றும், ஏறத்தாழ 10,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிக்கும் ௭ன்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனம்:

'டிட்கோ' நிறுவனம், ரூபாய் 4,790 கோடி செலவில், கடலூர் மாவட்டம், கடலூர் வட்டத்தில், ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் டன்கள் திறன் கொண்ட பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டம் ஒன்றை, நாகார்ஜுனா குழுமத்துடன் இணைந்து கூட்டுத் துறையில் செயல்படுத்துகிறது. இத்திட்டம் 2010 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்வகையில் கால அட்டவணை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது, 1,000 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 10,000





பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் அளிக்கும். இந்நிறுவனம், அண்மையில் தனது நிதி ஆதாரங்களை முழுமையாக உறுதி செய்துள்ளது. இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் பல துணைத் தொழில்கள் உருவாக்கப்படுவதுடன் உள்ளூர் பொருளாதாரமும் பெரிய அளவில் மேம்பாடு அடையும்.

### தரமணி டைசல் உயிரி தொழிற் பூங்கா (டைசல் பயோ பார்க் பின்புறம்)

சென்னை மாவட்டம், திருவான்மியூர் கிராமம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம், கொட்டிவாக்கம் கிராமம் ஆகியவற்றைச் சேர்ந்த 26.64 ஏக்கர் நிலத்தில், அனைத்து உள்கட்டமைப்பு வசதியுடன், சுமார் 4.00 மில்லியன் சதுர அடி கட்டடப் பரப்பில் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டத்தை, 'டிட்கோ' நிறுவனம் செயல்படுத்துகிறது. திருவாளர்கள் டி.எல்.எப். நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 1,500 கோடியாகும். இத்திட்டம், 2009 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் செயல்படத் தொடங்கி, ஏறத்தாழ 50,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கக்கூடும்.

### தரமணியில் தகவல் தொழில்நுட்பம்–தகவல் தொழில்நுட்பவியல் – சிறப்புப் பொருளாதார மண்டலம்:

சென்னை மாவட்டம், கானகம் மற்றும் திருவான்மியூர் கிராமங்களில் 25.27 ஏக்கர் நிலத்தில், ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு அரங்கம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்-தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை 'டிட்கோ' நிறுவனம் செயல்படுத்துகிறது. இத்திட்டம், 275 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் அனைத்து வசதிகளும் கொண்ட தனி அறைகள் ஆகியவற்றுடன், 1,500 பிரதிநிதிகள் அமரக்கூடிய ஒருங்கிணைந்த பன்னாட்டு மாநாட்டு அரங்கம் ஒன்றையும், ஏறத்தாழ 4 மில்லியன் சதுர அடி கொண்ட கட்டடப் பரப்பில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கான அனைத்து நவீன வசதிகளையும் கொண்டதாக இருக்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, திருவாளர்கள் டாடா ரியால்டி &

இன்ப்ராஸ்டிரக்சர் லிமிடெட் என்ற நிறுவனத்தின் தலைமையிலான கூட்டமைப்பு, கூட்டுத் தொழில் பங்குதாரர்களாக உள்ளது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு, ரூபாய் 3,000 கோடியாகும். இத்திட்டம், 2009 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டிற்குள் செயல்படத் தொடங்கி 50,000-க்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும்.

### சோழிங்கநல்லூரில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான குறிப்பிட்ட தொழிலை நோக்கமாகக் கொண்ட சிறப்புப் பொருளாதார மண்டலம்

'டிட்கோ' நிறுவனம், செகந்திராபாத்தைச் சேர்ந்த திருவாளர்கள் நுஸிவீடு சீட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடன் சேர்ந்து, கூட்டுத் தொழில்மூலம், சுமார் ரூபாய் 1,500 கோடி மதிப்பீட்டுச் செலவில், காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், சோழிங்கநல்லூரில், 66 ஏக்கர் நிலப் பரப்பில், 73 இலட்சம் சதுர அடியில், குடியிருப்பு மற்றும் 150 அறைகள் கொண்ட ஓட்டல் ஆகியவற்றைக் கட்டுவதற்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான இடவசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, தகவல் தொழில்நுட்பம் - தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்கிறது. இத்திட்டம், சுமார் 25,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும்.

### பெரம்பலூர், சிறப்புப் பொருளாதார மண்டலம்:

'டிட்கோ' நிறுவனம், ஐதராபாத்தை சேர்ந்த திருவாளர்கள் ஜி.வி.கே. இண்டஸ்டரீஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து, ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில், பெரம்பலூரில், பல்வகைப் பொருட்கள் தயாரிக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்கிறது. இத்திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் விரைவில் முடிவடைந்து கட்டுமானப் பணி 2008 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், ரூபாய் 5,000 கோடி வரையில் முதலீட்டை ஈர்க்கும். 50,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும்.



### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலம்:

'டிட்கோ' நிறுவனம், திருவாளர்கள் ஜி.எம்.ஆர். இன்ஃப்ராஸ்டிரக்சர் நிறுவனத்துடன் சேர்ந்து, ஜி.எம்.ஆர். கிருஷ்ணகிரி எஸ்.இ.இஸட். லிமிடெட் என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. இத்திட்டத்திற்கான உள்கட்டமைப்பை உருவாக்க ஆகும் செலவு ரூபாய் 2,300 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிலத்தைக் கொள்முதல் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் முழுவதுமாகச் செயல்படத் தொடங்கும்போது 8 முதல் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவில், தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் பணிகள், மருந்துகள் தயாரிப்பு, ஆடைகள் தயாரிப்பு, மின்னணுவியல் மற்றும் உணவுப் பொருள் பதப்படுத்துதல் போன்ற தொழிற்சாலைகளை அமைத்து ஏறத்தாழ 70,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதார மண்டலம்:

'டிட்கோ' நிறுவனம், மற்றும் ஏ.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கூட்டுச் சேர்ந்து கூட்டுத் தொழில் நிறுவனமான அதாவது ஏ.எம்.ஆர்.எல். இன்டர்நேஷனல் டெக் சிட்டி லிமிடெட் என்ற நிறுவனத்தின்மூலம் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் பல்வகைப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. இத்திட்டச் செயல்பாட்டிற்காக டிட்கோ மற்றும் ஏ.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் முன்னிலையில் 10-4-2008 அன்று கூட்டு முயற்சி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மத்திய அரசு, 2007 மே திங்களில் முறையான ஒப்புதல் அளித்தது. மத்திய அரசின் இறுதி அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் உள்கட்டமைப்பை உருவாக்க ஆகும் செலவு ரூ.630 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது, முழுவதுமாக செயல்படத் தொடங்கும்போது, சுமார் 70,000 பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும். 2008 ஏப்ரல் திங்களில் இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

[2008 மே 5

### எண்ணூரில் சிறப்புப் பொருளாதார மண்டலம்:

'டிட்கோ' நிறுவனம், எண்ணூர் துறைமுகத்திற்கு அருகில் ஏறத்தாழ 3,186 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 630 கோடி செலவில், பல்வகைப் பொருள்களைத் தயாரிக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. மோட்டார் வண்டி துணைப் பாகங்கள், பக்குவப்படுத்தப்பட்ட தோல் பொருட்கள், மின்னணுப் பொருட்கள், ஆடைகள், கனரக இலகு ரக பொறியியல் பொருட்கள் ஆகியவை தெரிவு செய்யப்பட்டு, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தொழில்கள் இத்திட்டத்தில் அடங்கும்.

### விருதுநகரில் பல தயாரிப்புப் பொருட்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்கும் திட்டம்:

'டிட்கோ' நிறுவனம் விருதுநகரில், ரூபாய் 500 கோடி மதிப்பீட்டுச் செலவில், பல்வகைப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றை அமைக்கக் கருதியுள்ளது. இத்திட்டம், சுமார் 50,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, கூட்டுத் தொழில் பங்குதாரரைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் 'டிட்கோ' நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

### முந்திரிக்கான வேளாண்மை ஏற்றுமதி மண்டலம்:

கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உற்பத்தியாகும் முந்திரிகளைக்கொண்டு ஒரு முந்திரி வேளாண் ஏற்றுமதி மண்டலத்தை கடலூர் மாவட்டத்தில் ஏற்படுத்த மத்திய அரசின் அபீடா மற்றும் அரசு வேளாண் துறை, தமிழக அரசு இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. தனியார் துறை தொழில் முனைவோர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். டிட்கோ நிறுவனம் தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து ரூபாய் 16.54 கோடி மதிப்பீட்டில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறது. சோதனை அடிப்படையில் ஏற்றுமதிகள் தொடங்கியுள்ளன. இத்திட்டத்தின்கீழ் சுமார் 3,000 சிறு மற்றும் குறுநில விவசாயிகள் பயன் பெறுவர்.

### நாமக்கல்லில், முட்டைகளுக்கான குளிர்பதன சேமிப்புக் கிடங்கு:

'டிட்கோ' நிறுவனம், நாளொன்றுக்கு, 1,000 இலட்சம் முட்டைகளைச் சேமித்து வைப்பதற்காக, நாமக்கல்லில் ரூபாய் 10



2008 மே 5]

கோடி செலவில், குளிர்பதன சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தக் கருதியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவற்காக, கூட்டுத் தொழில் பங்குதாரர் ஒருவரைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் 'டிட்கோ' நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

### பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் முதலீட்டு மண்டலம்:

மத்திய அரசின் இரசாயனப் பொருட்கள் மற்றும் உரங்கள் அமைச்சகம் தொடங்கிய பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் முதலீட்டு மண்டலக் கொள்கையின்படி, தமிழ்நாட்டின் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள் மற்றும் பெட்ரோலிய இரசாயனப் பொருட்கள் முதலீட்டு மண்டலத்தை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றினை, 'டிட்கோ' நிறுவனம் தயாரித்துள்ளது. இச்செயற்குறிப்பு, மத்திய அரசின் அனுமதியை எதிர்பார்த்துள்ளது. மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட பெட்ரோலியம் இரசாயனப் பொருட்கள் முதலீட்டு மண்டலத்திற்கான செயற்குறிப்பில், கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களிலுள்ள குறிப்பிட்ட பகுதிகளில், சாலை, இருப்புப் பாதை மற்றும் துறைமு கட்டமைப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகவும், மின்சாரம் மற்றும் நீர்வள ஆதாரங்களை உருவாக்குவதற்காகவும், மத்திய-மாநில அரசுகளின் முதலீடான ரூபாய் 6,189.00 கோடியும் அடங்கும்.

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்), இந்திய நிறுமச் சட்டம் 1956-ன்கீழ் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தமிழ்நாட்டினை உலகளவில் ஒரு தொழில் உற்பத்தி மையமாக உருவாக்க, தமிழ்நாடு முழுமையிலும் மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளை தொழில் முனைவோர்களுக்கு வழங்குதல் சிப்காட் நிறுவனத்தின் ஒட்டுமொத்த தொலைநோக்குப் பார்வையாகும். இதற்கு ஏதுவாக, 20,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கியை ஐந்து ஆண்டுகளுக்குள் ஏற்படுத்த உள்ளது. இந்நில வங்கி மாநிலம் முழுவதும் விரிந்து இருக்கும்.

சிப்காட் நிறுவனம், மாநிலம் முழுவதும், குறிப்பாக தொழில் சிறப்பு பெருவழிச்சாலைகளில், அனைத்து உட்கட்டமைப்பு

[2008 மே 5

வசதிகளுடன்கூடிய புதிய தொழில் வளாகங்களை / பூங்காக்களை உருவாக்க முனைந்து வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தொழிற் கூடங்களுக்கான நில ஒதுக்கீட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இதனால், முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு பெருமளவில் கூடியுள்ளது. சிப்காட், 2006-2008 ஆண்டுகளில், 305 தொழிற்கூடங்களுக்கு 3,396 ஏக்கர் நிலப்பரப்பினை ஒதுக்கீடு செய்துள்ளது. இவை சுமார் 99,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

## கடந்த காலச் சாதனைகள் — மேல்நோக்குப் பார்வை

### தொழில் வளாகங்கள் / பூங்காக்கள்/வளர்ச்சி மையங்கள்:

'சிப்காட்' நிறுவனம், தமிழகத்தில் 12-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில், இதுவரையில், இராணிப்பேட்டை, ஓசூர், கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை, பர்கூர், நிலக்கோட்டை மற்றும் செய்யாறு ஆகிய 10 இடங்களில் தொழில் வளாகங்களையும், கும்மிடிப்பூண்டி ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழிற்பூங்கா, இருங்காட்டுக்கோட்டை, சிறுசேரி மற்றும் திருப்பெரும்புதூர் ஆகிய 4 இடங்களில் தொழில் பூங்காக்களையும், பெருந்துறை, கங்கைகொண்டான், ஒரகடம் ஆகிய 3 இடங்களில் வளர்ச்சி மையங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

### தொழில்வகை சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்:

மாறிவருகிற தொழில் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, அயல்நாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்காக, திருப்பெரும்புதூரில் (570.92 ஏக்கர்) மின்னணு/தொலைத் தொடர்பு வன்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம், ஒரகடத்தில் (347.66 ஏக்கர்) மின்னணு வன்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம், பெருந்துறையில் (263.19 ஏக்கர்) பொறியியல் துறை சிறப்புப் பொருளாதார மண்டலம், கங்கைகொண்டானில் (255 ஏக்கர்) போக்குவரத்து பொறியியல் பொருட்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம், செய்யாறில் (255 ஏக்கர்) மோட்டார் வாகன துணைப் பாகங்களுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம், இருங்காட்டுக்கோட்டையில் (153.65 ஏக்கர்) கீரலணிகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம், இராணிப்பேட்டையில் (260 ஏக்கர்) தோல்பொருட்கள் சிறப்புப் பொருளாதார மண்டலம் ஆகிய ஏழு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சிப்காட் நிறுவனத்தின் தொழில் வளாகங்களில் நிறுவப்பட்டுள்ளன.



2008 மே 5]

'சிப்காட்' நிறுவனம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 22,847.22 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளது. அதில், 18,534.24 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யத்தக்கதாகும். இந்நிறுவனம் இதுவரையில் 1,651 தொழிற்கூடங்களுக்கு 13,315 ஏக்கர் நிலப்பரப்பினை ஒதுக்கீடு செய்துள்ளது.

2006-2008 ஆம் ஆண்டுகளில் 2,575 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 1996-2001 ஆண்டுகளில் 9,159.47 ஏக்கர் பரப்பு நில வங்கியை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும். பின்வரும் காலங்களில் இந்த மாநிலம் தொழில்மயக் கொள்கையைச் மிகத் தீவிரமாக செயல்படுத்த இந்நில வங்கி பெரிதும் உதவும்.

### நிதிச் செயல்பாடு:

2006-2007 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனத்தின் நிதிச் செயல்பாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. 2007 ஆம் ஆண்டுக்கான மொத்த வியாபாரத் தொகை ரூபாய் 169.15 கோடியிலிருந்து ரூபாய் 329.90 கோடியாக அதிகரித்ததுடன் ரூபாய் 56.69 கோடி நிகர ஆதாயம் ஈட்டியுள்ளது. மொத்த வியாபாரத் தொகை அதிகரித்ததால், சிப்காட் நிறுவனம், 2006-2007 ஆம் ஆண்டில் 20 சதவிகிதம் ஆதாயப் பங்குத் தொகையாக ரூபாய் 11.58 கோடியினை அரசுக்கு அளித்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க அளவில் ரூபாய் 72.14 கோடி நிகர ஆதாயத்துடன் ரூபாய் 441.78 கோடி மொத்த வியாபாரத் தொகையை எட்டியுள்ளது. இதன் காரணமாக 20% ஆதாயப் பங்குத் தொகை தொடர்ந்து இவ்வாண்டும் அரசுக்கு அளிக்கப்படும்.

ரூபாய் கோடியில்

| 31 மார்ச் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 |
|---|---|---|---|---|---|---|---|---|
| வரவு | 37.83 | 34.75 | 39.07 | 56.11 | 106.64 | 169.15 | 329.90 | 441.78 |
| நிகர இலாபம்/ நஷ்டம் | (23.59) | (11.76) | (29.15) | 0.57 | 2.97 | 23.18 | 56.69 | 72.14 |
| ஆதாயப் பங்குத் தொகை | | | | | | 5.79 | 11.58 | 11.58 |

[2008 மே 5

## வருங்காலத் திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள்

**(அ) விரிவாக்கத் திட்டப் பணிகள்:**

'சிப்காட்' நிறுவனம், 1,122.27 ஏக்கர் நிலப்பரப்பில் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவை (பிள்ளைப்பாக்கம்) விரிவாக்கம் செய்யும் பணியையும் 977.81 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரகடம் வளர்ச்சி மையத்தை (ஒரகடம்-சென்னாகுப்பம்) விரிவாக்கம் செய்யும் பணியையும் மேற்கொண்டுள்ளது. இவ்விரு திட்டப் பணிகளும் 2008 ஜூன் திங்களுக்குள் நிறைவடையும்.

இந்நிறுவனம், 2,300 ஏக்கர் நிலப் பரப்பில் செய்யாறு தொழிற்பூங்காவை விரிவாக்கம் செய்யும் திட்டப் பணியையும் மேற்கொண்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி தற்போது தொடக்க நிலையில் உள்ளது.

இந்நிறுவனம், 1,256 ஏக்கர் நிலப் பரப்பில் பெருந்துறை வளர்ச்சி மையத்தின் விரிவாக்கத் திட்டப் பணியையும் மேற்கொண்டுள்ளது.

வடக்குப்பட்டு கிராமம் முதலியவற்றில் 350 ஏக்கர் நிலப் பரப்பில் ஒரகடம் வளர்ச்சி மைய விரிவாக்கம் நிலை-I பணியையும், மாத்தூர் கிராமம் முதலியவற்றில் 650 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரகடம் வளர்ச்சி மைய விரிவாக்கம் நிலை-II பணியையும் மேற்கொண்டுள்ளது.


**(ஆ) நில வங்கி :**

சமுதாய அடிப்படைக் கட்டமைப்புகள் உள்ளிட்ட தரமான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய நில வங்கியை உருவாக்குவதற்காக, ஐந்து ஆண்டு கால அளவிற்குள் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தைத் தெரிவு செய்து கையகப்படுத்துவதற்கு 'சிப்காட்' நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. சிப்காட் நிறுவனத்தில் இதற்கெனச் செயல்படும் பிரிவு, காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, ஈரோடு, சேலம், மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய பல்வேறு மாவட்டங்களில் சுமார் 23,000 ஏக்கர் நிலப் பரப்பைத் தெரிவு செய்துள்ளது. தொழிற்பூங்காக்களை உருவாக்குவதற்காகக் கையகப்படுத்த தெரிவு செய்யப்படும் இந்நிலங்கள் அனைத்தும் இயன்றவரையில் பயிரிடமுடியாத, புன்செய் மற்றும் தரிசு நிலங்களாக இருக்கும்.



**சிப்காட்**


**2000-01 முதல் 2007-08 வரை (மொத்தமாக) ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தின் பரப்பளவு ஏக்கரில்**




**சிப்காட்**

**நிதி நிலை செயல்பாடு**

**(ரூ. கோடியில்)**



[2008 மே 5

## சிறப்புத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

**தொழில் சிறப்புப் பெருவழிச்சாலை:**

'சிப்காட்' நிறுவனம், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்கா, சமுதாய அடிப்படைக் கட்டமைப்பு முதலியவற்றுடன் முதல்நிலையாக சென்னை திருப்பெரும்புதூர்-இராணிப்பேட்டை பெருவழியையும், இரண்டாம் நிலையாக இராணிப்பேட்டை-ஒசூர் பெருவழியையும் தொழில் சிறப்பு பெருவழிச் சாலையாக உருவாக்கி வருகிறது. பெருவழி மேம்பாட்டு வரைவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக, புகழ்பெற்ற ஆலோசகர்களிடமிருந்து வரப்பெற்றுள்ள விருப்ப அறிவிப்புகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

அதைப்போன்று, புதிய தொழில் வளாகங்களை/நகரியங்களை/துறைமுகங்களை இணைப்பதற்காக மதுரை-தூத்துக்குடி, மதுரை-திருநெல்வேலி, கோயம்புத்தூர்-சேலம் வரையிலான மற்றொரு தொழில் சிறப்புப் பெருவழிச்சாலை அமைக்கப்படும்.

**நுண்ணிய உயர்தொழில்நுட்பப் பூங்கா:**

'சிப்காட்' நிறுவனம், அதன் தொழில் வளாகங்களையொட்டி அமைந்துள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சி மையங்களின் ஒத்துழைப்புடன், கீழ்க்காணும் இடங்களில், 25 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பில், சிறப்புப் பொருளாதார மண்டலம்/உள்நாட்டு கட்டணப் பகுதியில் நுண்ணிய உயர் தொழில்நுட்பப் பூங்காவை, தொகுப்பு முறையில் உருவாக்கவுள்ளது.

- சிப்பத்தை ஒன்றாக இணைத்தல் மற்றும் சோதனை செய்தல், மின்னணு வன்பொருள்/மோட்டார் வாகன துணைப் பாகங்கள், உயிரி மருத்துவம், உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் மக்கள் நல்வாழ்வுக்காக (சுகாதாரம்) சென்னை அருகே சிறுசேரியில் தொழிற்பூங்கா.

- வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, வனம், சுற்றுச்சூழல் மற்றும் கதிரொளி தொழில்நுட்ப உத்திக்காக கோயம்புத்தூரில் தொழிற்பூங்கா.

- கனரக பொறியியல், உணவுப்பொருள் பதப்படுத்தல் ஆகியவற்றுக்காக திருச்சி மற்றும் இரசாயனப் பொருளுக்காக காரைக்குடி ஆகிய இடங்களில் தொழிற்பூங்காக்கள்.



2008 மே 5]

- ஆப்டோ-தொழில்நுட்பவியல், மின் சாதன துணைப் பாகங்கள், தகவல் தொடர்பு பொறியியல், இரப்பர் தொழிற்சாலைகள் மற்றும் கட்டடச் சாதனங்களுக்கான துணைப் பாகங்கள் ஆகியவற்றுக்காக மதுரையில் தொழிற்பூங்கா.

## சென்னை அருகில் நீர் பெருக்கத் திட்டம்

**(மேம்படுத்தல், உருவாக்குதல், சொந்தமாக்குதல், மாற்றுதல், இயக்குதல் என்ற அடிப்படையில் - DBOOT):**

**நீர் மறுசுழற்சி:**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திடமிருந்து பெறவுள்ள கழிவு நீரைப் பயன்படுத்தி மேம்படுத்தல், உருவாக்குதல், சொந்தமாக்குதல், மாற்றுதல், இயக்குதல் என்ற அடிப்படையில் (DBOOT) கோயம்பேடு அருகில் மூன்றாம் படிநிலை சுத்திகரிப்பு மற்றும் எதிர் சவ்வூடு பரவல் தளவாடத்தை சிப்காட் நிறுவனம் அமைக்கக் கருதியுள்ளது. இங்கு சுத்திகரிக்கப்படும் நீர் இருங்காட்டுக்கோட்டை, ஒரகடம் மற்றும் திருப்பெரும்புதூர் 'சிப்காட்' தொழிற்பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தினை தனியார்மூலம் செயல்படுத்த உரிய ஒரு நிறுவனத்தினை தெரிவு செய்வதற்காக, மேம்படுத்தல், உருவாக்குதல், சொந்தமாக்குதல், மாற்றுதல், இயக்குதல் ஆகியவற்றில் அனுபவம் பெற்ற ஓர் ஆலோசகர் நிறுவனத்தின் மூலமாக ஏல ஆவணம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**ஆடைகள் பூங்கா, இருங்காட்டுக்கோட்டை:**

'சிப்காட்' நிறுவனம், ஆடைகள் பூங்கா அமைப்பதற்காக, அதன் இருங்காட்டுக்கோட்டை தொழிற்பூங்காவில் 123.83 ஏக்கர் நிலத்தை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தப் பூங்காவில் சிறப்பு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக 'அசைடு' (ASIDE) நிறுவனம் ரூபாய் 7 கோடி மானியம் அனுமதித்துள்ளது. பணிக்குச் செல்லும் பெண்களுக்கான தங்குமில்லம், குழந்தைகள் காப்பகம், பல்நோக்கு மையம், வடிவமைப்பு நிலையம், சோதனை மையம் முதலியவை இதில் அடங்கும்.

**சரக்குப் பெட்டக நிலையம் :**

சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம், சிப்காட் பிள்ளைப்பாக்கம் தொழில் வளாகத்தினில், தேசிய நெடுஞ்சாலையையும் துறைமுகத்தினையும் இணைத்து சரக்குப் பெட்டக (துறைமுகத்துக்கு அப்பால்) வசதியை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது. அம்பத்தூரிலிருந்து திருப்பெரும்புதூர் வரை அமைக்கவுள்ள இரயில்வே பக்க இருப்புப் பாதையை, இந்த நிலம் வரையில் நீட்டிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் பாதுகாப்பு :**

சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக, கும்மிடிப்பூண்டி சிப்காட் ஏற்றுமதி மேம்பாட்டுத் தொழில் பூங்காவில் (EPIP) 66 ஏக்கர் நிலப்பரப்பில், அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் அகற்றுதல் வசதி (HWTSDF) ஏற்படுத்தப்பட்டுள்ளது. [சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் 17-5-2005 ஆம் நாளிட்ட 67 ஆம் எண் அரசாணை(நிலை)யின்படி] இதற்காக, தொடக்கத்தில் திருவாளர்கள் இண்டஸ்டிரியல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் அசோசியேஷனுக்கு 26.91 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்நிறுவனம் மேற்படி வசதியினைச் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது.

இதே போன்ற வசதியினை பெருந்துறை சிப்காட் வளாகத்திலும் ஏற்படுத்த சுற்றுச்சூழல் செயல்விளைவு மதிப்பீட்டினை மேற்கொள்ள திருவாளர்கள் இண்டஸ்டிரியல் வேஸ்ட் மேனேஜ்மென்ட் அசோசியேஷனுக்கு 50 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

**தொகுப்பு ஊக்க நிதியுதவி :**

சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் மூன்று ஆண்டுகளுக்குள் ரூபாய் 250 கோடிக்கு மேல், தகுதியுள்ள நிலையான சொத்துகளில் முதலீடு செய்து அமைக்கப்பட்டுள்ள புதிய உற்பத்தித் தொழிற்கூடங்கள், அமைப்பு ரீதியிலான தொகுப்பு ஊக்க நிதியுதவியைப் பெறத் தகுதியுடையவையாகும். சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைப் பொறுத்த நேர்வில், இந்நிதி உதவியைப் பெற மேற்படி சொத்துகளில் குறைந்த அளவு முதலீடு ரூபாய் 350 கோடியாக இருக்கவேண்டும்.



இந்தத் தொகுப்பு ஊக்க நிதி உதவி ஏற்கெனவே தொடங்கப்பட்ட உற்பத்தித் தொழிற்கூடங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்கும் வழங்கப்படும். இந்நிதி உதவியில் மென் கடன் / மதிப்புக் கூட்டு வரியை ஈடு செய்தல், முதலீடு மேம்பாட்டு உதவித் தொகை, மாநில மூலதன உதவித் தொகை, அத்தியாவசியமான அடிப்படைக் கட்டமைப்பு வசதி உதவித் தொகை, பயிற்சி உதவித் தொகை அடங்கும்.

**அரசு தனியார் பங்கேற்பு முறைமூலம் சிறப்புப் பொருளாதார மண்டலம் :**

கோயம்புத்தூர் அருகில் 250 ஏக்கர் நிலப் பரப்பில், பம்புகள், மோட்டார்கள் மற்றும் வார்ப்படம் போன்ற பொறியியல் பொருட்களுக்கான ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் (குறிப்பிட்ட தொழில்வகையைச் சார்ந்தது) அரசு மற்றும் தனியார் பங்கேற்பு முறையில், இந்திய வர்த்தக சபை மற்றும் கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஏனைய தொழிற்சங்கங்களின் பங்கேற்புடன் ஏற்படுத்தப்படும்.

## தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தற்பொழுது தமிழ்நாட்டில் எப்பகுதியிலும் புதிய தொழில்கள் நிறுவவும் ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்தவும், நவீனமயமாக்கிடவும், நிலம் வாங்குதல், கட்டடம் கட்டுதல் மற்றும் இயந்திரங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்கும் நிதியுதவி அளிக்கிறது. மேலும், இக்கழகம் கட்டடம் கட்டுதல், தளவாடம் மற்றும் இயந்திரங்கள் வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கிறது.

31-3-2007 வரை இக்கழகம் 1,00,763 நிறுவனங்களுக்கு ரூ.5,827.48 கோடி கடன் வழங்கியுள்ளது. 2007-2008-ல் தோராயமாக 20,650 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம் தொடர்ந்து 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 6 கோடி நிகர ஆதாயம் ஈட்டும்.

**2. வர்த்தக வங்கிகளைவிட இக்கழகத்தில் நிதியுதவி பெறுவதால் அடையப் பெறும் நன்மைகள்:**

முதன் முதலாகத் தொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோருக்குக் கடன் உதவி வழங்க அவர்களிடமிருந்து குறைந்த

மூலதனத்தையும் சிறிய அளவிலான துணைப் பிணையமும் பெற்று நீண்ட காலத் தவணையிலும் நிரந்தர வட்டி விகிதத்திலும் கடனைத் திருப்பிச் செலுத்த இக்கழகம் உதவி செய்கிறது. மேலும், இக்கழகம் மத்திய, மாநில அரசுகளால் கொடுக்கப்படும் மானியங்களைத் தொழில் முனைவோருக்கு வழங்கி வருகிறது.

**3. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இயக்கும் திட்டங்கள்:**

3.1. இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியினைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் முகமாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்குக் கடனுதவி அளித்து வருகிறது. இக்கழகம் அளிக்கும் நிதி உதவியில் 90 விழுக்காடு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குக் குறிப்பாக சிறு தொழில் நிறுவனங்களுக்குச் செல்கிறது. இதில் சுமார் 40 விழுக்காடு முதன்முதலாகத் தொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோருக்குச் சேரும். இக்கழகம் தற்போது இயக்கி வரும் சில முக்கியத் திட்டங்களின் சிறப்பியல்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**3.2. குறு மற்றும் சிறு தொழில் நிதியுதவித் திட்டம்:**

இக்கழகம் ஆகஸ்டு 2007-ல் குறு மற்றும் சிறு தொழில் நிறுவன நிதியுதவித் திட்டத்தை அமல்படுத்தியுள்ளது. முதன்முதலாகத் தொழில் தொடங்க விரும்பும் தொழில் முனைவோரும் ஏற்கெனவே உள்ள நிறுவனத்தை நவீனமயமாக்க அல்லது விரிவுபடுத்த விரும்பும் தொழில் முனைவோரும் திட்ட முதலீடு ரூ.50 இலட்சங்களுக்கு மிகாமல் இருப்பின் பொதுவாகப் பெறப்படும் மூலதனம் 33.3 விழுக்காடுகளுக்குப் பதிலாக மிகக் குறைந்த 20 விழுக்காடு மூலதனத்தில் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறலாம்.

**3.3. தொழில் மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் ஜவுளித் தொழில்:**

1999 ஆம் ஆண்டு இந்திய அரசு ஜவுளி மற்றும் சணல் தொழில்களை மேம்படுத்த தொழில் மேம்பாட்டு நிதி என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட இயந்திரங்கள் வாங்கும் தொழில் நிறுவனங்களுக்கு இயந்திரங்கள் மதிப்பில் குறிப்பிட்ட மூலதன மானியம் மற்றும் வட்டி மானியத்தை இக்கழகம் வழங்குகிறது.



மத்திய அரசின்கீழ் இயங்கும் ஜவுளித் துறையினால் 1-4-2007-லிருந்து இத்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, பின்பு நவம்பர் 2007-ல்தான் மீண்டும் நடைமுறைக்கு வந்தது. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.16.08 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3.4. காற்றாலைத் திட்டங்கள்:**

கடந்த 6 ஆண்டுகளில் இக்கழகம் இதுவரை ரூ.141 கோடி முதலீட்டில் 76 காற்றாலை நிறுவனங்களுக்கு அவர்கள் காற்றாலை நிறுவ நிதியுதவி அளித்துள்ளது. இந்நிறுவனங்கள் 40 MW மின் உற்பத்தி செய்கின்றன.

**4. மானியங்களை வழங்கும் முகவராகச் செயல்படுதல்:**

மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியங்களை வழங்கும் இணைப்பு முகவராக இக்கழகம் நியமிக்கப்பட்டுள்ளது.

(அ) தற்போது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அனைத்து மூலதன மானியங்களையும் பயனாளிகளுக்கு இக்கழகம் வழங்குகிறது.

(ஆ) நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பெரிய அளவிலான மானியங்கள் (சிப்காட் நிறுவனத்தால் அளிக்கப்படும் தொகுப்புத் திட்டங்கள்கீழ் வழங்கப்படும் மானியங்கள் நீங்கலாக) அனைத்தும் இக்கழகத்தின்மூலம் வழங்கப்படுகிறது.

(இ) தொழில் மேம்பாடு மற்றும் நவீனபடுத்துவதற்காகவும் மற்றும் ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் மற்றும் ஆராய்ச்சி மேம்பாடுகள் போன்றவற்றிற்காகவும் காலக் கடன் பெறும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 3 விழுக்காடு பின் முனை வட்டி மானியம் வழங்கப்படுகிறது.

(ஈ) தொழில்நுட்பவியல் மேம்பாட்டிற்காகவும் தொழிலை நவீனப்படுத்துவதற்காகவும் இக்கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்ற சிறு தொழில் நிறுவனங்களுக்குக் கடன் இணைந்த மூலதன மானியம் (15 விழுக்காடு) வழங்க இக்கழகத்தை ஒரு முகவராக மத்திய அரசு நியமித்துள்ளது. இதன்படி, இயந்திரத் தளவாடங்கள் வாங்கிய முதலீட்டில் (ரூபாய் 15 இலட்சத்திற்கு மிகாமல்) மூலதன மானியம் வழங்கப்படுகிறது.

(உ) உணவு பதப்படுத்தும் தொழிலைச் செய்வதற்காக இக்கழகத்திடம் நிதியுதவி பெற்று தொழில் நடத்திவரும் நிறுவனங்களின் மானியக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதற்காக மத்திய அரசு இக்கழகத்தை ஒரு செயல் அமைப்பாக நியமித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், இயந்திரத் தளவாடங்களின் மதிப்பில் 25 சதவிகிதம் அல்லது ரூ. 50 இலட்சத்திற்கு மிகாமல் மானியம் வழங்கப்படுகிறது.

**1. செயலாக்கம் :**

கடந்த 8 ஆண்டுகளில் இக்கழகத்தின் செயலாக்கம் விளக்கப்படத்தில் தரப்பட்டுள்ளது.

**2. 2008–2009 ஆம் ஆண்டில் செயல் திட்டம் :**

2008-2009 ஆம் ஆண்டில் ரூ. 750 கோடி அளவிற்குக் கடன் வழங்கவும் ரூ.450 கோடி கடன் பட்டுவாடா செய்யவும் இக்கழகம் உத்தேசித்துள்ளது. 2010 ஆம் ஆண்டிற்குள் தொழில் முனைவோருக்கு ரூ.1,000 கோடி அளவிற்குக் கடன் அனுமதி வழங்கவும், ரூ.500 கோடி அளவிற்குக் கடன் பட்டுவாடா செய்யவும் இக்கழகம் உறுதி பூண்டுள்ளது.

ஆதாயம் தராத சொத்துகளின் நிகர மதிப்பை 13 விழுக்காட்டிலிருந்து 10 சதவிகிதமாக மார்ச் 2009-க்குள் குறைக்க இக்கழகம் உத்தேசித்துள்ளது.


## தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம்

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் கரும்புச் சக்கையை முக்கிய மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் மற்றும் அச்சு எழுது காகிதம் தயாரிக்க, நிறுமங்கள் சட்டம், 1956-ன்கீழ் ஒரு வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாக நிறுவப்பட்டது.

**நிறுவனத்தின் குறிக்கோள் பணித் திட்டம் :**

"நீடித்த மேம்பாட்டிற்காக புதிய தொழில்நுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன்மூலம் உயரிய தரமுள்ள சுற்றுச்சூழலுக்கு ஏற்ற காகிதங்களைத் தயாரிப்பதில் அங்காடியில் முதன்மை நிறுவனமாகத் திகழுதல்".





[2008 மே 5

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இந்திய காகிதத் துறையில் ஒப்புகொள்ளப்பட்ட தலைமை நிறுவனமாக உள்ளது. மேலும், கரும்புச் சக்கையிலிருந்து காகிதம் செய்யும் உலகத்தின் பெரிய காகித ஆலை என்ற நற்சான்றையும் பெற்றுள்ளது. இந்நிறுவனம் நாட்டில் ஒரே இடத்தில் அமைந்துள்ள பெரிய காகித ஆலை ஆகும். தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனம் தொடர்ந்து அதிக உற்பத்தியையும் உற்பத்தித் திறன் செயல்பாட்டையும் அடைந்துள்ளது.

**2007–2008 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலாபம் மற்றும் 2008–2009 ஆம் ஆண்டிற்கான இலாப இலக்கு:**

2007-08 ஆம் ஆண்டில் வரிக்கு முன் இலாபம் ரூ.167 கோடியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டிற்கான வரிக்கு முன் இலாப இலக்கு ரூ.206 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனம் 2007–2008 ஆம் ஆண்டில் எடுத்துள்ள முயற்சிகள் :**


- ஆலை மேம்பாட்டுத் திட்டம் ரூ.565 கோடியில் மே 2008-ல் முடிக்கப்படும்.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 31-3-2008 வரை 29,962 ஏக்கர் நிலங்களில் விவசாயப் பண்ணைத் திட்டம் மற்றும் நிறுவன பண்ணைத் திட்டம்மூலம் கூழ் மரங்களை வளர்த்துள்ளது. இதில் இவ்வாண்டு பயிர் செய்யப்பட்ட 10,616 ஏக்கர் நிலங்களும் அடங்கும்.
- தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இன்றைய தொழில்நுட்பத்திற்கு ஏற்ற ஒரு விதை இல்லா வீரிய நாற்று, இனப்பெருக்கம் மற்றும் ஆராய்ச்சி மையத்தை நிறுவியுள்ளது. இம்மையம் ஆண்டொன்றுக்கு 1.5 கோடி கலப்பின தாய்க் கன்றுகளை உற்பத்தி செய்யும். இங்கு வளர்க்கப்படும் கன்றுகள் மிகவும் மலிவான விலையில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும். விவசாயிகள் வளர்க்கும் யூக்கலிப்டஸ் / சவுக்கு மரங்களை அவர்களிடமிருந்து தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் வாங்கிக் கொள்ளும். வறண்ட நில விவசாயிகள் ஆண்டொன்றுக்கு ஒரு ஏக்கருக்கு சுமார் ரூ.8,000 வருமானம், மேற்கண்ட முயற்சிகளின்மூலம் பெறுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




2008 மே 5]

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**

**உற்பத்தி மற்றும் பயன்பாட்டளவு**




**விற்பனை மற்றும் வரிக்கு முன் இலாபம்**



[2008 மே 5

**2008–2009 ஆண்டிற்கான திட்டங்கள் :**

- காகித உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 2,45,000 டன்களிலிருந்து ஆண்டொன்றுக்கு 4,00,000 டன்களாக அதிகரிக்கும் ஆலை விரிவாக்கத் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மார்ச் 2010-ல் முடிக்கப்படும். இதற்கான மூலதனம் ரூ.725 கோடி.
- 1985 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட முதலாம் காகித இயந்திரத்தின் இயக்க நாட்கள் நீட்டிப்புத் திட்டம் 2008-2009 ஆம் ஆண்டு ரூ.65 கோடி மூலதனத்தில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, நவம்பர் 2008-ல் முடிக்கப்படும்.
- மேலும், இவ்வாண்டில் ஆலையின் கழிவுப் பொருட்களான சுண்ணாம்பு மண்டி மற்றும் உலைச் சாம்பலை பயன்படுத்தி அதிகத் தரம் வாய்ந்த சிமென்ட் தயாரிக்கும் திட்டம் ரூ.45 கோடி மூலதனத்தில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் மார்ச் 2010-ல் முடிவடையும். இத்திட்டம் செயல்படும்பட்சத்தில், காகித ஆலையின் கழிவுப் பொருட்களிலிருந்து சிமென்ட் உற்பத்தி செய்யும் முதல் திட்டமாக இருக்கும். இத்திட்டத்தின்மூலம் ஆலையின் சுற்றுச்சூழல் மேலும் மேம்படும்.
- திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டையில் உள்ள 63.5 கிரவுண்ட் நிலத்தளத்தில் 4 இலட்சம் சதுர அடி பரப்பு கொண்ட தொழில்நுட்பப் பூங்கா ஒன்று ரூ.80 கோடி மூலதன செலவில் அமைக்கப்படும். இத்திட்டம் கட்டி, இயக்கி உடைமையாக்கி, பின்னர் மாற்றும் முறையில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் செயல்பாட்டிற்கு இவ்வாண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு, மார்ச் 2010-க்குள் நிறைவேற்றப்படும்.

**பசுமை மின் சக்திக்கு காற்றாலைப் பண்ணை :**


1993-94 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம், தேவர்குளம், பெருங்குடியில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 15 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட முதல் காற்றாலைப் பண்ணையை நிறுவியது. அதற்குப் பின்னர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் படிப்படியாக காற்றாலைப் பண்ணையின் உற்பத்தித் திறனை



2008 மே 5]

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**

**காற்றுப்பண்ணை திறன் (மெ.வாட்)**



35.50 மெகா வாட்டாக உயர்த்தியுள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இதுவரை காற்றாலைப் பண்ணைகள் நிறுவ ரூ.150 கோடி மூலதனம் செய்துள்ளது. காற்றாலைப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மாநில மின் தொகுப்பிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**சமுதாய நலம்:**

- சமுதாய மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ.1 கோடி வைப்புத் தொகையுடன் "தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அறக்கொடை" நிறுவப்பட்டுள்ளது. இது தவிர 2007-08 ஆம் ஆண்டில் நிறுவனம் சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ.50 இலட்சம் செலவழித்துள்ளது.
- சமுதாய நலனில் அரசுக்கு உள்ள அக்கறையினால் தூண்டப்பட்டு தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 2008-09 ஆம் ஆண்டிற்கு இதுவரை ஒதுக்கப்பட்ட தொகைகளிலேயே மிக அதிக அளவாக ரூ.1.05 கோடி நிறுவனத்தின் சமுதாயப் பொறுப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ளது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம்

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் பல இடங்களில் பல பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனம் ஆகும். இதன் ஆண்டு விற்பனை அளவு ரூ.265 கோடிக்கு மேலாகும். சிமெண்ட், இந்நிறுவனத்தின் பிரதான உற்பத்திப் பொருளாகும். இதன் ஏனைய தயாரிப்புகள் கல்நார் தகடு, (Asbestos Cement Sheet) மற்றும் கற்குழாய் (Stoneware pipes) போன்றவையாகும். தமிழக அரசின் சார்பாக பல்வேறு சுரங்கங்களிலிருந்து சுண்ணாம்புக் கல்லைத் தோண்டியெடுத்து சிமெண்ட் உற்பத்தி செய்வதற்கான பொறுப்பு முற்றிலும் அரசுக்குச் சொந்தமான டான்செம் நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

**தொலைநோக்குப் பார்வை :**

பொதுநலச் சேவையில் பங்களிக்கும் பொருட்டு தனது தயாரிப்புகளை அரசுத் துறைகளுக்கும், பொது மக்களுக்கும் சரியான விலையில் விநியோகம் செய்வதோடு, உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காகவும் மற்றும் வீட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கும், 



பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகளில் போதுமான அளவு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதும் தொலைநோக்குப் பார்வையாகும்.

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கான சிமெண்ட் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தனியார் சிமெண்ட் உற்பத்தியாளர்களிடமிருந்து சிமெண்ட் வாங்குவதற்கான பொறுப்பு டான்செம் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 43 கிரேடு சாதாரண போர்ட்லேண்ட் சிமெண்டினை மூட்டை ஒன்றுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட ரூ.220/-க்கு வாங்க டான்செமின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

**சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் :**

சாதாரண பொதுமக்களுக்கு சரியான விலையில் சிமெண்ட் கிடைப்பதற்கு வகை செய்யும் பொருட்டு தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் பலனாகக் கீழ்க்கண்ட வழிகளில் சிமெண்ட் விநியோகம் நடைபெற்று வருகிறது

1. 1000 சதுர அடிக்குக் குறைவாக வீடு கட்டும் நுகர்வோர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளில், மூட்டை ஒன்றிற்கு ரூ.200/- என்ற விலையில் 400 மூட்டைகள் PPC சிமெண்டினை பெற்றுக் கொள்ளலாம். வீட்டின் பராமரிப்புப் பணிகளுக்காக மூட்டை ஒன்றிற்கு ரூ.200/- என்ற அளவில் 25 மூட்டைகள் வழங்கப்படுகின்றன. சரியான விலையில் சிமெண்ட் கிடைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, தனியார் சிமெண்ட் ஆலைகளிடமிருந்து குறைந்த விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தனியார் உற்பத்தியாளர்கள் மாதம் ஒன்றிற்கு 20 இலட்சம் சிமெண்ட் மூட்டைகள் கிடைப்பதற்கு உறுதியளித்துள்ளார்கள்.
2. இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட், பொதுமக்கள், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் மற்றும் அரசுத் துறை ஒப்பந்தக்காரர்கள் ஆகியோருக்குக் கனிமங்கள் மற்றும் உலோகங்கள் வாணிபக் கழகத்தின்மூலம் (MMTC) 500 டன்களுக்குக் குறைவில்லாமல் ஆழ்கடல் விற்பனை

அடிப்படையில் விலை-காப்புறுதி-சரக்கு சுமைக் கட்டணம் சேர்ந்து (CIF) விலை மூட்டை ஒன்றிற்கு ரூ.160/- என்ற அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

3. டான்செம் நிறுவனம் நேரடியாக இறக்குமதி செய்து சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் ஆழ்கடல் விற்பனை அடிப்படையில் விலை-காப்புறுதி-சரக்கு சுமைக் கட்டணம் சேர்ந்து (CIF) விலை மூட்டை ஒன்றிற்கு ரூ.160 என்ற அளவில் விற்பனை செய்து வருகிறது. பொதுமக்கள் குறைந்த அளவு சிமென்டினைகூடப் பெறுவதற்கு வசதியாக டான்செம் நிறுவனம் மிகக் குறைந்த அளவாக 24 மெ.டன் அல்லது 480 மூட்டைகள் (ஒரு கன்டெய்னர் லோடு) ஆழ்கடல் விற்பனை அடிப்படையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்துள்ளது.

4. இறக்குமதி செய்யப்பட்ட சிமென்ட் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் மூட்டை ஒன்றிற்கு ரூ.220/-க்கு பொதுமக்கள் மற்றும் அரசுத் துறை ஒப்பந்தக்காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## 2007–08 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க சாதனைகள்:

டான்செம் நிறுவனம் 2006-2007 ஆம் ஆண்டில் ஈட்டிய நிகர இலாபம் ரூ.6.33 கோடிக்கு எதிராக, இவ்வாண்டு ரூ.15.75 கோடி (தற்காலிகமானது) இலாபமாக ஈட்டியுள்ளது.

## 2008–09 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் :

ஆலங்குளம் ஆலையை ரூ.82 கோடி செலவில் நவீனப்படுத்தும் திட்டம் தவிர, எரிபொருள் சிக்கனம், உற்பத்திச் செலவு குறைத்தல், கிளிங்கர் மற்றும் சிமென்ட் உற்பத்தியை அதிகரிப்பதற்காக கண்டறியப்பட்ட ஆய்வுகளில் சிலவற்றை 2008-09 ஆம் ஆண்டுகளில் ரூ.4.72 கோடி அளவில் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் நிதி நிலை செயல்பாட்டை மேம்படுத்தும் வகையிலும் மற்றும் 2008-09 ஆம் நிதியாண்டில் நலிவடைந்த நிலையிலிருந்து மீள்வதற்கும் முயற்சித்து வருகிறது.

ஆலங்குளம் ஆலையின் சுரங்கச் செலவைக் குறைப்பதற்கும், இலாபத்தை அதிகரிப்பதற்கும், பயன்படாமல் உள்ள கருப்புக் கற்களை பல அளவுகளில் சிறிதாக்கி சாலை மற்றும் கட்டுமானப்





பணிகளுக்குத் தேவையான கருங்கல் ஜல்லிகளாகப் பயன்படுத்துவதற்காக ப்ளு மெட்டல் ஜல்லி கிரஷர் ஆலங்குளத்தில் நிறுவப்படும்.

2008-09 ஆம் ஆண்டு, சுரங்கப் பாதுகாப்பு டைரக்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ள அத்தியாவசியச் செயல்களை நிறைவேற்றி, உயர்தர சுண்ணாம்புக்கல் இருப்புள்ள சுரங்கத்தை மீண்டும் இயக்கத்தில் பயன்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பாதாளச் சாக்கடைக் கழிவு நீர்த் திட்டத்திற்குப் பயன்படும் கற்குழாய்களின் அதிகரிக்கும் தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு, விருத்தாசலம் கற்குழாய் ஆலையை நவீனப்படுத்தும் பொருட்டு எரிவாயு இயந்திரம் நிறுவப்பட்டு அதன்மூலம் எரிபொருள் பயன்பாட்டைக் குறைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.


2007-08 ஆண்டில் (தற்காலிகமானது) ஆலைவாரியாக உற்பத்தி, விற்பனை மற்றும் நிதி செயல்பாடுகளின் விவரம் பின்வருமாறு:

| | | 2007–08 (தற்காலிகமானது) | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | ஆலையின் பெயர் | உற்பத்தி (மெ.டன்) | விற்பனை (மெ.டன்) | உற்பத்தித் திறன் பயன்பாடு (சதவிகிதத்தில்) | மொத்த விற்று முதல் * | நிகர இலாப/ நட்டம் * |
| 1 | அரியலூர் சிமென்ட் ஆலை | 532800 | 531315 | 107.00 | 19547.00 | 2195.96 |
| 2 | கல்நார் தகடு ஆலை, ஆலங்குளம் | 24645 | 27538 | 86.47 | 1847.00 | 47.97 |
| 3 | ஆலங்குளம் சிமென்ட் ஆலை | 139195 | 141657 | 48.00 | 5088.00 | (–)582.78 |
| 4 | கற்குழாய் ஆலை, விருத்தாசலம் | 1056 | 1062 | 14.66 | 47.00 | (–)50.61 |
| 5 | கூட்டாண்மை அலுவலகம் | | | | -- | 130.00 |

* ரூ.இலட்சத்தில்

## டான்செம் (TANCEM)

இலாபம் / நட்டம் (-) ரூ. இலட்சத்தில்








2007-08 ஆம் ஆண்டில், மாயனூரிலுள்ள தமிழ்நாடு கல்நார்க் குழாய் ஆலை ரூ.165.37 இலட்சம் நட்டத்தை அடைந்துள்ளது. 2007-08 ஆம் ஆண்டின் டான்செம் நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.1,575.17 இலட்சமாக (தற்காலிகமானது) இருக்கிறது.

வரைபடத்தில் (Bar chart) தெரிவிக்கப்பட்டுள்ள டான்செம் நிறுவனத்தின் கடந்த 7 ஆண்டுகால நிதிச் செயல்பாடுகள், நிறுவனம் வளர்ச்சிப் பாதையில் செல்லுவதை வெளிப்படுத்துகிறது. மேலும், 2008-09 ஆம் நிதியாண்டில் நலிவடைந்த நிலையிலிருந்து இந்நிறுவனம் வெளியேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## தமிழ்நாடு கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) ஏப்ரல் திங்கள் 1978-ல் நிறுவப்பட்டது. அறிவியல் அடிப்படையில் பல்வேறு கனிமங்களை வெட்டியெடுத்தல், அவற்றை மதிப்புக் கூட்டுதல், விற்பனை செய்தல் மற்றும் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவை இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள்களாகும்.

தமிழ்நாடு கனிம நிறுவனம், கருப்பு, வெள்ளை, பாரடைசோ மற்றும் பல வண்ண கிரானைட் பாறைகளையும், பெருவகைக் கனிமங்களான கிராபைட், குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார், சுண்ணாம்புக்கல், சிலிகா மணல் மற்றும் வெர்மிகுலைட் கனிமங்களையும் வெட்டியெடுத்து, வாடிக்கையாளர்களுக்கு மனநிறைவளிக்கும் வகையில் தரத்தை உறுதிசெய்து விற்பனை செய்வதற்கு முன்னுரிமை அளிக்கிறது. தரமான கனிமங்களை விற்பனை செய்வதில் தனிக் கவனம் செலுத்துகிறது.

2007-08 ஆம் ஆண்டுக்கான இந்நிறுவனத்தின் விற்பனை அளவு ரூ.115 கோடியாகும். இது ஒரு சாதனை அளவாகும்.

2008-09 ஆம் ஆண்டுக்கான இந்நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கையில், விற்பனை அளவு ரூ.125 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2008 மே 5

**விரிவாக்கம், மாற்று வழிகள் மற்றும் மதிப்புக் கூட்டுதல் வாயிலாக வளர்ச்சி**

**1. சுரங்கப் பணிகள் விரிவாக்கம் மற்றும் குவாரிகளின் செயலாக்கம் :**

தமிழ்நாடு கனிம நிறுவனம் அதனுடைய இலக்கை அடைவதற்காக பல புதிய மற்றும் அதிக அளவு கிரானைட் இருப்புகள் மற்றும் தொழிற்கனிமங்கள் இருக்கும் இடங்களைக் கண்டறிவதற்காக இடைவிடாத ஆய்வு மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாடு கனிம நிறுவனம் கார்னட் மணல் சுரங்கப் பணி மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்காக சுரங்கக் குத்தகை உரிமங்களுக்காக விண்ணப்பித்துள்ளது. அவ்விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது

**2. உற்பத்தித் திறனைப் பெருக்குதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல்:**

தமிழ்நாடு கனிம நிறுவனம் தற்சமயம் கீழ்க்காணும் தொழிற்சாலைகளை இயக்கி வருகிறது.

| வ. எண் | தொழிற்சாலையின் பெயர் | நடைபெறும் பணி |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு கனிம நிறுவன கிரானைட் தொழிற்சாலை, மணலி, சென்னை. | வீடு கட்டுமானத்திற்குத் தேவையான கிரானைட் கற்பலகைகள் மற்றும் நினைவுக் கற்கள் உற்பத்தி செய்தல் |
| 2. | தமிழ்நாடு கனிம நிறுவனம் கிரானைட்ஸ் ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை, மாதேப்பள்ளி, கிருஷ்ணகிரி அருகில் | கிரானைட் ஓடுகள் உற்பத்தி செய்தல் (100% ஏற்றுமதிப் பயன்பாட்டிற்கான பிரிவு) |
| 3. | கிரானைட்ஸ் ஓடுகள் பிரிவு சூலமலை, கிருஷ்ணகிரி அருகில் | கிரானைட் ஓடுகள் உற்பத்தி (உள்நாட்டு விற்பனைக்காக) |
| 4. | கிராபைட் செழுமைப்படுத்தும் தொழிற்சாலை, சிவகங்கை | செழுமைப்படுத்திய கிராபைட் தயாரிக்கும் தொழிற்சாலை |



2008 மே 5]

| | | |
|---|---|---|
| 5. | இந்திய தரமணல் பிரிவு, எண்ணூர், சென்னை. | இந்திய தரச் சான்றிதழ்படி சிலிகா மணலை உற்பத்தி செய்து, சிமெண்டின் தரத்தை சோதனை செய்வதற்காக விற்பனை செய்தல் |
| 6. | வெர்மிகுலைட் விரிவுபடுத்தும் பிரிவு, அம்பத்தூர், சென்னை | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட்டைத் தயாரிப்பதற்காக |

தமிழ்நாடு கனிம நிறுவனம் ரூ.20 கோடி செலவிலான மணலியிலுள்ள கிரானைட் பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலையை நவீனமயமாக்கும் திட்டத்தின் வாயிலாக ஆண்டொன்றுக்கு 1,50,000/-ச.மீ. அளவிற்கு தற்போதைய உலகத்தரத்திற்கு ஏற்ற கிரானைட் பலகைகள் உற்பத்தித் செய்யும் திறன் உருவாகும். இந்நிறுவனம் வருங்காலத்தில் கிரானைட் பலகைகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் ஓடுகள் போன்ற மதிப்புக்கூடிய பொருட்களின் உற்பத்தித் திறனை பெருக்கிட மேலும் பல நவீனமய தொழிற்சாலைகளை நிறுவும்.

**3. மாற்று வழிகள்:**

(i) தமிழ்நாடு கனிம நிறுவனம் தனியாருடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் அதிநவீன உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, 97 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் கரிச்சத்துள்ள கிராபைட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை அமைக்க விருப்பார்ந்த அறிக்கை கோரியுள்ளது. எட்டு நிறுவனங்களிடமிருந்து பதில் பெறப்பட்டு அந்நிறுவனங்களின் கொள்திறன் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) தருமபுரி மாவட்டத்திலுள்ள வேலம்பட்டி தெற்கு வட்டாரத்தில் உள்ள மாலிப்டினைட் உலோக இருப்பினை மதிப்பிட, தமிழ்நாடு கனிம நிறுவனம் ஆய்வு செய்துள்ளது. இந்த ஆய்வுக்காக ரூ.6.84 கோடி செலவிடப்பட்டுள்ளது. இக்கனிம இருப்புகளை ஆராய்வு செய்து வெட்டி எடுத்து பயனுக்குக் கொண்டுவர வெளிப்படையான அணுகுமுறைமூலம் ஒரு கூட்டுமுயற்சிக்கான நிறுவனத்தை தமிழ்நாடு கனிம நிறுவனம் தேர்ந்தெடுக்க உள்ளது.

[2008 மே 5

**மனித வள மேம்பாடு மற்றும் தொழில் உறவு:**

இந்நிறுவனத்தில் மொத்தம் 1,655 பேர் பணியாற்றுகின்றனர். நீண்ட காலமாக முடியாமல் இருந்த தொழிலாளர்களின் சங்கங்களுடனான ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை செப்டம்பர் 2007-ல் சுமுகமாக முடிக்கப்பட்டு அனைத்துத் தொழிற்சங்கங்களுடனும் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் ஊதிய உயர்வுக்கும் பல சலுகைகளுக்கும் வழிவகுத்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் முதன் முதலாகத் தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் நல்ல தொழில் உறவையும் அமைதியையும் இணக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம்

தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் (டான்மேக்) ஜனவரி 1979 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சுரங்கத்தில் வெட்டியெடுக்கப்படும் மேக்னசைட் கனிமத்தைக் கொண்டு முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் மற்றும் மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.


**2. நிறுவனத்தின் விற்பனைச் செயல்பாட்டு விவரங்கள் :**

இந்நிறுவனத்தின் 2003-04 முதல் 2007-08 வரையிலான ஐந்து ஆண்டுகளின் விற்பனைச் செயல்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருடங்கள் | விற்பனை வரவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2003-04 | 25.05 |
| 2004-05 | 34.64 |
| 2005-06 | 35.18 |
| 2006-07 | 42.80 |
| 2007-08 | 48.08 |



2008 மே 5]



**3. 2008–2009 ஆண்டுக்கான திட்டச் செயல்பாடுகள்:**

2008-09 ஆம் ஆண்டிற்கான உற்பத்தி மற்றும் விற்பனைக் குறியீட்டளவுகள் பின்வருமாறு:—

| | உற்பத்தி | விற்பனை |
|---|---|---|
| | (மெ. | டன்களில்) |
| கச்சா மேக்னசைட் | 1,31,000 | 1,31,000 |
| முழு எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 34,500 | 34,500 |
| மித எரியூட்டப்பட்ட மேக்னசைட் | 17,000 | 17,000 |

2007-2008 ஆம் ஆண்டில் டான்மேக் நிறுவனம் ரூ.290.35 இலட்சங்கள் (தணிக்கைக்கு முன்) இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2008-09 ஆம் ஆண்டிலும் இதே அளவு இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம்

தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனம் (டெல்) 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் தொழிற்சாலை வேலூர் மாவட்டம், காட்பாடியில் சுமார் 750 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தில் தற்போது 700 ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

ஜனவரி 2004-ல், மத்திய அரசு என்.ஜி. வகை வெடி மருந்துகள் உற்பத்தி, விற்பனை மற்றும் உபயோகத்தைத் தடை செய்தது. டெல் நிறுவனத்தின் பெரும்பான்மை விற்பனையாக இருந்த என்.ஜி. வகை வெடிமருந்துகளைப் பயன்படுத்த ஏற்பட்ட தடையால் டெல் நிறுவனத்தின் செயல்பாடு பெருமளவு பாதிக்கப்பட்டு 2003-04 ஆம் ஆண்டு முதல் நட்டத்தில் இயங்கத் தொடங்கியது.

2006-07 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் விற்பனை அளவு ரூ.2,433.93 இலட்சம் ஆகவும் நட்டம் ரூ.1,695.83 இலட்சம் ஆகவும் இருந்தது. நடப்பு நிதியாண்டில் விற்பனை அளவு ரூ.2,019.25 இலட்சம் ஆகவும் நட்டம் ரூ.1,504.04 இலட்சம் ஆகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**டெல் நிறுவனம் எடுத்துள்ள புதிய திட்டங்களின் நிலை:**

**(i) எம்.எம்.ஏ.என். திட்டம் :**

என்.ஜி. வகை வெடிமருந்துகள் உற்பத்தி செய்யும் இயந்திரங்களைப் பயன்படுத்தவும் மற்றும் உபரி பணியாளர்களுக்குத் தொடர்ந்து



வேலை அளிக்கவும், மோனோ மெத்தைல் அமின் நைட்ரேட் வகை வெடிமருந்துகள் தயாரிக்கும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. இதன் மூலம் தயாரிக்கப்படும் வெடிமருந்துகளின் சோதனை உற்பத்தி பிப்ரவரி 2008-ல் தொடங்கப்பட்டது. சில தொழில்நுட்ப இடர்பாடுகளைச் சரி செய்த பின், கூடிய விரைவில் முழு அளவில் வணிக உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(ii) 2 இ.எச்.என். திட்டம் :**

இதே காரணங்களுக்காக டீசல் எண்ணெய்யின் பயன்பாட்டை அதிகரிக்கும் இரசாயனப் பொருளான 2EHN உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் முடிவடைந்துள்ளன. இத்திட்டத்திற்குத் தேவையான சில இயந்திரங்களை இறக்குமதி செய்வதில் சில சிரமங்கள் இருந்தன. இவை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. சோதனை உற்பத்தியும், வணிக உற்பத்தியும் 2008-09 ஆம் ஆண்டில் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**(iii) மேக்ஸம் திட்டம் :**

டெல் நிறுவனம் உலக அளவில் முக்கியமான வெடிமருந்து தயார் செய்யும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மேக்ஸம் கார்ப்பரேஷன் (முன்னர் யூ.ஈ.ஈ. என அழைக்கப்பட்டது) என்ற நிறுவனத்துடன் தொழில்நுட்ப ஒப்பந்தம் செய்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய கூட்டு நிறுவனம் ஒன்றை உருவாக்கி, அதன்மூலம் டெல் நிறுவனப் பொருட்களை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்கண்ட நடவடிக்கைகள், என்.ஜி.வகை வெடி மருந்துகள் தடைசெய்யப்பட்டதால் ஏற்பட்ட இடையூறுகளில் இருந்து டெல் நிறுவனம் மீள உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம்

சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் (எஸ்.எஸ்.எல்) தனியார் துறையில் சரக்கு இரயில் பெட்டிகள், சுரங்க உபகரணங்கள் மற்றும் இரும்புக் கட்டுமானங்கள் முதலியன தயாரிக்கும் முக்கிய நோக்கத்துடன் 1956 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1988-1989-லிருந்து சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. எதிர்மறையான நிகர மதிப்பின் காரணமாக 1992 ஆம் ஆண்டு

இந்நிறுவனம் தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியத்தின் BIFR
ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த நிறுவனத்தை புனரமைப்பு
செய்ய எடுக்கப்பட்ட தொடர் முயற்சிகள் பலனளிக்காத
காரணத்தால் வங்கிகள் சர்பாஸி சட்டப்படி நிறுவனத்தின்
சொத்துகளை தங்கள் வசப்படுத்திக்கொண்டு இதனை தொழில்
மற்றும் நிதி புனரமைப்பு குழுமத்திடம் (BIFR) தெரிவித்தது. வங்கிகள்
நிறுவனத்தின் சொத்துகளை தங்கள் வசப்படுத்திக் கொண்டதால்
17-11-2005 அன்று நடந்த கூட்டத்தில் தொழில் மற்றும் நிதி
புனரமைப்புக் குழுமம் நிறுவனத்தின் வழக்கைத் தள்ளுபடி செய்தது.
தமிழக அரசின் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் (VRS) இந்நிறுவனத்தின்
அனைத்து 737 பணியாளர்களும் விடுவிக்கப்பட்டனர். விருப்ப ஓய்வில்
செல்ல விரும்பாத 12 பணியாளர்கள் பணி நீக்கம் (Retrenchment)
செய்யப்பட்டனர். எஞ்சியுள்ள பணிகளை முடிப்பதற்காக 4
பணியாளர்கள் மட்டும் ஒப்பந்த அடிப்படையில் (Retainer basis)
மீண்டும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். 31-12-2007 அன்று தமிழ்நாடு
அரசு ரூபாய் 1,200.38 இலட்சத்தை வங்கிகளுக்கு ஒரே தவணையில்
வழங்கி கடனைத் தீர்த்து அடமானத்திலிருந்து நிறுவனத்தின்
சொத்துகளை மீட்டது.

இந்த நிறுவனத்தின் சொத்துகளை ஆக்கவளமுடைய வகையில்
பயன்படுத்த 2008-2009-ல் நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக
விருப்பம் தெரிவித்தல் (Expression of Interest) குறித்து விரைவில்
நடவடிக்கை எடுக்கப்படும்.

## தமிழ்நாடு உப்பு நிறுவனம்

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு
இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்திலுள்ள மாரியூர்
வாலிநோக்கம் உப்புக் கூட்டுத் திட்டத்தில் தொழிற்சாலைகளுக்குத்
தேவையான உப்பு (IGS) உற்பத்தி செய்வதோடு, அயோடின் கலந்த
உப்பு (IS) மற்றும் இருவித செறிவூட்டப்பட்ட உப்பு (DFS) (இரும்பு
மற்றும் அயோடின் உள்ளடங்கியது) ஆகியவற்றை உற்பத்தி செய்து
வருகிறது.

2. தமிழக அரசிடமிருந்து நிலக் குத்தகைக்கு எடுத்துள்ள மொத்த
பரப்பளவான 5,524 ஏக்கரில், 4,825 ஏக்கர் பரப்பளவு, உப்பு
உற்பத்திக்கு பயன்படத்தக்க பகுதியாய் உள்ளது. இதுவரை 3,210 ஏக்கர்
பரப்பளவு பகுதியானது உப்பு உற்பத்தி செய்ய மேம்படுத்தப்பட்டு
835 பாத்திகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 1,75,000 டன்கள் உப்பு





உற்பத்தி செய்யும் உள்ளாற்றலைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம்
நேரடியாகவும், மறைமுகமாகவும், 1,100 தொழிலாளர்களுக்கும் உப்பு
தொழில் சார்ந்த பணிகளில் மேலும் 150 நபர்களுக்கும் வேலைவாய்ப்பு
வழங்கி வருகிறது.

3. இந்நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக உறபத்தியிலும்
விற்பனைச் செயல்பாடுகளிலும், கணிசமான அளவிற்கு உயர்ந்துள்ளது.
உப்பு உற்பத்தியில் பெரும்பகுதி தொழிற்சாலைக்கு உகந்த உப்பாக
விற்பனை செய்யப்படுகிறது. தமிழ்நாடு உப்பு நிறுவனம் பொது
விநியோகத் திட்டத்தின்கீழ் அயோடின் கலந்த அரசு உப்பை
தமிழ்நாட்டில் விநியோகம் செய்து வருகிறது.

4. இந்த அரசு 2007-2008-ல் தமிழ்நாட்டிலுள்ள பள்ளி செல்லும்
குழந்தைகள், இரத்த சோகைத் தாக்குதலுக்கு ஆளாக்கக்கூடிய இரும்பு
மற்றும் அயோடின் குறைபாட்டைக் குறைக்கும் வகையில், மதிய
உணவுத் திட்டத்தின்மூலம் இருவித செறிவூட்டப்பட்ட உப்பை
(இரும்பு மற்றும் அயோடின்) வழங்குகிறது.

5. மத்திய அரசின் "நமக் மஸ்தூர் ஆவாஸ் யோஜனா"
திட்டத்தின் மூலமாக வாலிநோக்கத்திலுள்ள உப்பு
தொழிலாளர்களுக்காக 250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**6. நிதிநிலைச் செயல்பாடுகள் :**

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1990-1991 ஆம் ஆண்டு முதல்
இலாபத்தில் இயங்கி வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டிற்கு கூடுதல்
ராயல்டி தொகை ரூ.292.06 இலட்சங்கள் அரசுக்கு செலுத்திய பிறகு
இந்நிறுவனம் ரூ.64.70 இலட்சங்கள் (வரிக்குப்பின்) இலாபம் ஈட்டுமென
எதிர்பார்க்கப்படுகிறது. முந்தைய ஆண்டின் விற்பனை அளவான 17.6
கோடியைக் காட்டிலும் இவ்வாண்டின் விற்பனை அளவானது ரூ.21.4
கோடியாக, அதாவது 22 விழுக்காடு அதிகரித்துள்ளது.

## தமிழ்நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாட்டில் பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களை
ஈர்க்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, 1992 ஆம் ஆண்டில் தமிழ்
நாடு தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி நிறுவனத்தை
(சுருக்கமாக தொழில் வழிகாட்டி என அழைக்கலாம்) அமைத்தது.

[2008 மே 5

**தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் அடிப்படை கொள்கைகள் :**

1. பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களை ஈர்த்தல்.

2. பெரிய அளவிலான முதலீட்டுத் திட்டங்களுக்குத் தேவைப்படும் அனுமதிகளை வழங்கிடும் ஒற்றைச் சாளரமுறையிலான ஆவண மையமாகச் செயல்படுதல்.

**2006 -2007 ஆம் ஆண்டில் வழிகாட்டி நிறுவனம் ரூ.6,662 கோடி மொத்த முதலீட்டில் சுமார் 45 பெரிய தொழில் முதலீடுகளைக் கொடுத்துள்ளது.**

**சில முக்கிய பெரிய திட்டங்கள் வருமாறு :-**

(ரூ. கோடியில்)

| | | |
|---|---|---|
| மோட்டரோலா, அமெரிக்கா | நடமாடும் தொலைபேசி மற்றும் அது தொடர்பானவை | 135 |
| டெல் கணினிகள் அமெரிக்கா | கணினிகள் | 135 |
| க்ரோத்லிங்க் லிமிடெட் தாய்வான் | காலணிகள் | 300 |
| அப்போலோ டயர்கள் | டயர்கள் | 450 |
| சாம்சங் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் | கலர் டிவி மற்றும் மானிடர் (ஒரு சிறப்பு பொருளாதார மண்டலம் மற்றும் ஒரு உள்ளூர் விற்பனை வரி மண்டலம்) | 82 |
| டெஸ்ஸால்வ் அமெரிக்கா | செமிகண்டக்டர் | 1,000 |
| காப்ரோ | ஆட்டோ உதிரி பாகங்கள் | 300 |
| அசோகாம்ப் எலக்ட்ரானிக்ஸ் (ஐ) | பிரைவேட் லிமிடெட் பிரின்டெட் சர்க்யூட் பலகைகள் | 694 |
| பெர்லாஸ் | செல்லிடத் தொலைபேசியின் பிளாஸ்டிக் பாகங்கள் | 124 |



2008 மே 5]

| | | |
|---|---|---|
| மகேந்திரா & மகேந்திரா | வாகன மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மையம் | 548 |
| சால்காம்ப் உற்பத்தி இந்தியா பிரைவேட் லிமிடெட் | செல்லிடத் தொலைபேசி மின்னேற்றிகள் | 120 |
| லாயர்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | மொபைல் தொலைபேசி பாகங்கள் | 101 |
| ஜிகேஎன் டிரைவ்லைன் இந்தியா லிமிடெட் | ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் | 100 |
| வின்டெக் டெக்னாலஜி (இந்தியா) பிரைவேட் லிமிடெட் | லிக்குவிட் கிரிஸ்டல் மாடியூல் (எல்சிஎம்) | 161 |

**2007-2008 ஆம் ஆண்டில் வழிகாட்டி நிறுவனம் ரூ.19,000 கோடி மொத்த முதலீட்டில் சுமார் 46 பெரிய தொழில் முதலீடுகளைக் கையாண்டுள்ளது.**

**சில பெரிய திட்டங்கள் வருமாறு:—**

(ரூ. கோடியில்)

| | | |
|---|---|---|
| சிக்னட் சோலர், அமெரிக்கா | செமிகண்டக்டர் | 2000 |
| ரினால்ட்- நிசான், கன்சார்சியம் | கார்கள் | 4500 |
| மோசர் பேயர் | சோலார் பாப் | 2000 |
| ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் | கார்கள் விரிவாக்கம் | 4000 |
| தைசன் குரூப், ஜெர்மனி | வாகன உதிரிபாகங்கள் | 350 |
| அலிசன் டிரான்ஸ் மிஷன், அமெரிக்கா | டிரான்ஸ்மிஷன் | 350 |
| டெல்பி, அமெரிக்கா | ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள் | 188 |
| சான்மினா, அமெரிக்கா | எலக்ட்ரானிக்ஸ் | 225 |

| | | |
|---|---|---|
| நோக்கியா சான்மினா நெட்வொர்க், பிரைவேட் லிமிடெட் | பேஸ் ஸ்டேஷன் காப்பாளர்கள் மற்றும் தொடரமைவு உபகரணங்கள் | 320 |
| மெசர்ஸ் என் எம் டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் | டயர்கள் | 430 |
| ஹான்சன் டிரைவ்ஸ் லிமிடெட் | காற்றாலை டர்பைன்களுக்கான கியர் பிரிவுகள் | 1500 |

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கனிம வளம் மற்றும் கனிமம் சார்ந்த தொழில்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. கனிமங்கள் அவற்றின் தர அமைப்பு அடிப்படையில் உலோகக் கனிமங்கள் மற்றும் அலோகக் கனிமங்கள் என பொதுவாக வகைப்பாடு செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் இரும்புத்தாது, பாக்சைட் போன்ற உலோகக் கனிம அமைப்புகளும், சுண்ணாம்புக்கல், மேக்னசைட் மற்றும் கடலோர கன கனிமங்களும் காணப்படுகின்றன. இவற்றுடன் தமிழ்நாடு எரி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு அமைப்புகளைப் பெருமளவில் கொண்டுள்ளது. கனிமங்கள் மீண்டும் உற்பத்தி செய்ய இயலாத மற்றும் திரும்பப் பெறமுடியாத இயற்கை சொத்து என்பதால் அவற்றை அறிவியல்பூர்வமான முறையில் வெட்டியெடுத்து சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் முறையாகப் பயன்படுத்துதல் அவசியம். மேலும் புதிய கனிம அமைப்புகளைக் கண்டறியும் ஆய்வுப் பணி மற்றும் கனிமத்தை வெட்டியெடுத்தல் முதலியவை எப்போதும் நாட்டின் பொருளாதார வளத்தைக் கருத்தில் கொண்டு அமைந்திருத்தல் அவசியம்.

புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:

1. மாநிலத்தில் அமைந்துள்ள கனிம அமைப்புகளைக் கண்டறிந்து ஆய்வுப் பணிகள் மூலமாக மதிப்பீடு செய்தல்.
2. நீலகிரி மற்றும் கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் புவியியல்நுட்ப ஆய்வு மேற்கொள்ளுதல்.



3. கனிம நிர்வாகம்.
4. மாநிலத்தின் கனிம வருவாயினை உயர்த்துதல்.

### மாநிலத்தில் கனிம அமைப்புகளைக் கண்டறிந்து ஆய்வுப் பணிகள் மூலம் மதிப்பீடு செய்தல் :

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் காவிரி வடிநிலப்பகுதியில் பெருமளவு எரி எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கண்டறியப்பட்டதால், அப்பகுதியில் தொழில் வளம் பெரிதும் பெருகியுள்ளது. அவ்வாறே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தனியார் நிறுவனங்கள் மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்கியுள்ளன. இத் துறை மாநிலத்தில் மேற்கொண்ட சுண்ணாம்புக்கல் ஆய்வுப் பணி முடிவுகளை ஆதாரமாகக் கொண்டு தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் பொதுத் துறையில் இரண்டு பெரிய சிமெண்ட் ஆலைகளை நிறுவியுள்ளது. மேலும் இத்துறை தனியார் துறையில் அமைந்துள்ள பெரிய சிமெண்ட் ஆலைகளின் சுண்ணாம்புக்கல் இருப்பின் அளவினை மறுமதிப்பீடு செய்து அறிக்கைகளை அளித்துள்ளது. தமிழ்நாட்டில் காணப்படும் மேக்னஸைட் கனிமம் வெப்பந்தாங்கி தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதன்மூலம் உலகச் சந்தையில் இதன் தரம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. வங்காள விரிகுடா கடற்கரை ஓரங்களில் கன கனிம அமைப்புகள், கடற்கரை கனிமங்களாகப் படிந்து காணப்படுகின்றன. இந்த வகை கனிமங்கள் மாநில உட்பகுதிகளில் ஓடை மற்றும் வாரிப் படுகைகளிலும் படிந்து காணப்படுகின்றன. தமிழகத்தில் காணப்படும் குவார்ட்ஸ், பெல்ட்ஸ்பார் மற்றும் சிலிகா மணல் போன்ற கனிமங்கள் கண்ணாடி மற்றும் பீங்கான் தொழில்களில் மூலப்பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. தீக்களிமண், கற்குழாய் உற்பத்தியிலும், பீங்கான் ஓடுகள் மற்றும் வெப்பந்தாங்கி கற்கள் உற்பத்தியிலும் பயன்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டத்தில் காணப்படும் கிராபைட் கனிமம் முழுவதும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தினால் வெட்டி எடுக்கப்படுகிறது. இவற்றுடன், ஏற்றுமதித் தரம்வாய்ந்த கருப்பு மற்றும் பல வண்ண கிரானைட் பாறையமைப்புகளும் தமிழகத்தில் பெருமளவில் காணப்படுகின்றன. கிரானைட் கற்கள் நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டுதலில் பெரும் பங்கு வகிக்கின்றன.

மாநிலத்தில் புதிய கனிம வளங்களைக் கண்டறிவதற்கு ஏதுவாக தமிழக அரசின் ஆணைப்படி இத்துறையின் இயக்குநரகத்தில் ஒரு துணை இயக்குநர் தலைமையின்கீழ் கனிம வளம் கண்டறியும் பிரிவு தனியாக உரிய நிதியளிப்புகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவுக்குத் தேவையான அலுவலர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இப்பிரிவு தமிழகத்தின் உட்பகுதிகளில் இதுவரை கண்டறியப்படாத கனிம அமைப்புகளைக் கண்டறிந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும். இப்பணி மிக விரைவில் துவங்கப்படவுள்ளது.

**நீலகிரி மற்றும் கொடைக்கானல் மலைப் பகுதிகளில் புவிநுட்பவியல் ஆய்வுப் பணிகள்:**

புவிநுட்பவியல் அமைப்பு, மலைப் பகுதிகளில் கட்டுமானப் பகுதிகளின் சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்தல் மற்றும் அது தொடர்பான கருத்துகளையும் தெரிவிக்கின்றது. இத்துடன் ஊரகத் திட்டமிடுதல் பணிகளில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கு நிலச்சரிவு ஏற்படாத பகுதிகளைக் கண்டறிந்து கருத்துகள் பெறுவதுடன் நிலச்சரிவிற்கு உட்படக்கூடிய பகுதிகளையும் கண்டறிந்து பாதுகாப்பு மற்றும் திடத்தன்மைகளைப் பற்றிக் கருத்தளிப்பதுடன் மனித உயிர்கள் மற்றும் பொருட்களுக்கு சேதம் ஏற்படாதவண்ணம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளுக்கும் ஆலோசனைகளை அளித்து வருகிறது. மேலும், இப்பிரிவு தடுப்பணை கட்டுதல், தொழிற்பேட்டை மற்றும் குடியிருப்புப் பகுதிகளை நிலச்சரிவு கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து, அப்புலங்களின் பொருந்தும்தன்மை பற்றியும் ஆய்வு செய்து, தக்க கருத்துரைகளை அளித்து வருகிறது. இத்துறையின் புவிநுட்பவியல் அமைப்பு 2007-2008 ஆம் ஆண்டுகளில் 704 கட்டுமானப் பணிகளுக்கு சான்றளித்துள்ளது.

**கனிம நிர்வாகம்**

இத்துறையின் 29 மாவட்ட அலுவலகங்கள் (அரியலூர் மற்றும் திருவாரூர் நீங்கலாக) துணை இயக்குநர் / உதவி இயக்குநர் தலைமையில் மாவட்ட ஆட்சியர்களின்கீழ் இயங்கிவருகின்றன. இம்மாவட்ட அலுவலகங்கள் புவியியல் மற்றும் சுரங்கத் துறை இயக்குநரின் நேரடி நிர்வாகக் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன. இவ்வலுவலகங்களில் பின்வரும் கனிம நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:



(அ) சம்பந்தப்பட்ட சட்டம் மற்றும் விதிகளின்கீழ் பெருங்கனிமங்கள் மற்றும் சிறு கனிமங்களை அகழ்ந்தெடுக்க குத்தகை உரிமங்கள் வழங்குதல்.

(ஆ) கனிம அகழ்தலை நடைமுறைப்படுத்துதல், கனிமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்.

(இ) பெரு மற்றும் சிறு கனிம உரிம வரி வசூலித்தல்.

(ஈ) சட்டத்திற்குப் புறம்பாகக் கனிமங்களை வெட்டியெடுத்தல் மற்றும் கொண்டு செல்வதைக் கண்டறிந்து தடுத்தல்.

தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள முக்கியக் கனிமங்களின் குத்தகை உரிமத் தகவல்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | கனிமத்தின் பெயர் | பட்டா நிலம் | பரப்பு (ஹெக்டேரில்) | அரசு நிலம் | பரப்பு (ஹெக்டேரில்) | பட்டா மற்றும் அரசு நிலம் | பரப்பு (ஹெக்டேரில்) | மொத்த சுரங்க குத்தகைகளின் எண்ணிக்கை | மொத்தப் பரப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு | - | - | 14 | 279.01 சதுர கிலோ மீட்டர் | - | - | 14 | 279.01 சதுர கிலோ மீட்டர் |
| 2 | பழுப்பு நிலக்கரி | - | - | 1 | 259.00 சதுர கிலோ மீட்டர் | - | - | 1 | 259.00 சதுர கிலோ மீட்டர் |
| 3 | சுண்ணாம்புக் கல் | 326 | 3254.01.0 | 83 | 2438.04.5 | 13 | 1025.33.5 | 422 | 6717.39.0 |
| 4 | கார்னட் மணல் மற்றும் அதனுடன் இணைந்த கனிமங்கள் | 55 | 174.23.0 | 13 | 248.43.5 | 2 | 152.95.0 | 70 | 575.61.5 |
| 5 | பாக்ஸைட் | 3 | 20.51.5 | 3 | 400.10.5 | - | - | 6 | 420.62.0 |
| 6 | கருப்பு கிரானைட் | 109 | 210.61.7 | 88 | 902.48.1 | - | - | 197 | 1113.09.8 |
| 7 | பல வண்ண கிரானைட் | 198 | 406.26.0 | 33 | 374.97.5 | - | - | 231 | 781.23.5 |

**அரசுக்கு கனிம வருவாயினைக் கூடுதலாக வசூலித்து மாநில நிதி நிலையை உயர்த்துதல் :**

நிதியாண்டில் ரூ.552.46 கோடி இத்துறையின்மூலம் கனிம வருவாய் அரசுக்கு ஈட்டப்பட்டுள்ளது. 2003-04 முதல் 2007-08 முடிய அரசுக்கு ஈட்டப்பட்ட கனிம வருவாயின் கணிசமான உயர்வினைக் காட்டும் படிவம் கீழே தரப்பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | கனிமத்தின் பெயர் | 2003-04 | 2004-05 | 2005-06 | 2006-07 | 2007-08 |
|---|---|---|---|---|---|---|
| 1. | எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு | 7076.42 | 9691.51 | 14183.39 | 17313.63 | 15626.21 |
| 2. | பழுப்பு நிலக்கரி | 9909.75 | 9932.87 | 10477.54 | 10041.61 | 12724.52 |
| 3. | சுண்ணாம்புக்கல் | 5664.85 | 6494.70 | 7163.90 | 7893.60 | 8511.71 |
| 4. | கார்னட் மணல் | 225.25 | 24.30 | 73.65 | 114.47 | 601.61 |
| 5. | கிரானைட் | 3123.73 | 3455.23 | 3200.35 | 4641.00 | 351.20 |
| 6. | பாக்ஸைட் | 125.06 | 129.31 | 149.97 | 158.06 | 221.07 |
| 7. | இதர இனங்கள் | 10490.10 | 6741.08 | 10083.20 | 8762.63 | 17209.67 |
| | மொத்தம் | 36615.16 | 36469.00 | 45332.00 | 48925.00 | 55245.99 |

## சர்க்கரைத் தொழில்

**(1) சர்க்கரை**

கிராமியப் பொருளாதாரத்தில் வேளாண்சார்ந்த தொழில்களில் சர்க்கரைத் தொழிலானது இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. உலகளவில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவில் அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகும். இது நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியில் 9 முதல் 10 சதவிகிதம் வரை பங்களிக்கிறது. உற்பத்தித் திறனில் ஹெக்டேர்



ஒன்றுக்கு 110 மெட்ரிக் டன் என்ற அளவில் நாட்டில் தமிழ்நாடு முதல் நிலையில் உள்ளது. தமிழகத்திலுள்ள 40 சர்க்கரை ஆலைகளில் 16 சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையிலும், மூன்று சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலும், 21 சர்க்கரை ஆலைகள் தனியார் துறையிலும் உள்ளன. இருப்பினும் கூட்டுறவுத் துறையில் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையும், பொதுத் துறையில் மதுரா சர்க்கரை ஆலையும், தனியார் துறையில் அருணாசலம் சர்க்கரை ஆலையும் முறையே 2001-2002, 2002-2003 மற்றும் 2003-2004 ஆகிய பருவங்களிலிருந்து இயங்கவில்லை. தற்போது இயக்கத்தில் இல்லாத கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைப் புனரமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(2) அரசின் தொலைநோக்குப் பார்வை :**

தமிழகத்தில் சர்க்கரைத் தொழிலானது அதிக அளவிலான விவசாயிகள், நுகர்வோர், போக்குவரத்தாளர்கள் மற்றும் தொழில் முனைவோர் ஆகியோரிடத்தில் பெரிய அளவில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. தமிழக அரசு ஒரு புறத்தில் கரும்பின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்த உயர் விளைச்சல் தரக்கூடிய இரகங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட நீர், பூச்சி, உர மேலாண்மை ஆகியவற்றை மேம்படுத்தவும் மறுபுறத்தில் சர்க்கரை உற்பத்திக்கான முறையை மேம்படுத்துவது, உரிய நேரத்தில் அரைவை, கூடுதல் சர்க்கரைக் கட்டுமானம், உபபொருட்களைச் சரியான அளவில் பயன்படுத்துதல் போன்றவற்றைச் சிறப்புறச் செய்ய உறுதி பூண்டுள்ளது.

**3) சர்க்கரைத் தொழிலின் செயலாக்கம் :**

2005-2006 பருவத்தில் 231.46 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டு 21.38 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டில் அனைத்து சர்க்கரை ஆலைகளின் அரைவைத் திறன் பயன்பாடு 125 சதவிகிதமாகும். நடந்து முடிந்த 2006-2007 ஆம் அரைவைப் பருவத்தில் இயக்கத்திலுள்ள 37 சர்க்கரை ஆலைகளின்மூலம் 274.49 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டு, 25.39 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. இவ்வாண்டில் அனைத்து சர்க்கரை ஆலைகளின் அரைவைத் திறன் பயன்பாடு 144 சதவிகிதமாகும்.

[2008 மே 5

2006-2007 ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்மூலம் 87.88 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டு, 8.09 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரை 9.20 சதவிகித சராசரி கட்டுமானத்தில் உற்பத்தி செய்யப்பட்டது. இந்த 17 சர்க்கரை ஆலைகள் நடப்பு 2007-2008 ஆம் அரைவைப் பருவத்திற்கான அரைவையைத் தொடங்கி 31-03-2008 வரை 41.77 இலட்சம் டன்கள் கரும்பினை அரைவை செய்து, 9.70 சதவிகித சராசரிக் கட்டுமானத்தில் 4.05 இலட்சம் மெட்ரிக் டன்கள் சர்க்கரையை உற்பத்தி செய்துள்ளன.


**தமிழ்நாட்டில் உள்ள சர்க்கரைத் தொழிலின் முக்கிய சாதனைகள் பின்வருமாறு :**

- திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி புதிய சர்க்கரை ஆலைகள் அமைத்தல்.
- முத்தரப்புக் கூட்டம் கூட்டி உயர்த்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவித்தல்.
- 100 சதவிகித கரும்புப் போக்குவரத்துக் கட்டணத்தை கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளே ஏற்றுக்கொள்ளுதல்.
- இயக்கத்தில் இல்லாத சர்க்கரை ஆலைகளில் பயிரிடப்பட்ட கரும்பினை சரியான நேரத்தில் அரைவைக்கு பிற ஆலைகளுக்கு மாற்றம் செய்தல்.
- கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள்மூலம் கடந்த 10 ஆண்டுகளில், அதிகபட்சமாக 2006-07ஆம் பருவத்தில்தான் 87.88 இலட்சம் மெட்ரிக் டன்கள் கரும்பு அரைவை செய்யப்பட்டது.
- 2005-06 அரைவைப் பருவத்தில் அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் நாள் ஒன்றுக்கான கரும்பு அரைவை சராசரி 33,677 மெட்ரிக் டன்களாக இருந்தது. இது 2006-2007 ஆம் அரைவைப் பருவத்தில் 37,128 மெட்ரிக் டன்களாக உயர்ந்து முன்னேற்றம் அடைந்துள்ளது.
- கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் இணை மின் உற்பத்தி வரலாற்றில் 2006-07 ஆம் பருவத்தில்தான் அதிகபட்சமாக 280.60 இலட்சம் யூனிட்டுகள் மின்சாரம் ஏற்றுமதி செய்யப்பட்டது.



2008 மே 5]

டாஸ்கோ (TASCO)
கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள்
கரும்பு அரவை மற்றும் சர்க்கரை உற்பத்தி (இலட்சம்/டன்கள்)



(4) உபபொருட்கள் :

(i) கரும்புச் சக்கை மற்றும் இணை மின் உற்பத்தி :

சர்க்கரைத் தொழிலில் கிடைக்கப் பெறும் உப பொருளான கரும்புச் சக்கை ஆலைகளில் மின்சாரம் தயாரிக்க எரி பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆலைகளிலிருந்து கிடைக்கப் பெறும் கரும்புச் சக்கை பெருமளவில் இணை மின் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது. உபரியாக உள்ள கரும்புச் சக்கை ஒப்பந்தப்புள்ளிமூலம் தமிழ்நாடு செய்தித் தாள் மற்றும் காகித நிறுவனம் மற்றும் பிற நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தமிழகத்திலுள்ள 21 தனியார் சர்க்கரை ஆலைகளில் 18 சர்க்கரை ஆலைகள் ஏற்கெனவே இணை மின் உற்பத்தி நிலையங்களை நிறுவியுள்ளன. இவற்றின் மொத்தத் திறன் 366.60 மெகா வாட் ஆகும். கூட்டுறவுத் துறையில் 3 சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. இவற்றின் மொத்தத் திறன் 20 மெகா வாட் ஆகும்.

தமிழகத்திலுள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.925 கோடி முதலீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக இணை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதன்மூலம் சுமார் 185 மெகா வாட் கூடுதல் மின் திறன் பெறப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒரு கலந்தறிதற்குரியர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.



(ii) கரும்புச் சாற்றுக் கசண்டு :

கரும்புச் சாற்றுக் கசண்டு சர்க்கரை ஆலைகளின் முக்கியமான உப பொருளாகும். இது சாராய உற்பத்திக்கும் மற்றும் இரசாயனங்கள் உற்பத்திக்கும், கால்நடைத் தீவனத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது.

2006-07ஆம் ஆண்டுப் பருவத்தில் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் 3.98 இலட்சம் டன்கள் கரும்புச் சாற்றுக் கசண்டு உற்பத்தி செய்துள்ளன.

(iii) வடிப்பகங்கள் :

தமிழகத்திலுள்ள 14 வடிப்பகங்கள், உரிமப்படி ஆண்டொன்றுக்கு 21.06 கோடி லிட்டர்கள் உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளன. கூடுதலாக நடப்பு 2007-08ஆம் வருடத்தில் 8 தனியார் சர்க்கரை ஆலையின் வடிப்பகங்களின் திறனை விரிவாக்கம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 6.23 கோடி லிட்டர் எரிசாராயம் கூடுதலாக உற்பத்தி செய்யப்படும்.

கூட்டுறவுத் துறையிலுள்ள வடிப்பகங்கள் அதாவது சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள்மூலம் 2006-2007ஆம் வருடத்தில் 221.50 இலட்சம் லிட்டர்கள் எரிசாராயம் உற்பத்தி செய்யப்பட்டது.

(iv) எத்தனால் :

தமிழ்நாட்டில் ஆண்டொன்றுக்கு எத்தனால் உற்பத்தித் திறன் 640 இலட்சம் லிட்டர்கள் ஆகும். சேலம் மற்றும் அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும், ஈஐடி பாரி, நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலையிலும் எத்தனால் நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. இம்மூன்று எத்தனால் நிறுவனங்கள் நிறுவப்பட்டால் நமது மாநிலத்திலுள்ள மொத்த உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 910 இலட்சம் லிட்டர்கள் ஆக இருக்கும். நமது மாநிலத்தில் 10 விழுக்காடு எத்தனால் கலந்த பெட்ரோல் வழங்க ஆண்டொன்றுக்கு 1,250 இலட்சம் லிட்டர்கள் எத்தனால் தேவைப்படுகிறது.

[2008 மே 5

## பரிசுகள்

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கான தேசிய இணையம், புதுடெல்லி, 2006-07 அரைவைப் பருவத்திற்கு தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு மூன்று பரிசுகளை வழங்கியது. அதன் விவரம் பின்வருமாறு :

- கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு ஒட்டுமொத்த செயல்திறனுக்கான முதல் பரிசு.
- சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு மிகச் சிறந்த கரும்பு அபிவிருத்திக்கான இரண்டாவது பரிசு.
- செய்யாறு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்கு மிகச் சிறந்த நிதி மேலாண்மைக்கான இரண்டாம் பரிசு.





## இணைப்பு—II

(97 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### மானியக் கோரிக்கை எண் 31

### தகவல் தொழில் நுட்பவியல் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

தகவல் தொழில்நுட்பவியல் துறையில் தமிழ்நாடு தொடர்ந்து பெரும் முன்னேற்றத்தைப் பதித்து வருகிறது. 2006-2007-ல் ரூ.20,700 கோடியாக இருந்த இம்மாநிலத்தின் மென்பொருள் ஏற்றுமதி, 2007-2008-ல் ரூ.28,000 கோடியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பவியல் மென்பொருள் மற்றும் வன்பொருள் நிறுவனங்களின் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக, தமிழ்நாடு உருவாகி வருகிறது. இம்மாநிலத்தில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை இதற்குச் சான்றாகும். 1,226.32 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள 37 தொழில்நுட்பவியல் மற்றும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு (சி.பொ.ம-SEZ), மத்திய அரசு முறையான அங்கீகாரம் அளித்துள்ளது. இவற்றுள், அறிவிக்கப்பட்ட 19 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், அவற்றின் செயல்பாட்டினைத் தொடங்கியுள்ளன. இதைத் தவிர, 121.41 ஹெக்டேரில் ஒரு பன்முகச் சேவை சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கும், 2,192.44 ஹெக்டேரில் இரண்டு பன்முக உற்பத்திப் பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கும் முறையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 464.45 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள மின்னணு வன்பொருள், மென்பொருள் மற்றும் அது சம்பந்தப்பட்ட சேவைகளுக்கான 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் முறையான அங்கீகாரம் பெற்றுள்ளன. தகவல் தொழில்நுட்பவியல், அதனைச் சார்ந்த சேவைகள் மற்றும் மின்னணு வன்பொருள் உற்பத்தித் துறை ஆகியவற்றுக்கான முதலீடுகளைக் கவரும் உகந்த இடமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

இந்தியாவிலுள்ள அனைத்துத் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களும் தங்களது செயல்பாட்டினை விரிவுபடுத்தி வருகின்றன. டாடா கன்சல்டன்சி சர்வீஸஸ், சிறுசேரியில் 70 ஏக்கர் நிலப்பரப்பில்

[2008 மே 5

தனது புதிய வளாகத்தை அமைத்து வருகிறது. இது முடியும்
தருவாயில் உள்ளது. விப்ரோ நிறுவனம் சோழிங்கநல்லூரில் 80 ஏக்கர்
நிலப்பரப்பில் அமைந்த புதிய வளாகத்தில் செயல்படத்
துவங்கியுள்ளது. அந்நிறுவனம் மகேந்திரா வேர்ல்டு சிட்டியில் 90
ஏக்கர் நிலப்பரப்பில் மற்றுமொரு புதிய வளாகத்தை உருவாக்கி
வருகிறது. ஹெச்.சி.எல். அண்மையில் சோழிங்கநல்லூரில் 50 ஏக்கர்
நிலப்பரப்பில் அமைத்துவரும் தனது புதிய வளாகப் பணிகளை
நிறைவு செய்ய எதிர்பார்க்கிறது. சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸஸ்
நிறுவனம், சோழிங்கநல்லூரில் 50 ஏக்கர் நிலப்பரப்பில், மேலும் ஒரு
வளாகத்தைக் கட்டி வருகிறது. காக்னிசன்ட் டெக்னாலஜி
சொல்யூஷன்ஸ் நிறுவனம், சிறுசேரியில் 25 ஏக்கர் பரப்பளவில் உள்ள
புதிய சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தனது பணிகளைத்
துவங்கியுள்ளது. இந்நிறுவனம், சோழிங்கநல்லூரில் விரைவில் தனது
பணிகளைத் துவங்கவுள்ளது. சென்னையில் மட்டுமல்லாது கோவை,
மதுரை, திருநெல்வேலி மற்றும் இதர நகரங்களிலும் பல தகவல்
தொழில்நுட்பவியல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.
இதனால் தகவல் தொழில்நுட்பவியல் துறை தொடர்ந்து நல்ல
வளர்ச்சியைக் கண்டு வருகிறது.

மிகப்பெரிய பன்னாட்டு வன்பொருள் உற்பத்தியாளர்களான
நோக்கியா (Nokia), பாக்ஸ்கான் (Foxconn), ப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ்
(Flextronics) மற்றும் மோட்டோரோலா (Motorola) போன்ற
நிறுவனங்கள், தங்களின் தொழிற்சாலைகளை ஏற்கெனவே
தமிழகத்தில் அமைத்துள்ளனர். டெல் கம்ப்யூட்டர்ஸ் ((Dell computers),
சாம்சங் (Samsung), ஆஸ்போகாம்ப் (ASPOCOMP), ஸ்பெல்மெக்
(Spelmech) செமிகண்டக்டர்ஸ், சால்காம்ப் (Salcomp), பெர்லோஸ்
(Perlos), ஜாபில் (Jabil), வின்டெக் (Wintek) மற்றும் பல மின்னணு
வன்பொருள் தயாரிப்பு நிறுவனங்களும் தமிழகத்தில் தங்களுடைய
தொழிற்சாலைகளை அமைக்க முடிவெடுத்துள்ளனர். மென்பொருள்
மற்றும் வன்பொருள் தொழில்கள் இங்கு ஒருங்கே அமைந்திருப்பது
உலக அளவில் தனிச் சிறப்புப் பெறுகிறது.

**தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை - 2008**

பொருளாதார வளர்ச்சி மற்றும் கூடுதல் வேலைவாய்ப்பு ஆகிய
இரட்டைப் பயன்கள் தமிழகத்திற்குக் கிடைப்பதால், தகவல்
தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சியைத் தக்கவைத்துக்
கொள்வதோடு, அதனை வளர்ப்பதிலும் தமிழ்நாடு அரசு உறுதி



2008 மே 5]

பூண்டுள்ளது. இதற்காக தமிழ்நாடு அரசு தகவல் தொடர்பு
தொழில்நுட்பவியல் கொள்கை 2008-ஐ உருவாக்கியுள்ளது.

இந்தத் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கையின்படி,
இந்தியாவின் மொத்தத் தகவல் தொழில்நுட்பவியல் உற்பத்தியில்,
தமிழ்நாட்டின் பங்கு 11 சதவிகிதமாக உள்ளது. இதனை மேலும்
மேம்படுத்தி, 2011 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் மொத்தத் தகவல்
தொழில்நுட்பவியல் உற்பத்தியில் 25 சதவிகிதப் பங்கினைக் கைப்பற்ற
எண்ணியுள்ளது. இக்குறிக்கோளை அடையும் வகையில், மாநில
அரசு கீழ்க்காணும் தொலைநோக்குப் பார்வையை அமைத்துக்
கொண்டுள்ளது :—

"தமிழ்நாடு, தெற்காசியாவின் தகவல் தொழில்நுட்பவியல் மையமாக
விளங்கும். இந்தக் குறிக்கோளை அடைய, இந்தியாவின் தகவல்
தொழில்நுட்பவியல் துறையின் மொத்த உற்பத்தியில் 25 சதவிகிதப்
பங்கைத் தமிழ்நாடு அடையும். இதற்காக அறிவு சார்ந்த உயிரின
வாழ்க்கைச் சூழலை உருவாக்கி, தொழில் முனைவோரின் ஆற்றலை
உயர்த்தி, சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின்
வளர்ச்சியை மேம்படுத்தும்."

இத்தொலைநோக்கை எட்டுவதன்மூலம், தகவல் தொடர்பு மற்றும்
தகவல் தொழில்நுட்பவியல் துறையில் மொத்தம் 0.8 மில்லியன் நேரடி
வேலைகள் உருவாக்கப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
(தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சேவைகளில்
சுமார் 0.7 மில்லியன் நபர்களுக்கும், தகவல் தொழில்நுட்பவியல்
உற்பத்தியில் சுமார் 0.1 மில்லியன் நபர்களுக்கும், 2011 ஆம்
ஆண்டுக்குள் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மதிப்பீடு
செய்யப்பட்டுள்ளது.) மேலும், இத்துறையில், 2011 ஆம் ஆண்டிற்குள்,
2.2 மில்லியன் மறைமுக வேலைகள் உருவாகும் என
மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, 2011 ஆம் ஆண்டிற்குள் சுமார்
3 மில்லியன் கூடுதல் வேலைகளை உருவாக்குவது இத்தகவல்
தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கையின் குறிக்கோளாகும்.
இத்தொலைநோக்கை அடைவதற்குத் தகவல் தொடர்பு
தொழில்நுட்பவியல் கொள்கையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்
சார்ந்த சேவைகளுக்கான சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்
(சி.பொ.ம.)**

## சென்னையில் இரண்டாவது டைடல் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா [2008 மே 5

சென்னைக்கு அருகில், தரமணியில் உலகத்தரம் வாய்ந்த தகவல்
தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. இங்கு 26.64
ஏக்கர் நிலப்பரப்பில், 4.5 மில்லியன் சதுர அடி பரப்பளவுக்கு,
கட்டடத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்பவியல் சி.பொ.ம.
அமைப்பதற்கு, தமிழக அரசின் நிறுவனமான டிட்கோ (TIDCO)
நிறுவனம், திருவாளர்கள் டி.எல்.எப். (DLF) நிறுவனத்துடன் கூட்டு
முயற்சி மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்ட கட்டுமானப்
பணிகள், 2.5 மில்லியன் சதுர அடி பரப்பில் 2009 ஆம் ஆண்டில்
முடிவடையும். எஞ்சிய 2.0 மில்லியன் சதுர அடி பரப்பளவு
கொண்ட இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் 2011-ல்
முடிவடையும். இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் சி.பொ.ம.
45,000 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், 10,000
இளைஞர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் உருவாக்கும்.

## சென்னையில் மூன்றாவது டைடல் பூங்கா:

சென்னை, தரமணியில் உள்ள 25.27 ஏக்கர் நிலப்பரப்பில், டிட்கோ
நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா மற்றும் ஒருங்கிணைந்த
சர்வதேச கன்வென்ஷன் மையம் அமைத்து வருகிறது.
இத்திட்டத்திற்கான கூட்டு முயற்சி நிறுவனம் திருவாளர் டாடா
ரியால்டி மற்றும் இன்ஃப்ராஸ்டிரக்சர் லிமிடெட் (Tata Realty and
Infrastructure Limited) ஆகும். மொத்தம் 40 இலட்சம் சதுர அடி
பரப்பளவில் அமையும் இத்திட்டத்தின் முதல் கட்ட கட்டுமானப்
பணிகள, 20 இலட்சத்து 30 ஆயிரம் சதுர அடி பரப்பில்
நிறைவேற்றப்பட்டு, 2009 ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும்.
அதனைத் தொடர்ந்து 19 இலட்சத்து 70 ஆயிரம் சதுர அடி
பரப்பளவுக்கு இரண்டாம் கட்ட கட்டுமானப் பணிகள் 2011-ல்
நிறைவுபெறும். இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் சி.பொ.ம. 40
ஆயிரம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்பினையும், 15 ஆயிரம் பேருக்கு
மறைமுக வேலைவாய்ப்பினையும் உருவாக்கும்.

## சென்னைக்கு அருகில் உள்ள சோழிங்கநல்லூரில் சி.பொ.ம.:

சென்னைக்கு அருகில் உள்ள சோழிங்கநல்லூரில், தமிழ்நாடு
மின்னணு நிறுவனத்தால் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா
(சி.பொ.ம.) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சி.பொ.ம.-ல், விப்ரோ
நிறுவனம் தனது கட்டடங்களைக் கட்டி முடித்து பணிகளைத்



2008 மே 5]

துவங்கியுள்ளது. திருவாளர்கள் ஹெச்.சி.எல்., சத்யம் நிறுவனங்களின்
கட்டுமானப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மேலும், சிஃபி,
காக்னிசண்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ், ஸ்கோப் இன்டர்நேஷனல்,
ஸதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் ஆகிய நிறுவனங்கள்
இவ்வாண்டில் கட்டுமானப் பணிகளைத் துவக்க உத்தேசித்துள்ளன.

## சென்னை பெரும்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா (சி.பொ.ம.)

சென்னையில் உள்ள பெரும்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூர்
கிராமங்களில் சி.பொ.ம. தகுதியுடைய தகவல் தொழில்நுட்பவியல்
பூங்கா அமைக்க தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஏற்கெனவே
முறையான அனுமதியைப் பெற்றுள்ளது. இந்த இடத்தில் 199 ஏக்கர்
நிலப்பரப்பில் ஒருங்கிணைந்த தகவல் தொழில் நுட்பவியல் நகரியம்
அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நகரியத்தில் 10 மில்லியன் சதுர
அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்கள்
அமைக்கவும் மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான
குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும்
பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறுசேரியில் அமைந்துள்ள சிப்காட் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

சிறுசேரி, சிப்காட் வளாகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா
அமைக்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. திருவாளர்கள்
டி.சி.எஸ். (TCS), சி.டி.எஸ். (CTS) மற்றும் ஹெக்ஸாவேர் (Hexaware,
ஆகிய நிறுவனங்கள் இங்கு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப்
பொருளாதார மண்டலத்தை அமைத்து வருகின்றனர். இதைத்தவிர,
இப்பூங்காவில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த
சேவைகளுக்கான 58 நிறுவனங்கள் தங்களுடைய பணியிடத்தை
அமைக்கவுள்ளன.

## கோயம்புத்தூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா :

கோயம்புத்தூரில், 17.11 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல்
தொழில்நுட்பவியல் பூங்காவை தமிழ்நாடு மின்னணு நிறுவனம்,
தமிழ்நாடு தொழில் முன்னேற்றக் கழகம் (TIDCO), டைடல் பார்க்
லிமிடெட் மற்றும் இந்திய மென்பொருள் தொழில்நுட்பவியல் பூங்கா
(STPI) ஆகியவை கூட்டாகச் சேர்ந்து நிறுவுகின்றன. 24-2-2007 அன்று

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பு ரூபாய் 335 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் முடிக்கப்படும்.

இந்தச் சி.பொ.ம.-ல் திருவாளர்கள் விப்ரோ லிமிடெட் நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் டி.சி.எஸ். லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில், தகவல் தொழில்நுட்பவியலுக்கான கட்டடங்கள் அமைக்கவும் மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உத்தேசித்துள்ளது.

**மதுரையில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் :**

மதுரை மாவட்டம், இலந்தைக்குளத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினால் அமைக்கப்படும் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச்சார்ந்த சேவைகளுக்கான சி.பொ.ம. சிறப்பான முன்னேற்றத்தைப் பெற்று வருகிறது. இந்தப் பூங்காவில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருவாளர்கள் ஹெச்.சி.எல். (HCL), ஹனிவெல் இன்டர்நேஷனல் இந்தியா மற்றும் டெஸ்ஸால்வ் சர்வீஸஸ், தங்களுடைய கட்டுமானப் பணிகளை வெகுவிரைவில் துவங்கவுள்ளன. இந்தப் பூங்காவில் 10 இலட்சம் சதுர அடியில், தகவல் தொழில்நுட்பவியல் அடுக்குமாடிக் கட்டடத்தை (IT Tower) பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் அமைக்க இவ்வரசு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கு அருகில், வடபழஞ்சி கிராமத்தில், மற்றொரு சி.பொ.ம. தகுதியுடைய தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைத்துள்ளது. இந்தப் பூங்காவில் திருவாளர்கள் ஹெச்சி.எல். (HCL), ஸதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் மற்றும் சத்யம் கம்யூட்டர்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுரையில் நில ஒதுக்கீடு பெறுவதற்குத் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களிடம் சிறந்த வரவேற்பு உள்ளது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில், தகவல் தொழில்நுட்பவியலுக்கான கட்டடங்கள் அமைக்கவும் மற்றும்



சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை 50 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உத்தேசித்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26-4-2008 அன்று இவ்விரு திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டினார். இவ்விரண்டு பூங்காக்கள் அமைத்ததனால், மதுரை நகரம் தகவல் தொழில்நுட்பவியல் துறையில் முதலீடுகளுக்கு உகந்த இடமாக உருவாகியுள்ளது. இது தென் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளிக்கும்.

**திருச்சிராப்பள்ளியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா :**

திருச்சிராப்பள்ளியில் 135.04 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் சி.பொ.ம.—வை நிறுவியுள்ளது. இந்தப் பூங்காவில் திருவாளர்கள் ஸதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் மற்றும் காக்னிசென்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில், ஒரு மில்லியன் சதுர அடி பரப்பளவில் தகவல் தொழில்நுட்பவியலுக்கான கட்டடங்கள் அமைக்கவும் மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை 50 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்த தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உத்தேசித்துள்ளது.

**சேலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா :**

சேலத்தில் 164.26 ஏக்கர் நிலப்பரப்பில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை நிறுவியுள்ளது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில் தகவல் தொழில்நுட்பவியலுக்கான கட்டடங்கள் அமைக்கவும் மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை 100 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உத்தேசித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 14-9-2007 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

[2008 மே 5

## திருநெல்வேலியில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் திருநெல்வேலியில் 100 ஏக்கர் நிலப்பரப்பில், சி.பொ.ம. தகுதியுடைய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இப்பூங்கா, மேலும் 400 ஏக்கர் நிலப்பரப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளுக்கான நிறுவனங்களிடம் இப்பூங்காவிற்கு மிகுந்த வரவேற்பு உள்ளது. இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில், தொழில் நுட்பவியலுக்கான கட்டடங்கள் அமைக்கவும் மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தவும் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உத்தேசித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17-6-2007 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

தகவல் தொழில்நுட்பவியல் புரட்சியைத் (IT Revolution) தமிழகத்தின் தென் எல்லை வரை கொண்டு சென்றுள்ளதை அனைவரும் வரவேற்றுள்ளனர். இச்செயல், இந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## ஒசூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா :

ஓசூரில் சி.பொ.ம. தகுதியுடைய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்றினை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 172.19 ஏக்கரில் நிறுவ உள்ளது. இப்பூங்காவில் தகவல் தொழில்நுட்பவியலுக்கான கட்டடங்கள் அமைக்கவும் மற்றும் சமுதாயக் கட்டமைப்பிற்குத் தேவையான குடியிருப்புகள், மருத்துவ வசதி, பள்ளி, வணிக மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தவும், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உத்தேசித்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 26-2-2008 அன்று இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டினார்.

## வேலூரில் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா :

மாண்புமிகு நிதியமைச்சர், நிதி நிலை அறிக்கையில் அறிவித்துள்ளபடி, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் வேலூரில் ஒரு புதிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்கப்படும்.



2008 மே 5]

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மேம்படுத்தும் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களில் குடிநீர் வசதி :

திருநெல்வேலி, மதுரை-வடபழஞ்சி, மதுரை-இலந்தைக்குளம், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் ஒசூரிலுள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தந்திட, அசைடு (ASIDE) திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு ரூ.35 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## மதுரை வடபழஞ்சி தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில் சாலை—மேம்பாலம் :

மதுரை-போடிநாயக்கனூர் தொடர்வண்டி இருப்புப் பாதை தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவின் வழியாகச் செல்வதால், சிறப்புப் பொருளாதார மண்டலத்தை இருப்புப் பாதைக் கடவு அல்லது இருப்புப் பாதை மேம்பாலம் மூலமாகத்தான் சென்றடைய முடியும். இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவில், அடுத்த பத்தாண்டுகளில் சுமார் 75,000 தகவல் தொழில்நுட்பவியல் பணியாளர்கள் வேலையில் அமர்த்தப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாக, இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவிலிருந்து, மதுரை-தேனி நெடுஞ்சாலையை இணைக்கும்விதமாக, ஒரு மேம்பாலம் கட்ட வேண்டியுள்ளது. வடபழஞ்சியில் உள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவை, மதுரை-தேனி நெடுஞ்சாலையோடு இணைக்கும் தொடர்வண்டி மேம்பாலக் கட்டுமானப் பணிக்கென, அசைடு (ASIDE) திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு ரூ.12 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், இரயில்வே துறைமூலம் செயல்படுத்தப்படும்.

## தமிழ்நாடு மின்னணு நிறுவன தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களில் இதர கட்டமைப்பு வசதிகள் :

இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களில், சாலைகள் மற்றும் இதர கட்டமைப்பு வசதிகளைச் செய்வதற்கென, அசைடு (ASIDE) திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு ரூ.43 கோடி மானியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது:—

[2008 மே 5

| வ. எண். | தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவின் பெயர் | அசைடு (ASIDE) மானியம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1. | சென்னை-சோழிங்கநல்லூர் சி.பொ.ம. | 5.00 |
| 2. | திருநெல்வேலி-கங்கைகொண்டான் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா | 5.00 |
| 3. | மதுரை-இலந்தைக்குளம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா | 5.00 |
| 4. | மதுரை-வடபழஞ்சி தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா | 5.00 |
| 5. | திருச்சிராப்பள்ளி-நவல்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா | 5.00 |
| 6. | கோயம்புத்தூர்-விளாங்குறிச்சி தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா | 8.00 |
| 7. | சேலம்-ஜாகிர் அம்மாபாளையம் தகவல் தொழில் நுட்பவியல் பூங்கா | 5.00 |
| 8. | ஓசூர்-விஸ்வநாதபுரம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா | 5.00 |
| | மொத்தம் | 43.00 |

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மேம்படுத்தும் 9 தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களில், சொந்த உபயோகத்திற்கான மின்வசதிக் கட்டமைப்பு (Captive Power Infrastructure) மற்றும் தொலைத் தொடர்புக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த, அசைடு (ASIDE) திட்டத்தின்கீழ், மேலும் ரூ.10 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் மையம் (ICT Academy) :

தமிழ்நாடு பெற்றுள்ள மிகப் பெரிய சொத்து, அதன் மனித வளம் ஆகும். இதை மேம்படுத்தும் நோக்கில், கடந்த நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு, தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்



2008 மே 5]

மையம் ஒன்று ஏற்படுத்தப்படும் என அறிவித்தது. மத்திய அரசு, இந்த அறிவிப்பினைப் பாராட்டி, ரூ.600 இலட்சத்தை, இத்திட்டத்திற்கு மானியமாக அளித்துள்ளது. இந்த மானியத்தில், ரூ.400 இலட்சம் முதல் தவணையாக பெறப்பட்டுள்ளது. சி.ஐ.ஐ.யுடன் (Confederation of Indian Industry) கூட்டுச் சேர்ந்து, இத்திட்டத்தில் பங்குபெற பல முன்னணி தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளுக்கான நிறுவனங்கள் முன்வந்துள்ளன. பலதரப்பட்ட தொழில்நுட்பக் கோணத்தில் பாடத் திட்டத்தினை மேம்படுத்த, இம்மையம் முயற்சிக்கும். பாடத் திட்டத்தை மேம்படுத்துவது, ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பது ஆகிய பணிகளையும், இம்மையம் செய்யும். நீண்டகாலப் போக்கில், இது மாநிலத்தின் கல்வித் தரத்தை மேம்படுத்தி, மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வழிகோலும். தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் மையத்தின் பணிகள் இவ்வருடம் தொடங்கப்படும். இந்தியாவிலேயே முதலாவதான இம்முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8-4-2008 அன்று தொடங்கி வைத்தார்.

## இந்திய தகவல் தொழில்நுட்பவியல், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி மையம் (IIITD & M) :

மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை, தகவல் தொழில்நுட்பவியல், வடிவமைத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தேசிய உயர் தனிக் கல்வி மையம் ஒன்றினை (National Centre of Excellence - Indian Institute of Information Technology, Design and Manufacturing) சர்வதேசத் தரத்தில் சென்னையில் அமைக்க முடிவு செய்துள்ளது. இதற்காக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், மேலக்கோட்டையூர் மற்றும் நல்லம்பாக்கம் கிராமங்களில் 41.21 ஹெக்டேர் (101.75 ஏக்கர்) நிலம், இந்நிறுவனத்திற்குக் குத்தகையில் அளிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நிலுவையில் இருப்பினும், 2007-2008 ஆம் கல்வி ஆண்டில் 30 மாணவர்கள் சேர்க்கை நடைபெற்று வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இக்கல்வி மையம் முழுவதுமாக அமைக்கப்படும் வரை சென்னையிலுள்ள ஐ.ஐ.டி. வளாகத்திலேயே செயல்பட்டுவரும்.

**மின்னணுப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronics Transaction and Security -SETS) :**

மின்னணுப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம், மாண்புமிகு முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் முனைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் எண்ணத்தில் உருவான ஓர் அமைப்பாகும். மைய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர், இவ்வமைப்பின் தற்போதைய தலைவர் ஆவார். நாட்டின் தகவல் வளத்தைப் பாதுகாக்கவும், தகவல் பாதுகாப்பு சார்ந்த உற்பத்தி மற்றும் சேவைகளுக்குத் தரச் சான்றளிக்கப் பயன்படுத்தவும், தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் நோக்கத்திற்காகவும் இச்சங்கம் அமைக்கப்பட்டது. தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழிக்கான (சங்கேத மொழி) நவீன வசதிகளுடன், உலகத் தரத்திலான அமைப்பை (Advanced Facility for Information Security and Cryptology- AFISC) நிறுவ, சென்னை, தரமணியில் 2.8 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான பணி ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்டது. சென்னையில் அமைக்கப்படும் இப்பெருமைமிகு நிறுவனம், சென்னை மற்றும் தமிழ்நாட்டை முதலீடுகளுக்கு உகந்த இடமாக மேலும் உயர்த்தும். இந்த அதிநவீன மையம் அமைக்கும் பணி 2008 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழு :**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இம்முனைப்புக் குழுவில், முன்னணி மென்பொருள், பி.பி.ஓ., வன்பொருள் மற்றும் தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பல்வேறு தொழில் அமைப்புகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர். இத்தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் முதல் கூட்டம் 23, ஆகஸ்ட் 2007 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை 2008-ஐ உருவாக்குவதற்கான கருத்தறியப்பட்டது. இக்குழு உறுப்பினர்கள் அளித்த உயர்வான கருத்துகள், தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் கொள்கை 2008-ல் சேர்க்கப்பட்டுள்ளன.



**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் :**

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடுகளுக்கு, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் தன்னிகரில்லாத் திட்டம் ஒன்று 15-9-2006 அன்று தொடங்கப்பட்டது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான முறையில் கொள்முதல் செய்யவும், முறையான விநியோகம் செய்யவும், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இக்குழுவின் தலைவர் ஆவார். திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில், உள்ளாட்சித் துறை அமைச்சர், திரு மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு டி. சுதர்சனம், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு கோ.க. மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு சி. கோவிந்தசாமி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு வை. சிவபுண்ணியம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திரு கு. செல்வம், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில், திரு எச். அப்துல் பாசித், புரட்சி பாரதம் கட்சியின் சார்பில் திரு பூவை மு. ஜெகன்மூர்த்தி ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தேசிய அளவில் வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி முறையில் கொள்முதல் செய்யப்பட்டன. இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டத்தில், 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி (International Competitive Bidding) முறையில் கொள்முதல் செய்யப்பட்டன. மூன்றாவது கட்டமாக, 34 இலட்சத்து 25 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வெளிப்படையான சர்வதேச ஒப்பந்தப்புள்ளி முறையின்மூலம், கொள்முதல் செய்து வழங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தொடர்பான அனைத்துக் கொள்முதல்களும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள குழுவின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் பேரில் நடைபெற்றுவருகிறது. முற்றிலும் வெளிப்படையான, நியாயமான மற்றும் தன்னிகரில்லாத இக்கொள்முதல் முறை அனைத்துத் தரப்பினரின் பாராட்டுதலையும் பெற்றுள்ளது.

முதற்கட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், பெரியார் நினைவு சமத்துவபுரங்களில் உள்ள குடும்பத்தினருக்கும், நீலகிரி மாவட்டத்தில் உள்ள மலைவாழ்

பழங்குடியினர் குடும்பங்களுக்கும், சென்னை மாநகரின் வட சென்னையில் ஒன்றும், தென் சென்னையில் ஒன்றுமாக, இரண்டு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளில் உள்ள குடும்பங்களுக்கும், மாநிலத்தில் உள்ள அனைத்து மறுவாழ்வு இல்லங்களில் வாழ்வோருக்கும் வழங்கப்பட்டன.

25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும், இரண்டாம் கட்ட விநியோகம் 15-2-2007 அன்று திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள பம்மதுகுளம் கிராமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

34,25,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை இலவசமாக வழங்கும் மூன்றாம் கட்ட விநியோகம், வேலூரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 16-2-2008 அன்று துவக்கி வைக்கப்பட்டது. வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை விநியோகிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**கட்டமைப்பு வளர்ச்சி :**

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வளர்ச்சிக்கு, உள்கட்டமைப்பு வசதிகள் எளிதில் கிடைக்கக்கூடியவையாக இருக்கவேண்டியது அவசியமாகும். இதனைச் சீர்படுத்திட, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஒற்றைச் சாளர வசதியினை (Single Window) அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம், தகவல் தொழில்நுட்பவியல் கட்டடங்களுக்குத் தடையில்லாச் சான்றிதழை உடனடியாக வழங்க இயலும். இதுவரை தமிழ்நாடு மின்னணு நிறுவனம், 73 மில்லியனுக்கும் அதிகமான சதுர அடி கொண்ட 213 கட்டடங்கள் கட்டுவதற்குத் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்குத் தடையில்லாச் சான்றிதழை வழங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களை அமைப்பதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் அதிக அளவில் இருப்பதால், தமிழ்நாடு, தகவல் தொழில்நுட்பவியல் முதலீட்டாளர்களைக் கவரும் இடமாகத் திகழ்கிறது. தகவல் தொழில்நுட்பவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து, வேகமாகப் பெருகிவரும் மக்கள் தொகையினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள, Jawaharlal Nehru National Urban Renewal Mission திட்டத்தின்கீழ், சென்னை, கோயம்புத்தூர் மற்றும் இதர நகரங்களின் பல்துறை வளர்ச்சிக்காக விரிவான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.



தற்போது இருக்கும் விமான நிலையங்களை விரிவுபடுத்தவும், புதிய விமான நிலையங்களை ஏற்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டு வருகிறது. மெட்ரோ இரயில் போன்ற நவீனப் போக்குவரத்துத் திட்டங்களின் வாயிலாக, நகரங்களின் போக்குவரத்துத் தேவையை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில் புதிய விமான நிலையம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26-4-2008 அன்று அடிக்கல் நாட்டினார்.

இக்கட்டமைப்பு வசதிகளினால், தமிழ்நாடு தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு :**

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சேவைகளின் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்துவதற்காகத் தமிழக அரசு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலமாகப் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேசத் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறது. இவற்றுள் தலைசிறந்தது "கனெக்ட்" என்ற நிகழ்ச்சி ஆகும். அரசு, தொழில் நிறுவனங்கள், சேவை வழங்குவோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் முக்கியமாக இறுதிக் கட்டப் பயனாளிகள் ஆகிய தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் துறையைச் சார்ந்த அனைவரையும், ஒரே இடத்தில் ஒருங்கிணைக்கின்ற ஓர் அரங்கமாக இந்த கனெக்ட் நிகழ்ச்சி திகழ்கிறது. கடந்த 7 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் கனெக்ட் நிகழ்ச்சி, இந்தியா மற்றும் வெளிநாடுகளில், தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் கவனத்தைப் பெருமளவில் ஈர்த்து, மிகவும் புகழ்பெற்ற நிகழ்ச்சியாக உயர்ந்துள்ளது.

இந்த வரிசையில் "கனெக்ட் 2008" சென்னையில் வரும் செப்டம்பர் மாதம் நடத்தப்பட உள்ளது. தேசிய மற்றும் சர்வதேசப் பிரதிநிதிகள் பெருமளவில் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எம்ப்பவர் ஐ.டி. முகாம் :**

தகவல் தொழில்நுட்பவியல் துறையில் தரமான மனித வளம் கிடைப்பதில் பெரும் பற்றாக்குறை நிலவி வருகிறது. தமிழகத்தில் இரண்டாம் நிலை நகரங்களில், தகவல் தொழில்நுட்பவியல் துறையில்

தகுதியான இளைஞர்கள் பெருமளவில் இருக்கின்றனர். இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள மனித வளத்தை வெளிக்கொணரவும், மாணவர் சமுதாயத்திற்குத் தன்னம்பிக்கை ஊட்டும் விதமாகவும் 'எம்ப்பவர் ஐ.டி.' எனும் முகாம், 2008 ஜனவரி 18 மற்றும் 19 ஆம் தேதிகளில் திருநெல்வேலியில் நடத்தப்பட்டன. இம்முகாமின் முக்கிய நோக்கம், கல்லூரியில் இறுதியாண்டு படிக்கும் மாணவர்களையும், தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களையும் ஒன்று சேர்ப்பதாகும். பல்வேறு போட்டிகளும், கருத்தரங்கங்களும் மாணவ சமுதாயத்தினருக்காக நடத்தப்பட்டன. 12,000-க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்களும், 34 தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களும் இம்முகாமில் பங்கேற்றன. இம்முகாம் தமிழகத்தின் இரண்டாம் நிலை நகரங்களில் உள்ள ஆற்றல்களை வெளிக்கொணரும் வெற்றிகரமான நிகழ்ச்சியாக அமைந்தது.

## இதர மேம்பாட்டு நிகழ்ச்சிகள்

சென்ற நிதியாண்டில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், கீழ்க்கண்ட தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தியும் / பங்கேற்றும் உள்ளது.

1. எஸ்.எம்.இ. எக்ஸ்பிரஷன் 2007 மாநாடு-மதுரை - 18-5-2007
2. நாஸ்காம் எச்-ஆர். சம்மிட், 2007 - சென்னை - 5-7-2007 மற்றும் 6-7-2007
3. எஸ்.எம்.இ. எக்ஸ்பிரஷன் - திருநெல்வேலி - 11-10-2007
4. எஸ்.எம்.இ. எக்ஸ்பிரஷன் - திருச்சிராப்பள்ளி- 26-10-2007
5. ஐசெக்-2007 பொருட்காட்சியுடன் கூடிய மாநாடு - சென்னை- 26-10-2007 மற்றும் 27-10-2007
6. பெங்களூர் ஐ.டி.இன் 2007 - பெங்களூர் - 29-10-2007 முதல் 1-11-2007 வரை
7. கனெக்ட் கோயம்புத்தூர் 2008 - கோயம்புத்தூர் - 14-3-2008.

## மின் ஆளுகை :

மைய அரசினால் சமீபத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில், தமிழக அரசினை "முன்னோடி மின்-தயார்" (Leader in e-readiness)



மாநிலமாக அறிவித்துள்ளது. நமது மாநிலத்தின் இணையதளமான http://www.tn.gov.in-ற்கு, தேசிய மின் ஆளுகை மாநாட்டில் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர, புகழ்பெற்ற (Dataquest) பத்திரிகையின் "சிறந்த மின் ஆளுகை மாநிலம்" என்ற விருதினையும், நமது மாநிலம் பெற்றுள்ளது. நமது திட்டங்களில், பல திட்டங்கள். முன்னோடித் திட்டங்கள் எனப் பெயர் பெற்றுள்ளன. புதிய முயற்சிகள் மேற்கொள்வதன்மூலம் தமிழகம் மின் ஆளுகையில் முன்னோடி என்ற இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

## தமிழ்நாடு மின் ஆளுகை முகமை :

மின் ஆளுகை நடவடிக்கைகளில், தனிக் கவனம் செலுத்த ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுகை முகமை என்ற தன்னாட்சி பெற்ற சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மின் ஆளுகை இயக்குநர் அவர்கள் இச்சங்கத்தின் தலைமைச் செயல் அலுவலராகச் செயல்படுகிறார். தமிழகத்தில் இச்சங்கம் அமைக்கப்பட்டதன்மூலம், மின் ஆளுகையானது முறையான நிறுவனப் பணி வரம்பிற்குள் செயல்பட வழிவகுக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN):

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் (TNSWAN) வர்த்தக ரீதியான செயல்பாடுகள், டிசம்பர் 2007-ல் தொடங்கின. இந்தியாவில் முதன்முறையாக இத்திட்டத்தைச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடாகும். இத்திட்டத்திற்கு, 5 ஆண்டுகளுக்கான மொத்தச் செலவினம் ரூ. 181.69 கோடியாகும். இதில், மைய அரசின் பங்கு ரூ.97.17 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.84.52 கோடி ஆகும். இத்திட்டத்தின் தொழில்நுட்ப ஆலோசகர் திருவாளர்கள் ஹெச்.சி.எல். நிறுவனம் ஆகும். இத்திட்டத்தின் பூட் ஆப்ரேட்டர் (BOOT Operator) திருவாளர்கள் டி.சி.எஸ். நிறுவனம் ஆகும். இத்திட்டத்திற்கான அலைவரிசை பி.எஸ்.என்.எல். நிறுவனத்திடமிருந்து பெறப்படுகிறது.

மத்திய, மாநில அரசுகளின் ஒருங்கிணைப்பில் செயல்படுத்தப்பட்டுள்ள இத்திட்டத்தின்மூலம், 708 இணைப்பு முனைகள் (Points of Presence) ஏற்படுத்தப்பட்டு, மாநிலத் தலைநகர் சென்னையை, மாவட்டத் தலைமையிடங்கள் (31), வட்டத் தலைமையிடங்கள் (395), வட்டாரத் தலைமையிடங்கள் (282) ஆகியவற்றுடன் இணைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அலுவலகங்களுக்கு சமதள இணைப்பு வழங்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இணைப்பு முனைகள் (POPS) அமைந்துள்ள வளாகத்திற்குள் இருக்கும் அலுவலகங்களுக்கு லேன் (LAN) மூலமாகவும், குறைந்த தொலைவில் இருக்கும் அலுவலகங்களுக்கு விரிவாக்கப்பட்ட லேன் மூலமாகவும், மிகவும் தொலைவில் இருக்கும் அலுவலகங்களுக்குக் குத்தகைக் கம்பி இணைப்பு, அகண்ட அலைவரிசை இணைப்பு மற்றும் தொலைபேசிக் கம்பி வாயிலான (Dial up) இணைப்பு வழியாகவும் தொடர்பு ஏற்படுத்தப்படும். கம்பியில்லா முறை (Wireless) மூலமாகவும் இணைப்பை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மாநிலத் தரவு மையம் (State Data Centre) :**

மாநிலத் தரவு மையம், தேசிய மின் ஆளுகைத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒரு முக்கியமான கட்டமைப்பு வசதியாகும். இத்திட்டத்திற்கென மைய அரசால், ரூ.55.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதற்கட்டம் ரூ.12 கோடியில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் முடிக்கப்பட்டது. இதன்மூலம், இந்தியாவிலேயே, இத்தகைய அதிநவீன வசதி கொண்டுள்ள முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. இந்த நவீனத் தரவு மையம், தேவையான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளையும் பெற்றுள்ளது. இத்தரவு மையம். அரசின் சேவைகளைக் குடிமக்களுக்கும் (G2C), அரசின் உட்பணி நடைமுறைகளுக்கும் (G209), ஆன்லைன் ேசவைகளைக் (Online Services) குடிமக்களுக்கும் வழங்கும் மையமாகச் செயல்படும். இந்த மாநிலத் தரவு மையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 8-4-2008 அன்று தொடங்கி வைத்தார். இரண்டாம் கட்டப் பணிகள் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இவை அனைத்தும் இந்த ஆண்டின் இறுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பொதுச் சேவை மையங்கள் (CSCs) :**

பொதுச் சேவை மையத் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் வெகு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழகம் முழுவதும் 5,440 பொதுச் சேவை மையங்கள்.



3 கிராமங்களுக்கு ஒரு மையம் என்ற விகிதத்தில் அமைக்கப்படும். இம்மையங்களை அமைப்பதற்கான இசைவுக் கடிதங்கள், திருவாளர்கள் 3ஐ இன்போடெக் (3I Infotech) மற்றும் எஸ்.ஆர்.இ.ஐ. (SREI) ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 8-4-2008 அன்று, முதல் மூன்று மையங்களைத் தொடங்கி வைத்தார். இதர மையங்கள் 2008 இறுதிக்குள் அமைக்கப்படும். எந்த நேரத்திலும், எப்பகுதியிலிருந்தும், இம்மையங்கள் வாயிலாக, இணையதளத் தகவல் மற்றும் சேவைகள் ஊரகப் பகுதிகளுக்கு வழங்கப்படும். நில விவரங்கள், பத்திரப் பதிவு, சான்றிதழ்கள், உணவு வழங்கு அட்டை, வாக்காளர் பட்டியல், வாக்காளர் அட்டை ஆகிய அரசின் சேவைகளும் (G2C), இரயில் வண்டி மற்றும் பேருந்துச் சீட்டு வழங்குதல், பயன்பாட்டுக் கட்டணங்கள் (utility payment), இணையவழிக் கல்வி, வங்கிச் சேவை, காப்பீடு, வேளாண்மை, தொலைத் தொடர்பு, மருத்துவ வசதி ஆகிய வணிக ரீதியான சேவைகளும் (B2C), இம்மையங்கள் வாயிலாக வழங்கப்படும்.

**மின்னணு மாவட்டம் :**

தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் மின்னணு மாவட்டம் (e-District) திட்டம் முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டமாகும். மைய அரசு இதற்கென ரூ.12.58 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்து வதற்காக திருவாரூர், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், அரியலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

**திறன் உருவாக்கம் :**

மின் ஆளுகைத் திட்டங்களை மாநில அரசுகள் செயல்படுத்துவதை அதிகரிக்கும் நோக்குடன், மைய அரசு, தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின்கீழ் மாநில அரசுகளுக்கு நிதியுதவி செய்து வருகிறது. இதற்கென மைய அரசு ரூ.218 இலட்சம் மானியமாகவும், ரூ.182.30 இலட்சம் கூடுதல் மத்திய உதவியாகவும் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

[2008 மே 5

**தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகள் :**

தேசிய மின் ஆளுகைத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 15 திட்டங்கள் (Mission Mode Projects) தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு :

1. நில ஆவணங்கள்
2. வணிக வரி
3. பதிவுத் துறை
4. வேளாண்மை
5. உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல்
6. சுகாதாரம்
7. ஊராட்சிகள்
8. கல்வி
9. கருவூலங்கள்
10. நகராட்சிகள்
11. போக்குவரத்து
12. வேலைவாய்ப்பு
13. தொழில்
14. சமூக நலம்
15. தலைமைச் செயலகத் துறைகளைக் கணினிமயமாக்குதல்

மேற்குறிப்பிட்டுள்ள எல்லா திட்டங்களுக்கும் விரிவான வரைவு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய திட்டங்களில், வணிக வரி, உணவு (ம) குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் கருவூலங்கள் ஆகிய மூன்று துறைகள், 'மத்திய அரசின் "இ—பாரத்" திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இம்மூன்று துறைகளுக்கான நிதியுதவி மத்திய அரசால் விரைவில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது



2008 மே 5]

**மின் ஆளுகை முன்னோடித் திட்டங்கள்:**

மைய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை 'மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல்' திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் ஆறு முன்னோடித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது:—

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மொத்த நிதி ஒப்பளிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | இதுவரை அளிக்கப் பட்டுள்ள தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வட்டாட்சியர் அலுவலகங்களில் மின்னணு சேவைகள் | 497 | 249 |
| 2. | மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மின்னணு சேவைகள் | 494 | 247 |
| 3. | நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் மின்னணு சேவைகள் | 496 | 248 |
| 4. | குடிமைப் பொருள் வழங்கு துறையில் மின்னணு சேவைகள் | 492 | 246 |
| 5. | பதிவுத் துறையில் மின்னணு சேவைகள் | 497 | 249 |
| 6. | போக்குவரத்துத் துறையில் மின்னணு சேவைகள் | 496 | 248 |
| | மொத்தம் | 2,972 | 1,487 |

இத்திட்டத்திற்கென, இதுவரை அளிக்கப்பட்டுள்ள தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்டது. இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிட, இரண்டாவது தவணைத் தொகையை விடுவிக்குமாறு மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முழு விவரங்கள் பின்வருமாறு:—

[2008 மே 5

**வட்டாட்சியர் அலுவலகங்களில் கணினிவழி மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல்:**

தமிழகத்திலுள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், தமிழ்நிலம் (TAMIL NILAM) திட்டத்தின்கீழ், கணினிமயமாக்கப்பட்டு, பின்வரும் சேவைகளை குடிமக்களுக்காக அளித்துவருகின்றன:—

- நில உரிமையாளர் சான்றிதழ் (சிட்டா மற்றும் 'அ' பதிவேட்டு சாராம்சம்)
- பிறப்பு / இறப்புச் சான்றிதழ்

தற்போது, இச்சேவைகள் அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் மட்டும் கிடைக்கின்றன. இத்திட்டத்தின்கீழ், இச்சேவைகளை இணையதளம்மூலமாக வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறாக "எந்நேரமும், எங்கிருந்தும் (Any time, Anywhere)" சேவைகள் மக்களுக்குக் கிடைக்கும். இத்திட்டம், இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிவடையும்.

**மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களின் கணினிவழி மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல்:**

அரசின் பல எண்ணற்ற சேவைகள் மற்றும் தகவல்கள் இணையத்தில் கிடைக்கப்பெறுகின்றன. சாதாரணக் குடிமகனுக்கு எளிதில் கிடைக்கச் செய்திட ஏதுவாக, இணைய வசதியுடன் கூடிய கணிப்பொறி சேவை மையங்கள் (Kiosks), அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கணிப்பொறி சேவை மையங்களில், தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), அகண்ட அலைவரிசை (Broadband) இணைப்பு வசதியுடன், தலா ஐந்து கணிப்பொறிகள் அமைக்கப்படும். மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு வருகை தரும் பொதுமக்கள், கணினிமயமாக்கப்பட்ட விவரங்களை நேரடியாகப் பார்வையிட ஏதுவாக, தொடுதிரைக் கணிப்பொறி சேவை மையங்களை (Touch Screen Kiosks) அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவை, வரும் ஆண்டில் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுவிடும்.



2008 மே 5]

**நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் கணினிவழி மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல் :**

தமிழ்நாட்டில், 6 மாநகராட்சிகளும் (சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி), 152 நகராட்சிகளும், 561 ஊராட்சிகளும் உள்ளன. இவற்றில், பின்வரும் மின் ஆளுகைச் சேவைகளை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

(1) சொத்து வரி செலுத்துதல்.

(2) குடிநீர்க் கட்டணம் செலுத்துதல்.

(3) ஆன்லைன்மூலம் பிறப்பு / இறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்களைப் பெறுதல்.

(4) ஆன்லைன்மூலம் குழந்தையின் பெயரைப் பதிவு செய்தலுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.

(5) ஆன்லைன்மூலம் திருமண மண்டபங்கள் / பொது மைதானங்களை முன்பதிவு செய்தலுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.

(6) ஆன்லைன்மூலம் வணிக உரிமங்களுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.

(7) ஆன்லைன்மூலம் புவியியலாய்வு வரைபடத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.

(8) ஆன்லைன்மூலம் சொத்து வரி குறித்த பெயர் மாற்றம், வரி மேல்முறையீடு ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.

(9) ஆன்லைன்மூலம் குடிநீர், வடிகால் இணைப்பு ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களைப் பெறுதல்.

(10) தொழில் வரி செலுத்துதல்.

(11) குறைகேட்கும் மனுக்கள் பெறுதல்.

தற்சமயம், இச்சேவைகள் அந்தந்த நகராட்சி அலுவலகங்களில் மட்டும் கிடைக்கின்றன. இத்திட்டத்தின்கீழ், இச்சேவைகளை, இணையதளம்மூலமாக வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக "எந்நேரமும், எங்கிருந்தும் (Any time, Anywhere)" சேவைகள் மக்களுக்குக் கிடைக்கும். இத்திட்டம், இந்த ஆண்டிலேயே செயலாக்கப்படும்.

**உணவுப் பொருள் வழங்கல் துறையில், கணினிவழி மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல்:**

இத்திட்டத்தின்கீழ், பின்வரும் சேவைகளை அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

1. புதிய குடும்ப அட்டை வழங்கலுக்கான விண்ணப்பங்கள்
2. குடும்ப அட்டையில் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள்
    - கடைக்குள் முகவரி மாற்றம்.
    - மண்டலத்தினுள் முகவரி மாற்றம்.
    - மற்ற மண்டலம் / மாவட்டத்திற்கு முகவரி மாற்றம்.
    - பெயர்களைச் சேர்த்தல்.
    - பெயர்களை நீக்குதல்.
    - சமையல் எரிவாயு விவரங்கள் மாற்றம்.
    - பெயர் மாற்றம்.
    - வயது மற்றும் இதர விவரங்கள் மாற்றம்.
3. சரண் சான்று வழங்கல் விண்ணப்பம்.
4. மாற்று அட்டை கோரும் விண்ணப்பம்.
5. நேரடி நுகர்வோர் குறைதீர்ப்பு.

இத்திட்டத்தின்கீழ், இச்சேவைகளை, இணையதளம்மூலமாக வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறாக "எந்நேரமும், எங்கிருந்தும் (Any time, Anywhere)" சேவைகள் மக்களுக்குக் கிடைக்கும். இத்திட்டம், நடப்பாண்டில் செயலாக்கப்படும்.



**பதிவுத் துறையில் கணினிவழி மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல்:**

தமிழக அரசின் பதிவுத் துறை, 1865 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவரும் தொன்மையான துறையாகும். இத்திட்டத்தின் மூலம், பின்வரும் சேவைகளைப் பொதுமக்களுக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

- அலுவலகத்துக்குச் செல்லாமலேயே, இணையதளம் வாயிலாக சான்றொப்பமிட்ட ஆவண நகல்களை, எந்நேரமும் எங்கிருந்தும் பெறுதல்.
- பதிவு விவரங்கள் மற்றும் உரிமையாளர் பற்றிய விவரங்கள் ஆகியவற்றைப் பதிவு அலுவலகம் மற்றும் வட்ட அலுவலகங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளுதல்.
- விண்ணப்பத்தின் நிலையை ஆய்வு செய்தல்.
- இச்சேவைகளுக்கான கட்டணங்களை Payment Gateway, Payment Card மற்றும் பொதுச்சேவை மையங்கள்மூலமாகச் செலுத்தலாம்.

இத்திட்டம், இந்த ஆண்டுக்குள் முடிவடையும்.

**போக்குவரத்துத் துறையில் கணினிவழி மின் ஆளுகைச் சேவைகளை மேம்படுத்துதல்:**

மாநிலத்திலுள்ள பெரும்பான்மையான மக்களுக்குச் சேவை செய்வதில், போக்குவரத்துத் துறை முக்கியப் பங்காற்றுகிறது. இச்சேவைகள், 46 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் 42 பகுதி அலுவலகங்கள்மூலம் வழங்கப்படுகின்றன. இவைமூலம் வழங்கப்படும் சேவைகளுள் சில பின்வருமாறு:—

- வாகனங்களைப் பதிவு செய்தல்.
- ஓட்டுநர் உரிமம் வழங்குதல்.
- வாகனம் பழகுநர் உரிமம் வழங்குதல்.
- அனுமதிச் சீட்டு வழங்குதல்.
- நடத்துநர் உரிமம் வழங்குதல் மற்றும் இதர சேவைகள்.

[2008 மே 5

மாநிலத்தில் பதிவு பெற்றுள்ள அனைத்து வாகனங்களின் தரவுத் தொகுப்பினை உருவாக்கிட 'வாகன்' எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோல, இம்மாநிலத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து ஓட்டுநர் உரிமத்திற்கான தரவுத் தொகுப்பினை உருவாக்கிட 'சாரதி' எனும் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்முன்னோடித் திட்டத்தில், அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும் இணைக்கப்பட்டதன் மூலம், இவ்விரண்டு தரவுத் தொகுப்புகளும் பொதுவான இடத்திலிருந்து அவற்றிற்குக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள் 15,000-க்கும் மேலான பேருந்துகளை இயக்கி, ஒரு நாளைக்கு, ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயணிகளுக்குச் சேவை புரிந்து வருகின்றன. மாநில விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில், இணையதளம் வாயிலாகப் பேருந்துச் சீட்டு முன்பதிவு செய்யும் வசதி, ஜி.பி.எஸ். (Geographical Positioning System-GPS) மூலமாக பேருந்து இருக்கும் இடத்தை அறியும் வசதி ஆகிய மின் ஆளுகைச் சேவைகள், இத்திட்டத்தின்மூலமாக மேம்படுத்தப்படவுள்ளன. இத்திட்டம், இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT):**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு நிறுவனம் ஆகும். 1977-ல் தொடங்கப்பட்ட இந்நிறுவனம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் முதலீட்டாளர்களுக்கும், அரசுக்கும், ஓர் இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு வருகிறது. 21-3-2007 அன்று, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவடைந்தன. திட்டங்களைச் செயற்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் மேம்பாடு போன்ற துறைகளில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தன்னுடைய செயல் நடவடிக்கைகளை விரிவுபடுத்தியுள்ளது.

**தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்கள்:**

**வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குதல்:**

பொதுமக்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பெருமைமிகு திட்டத்தின்கீழ், 14 இன்ச்



2008 மே 5]

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்யும் பணியைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் அரசு ஒப்படைத்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், இதுவரை, 25,30,000 வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளைக் கொள்முதல் செய்து, இரண்டு கட்டங்களாக வழங்கியுள்ளது. மூன்றாம் கட்டமாக, 34,25,000 தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN):**

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புத் (TNSWAN) திட்டத்திற்குத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், ஒருங்கிணைப்பு முகமையாக (Nodal Agency) நியமனம் செய்யப்பட்டுள்ளது. மாநிலப் பெரும்பரப்பு வலையமைப்புத் திட்டத்தில், இந்தியாவிலேயே வர்த்தக ரீதியாகச் செயல்படுத்தப்பட்டுள்ள முதல் திட்டம் இதுவாகும்.

**மென்பொருள் மேம்பாடு மற்றும் ஆதரவு மையம்:**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தனது தலைமை அலுவலகத்திலேயே, திறந்த வழி (Open Source) மென்பொருள் சூழலில், மின் ஆளுகை மென்பொருள் உதவி மையத்தை நிறுவியுள்ளது. இம்மையம், அரசுத் துறைகளுக்கு மென்பொருள் சம்பந்தமான ஆலோசனைகளுக்கும், அதன் மேம்பாட்டுப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து பெரும் ஆதரவு அளிக்கிறது. இதன்மூலம், மின் ஆளுகை மென்பொருள் மேம்பாடு மற்றும் வடிவமைக்கும் நேரத்தினைக் குறைக்க இம்மையம் உதவுகிறது.

**குடிமைப் பொருள் வழங்கு துறையில் மின் ஆளுகை மென்பொருள் மேம்பாடு:**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், மாநில அளவில், 1 கோடியே 85 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களின் அடிப்படை விவரங்களடங்கிய தரவுத் தொகுப்பினை உருவாக்கி, அதனை, ஆன்லைனில் கொண்டு வந்துள்ளது. தற்போது, மாவட்ட ஆட்சியர்கள், இவ்விவரங்களைப் பல திட்டங்களுக்குப் பயன்படுத்தி வருகிறார்கள். வரும் ஆண்டுகளில், இவ்விவரங்களைப் பயன்படுத்தித் தரவுத் தொகுப்புகளை மேலும் சிறப்பாக நிர்வகித்து, தமிழ்நாடு மின்னணு நிறுவனம், நுகர்வோர் துறை சார்பான சேவைகளைக் குடிமக்களுக்கு வழங்க முடியும். இத்தரவுத் தொகுப்பினைப் பயன்படுத்தி, குடும்ப அட்டைகள் அச்சிடப்பட்டு வருகின்றன.

11-99—22

[2008 மே 5

### பதிவுத் துறையில் மின் ஆளுகை மென்பொருள் மேம்பாடு:

மின் ஆளுகை மென்பொருள் மேம்பாட்டினை, வலைத்தள சூழல் அடிப்படையில் தயாரிக்கும் பணியினைப் பதிவுத் துறை, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இந்நிறுவனத்தின் மூலம், தயாரிக்கப்பட்ட மென்பொருள் மேம்பாட்டினை வைத்து, 108 சார்பதிவு அலுவலகங்கள், தமிழகத்தில் ஆன்லைன்மூலம் செயல்பட உள்ளன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், பதிவுத் துறையின் மென்பொருளை, ஆன்லைனில் கொண்டுவருவதற்காக, தனது தரவு மையத்தை (Data Centre) விரிவுபடுத்தி வருகிறது. இந்த ஆன்லைன் பரிவர்த்தனை முறையைப் புகுத்துவதன்மூலம், குடிமக்களின் தேவைகள் திருப்திகரமான வகையில் பூர்த்தி செய்யப்படும்.

### விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு அட்டை:

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், மாவட்ட ஆட்சியர்கள் மின்னணு வடிவில் சமர்ப்பித்த பட்டியலை வைத்து, முற்றிலும் மின்னணு ஆக்கப்பட்ட முறையில், சுமார் 70 இலட்சம் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு அட்டைகளை வெற்றிகரமாகத் தயாரித்து வழங்கியுள்ளது.

### ஓட்டுநர் உரிம அட்டை வழங்கும் திட்டம்:

தமிழகத்தில் உள்ள 86 மையங்களில் மென் தகடால் ஆன கணினிமயமாக்கப்பட்ட ஓட்டுநர் உரிம அட்டை தயாரித்து வழங்கும் பணியானது, போக்குவரத்து ஆணையர் அவர்களால் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### மத்தியமயமாக்கப்பட்ட கூட்டுறவு வங்கியின் மென்பொருள்:

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகளைத் தன்னியக்கமாக்க, இணையதள மென்பொருள் ஒன்றினைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கியுள்ளது. வங்கிகளுக்கான சேவைகளைத் தன்னியக்கமாக்கும் இந்த இணையதள மென்பொருள், சென்னை நகரில் 3 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தில் அமைந்துள்ள மத்திய மெயின் ஃபிரேம் சர்வர் ஹோஸ்டிங் வசதியின்மூலம், வங்கிகளுக்கான இத்தானியங்கி மென்பொருள் தமிழகத்தில் உள்ள அனைத்து இடங்களிலும் நிறுவப்படும். வங்கிகள், மத்திய சர்வருடன் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பின்மூலம் இணைக்கப்படும்.



2008 மே 5]

### நகர் ஊரமைப்பு இயக்ககத்திற்கான தானியங்கி மென்பொருள்:

நகர் ஊரமைப்பு இயக்ககம், மனைப்பிரிவு மற்றும் கட்டட வரைபட அனுமதி வழங்குவதற்கான தன்னியக்க மென்பொருளை உருவாக்கும் பணியினைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இம்மென்பொருள், அனைத்துக் குடிமக்களும் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மூலம் நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

### வணிக வரித் துறைக்கான மென்பொருள்:

வணிக வரி செலுத்தும் வியாபாரிகள் ஆன்லைன்மூலம் பதிவு செய்யவும், மதிப்புக் கூட்டு வரிக்கான (VAT) அறிக்கையை மாதந்தோறும் தாக்கல் செய்யவும் தேவைப்படும் மென்பொருள் உருவாக்கும் பணியினைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் வணிக வரித் துறை ஒப்படைத்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இம்மென்பொருளின் மாதிரி, வணிக வரித் துறையால் சோதனை செய்யப்பட்டு வருகிறது. அனைத்து வணிக வரி வியாபார சமுதாயத்தினரும் பயன்பெறும் வகையில், இம்மென்பொருள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மெயின் ஃபிரேம் சர்வரில் ஹோஸ்ட் செய்யப்பட்டு நடப்பாண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

### கொள்முதல்:

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தனது வெளிப்படையான கொள்முதல் கொள்கையின்மூலம் விற்பனையாளர்கள் மத்தியில், ஆக்கபூர்வமான போட்டி மனப்பான்மையை உண்டாக்கி, அதன்மூலம் திறந்த மற்றும் ஒளிவுமறைவற்ற கொள்முதலை நடைமுறைப்படுத்தியுள்ளது. இதன்மூலம், பொருட்களின் சந்தை விலையில் 20 முதல் 30 விழுக்காடு குறைக்கப்பட்டு, அரசுத் துறைகளின் செலவினங்கள் கணிசமாகச் சேமிக்கப்பட்டுள்ளன. 2007-08 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 135.54 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்பவியல் பொருட்களைக் கொள்முதல் செய்துள்ளது.

11-99—22a

## அரசு கேபிள் டி.வி. நிறுவனம்:

[2008 மே 5

தமிழ்நாடு, நம் நாட்டிலேயே அதிகமான கம்பிவடத் தொலைக்காட்சி சேவை அளிக்கும் மாநிலமாக விளங்குகிறது. கட்டண அலைவரிசைகள் நியாயமான விலையில் கிடைக்கப்பெறாமை குறித்தும், தரம் குறைந்த சேவை குறித்தும் பார்வையாளர்கள், உள்ளூர் கம்பிவட இயக்குபவர் மற்றும் சிறிய பன்முக ஏற்பாட்டுத் துறை இயக்குபவர் (Multi System Operators) ஆகியோரிடமிருந்து அடிக்கடி புகார்கள் வரப்பெற்றதையடுத்து, தமிழக அரசே முழுவதும் ஏற்று நடத்தும், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தைத் தமிழ்நாடு அரசு நிறுவியது. இந்நிறுவனம், சென்னைப் பெருநகரில் பன்முக ஏற்பாட்டுத் துறை இயக்குபவராகவும், மாநிலத்தின் பிற பகுதிகளில் கம்பிவட இயக்குபவராகவும் செயல்படும் எண்ணத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், தற்போது இருக்கும் கம்பிவட இயக்குபவர்களைக் கொண்டு உயர் தரத்திலான கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை நியாயமான கட்டணத்தில் பொது மக்களுக்கு அளிப்பதாகும். இது, கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை முறைப்படுத்த உதவும். மத்திய அரசின் தகவல் மற்றும் தொலைத் தொடர்பு துறையானது, அரசு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கு, சென்னையில் பன்முக ஏற்பாட்டுத் துறை இயக்குபவராகச் (MSO) செயல்பட அனுமதி வழங்கி உள்ளது.

அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 6-8 நகரங்கள் / பேரூராட்சிகளில் அதிநவீன உபகரணங்களைக் கொண்டு, இலக்கமுறைத் தலைமுனைகளை (Digital Head Ends) நிறுவ உத்தேசித்துள்ளது. ஒவ்வொரு தலைமுனையும், 80 அலைவரிசைகளைக் கொண்ட தொலைக்காட்சிக் குறிப்புகளை (Television Signals) 100 கிலோ மீட்டர் தூரத்தில் பரந்து விரிந்துள்ள உள்ளூர் கம்பிவட இயக்குபவர்களுக்கு எடுத்துச் செல்லும். மேற்படி தலைமுனைகளை கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் தஞ்சாவூரில் முதற்கட்டமாக நிறுவ உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. சென்னையில் தலைமுனையை அமைக்க உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தலைமுனைகள் அவற்றின் பகிர்ந்தளிப்பு வலையமைப்புடன் செப்டம்பர் 2008 முதல் இயங்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கம்பிவடத் தொலைக்காட்சித் தொழிலாளர்களுக்கான நல வாரியம் ஒன்றையும் அரசு அமைத்துள்ளது.



2008 மே 5]

## தமிழ் இணையப் பல்கலைக்கழகம்:

### தொடக்கம்:

உலகு தழுவி வாழும் தமிழரும், தமிழ் ஆர்வலரும், தமிழ் மொழியைக் கற்கவும், தமிழ் இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் விரும்புவோருக்கு, இணையதளம் வாயிலாகக் கல்வி வளத்தையும், வாய்ப்பினையும் அளிக்கத் தமிழக அரசு, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எனும் அமைப்பை நிறுவியது. இத்தகைய அமைப்பு, இந்தியாவில், வேறு எந்த மொழியிலும் இல்லாத ஒப்பற்ற ஒன்றாகும்.

### கல்வித் திட்டங்கள்:

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்கும் இணையதளம் வாயிலான கல்வித் திட்டம், கடந்த 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் தற்போதைய தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம், வெற்றிகரமாகச் செயல்பட்டு, பல்வேறு நாடுகளில் நிறுவப்பட்டுள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வி மையங்களின் வாயிலாக தமிழில் சான்றிதழ் மற்றும் பட்டயப் படிப்புத் தேர்வுகளை நடத்தும் அளவுக்கு சிறப்பான வளர்ச்சி அடைந்துள்ளது. அடிப்படை, இடைநிலை மற்றும் மேல்நிலை என்ற 3 படிநிலைகளில் அமைந்த சான்றிதழ்க் கல்வியையும், தமிழ் இளநிலைப் பட்டப் படிப்பையும், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வழங்குகிறது. இப்பல்கலைக்கழகத்தின் முதுகலைப் பட்டப் படிப்பு [M.A. (Tamil)], தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய பாடப்பொருள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் கல்வி வள ஆதாரங்களை தனது மாணவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக, அப்பல்கலைக்கழகத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், கையெழுத்திட்டுள்ளது. இளங்கலைப் பட்டப்படிப்பில் விருப்ப மொழி (ஆங்கிலம் பகுதி-2) கல்விக்கு இவ்வள ஆதாரங்கள் பயன்படுத்தப்படும். மேலும், இப்பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்பில் மலேசியாவில் உள்ள 40 தமிழாசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, கனடாவில் கல்விக்கென உள்ள காமன்வெல்த்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் கையெழுத்திட்டுள்ளது.

[2008 மே 5

**தேர்வுகள்:**

59 நாடுகளைச் சேர்ந்த 5,961 மாணவர்கள், பல்வேறு பாடத் திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 2007 ஆம் ஆண்டில் 286 மாணவர்கள் சான்றிதழ் தேர்விலும், 176 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 29 மாணவர்கள் மேற்பட்டயத் தேர்விலும் வெற்றி பெற்றுள்ளனர். இணையதளக் கல்வித் திட்டத்தில், இந்தியாவில் வழிமுனைவராகச் செயல்பட்டு வரும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2006-07 ஆம் ஆண்டில், 247 இளங்கலைப் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு, இணையம் வழியாகத் தேர்வு நடத்தியுள்ளது. இந்த ஆண்டில் (2007-2008), 165 மாணவர்களுக்கு இணையம் வழியாகத் தேர்வு நடத்தியுள்ளது. ஜனவரி 2008 ஆம் ஆண்டு 56 மாணவர்கள் எழுத்துத் தேர்வு எழுதியுள்ளனர். மார்ச் 2008-ல் பட்டய மற்றும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கான எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன.

**மாணவர் பதிவு:**

இதுவரையில், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை ஏறத்தாழ 17 இலட்சம் பேர் பார்வையிட்டுள்ளனர். 59 நாடுகளைச் சேர்ந்த சுமார் 2,827 மாணவர்கள் சான்றிதழ்ப் படிப்பிற்கும், 3,134 மாணவர்கள் தமிழ் இளங்கலைப் படிப்பிற்கும், பதிவு செய்துள்ளனர். இப்பல்கலைக்கழகம், 12 நாடுகளில் 19 ஒருங்கிணைப்பு மையங்களைக் கொண்டுள்ளது.

**இணையவழி வகுப்பறைகள்:**

இணையவழிக் கல்வித் திட்டத்தில், கற்பித்தல் மற்றும் கற்றலுக்காகப் பயன்படுத்தப்படும் நெறிமுறைகள் ஒலி, ஒளி முதலிய பல்வேறு வகையான ஊடகங்களின் வாயிலாக வழங்கப்படுகின்றன. இணையதள வாயிலான கல்வியை மேலும் வலுப்படுத்துவதற்காகவும், வளரச் செய்வதற்காகவும், விரைந்து செயல்படும் சர்வர் கணினி, அதிவேக வலைய இணைப்பு ஆகியவற்றுடன் வீடியோ உரையாடல் கருவிகளுடன் கூடிய நவீன இணைய வழிக் கல்வி முறைக்கான இணைய வகுப்பறை, தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ளது.



2008 மே 5]

**கல்வி மையங்கள்:**

இதுவரையில், 12 நாடுகளில் 19 கல்வி மையங்களைத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நிறுவியுள்ளது. கணிசமான அளவு தமிழர்கள் வாழும் நாடுகளில், மேலும் பல ஒருங்கிணைப்பு மையங்களை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இலக்கமுறை நூலகம் (Digital Library):**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகம், தமிழ் இலக்கியத்தின் சிறந்த நூல்களின் தொகுப்புக் களஞ்சியமாகத் திகழ்கிறது. தமிழரின் பண்பாடு, வரலாறு மற்றும் பாரம்பரியம் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்குரிய சாளரமாகவும் அமைந்துள்ளது. இணையதளத்தில் உள்ள இந்த மின் நூலகத்தில், இலக்கணம், சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், திரட்டு நூல்கள், நெறிநூல்கள், இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள், நாட்டுப்புற இலக்கியங்கள், உரைநடை நூல்கள், கலைச்சொற்கள் தொகுப்பு மற்றும் அகராதிகள் என மொத்தம் 300 புத்தகங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. தற்கால இலக்கியம் சார்ந்த நூல்களும் சேர்க்கப்பட்டு வருகின்றன. தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள் என்ற அடிப்படையில், கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம் மற்றும் பரதநாட்டியம் முதலிய கலைகளின் ஒலி ஒளிக்காட்சிகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியம், பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை ஆகிய தமிழ் நூல்கள் உரோமன் எழுத்துகளில் இடப்பட்டுள்ளன. விரிவான பொருளடக்கி அட்டவணை மற்றும் தேடுதல் வசதி ஆகியவை இந்த மின் நூலகத்தின் தனிச் சிறப்பாகும். ஒரு மொழியில், இது ஒரு தனித்தன்மையான மற்றும் முன்னோடியான முயற்சியாகும். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழில்நுட்பச் சொற்களைக் கொண்ட 30 பிரிவுகளின்கீழ், அருஞ்சொற்பொருள் தொகுப்புகள் இணையத்தில் இடம்பெற்றுள்ளன. சுற்றுலாப் பயணியர் சுலபமாகவும் வசதியாகவும் தமிழ்நாட்டைச் சுற்றிப் பார்க்கும் விதமாக, சுற்றுலாப் பயணியர் தமிழ் எனும் திட்டம் நடப்பாண்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

**தமிழ் மென்பொருள் நிதி:**

கணிப்பொறியில் தமிழைப் பயன்படுத்துவதில் அரசு ஆர்வமுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், தமிழ் மென்பொருள் மற்றும்

கருவிகளின் வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு, அவற்றை உருவாக்கும்
மென்பொருள் தயாரிப்பாளர்களுக்கு அரசு மானியம் வழங்கி
ஊக்குவித்து வருகிறது. தமிழ் மென்பொருள் நிதியின்கீழ், தமிழ்
ஒளியியல் எழுத்துரு அறிவி மென்பொருள் (OCR) மற்றும் இயந்திர
உதவியுடன் ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்பு
செய்யக்கூடிய மென்பொருள் (English-Tamil Machine aided Translation
Packages) ஆகிய இரண்டு திட்டங்களுக்கு, முறையே 2002 மற்றும்
2003 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிதி
வழங்கப்பட்டது. இயந்திர மொழிபெயர்ப்பை மேம்படுத்த தமிழ் உலக
வலை (Tamil World Net to enhance Machine Translation), தமிழ் லினக்ஸ்
(Tamil Linux), விண்டோஸ் 95 மற்றும் 98 உள்ளூர் மயமாக்கல்
(Localising Windows 95 & 98 Idham 2000) மைக்ரோ சாப்ட்
விண்டோஸ்க்கான நவீன தமிழ் இடைமுகம் (Advanced Tamil Interface
for Microsoft Windows), தமிழ்க் கையெழுத்தை அறிந்து கொள்ளும்
எழுத்துரு அறிவி மென்பொருள்— முதற்கட்டம் (Optical Character
Recognition Software for Tamil Handwriting-Phase-I) மற்றும் செல்லிடப்
பேசியில் தமிழ்ப் பயன்பாட்டிற்காக தகவலமைத்தல் (Localisation
for Tamil in Mobile in Phones) முதலிய திட்டங்கள், இந்த மென்பொருள்
நிதியின்கீழ் மானியம் வழங்கப்பட்டு நிறைவடைந்த திட்டங்களாகும்.
ஒரு உலகளாவிய தேடு பொறி (Universal Search Engine),
உருவாக்கப்பட்டு தேசிய தகவல் மையத்தின் (National Informatics
Centre), இணையதளத்தில் சோதனைக்காக இடப்பட்டுள்ளது.
கையடக்க கருவிகளில், வட்டார மொழிகளில் கூடுதல் சேவைகள்
வழங்குதல் (Value Added Services in Regional Language on Hand-held
Devices) என்னும் திட்டம், இந்த ஆண்டு நிறைவடைந்துள்ளது.
இதைத் தவிர, 6 திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
தமிழில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் கணிப்பொறியில் தமிழ்
ஆகியவற்றின் வளர்ச்சியில் அரசு ஆர்வம் கொண்டுள்ளது. எனவே,
தமிழ் மென்பொருள் வளர்ச்சியை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின்
அடிப்படையில் முன்னேற்றமடையச் செய்ய அரசு ஊக்குவிக்கும்.

**தமிழ் எழுத்துருவை தரப்படுத்துதல் மற்றும் சான்றளித்தல்:**

கோப்புகள் மற்றும் செயல்முறைத் திட்டங்களில், எளிதான தரவுப்
பரிமாற்றத்திற்கு உதவும் பொருட்டு, தமிழ் எழுத்துருக்களில் TAB
மற்றும் TAM, தமிழ் 99 ஆகியவற்றின்மூலம் தமிழ் தட்டச்சு விசைப்
பலகையில் அடிப்படை விவரக் குறிப்பினை பதிவு செய்யும் பணியை
தமிழ்நாடு அரசு முறைப்படுத்தியுள்ளது. இது பல மென்பொருள்



உள்இடுக்கிகளாகப் (Plug-ins) பயன்படுத்தக்கூடிய
தயாரிப்பாளர்கள், உள்இடுக்கிகளைத் தயாரிப்பதற்கும், சிறந்த
செயல்திறன் மிக்க கருவிகளைத் தயாரிப்பதற்கும் வழி வகுக்கும்.
மென்பொருள் கருவிகளை உருவாக்குவதற்கும் வழி வகுக்கும்.
தமிழில் தயாரிக்கப்படும் மென்பொருள்கள், நிர்ணயிக்கப்பட்ட
விதிமுறைகளுக்கு உடன்பட்டுள்ளனவா என்பதற்குச் சான்றளிக்கும்
முகமையாக, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் செயல்படுகிறது.
இதுவரை 20 மென்பொருட்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகச்
சான்றினைப் பெற்றுள்ளன.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்துதல்:**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் கல்வித் திட்டங்களைப்
பற்றியும், அதன் மின் நூலகத்தைப் பற்றியும் கல்லூரிகளில், பல்வேறு
பயிலரங்குகள் நடத்துவதோடு, பிர்லா கோளரங்கத்தில் ஒன்றும், தமிழ்
இணையப் பல்கலைக்கழகத்தில் மற்றொன்றுமாக, இரு தொடுதிரைக்
கணினிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, தமிழ் இணையப்
பல்கலைக்கழகம், அதன் மாதிரி பாடத் திட்டங்கள் மற்றும் மின்
நூலகத்தைப் பற்றியும் பொதுமக்கள் அறிந்துகொள்ள வகை செய்யும்.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இதர நடவடிக்கைகள்:**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நடப்பாண்டில் கீழ்க்கண்ட
நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது:

**1. மின்-நூலகத்தில் தேடும் வசதியுடன் திருக்குறள்:**

தமிழ் இணையப் பல்கலைக்கழக மின்-நூலகத்தில் தேடும்
வசதிகளைக் கொண்ட திருக்குறளைப் போன்று, அதன் 5
விளக்கவுரைகள் மற்றும் 2 மொழி பெயர்ப்புகளுடன் குறுந்தகடுகள்
வடிவில் தயாரிக்கப்பட்டு வருகிறது.

**2. தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையதளத்தில் இணையம் சார்ந்த ஓலைச் சுவடிகள்:**

மிகச் சிறந்த தமிழ்க் கற்றறிவாளர் முனைவர் உ.வே. சாமிநாதய்யர்
அவர்கள் தொகுத்து வைத்துள்ள ஓலைச் சுவடிகளை தேடும்
வசதியுடனும், அவற்றை எளிதில் படிக்கும்வண்ணம் உருஅளவிலான
மாற்றம் செய்யும் வசதியுடனும் இணையப்படுத்தியுள்ளது.
ஓலைச்சுவடிகளை எளிதில் புரிந்துகொள்ள அவற்றின் தற்காலத் தமிழ்
வடிவமும் கொடுக்கப்பட்டுள்ளது.

[2008 மே 5

**3. கோயில்கள் / கிறித்துவ பேராலயங்கள் / பள்ளிவாசல்கள் ஆகியவையடங்கிய குறுந்தகடுகள் :**

கோயில்கள் / கிறித்துவ பேராலயங்கள் / பள்ளிவாசல்கள் ஆகியவற்றின் ஒளிக்காட்சிகள் இணையப்படுத்தப்பட்டுள்ளன.

**4. கலை மற்றும் பாரம்பரிய பண்பாட்டு நிகழ்ச்சிகளின் ஒலி–ஒளிக் காட்சிக்கூடம்:**

தமிழ் இணையப் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள ஒலி-ஒளிக் காட்சிக்கூடத்தில், மேலும் காட்சிகளைச் சேர்த்து விரிவாக்கப்பட்டு வருகிறது.

**5. தொழில்நுட்ப அகராதிகள் வெளியிடுதல்:**

பல்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அகராதிகள், தேடும் வசதியுடன் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன. தற்போது, தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தொழில்நுட்ப அகராதிகளை மறுசீராய்வு மற்றும் தணிக்கை செய்து அவற்றை 12 நிலையான தொடர் தொகுதிகளாக வெளியிடுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

**6. மின் கலைவினைக்கூட உபகரணங்கள் (E-Studio Equipments):**

தமிழ் இணையப் பல்கலைக்கழக பாடத் திட்டத்தின்படி இணையதள வகுப்பறை நடத்துவதற்கும் மற்றும் மின்-பாடங்களை உருவாக்குவதற்கும் ஒரு மின் கலைவினைக் கூடத்தை ஏற்படுத்தும் பொருட்டு, ரூ.25 இலட்சம் மதிப்புள்ள கலைவினைக்கூட உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**தமிழ் மொழிக்கான அனைத்து எழுத்துரு:**

தமிழ்நாடு அரசு, தமிழ் மொழியில் அனைத்து எழுத்துருக்களை உருவாக்குவதற்கான இயலும் தன்மையைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை அளிக்க, முனைவர் எம். அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் வல்லுநர்களடங்கிய பணி முனைப்புக் குழு (Task Force) ஒன்றை அமைத்துள்ளது. அக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.



2008 மே 5]

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தக் கட்டடம்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு 2 ஏக்கர் நிலமும், ஒரு கோடி ரூபாயும் அளிக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார். அதனடிப்படையில், சென்னை—கோட்டூரில் 2 ஏக்கர் நிலம், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து அரசு ஆணையிட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் தமிழ் இணையப் பல்கலைக்கழகக் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.

**புதிய திட்டங்கள்:**

இந்நிதியாண்டில் (2008-09) புதிய திட்டங்களுக்கென ரூபாய் ஒரு கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பேரிடர் மீட்பு மையம்:**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், சென்னையில் உள்ள பெருங்குடியில் தரவு மையம் அமைத்துள்ளது. தரவு மையத்திற்கான தொழில்நுட்பச் சேவையை வழங்குவதற்கு பேரிடர் மீட்பு மையம் அமைப்பது அவசியமாகிறது. இத்திட்டத்திற்கென ரூ.60 இலட்சம் இந்நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

**பாடங்கள், மின் நூல்கள் மற்றும் கலைச்சொல் அகராதிகளை வெளியிடுதல்**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மின் நூலகத்தில் கலைச்சொல் அகராதிகள், பண்பாட்டுக் காட்சிகள் ஆகியவற்றோடு அதிகளவு நூல்களும் இடப்பட்டுள்ளன. இணையதளத்தில் உள்ள மின் நூல்கள் மற்றும் பாடங்களை மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் வகையில் நூல்களாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மின் நூலகத்தில் இடம்பெற்றுள்ள கலைச் சொல்லாக்கங்களை மீள்பார்வை செய்து, தரப்படுத்தி, அறிவியல் தொழில்நுட்ப நூல்கள் எழுதும் ஆசிரியர்களுக்குப் பயன்படும் வகையில் தரும் தேவையும் உள்ளது. இத்திட்டத்திற்கென, ரூ.12 இலட்சம் இந்நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

[2008 மே 5

**கல்வெட்டு, நாணயம், மண் பானை, ஓடு, செப்புத் தகடுகள் எழுத்துகளைப் படித்து தற்போதுள்ள எழுத்து வடிவில் தரவும், அவற்றின் காலத்தைக் கணிக்கவும் தேவையான மென்பொருளை உருவாக்குதல்:**

நாணயம், மண் பானை ஓடு, செப்புத் தகடுகள் மற்றும் கல்வெட்டு எழுத்துகள், தமிழர்களின் பண்பாட்டு வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. ஆனால், அவை ஒவ்வொரு காலகட்டத்திலும் மாறிவந்துள்ளன. அவற்றைப் படித்துப் புரிந்து கொள்வதும், அவற்றின் காலத்தைக் கணிப்பதும் கடினமானது. அதற்காகச் சிறப்பான பயிற்சி தேவைப்படுகிறது. அதற்குப் பதில், மென்பொருள்மூலம் அந்த எழுத்துகள் அனைத்தையும் படித்து எளிதாகவும், மிகுந்த பயிற்சியில்லாமலும், தற்போதைய எழுத்து வடிவத்திற்கு மாற்றித்தரவும், அவற்றின் காலத்தைக் கணிக்கவும் கூடிய மென்பொருள் உருவாக்க ரூ.12 இலட்சம், இந்நிதியாண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

**தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையப் பக்கங்களுக்கான பொதுத் தேடுதல் வசதி:**

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் சான்றிதழ்க் கல்வி முதல் பட்டப் படிப்பு வரையிலான பாடங்களை இணையதளப்படுத்தியுள்ளது. மேலும், இலக்கிய நூல்கள், கலைச்சொல்லாக்கம் மற்றும் பண்பாட்டுக் காட்சியகத்தைக் கொண்ட மின் நூலகத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையப் பக்கங்களில் உள்ள அனைத்துப் பொருளடக்கங்களையும் ஒன்றடக்கிய ஒரே தரவாக அமைக்க வேண்டும். இதன்மூலம் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இணையதளப் பக்கங்களை உபயோகிப்போர், பாடங்கள், மின் நூல்கள், அகராதிகள், பண்பாட்டுக் காட்சிக் கூடங்கள் ஆகியவற்றில் எளிதில் தகவல் தேட முடியும். இத்திட்டத்திற்கென ரூ.9 இலட்சம் இந்நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.



2008 மே 5]

**மின் ஆளுகையில் பல்வேறு துறை அதிகாரிகளுக்குப் பயிற்சி அளித்தல்:**

மின் ஆளுகையின் வெற்றிக்கு அரசு ஊழியர்களுக்கு பயிற்சி அளிப்பது அத்தியாவசியமாகும். இத்திட்டத்திற்கென ரூ.5 இலட்சம் இந்நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

**கணினிகள், பல்வகைப் பயன்பாட்டு அச்சுக் கருவி மற்றும் தேவையான உபகரணங்கள் வாங்குதல்:**

தமிழ்நாடு மின் ஆளுமைக் கழக அலுவலகப் பயன்பாட்டிற்காக கணினிகள், பல்வகைப் பயன்பாட்டு அச்சுக் கருவி (Multifunctional Printer) மற்றும் இதர உபகரணங்கள் வாங்குவதற்காக ரூ.2 இலட்சம், இந்நிதியாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

---

V2 11, 32 '08
P08 · 52 · 1
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228385
சென்னை-600 008
நூலகம்

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Principal Secretary to Government and
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.